பல்லவி பதிப்பகம்

ISSN : 2278-7550
2278- 7550

# ஆய்த எழுத்து

தமிழியல் ஆய்வு இதழ்

ஏப்ரல் – 2017

# AYIDHA EZHUTHU

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550



| visit us: www.pallavipathippakam.in |

# ஆய்த எழுத்து

பன்னாட்டு தமிழியல் ஆய்விதழ்

**INTERNATIONAL JOURNAL FOR TAMIL STUDIES . ISSN : 2278-7550**

மலர் : 5 ஏப்ரல் - 2017 இதழ் : 2



**ஆசிரியர்**

**முனைவர் சி. தியாகராசன்**
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

**இணை ஆசிரியர்**

**முனைவர் க. இரமேஷ்**
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,வேலூர்.

**ஆசிரியர்குழு**

**முனைவர் மனோன்மணிதேவி அண்ணாமலை**
சுல்தான் இட்ரீசு கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா.

**முனைவர் க. மாணிக்கராஜ்**
கேரளா பல்கலைக்கழகக் கல்லூரி, திருவனந்தபுரம்.

**முனைவர் ப.ஜெயகிருஷ்ணன்**
கேரளா பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.

**முனைவர் கி.சங்கரநாராயணன்**
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

**முனைவர் உ. அலிபாவா**
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.

**முனைவர் சு.அரங்கநாதன்**
தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை.

**முனைவர் ச. கவிதா**
கற்பகம் பல்கலைக்கழகம், கோவை.

**இரா. சந்திரசேகரன்**
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, நாமக்கல்.

**முனைவர் ஷே. நாகூர்கனி**
ஜமால் முகமது கல்லூரி, திருச்சி.

**முனைவர் இரா. விஜயராணி**
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி.

**வெ.ச.சீனிவாசன்**
நந்தா கலை அறிவியல் கல்லூரி, ஈரோடு.

**துணை ஆசிரியர்கள்**

**முனைவர் போ. சத்தியமூர்த்தி**
மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை.

**பதிப்பாசிரியர்**
**நல். நடராசன்**
தமிழியல் ஆய்வு மையம், ஈரோடு.



## பல்லவி பதிப்பகம்

118,மேட்டூர் சாலை,கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு - 638011.

pallavipublications@gmail.com
ayidhaezhuthu@gmail.com

**0424 -4562211**
**94422 51549**
**89251 45386**

# படைப்புகள் வரவேற்கப்படுகின்றன...!

**ஆய்த எழுத்து** - காலாண்டிதழ் தமிழியல் ஆய்வுக்கான புதியகளம். இவ்விதழ் ஜனவரி, ஏப்ரல், ஜூலை மற்றும் அக்டோபர் மாதங்களில் வெளியாகிறது. பேராசிரியர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் போன்ற எவரும் கட்டுரை எழுதலாம். சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல், இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய பிற துறைகள் அனைத்தும் பொருளாகலாம்.

கட்டுரைகளில் கூறப்படும் கருத்துகளுக்கு அக்கட்டுரை ஆசிரியரே பொறுப்பாவார். கட்டுரையாளர்களின் கருத்து இதழ் ஆசிரியர் குழுவின் கருத்தினை பிரதிபலிப்பன அல்ல. படைப்புகளைச் சுருக்கவும், திருத்தவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு. கட்டுரைகள் ஆய்வுத் தரமுடையவைகளாக அமைதல் வேண்டும். ஆய்வுப் பொருளுக்கு முரண்பட்டதாக அமையும் கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. படைப்புகளைத் திருப்பி அனுப்ப இயலாது.

ஆய்த எழுத்து – தமிழியல் ஆய்வுக்கான புதியகளம். 2013 ம் ஆண்டு முதல் காலாண்டிதழாக ஆண்டுதோறும் ஜனவரி, ஏப்ரல், ஜூலை மற்றும் அக்டோபர் மாதங்களில் இவ்விதழ் வெளியாகிறது. கல்லூரி, பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், ஆய்வு மாணவர்கள், தமிழறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள் போன்ற பலரும் இவ்விதழில் ஆய்வு கட்டுரை எழுதி வருகின்றனர். இவ்விதழுக்கு கட்டுரை அனுப்ப விரும்புவோர் கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

**1. பொருள்:** சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல், இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய அனைத்தும் இதன் பொருளாகலாம்.

**2. அளவு:** எம்.எஸ். வேர்டில் (MS Word),ல் A4 அளவில், 1.5 வாக்கிய இடைவெளியில்(Lining Space), 12 புள்ளி எழுத்தளவில் மூன்று முதல் ஆறு பக்கங்களுக்குள் கட்டுரை அமைய வேண்டும்.

**3. முகவரி:** கட்டுரை தலைப்பின் கீழ் ஆசிரியர் பெயர், பதவி, முகவரியும், கட்டுரை முடிவின் கீழ் இதழ் அனுப்ப வேண்டிய முகவரி, மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண்களும் இடம்பெற வேண்டும்.

**4. கட்டுரை அனுப்பும் முறை:** கட்டுரையை pallavipublications@gmail.com (Or) ayidhaezhuthu @gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

**5.** தனி இதழ் விலை ரூ. 200/– இதழைத் தொடர்ந்து பெற விரும்புவோர் உறுப்பினர் கட்டணம் செலுத்தலாம். ஒரு ஆண்டிற்கு 4 இதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

| | |
|---|---|
| 1 ஆண்டுக்கட்டணம் (தனி நபர்) | ரூ. 800/– |
| 1 ஆண்டுக்கட்டணம் (நூலகம்/ கல்வி நிறுவனங்கள்/ | ரூ. 1000/– |
| வாழ்நாள் கட்டணம் | ரூ. 5000/– |
| புரவலர் கட்டணம் | ரூ. 10, 000/– |

**6. கட்டணம் செலுத்தும் முறை:** உறுப்பினர் (சந்தா)/ கட்டணத்தை **PALLAVI PATHIPPAKAM** என்ற பெயரில் வரைவோலையாக(DD) ஈரோட்டில் மாற்றிக்கொள்ளத்தக்க வகையில் **(Payable at ERODE)** அனுப்பலாம். இணையவழி, **(Net Banking),** அலைபேசி **(Mobile Banking)** வங்கி பரிவர்த்தனை உடையவர்கள் **NEFT** முறையிலும் பணம் செலுத்தலாம். **A/C Name: PALLAVI PATHIPPAKAM. A/C Type: CA, A/C No : 33679969977. Bank: STATE BANK OF INDIA, Sathy Road, Erode -638 011. IFSC : SBIN0016100.**


## பல்லவி பதிப்பகம்

194, கண்ணா காம்ப்ளக்ஸ், இரண்டாவது தளம்,
மேட்டூர் சாலை, ஈரோடு - 638 011.
பேசி: 0424-2251545, 94422 51549,
97919 51549.
மின்னஞ்சல்: ayidhaezhuthu@gmail.com
pallavipublications@gmail.com


**படைப்பாளர்களின் கவனத்திற்கு ....**

இதுவரை வெளியான, அனைத்து ஆய்த எழுத்து இதழ்களையும் எங்களது **www.pallavipathippakam.in** இணையதளத்தில், இதழ்கள் – ஆய்த எழுத்து பகுதியில் முழுமையாக பதிவிறக்கம்(Download) செய்து கொள்ளலாம்.

# பொருளடக்கம்


1. தமிழ்விடு தூதில் அகமும் புறமும்

*முனைவர் ஆ. அறிவுமொழி, 5

2. பழந்தமிழ் இலக்கியங்களில் அகம்

*முனைவர் சு. அரங்கநாதன் 8

3. இந்திய விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பு

*முனைவர். த. சம்பத்குமார் 15

4. தமிழ் நாவல் இலக்கியமும் பத்திரிகைகளும் (1930கள் வரை)

*முனைவர் மு. வையாபுரி 20

5. பிரபஞ்சன் புனைக்கதைகளில் புதுச்சேரி ஆளுநர்கள்

*டே.பெமிலா 23

6. சங்ககாலத் தொழில்களில் விலங்குகளின் பங்களிப்பு

*இரா. ரவி 26

7. ஆன்மீகமும் வழிபாடும்

*முனைவர் சு.இளவரசி 29

8. ஹைக்கூ கவிதைகளில் சுற்றுச்சுழல் பாதிப்புகள்

*சா.சதீஸ்குமார் 34

9. வெல்லம் தயாரிப்பில் புழங்கு பொருட்கள்

*பா.சதீஷ் 37

10. ஆ. மாதவன் சிறுகதைகளில் எதார்த்தவாதச் சிந்தனைகள்

*சு. சுபாஷினி 40

11. சங்கப் புற இலக்கியங்களில் மகளிர் கலைகள்

*ம. ஆனந்தவள்ளி 44

12. தமிழ்ப்புதினங்களில் பரதவர்களின் மரபுவழி அறிவு

*ச. அருள்செல்வி 49

13. பெருந்தகு பாடினி

*ஏ. மேனகா 54

14. புதுக்கோட்டைஒரு லயக்கோட்டை

*முனைவர் சு.ஜெய்சங்கர் 58

15. சங்க இலக்கியத்தின் வழி அறியலாகும் திருமாலின் திருத்தலங்களும் உறைவிடங்களும்

*இரா.ஜெயந்தி 62

16. இராஜம் கிருஷ்ணன் புதினங்களில் காணலாகும் வர்க்கப் போராட்டம்

*K.விஜயலட்சுமி 66

17. புறநானூற்றில் மன்னர்களின் மனிதநேயம்

*இரா. விஷ்ணுப்பிரியா 70

18. ஐங்குறுநூற்றில் நெல்

***பா.பரணி*** 74

19. திருக்குறளின் சைவநெறி

***செ. பாவைமலர்*** 77

20. கொற்றவை வழிப்பாடும் வளர்ச்சியும்

***முனைவர் செ.வசந்தகுமார்*** 80

21. வாழ்க்கை வட்டச் சடங்கில் புழங்குப் பொருட்கள் பண்பாடும், பயன்பாடும் (இறப்புச் சடங்கு)

***கு.இளவரசி*** 84

22. அண்ணல் அம்பேத்கரின் பன்முகத்தொண்டு

***முனைவர் சோ.மனோன்மணி*** 87

23. யாழ் இசைப்பாணர்களின் வாழ்வியல் முறை

***முனைவர் பூங்கொடி*** 90

24. காப்பியங்களில் பெண்ணிய ஆளுமை

***வெ.மகாலெட்சுமி*** 93

25. தொல்காப்பியம் – உரையின் தோற்றமும் வளாச்சியும்

***செ.சத்தியநாதன்*** 97

26. பெண்ணிய நோக்கில் பெண்களின் உரிமைகளும் கடமைகளும்

***ஈ. செல்வி & முனைவர் பெ.முத்துராஜ்*** 100

27. அகிலனும் இலக்கியப் படைப்பும்

***மா. புவனேஸ்வரி*** 105

28. பன்முக நோக்கில் தமிழ்ப்பன்னிருத் திருமுறைகள்

***ந. நளினி*** 107

29. பண்டைய தமிழர்களின் தோல் தொழில்

***க.பீமாராவ்ராம்ஜீ*** 109

30. புறநானூற்றில் ஞாயிறும் திங்களும்

***உ.அலிபாவா*** 112

# தமிழ்விடு தூதில் அகமும் புறமும்

*முனைவர் ஆ. அறிவுமொழி, *உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை அன்னை வேளாங்கண்ணி மகளிர் கல்லூரி, சென்னை - 15.*

தமிழ் இலக்கியம் நீண்ட இலக்கியப் பாரம்பரியத்தை உடையது. எந்த மொழிக்கும் இல்லாத சிறப்பு தமிழ் மொழி இலக்கியத்திற்கு உண்டு. அதற்கு அடிப்படைக் காரணம் அதன் பகுப்பு முறை. அதோடு இலக்கிய வகைமை. திணை இலக்கியம் தொடங்கி பல்வேறு விதாமான இலக்கிய வகைமைகளை காலத்திற்கேற்ப ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் தான் தமிழ்மொழி தொடர்ந்து வளர்ந்து கொண்டே இருக்கிறது. சிறு சிறு கவிதைகளாகட்டும், பெருங்காவியங்கள் ஆகட்டும் அத்துனைக்கும் ஒவ்வொரு தனித்துவம் இருப்பதைப் பார்க்க முடிகிறது. சங்க இலக்கியங்கள் என்று சொல்லக்கூடிய எட்டுத்தொகை மற்றும பத்துப்பாட்டுகளில் பல வேறுபட்ட இலக்கிய வடிவங்களைக் காணமுடிகிறது. அங்கு சொன்ன சிறுசிறு வடிவங்கள் கூட பிற்காலத்தில் தனி இலக்கிய வடிவமாக உருவாயிருப்பதையும் பார்க்கமுடிகிறது. அகத்தை தனியாகப் பாடுவது, புறத்தை தனியாகப் பாடுவது, அகத்தைக் கொண்டு புறத்தைப் பாடுவது, புறத்தை சொல்லி அகத்தைப் பாடுவது என பல்வேறு சீரிய முயற்சிகள் வெற்றி பெற்றிருக்கின்றதைப் பார்க்கிறோம். இன்னும் சொல்லப்போனால் பல சோதனை முயற்சிகள் கூட வெற்றி பெற்று தனித் தனி இலக்கிய வகைகளைப் தமிழ்மொழி பெற்றிருக்கின்றது. 96 சிற்றிலக்கிய வகைகள் வரையறுக்கப்பட்டாலும் அந்த வரையறையில் அடங்காத ஏகப்பட்ட இலக்கிய வகைகளைத் தமிழ் இலக்கியப் பரப்பில் காணமுடியும். அந்த வகையில் தமிழ்விடுதூது குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தமிழில் தூது**

தூது என்பது செய்தியைக் கொண்டு சேர்ப்பது என்பதாகும். செய்தியைக் கொண்டு சேர்ப்பதிலும் சில வரைமுறைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. தூதாக வருபவனை கைது செய்தலோ, தண்டித்தலோ, தாக்குதலோ கூடாது என்பது புறத்தில் பெருமரபு என்று கூடச் சொல்லலாம்.

**“ஓதல் பகையே தூது இவை பிரிவே”** ***(தொல். பொருள். நூ-971)***

என்று தூது பற்றி வருகிறது. இதில் வரும் தூது புறத்திற்குரியதாகும். அதாவது அரசியல் காரணமாக ஒரு அரசன் மற்றொரு அரசனுக்குத் தூது அனுப்பும் முறையாகும். இங்கு அகத்திற்குரியதாக வரவில்லை. ஆனால் மற்றொரு இடத்தில் தூது பற்றி தொல்காப்பியத்தில் வருகிறது.

**“வாரா மரபின வரக் கூறுதலும்**

**என்னா மரபின் எனக் கூறுதலும்**

**அன்னவை எல்லாம் அவற்றவற் றியல்பான்**

**இன்ன என்னும் குறிப்புரை ஆகும்”** ***(தொல்காப்பியம், நூ - 905)***

இங்கு தூது என்பது அகத்திற்குரியதாகிறது. அதாவது அஃறிணை உயிர்களிடம் பேசுவது என்பதாக வருகிறது. ஆனால் பிற்காலத்தில் தூது என்பது தனியொரு இலக்கிய வடிவமாக வளர்ச்சியுற்றது. இவ்வளர்ச்சி கி.பி. 14 ஆம் நூற்றாண்டில்

தொடங்குகிறது. நம்மாழ்வார தம் திருவாய் மொழியில் தூதுவிட்டு நம் மனத்தை அலையவிடுகிறார். இது இறைவனிடம் தூது அனுப்புவதாக வருவதாகும். இதுவும் அகம் சாரந்த மரபிலேயே வருகிறது. புறம் என்பது பின்னுக்குத் தள்ளப்படுகிறது என்று கூட சொல்லலாம்.

**“நீ அலையே சிறு பூவாய் நெடுமாலாரக்கு என் தூதாய்**
**நோய் என்று நுவல் என்ன நுவலாதே இருந்தொழிந்தாய்**
**சாயொடு மணிமாமை தளர்ந்தேன்நான் இனிஉனது**
**வாயலகில் இன்னடிசில் வைப்பாரை நாடாயே”**

என்று நம்மாழ்வார கிளியைத் தூதாக அனுப்புகிறார். இதனைத்தான் தொல்காப்பியர் வாரா மரபின என்கிறார். அதன் பின்னர் இலக்கண விளக்கம் தூதாக அனுப்பவேண்டிய வற்றின் பட்டியலை அளிக்கிறது.

**“இயம்புகின்ற காலத்து எகினம் மயில் கிள்ளை**
**பயம்பெறு மேகம் பூவை பார்வதி – நயந்த குயில்**
**பேதை நெஞ்சம் தென்றல் பிரமரம் ஈரைந்துமே**
**தூதுரைத்து வாங்கும் கொடை”**

என்பதில் தூது அனுப்பவேண்டிய பட்டியல் பதினைந்தாக இருக்கிறது. அதனால் தான் நெஞ்சுவிடு தூது போன்ற நூல்கள் உருவாயின. ஆனால் இவையனைத்தும் அகம் சார்ந்தவையாகவே இருக்கின்றன.

**தமிழ்விடுதூது – இலக்கியம்**

தூது இலக்கியங்கள் பிரபந்த வகைகளுள் ஒன்று, “இது தலைவன் தலைவிகளுள் விரகத்தால் துன்புற்ற ஒருவர் மற்றொருவர்பால் தம் வருத்தத்தைத் தெரிவிக்கும்படி உயர்திணைப் பொருள்களையேனும் அஃறிணைப் பொருள்களையேனும் விடுப்பதாகப் பாடுவது தூதாகும். இதனைப் பாடும் முறையை இலக்கண விளக்கம் வருமாறு உரைக்கிறது.

**“பயிறருங் கலிவெண்பா பாவினாலே**
**உயர்திணைப் பொருளையும் அஃறிணைப் பொருளையும்**
**சந்தியின் விடுத்தல் முந்துறு தூதெனப் பாடியற்**
**புலவர் நாட்டினர் தௌந்தே”**

அவ்வகையில் ‘தமிழ்விடுதூது’ என்பது மதுரைச் சொக்கநாதர் பால் காதல் கொண்ட ஒரு தலைவி விரகத்தால் துன்பமடைந்து தமிழை அவரிடம் தூதுவிடுவதாக இயற்றப்பட்ட நூல். இந்நூலை இயற்றிய புலவர் யார் என்பது அறிய முடியவில்லை. இது புறத்திணைத் துறைகளுள், கடவுண்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கத்தின் பாற்படும் என்று செ. உலகநாதன் குறிப்பிடுகிறார்.

**தமிழ்விடுதூது – தமிழின் சிறப்பு**

தமிழ்விடு தூதின் நெடுகிலும் அதாவது 536 வரிகளில் பெரும்பாலனா வரிகளில் தமிழ் மொழியின் வரலாறு, அதன் நெடிய இலக்கியப்பரப்பில் அணி செய்யும் இலக்கண இலக்கியங்களின் சிறப்பு என விரிகிறது. தொல்காப்பியம், சங்க இலக்கியம் பற்றி முதலில் பாடாமல் சுந்தரர் பற்றியும் மற்ற நாயன்மார்கள் பற்றியும், அவர்களது இலக்கியச் சிறப்பு பற்றியும், அவர்களுக்கு இறைவன் அருளிய செயல் பற்றியும் வருகிறது.

**“மன்னும் மூவாண்டில் வடகலையும் தென்கலையும்**
**அன்னை முலைப்பாலில் அறிந்தோரும் – முன்னரே” (5)**

**“மூன்று விழியார் முன்முதலையுண்ட பிள்ளையைப்பின்**
**ஈன்றுதரச் சொல்லின் இசைத்தோறும் – தோன்று அயன்மால்” (6)**

**“தேடி முடியா அடியைத் தேடாதே நல்லூரில்**
**பாடி முடியாப் படைத்தோரும் – நடிமுடி” (7)**

**“மட்டோலைப் பூவனையார் வார்ந்து ஓலை சேர்த்து**
**பட்டோலை கொள்ளப் பகர்ந்தோரும் – முட்டாதே” (8)**

தமிழ்விடுதூது முதல் பாடலில் சொக்கநாதர் பற்றியும், அடுத்து முறையே மீனாட்சி, கணபதி, முருகன் என அவர்களின் சிறப்பும் வருகிறது. இதல் குறிப்பிட வேண்டிய விஷயம் என்னவென்றால் முதல் எட்டு பாடல்கள் இந்நூலின் கடவுள் வாழ்த்து என்று சொல்லலாம். இதில் ஆசிரியர் தெளிவாக முறைப்படி வரிசைப்படுத்தி அமைத்திருப்பது சிறப்பிற்குரியதாகிறது.

**புலவர்கள் – நூற்கள்**

தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, சங்க இலக்கியங்கள், நாலடியார் என அதனை இயற்றியவர்கள் பற்றி சிறப்பித்துப்பாடப்படுகிறது. இது எவ்வாறு பாடப்படுகிறது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். தமிழைத் தூது அனுப்ப வேண்டும். அது எந்த வித முரண்பாடும் இல்லாமல் மகிழ்ச்சியோடு சென்று நல்ல படியாகத் தூதுச் செய்தியை அறிவித்து சொக்கநாதரை அழைத்து வர வேண்டும். அதற்காக தூதாக அனுப்பும் தமிழை சிறப்பித்து பாடவேண்டும். அந்த அடிப்படையில் தமிழின் சிறப்பம்சங்கள் பட்டியலிடப்படுகிறது.

**“ஒல்காப் பெருந்தமிழ் மூன்று ஓதியருள் மாமுனியும்**
**தொல்காப்பியம் மொழிந்த தொல்முனியும் – மல்காச் சொல்” (9)**

என்று தொல்காப்பியமும்,

**“காடவரும் செஞ்சொற் கழறிற்றறிவாரும்**
**பாடஅரும் தெய்வமொழிப் பாவலரும்” (14)**

என்று வள்ளுவரும்,

**“நாத்திரமா மேவுபொருள் நன்றா அறுபதெனும்**
**சூத்திரமாப் பாடியருள் தோற்றமும்”**

என்று இறையானர் அகப்பொருளும் சிறப்பிக்கப்படுகிறது. இது மட்டுமல்ல தமிழ் தனக்கு அணியாகக் கொண்டிருக்கும் சந்தங்கள், பண்கள், எழுத்துக்கள், இலக்கியங்கள், புலவர்கள், இறைவன்கள், மொழியின் உறுதித்தன்மை என அனைத்துச் சிறப்புக்களும் நீளுக்கின்றன. இவையனைத்தும் பார்க்கின்ற போது முழுக்க முழுக்க புறச்செய்திகளாக இருக்கின்றன. ஆனால் அதன் இறுதியில் சொக்கநாதரின் அருட்சிறப்பும், பெருமைகளும் வருகின்றன.

**“அரிய திசைப்பாலர் அத்தம் முதல் தாங்கி**
**தெரிசனக் கண் பார்த்து ஏவல் செய்யப்” (214)**
**“எந்தாய் என்று ஏத்தும் இடைக்காடன் பின்போன**
**செந்தாமரை போல் திருத்தாளும்” (8)**

என்று இறைவனின் அருட்சிறப்பு வருகிறது. இதுவும் புறச்செய்தியாகிறது. இந்நூலின் இறுதியில்,

**“துறவாதே சேரந்து சுகாநந்தம் நல்க**
**மறவாதே தூது சொல்லிவா” (268)**
**“பொன்னையாள் வீடும் புகுந்திருக்கலாம் எனின்என்**
**பொன் அனையாள் வீடும் பொருந்தாதோ என்னும்**
**மொழி” (263)**

என்று பரத்தை வீட்டில் தங்கி இருக்கலாம். அதே போல் என் வீட்டில் ஒரு நாள் தங்கி இருக்கப் பொருந்தாதோ? என்று தலைவி தன் விரகத்தாபத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. இங்கு தொடகத்தில் புறச் செய்திகளே பெரும்பாலும் அமைந்திருந்த நிலை மாறி அகச் செய்திக்குள் பிரவேசிக்கிறது.

தொல்காப்பியர் குறிப்பிடும் அகமரபில் மிக முக்கிய மரபு சுட்டி ஒருவர் பெயர் கொளப்பெறாஅர் இம்மரபு இங்கு பொருந்தாது. எனவே, இத்தூது புறம் என்ற வகைப்பாட்டிற்கு பொருத்தமுடையதாகும். காரணம் சொக்கநாதர் தலைவன் என்பது தெளிவாகப் புலப்படுகிறது. இருந்த போதும், தூது என்பது அகப்பாடல் மரபாக இருந்தாலும் அதன் கட்டமைப்பிற்குள் இருந்து கொண்டு தன் நோக்கத்தை அதற்கேற்ப மாற்றிக் கொள்வது புலவர்களின் திறனாகக் கருதப்படுகிறது. அந்நிலையில் தமிழையும், சொக்கநாதரையும் பாடவந்த புலவர் தூது எனும் இலக்கிய வடிவத்தை தேரும் போது அகமாக வருகிறது. ஆனால் இதன் நோக்கம் அகமல்ல என்பது தெளிவாகிறது.

இப்படி இலக்கிய வரையறைகளை மாற்றியமைப்பது என்பது காலங்காலமாக நடந்து வரும் ஒன்றாகும். இதனை வளர்ச்சி என்ற அடிப்படையிலும் புதிய முயற்சி என்ற அடிப்படையிலும் ஏற்றுக்கொள்வது இயல்பாகிவிடுகிறது. ஆனால் இவ்விலக்கிய புது முயற்சிகள் தொடர்வதனால் தான் தமிழ் மொழி வளர்ச்சி பெறுகிறது.

தமிழ் இலக்கியப் பரப்பில் பெரும்பாலான இலக்கியங்கள் அகமும், புறமும் கலந்து இருப்பதைப் பார்க்கிறோம். நெடுநல்வாடை அகமா? புறமா? என்பதில் முடிவு முடிவாக எட்டப்படவில்லை. அதே போல் தொல்காப்பியர் அகத்தைப் பாடும் பாக்களாக சொன்ன கலித்தொகை, பரிபாடல் ஆகியவற்றில் பரிபாடல் அகம், புறம் இரண்டையும், பாடும் பாவடிமாக மாற்றப்பட்டுள்ளது. இதே போல் பட்டினப்பாலையும் புறத்தைப் பேசும் அகநூலாகத்தான் முன்னிறுத்தப்டுகிறது. அந்த வரிசையில் தமிழ்விடுதூதும் அடங்கும்.

இலக்கியம் என்பது எப்போதும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் அடங்கிவிடாது ஒன்று. அது சமூகக் கட்டுமானத்தின் மீதான கட்டற்ற இயங்கியல். அது எப்போதும் ஒன்று போல் தன்னை இருத்திக் கொள்வதில்லை. மாறாக அது தன்னை சமூகப் பின்புலத்திற்கு ஏற்றவாறு இருத்திக் கொள்கிறது. இந்த மாற்றமோ அல்லது இருப்போ யாரும் தேர்ந்தெடுத்து நடைமுறைப் படுத்துவது அல்ல. இயல்பாக நடக்கும் ஒன்றாகும். அதனால் தான் தமிழ் இலக்கியப் பரப்பு நெடுகிலும் இலக்கியம் என்ற பொது நிலைக்குள் உருவம் உள்ளடக்கம் என்ற நிலைகளில் வேறு வேறான பல்வேறு வடிவங்களைப் பெற்றிருக்கிறோம். தொல்காப்பியர் பரியும், கலியும் அகத்தைப் பாடுவதற்கான பா வகையாகக் குறிப்பிடுகிறார். ஆனால் சங்க இலக்கியத்தில் ஆசிரியப்பா பெருமளவில் ஆட்சி பெற்றிருப்பதைப் பார்க்கிறோம். எனவே, படைப்பாளிகள் சிந்தனைத் தேவைக்கேற்ப இலக்கிய வடிவத்தை தேர்ந்தெடுப்பதிலும், மாற்றிக்கொள்வதிலும் முக்கியக் கவனம் செலுத்தி வந்திருக்கின்றனர்.

**துணைநின்ற நூல்கள்**


**1. தொல்காப்பியம், தெளிவுரை**
**ச.வே.சுப்பிரமணியன்,** *மணிவாசகர பதிப்பகம், 31, சிங்கரதெரு, பாரிமுனை, சென்னை - 08, 2005.*

**2. தமிழ்விடுதூது - செ. உலகநாதன்** *பாவை பப்ளிகேஷன்ஸ், இராயப்பேட்டை, சென்னை - 14, 2010*

**3. தமிழ் இலக்கிய வரலாறு பெ. சுயம்பு,**
*பாரதி பதிப்பகம், திசையன்விளை - 57, 2011*

# பழந்தமிழ் இலக்கியங்களில் அகம்

*முனைவர் சு. அரங்கநாதன், *உதவிப் பேராசிரியர், தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை -15 .*

மொழி ஒலியும், சைகளில் இருந்தும் தொடங்குகிறது. அது குறியீடுகளாகப் பயன்படுகின்றன. ஒலிக்கு எழுத்து வடிவம் பெற்றதிலிருந்து இன்றைய மொழி அமைப்பு வரை அது பல்வேறு மாற்றங்களைத் தன்னிடத்தே கொண்டுள்ளது. மொழி ஒலி மற்றம் சைகை வடிவத்திலிருந்து எழுத்து வடிவம் பெற்ற பிறகு அதற்கென ஒரு இலக்கண அமைப்பு முறை உருவாக்கப்படுகிறது. மொழி என்பது ஒரு கருத்தப்பரிமாற்றக் கருவி என்பது அடிப்படை. ஆனால் அதையும் தாண்டி அந்த மொழி என்பது ஒரு மனிதனின் பண்பாட்டு அடையாளமாகக் கட்டமைக்கப்படுகிறது. மொழி என்பது ஒரு மனிதனின் கருத்துப்பரிமாற்றத்தை மட்டும் கொண்டுசெல்லாமல் அது ஒரு மொழிக் குடும்பத்தின் வாழ்வியல் நெறிகளையும், பண்பாட்டையும் கொண்டு சேர்க்கிறது. அது மட்டுமல்ல எதையும் நாம் தீர்மானித்து விட முடியாத இவ்வுலகத்தில் மொழி தனக்கான உறவுகளை ஒன்றிணைக்கிறது. மொழி, அதைப் பேசுகின்ற இனத்தின் அரசியல், கலை, வரலாறு, சமூகநிலை, பழக்கவழக்கம், ஒழுக்கநெறிகள் மற்றும் எண்ணங்கள் போன்ற பல வாழ்வியல் கூறுகளையும் பண்பாட்டு நிலைகளையும் வெளிப்படை விளக்கமாகவும் உள்முகச் செய்திகளாகவும் கொண்டு விளங்குகிறது.

**இலக்கியம்**

இலக்கியம் என்பது ஓர் இலக்கை இயம்புதல். இலக்கியம் என்ற சொல் பண்டைக் காலத்தில் ஒரு பொதுச்சொல்லாக வழங்கிற்று. பிழையில்லாமல், இலக்கண வழுவில்லாமல் எழுதப்படுவன எல்லாம். இலக்கியம் என்பது ஒருவகைப் புனைந்துரைத்தல். அதாவது ஒன்றை மற்றொன்றாகக் கூறி ஒன்றை விளக்குவது. அந்த ஒன்று என்பது முதலில் சொல் ஒன்றாகும். எதையும் நேரிடையாகக் கூறாமல் ஏதேனும் ஒரு உத்தியின் மூலம் எடுத்துரைப்பதாகும். மொத்தத்தில் இலக்கியம் என்பது அழகியல் ஆகும்.

**அக இலக்கியம்**

பழந்தமிழ் இலக்கியங்கள் ஒரு அடிப்படை நெறிமுறைகளைக் கொண்டது. அதாவது சிறு கூறிலிருந்து பெருங் கூறு வரை பாகுபாட்டையும், இலக்கணக் கோட்பாடுகளையும் பின்பற்றி அமைக்கப்பட்ட ஒன்று. அதனால் தான் அகம், புறம் என்ற பாகுபாட்டைக் காண்கிறோம். அதனால் தான் கைகிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, பெருந்திணை என்று அகத்தைப் பாகுபடுத்தியிருக்கிறார்கள். இப்படி அக இலக்கியங்களை ஏழு பிரிவாகப் பிரித்ததோடு மட்டுமல்லாமல் இந்த இலக்கியங்களைப் பாடுவதற்கான மையப்பொருண்மையையும், வெளியையும், காலத்தையும் கட்டமைத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

**“கைக்கிளை முதலாப் பெருந்திண இறுவாய்**
**முற்படக் கிளந்த எழுதிணை என்ப”**

சங்க இலக்கியம் எனப்படுவது தமிழில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலப்பகுதியில் எழுதப்பட்ட செவ்வியல் இலக்கியங்கள் ஆகும். சங்க இலக்கியம் தற்போது கண்டுபிடிக்கப்பட்ட வரை 473 புலவர்களால் எழுதப்பட்ட 2381 பாடல்களைக் கொண்டுள்ளது. இப்புலவர்களுள் பல தரப்பட்ட தொழில் நிலையுள்ளோரும் பெண்களும்,

நாடாளும் மன்னரும் உண்டு. சங்க இலக்கியங்கள் அக்காலகட்டத்தில் வாழ்ந்த தமிழர்களின் தினசரி வாழ்க்கை நிலைமைகளைப் பதிவு செய்து வைத்துள்ளன. பண்டைத்தமிழரது காதல், போர், வீரம், ஆட்சியமைப்பு, வணிகம் போன்ற நடப்புகளைச் சங்க இலக்கியப்பாடல்கள் அறியத்தருகின்றன.

**“வேரல் வேலி வேர் கோட் பலவின் / சாரல் நாட செவ்வியை ஆகுமதி**

**யார் அஃது அறிந்திசினோரே சாரல் / சிறு கொட்டுப் பெரும் பழம் தூங்கியாங்கு, இவள்**

**உயிர் தவச் சிறிது காமமோ பெரிதே....”**

சிறிய ஒரு மரக் கிளையில் பாரம் தாங்காமல் தொங்கும் பெரிய பலாப்பழம்போல, காதல் வயப்பட்டு நிற்கும் இவள் காதல் மிகப்பெரியது, ஆனால் அதை தாங்கும் அளவுக்கு அவள் உயிர் பெரியதாகத் தெரியவில்லை. அது மிகச்சிறியது. இந்த வேதனையினையும் விரக தாபத்தையும் யார்தான் அறிவார்களோ! வேர்ப்பாலாக்களுக்கு மூங்கில் வேலியிட்டு பாதுகாக்கும் மலைநாட்டின் தலைவனே!! என விழிக்கின்றது. இது ஒரு பெண்ணின் உச்ச உணர்வச்சியின் வெளிப்பாடாகவும் ஒரு பாடலைக் காணலாம். நீண்டநாள் பிரிவால் ஏற்பட்ட காதலின் ஏக்கம். பாலை நிலத்துப் பின்னணியுடன் பெண் ஒருவள் காதலின் உச்ச உணர்வின் வெளிப்பாடாகபிதற்றுவதை,

**“கன்றும் உண்ணாது கலத்தினுள் படாது**

**நல் ஆன் தீம் பால் நிலத்தில் உக்கா அங்கு**

**எனக்கு அகாது என்னைக்கும் உதவாது**

**பசலை உணீஇயர் வேண்டும்**

**திதலை அல்குல் என் மாமைக் கவினே.”**

என்ற பாடல் சொல்கிறது. அதாவது, கன்றும் குடிக்காமல், பாத்திரத்திலும் கறக்காமல், நிலத்தில் வீணே வழிந்துபோகும் பசுவின் பாலைப்போல, எனக்கும் உதவாமல், என் தலைவனுக்கும் இல்லாமல் என் அழகும் விணாகிக்கொண்டிருக்கின்றதே. நெய்தல் நிலப்பின்னணியோடு ஒரு பாடல். நெய்தல் திணையின் உரிப்பொருள் இரங்கலும் இரங்கல் நிமித்தமும், அதை மையப்பொருண்மையாக்க கொண்டு எழுதப்பட்ட ஒரு பாடல் ஒரு பெண் காதல் வயப்பட்டு தூக்கம் தொலைத்து நின்ற உணர்வை பதுமனார் என்ற புலவர்

**“நள்ளென்றன்றே, யாமம் சொல் அவித்து, / இனிது அடங்கினரே, மாக்கள் முனிவு இன்று,**

**நனந்தலை உலகமும் துஞ்சும் / ஓர் யான் மற்ற துஞ்சாதேனே”**

நள்ளிரவு நேரம் நிசப்தம் நிலவுகின்றதே. தமது சத்தங்களை எல்லாம் தொலைத்து மக்கள் தூங்குகின்றனரே, அடடா உலகமே தூங்குகின்றதே என்னைத்தவிர! என்று தன் காதல் துயர் சொல்லப்படுகிறது. சங்க காலப் பெண்பாற் புலவர்களில், ஔவையார் முதன்மையானவராவார். வெள்ளி வீதியாரும், நன்முல்லையாரும் அடுத்த நிலையில் வைத்து எண்ணத்தக்கவர்களாவர். கழார்க் கீரன் எயிற்றியார், கச்சிப்பேட்டு நன்னாகையார், நச்செள்ளையார், ஒக்கூர்மாசாத்தியார், வெண்ணிக்குயத்தியார், மாற்றோக்கத்து நப்பசைலயார், வெறிபாடிய காமக்கண்ணியார், நக்கண்ணையார், பொன்முடியார், நல்வெள்ளையார், தாயங்கண்ணியார், குறமகள் இளவெயினியார், பாரிமகளிர், ஆதிமந்தி, காவற்பெண்டு, பெருங்கோப்பெண்டு போன்றோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர். சங்க காலப் பெண்பாற் புலவர்கள் காதலை மிகவும் சிறப்புடன் எவ்விதமான பூச்சுக்களும் இல்லாமல் பாடி இருக்கின்றனர். தலைவி, தலைவன், தோழி எனக் கூற்று யாருடையதாக இருப்பினும் வெளிப்படையாகவே நிகழ்கிறது. காதலில் தவிக்கும் தலைவியின் மன நிலையை ஔவையின் பாடலொன்று அற்புதமாகப் படம் பிடித்துள்ளது. தலைவி காதல்நோயால் தகித்துக் கொண்டிருக்க, தென்றல் வீசி அந்நோயை மேலும், மேலும் அதிகமாக்குகிறது. ஊரோ அமைதியாக உறங்கிக்கொண்டிருக்க தன் துயரத்தை உணராமல் உறங்கிக் கொண்டிருக்கும் இவ்வூரை,

**“முட்டு வேன்கொல் தாக்கு வேன்கொல் / ஓரேன் யானும்ஓர் பெற்றி மேலிட்டு**

**ஆஅ ஒல்எனக் கூவு வேன்கொல் / அலமரல்அசைவலி அலைப்பஎன்**

**உயவுநோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே**

**(குறுந்தொகை - 28)**

என்ன செய்து எழுப்புவேன்? என்று மனம் கலங்கி நிற்கிறாள். தலைவன் ஒருவனை காலை, பகல், மாலை, யாமம், விடியல் என எல்லாப் பொழுதும் காதல்/காமம் வருத்திக் கொண்டிருக்கிறது. நினைவெல்லாம் பொழுதெல்லாம் அவளை நினைத்துக் கொண்டிருக்கும் அவன் தனது காதலே உண்மைக் காதல் என்கிறான். காலையும் பகலும் கையறு மாலையும் ஊர்துஞ்சு யாமமும் விடியலும் என்று இப் பொழுதிடை தெயின் பொய்யே காமம் என்கிறது அள்ளூர் நன்முல்லையாரின் (குறுந்தொகை) பாடல் 32. தலைவன் இல்லாத சமயத்தில்

பெண்கள் அழகுபடுத்திக் கொள்ளுதலை விரும்பாதவர்களாக இருந்திருக்கிறார்கள். இதனை கச்சிப்பேட்டு நன்னாகையாரின் பாடல் தெளிவு படுத்துகிறது.

**"ஈங்கே வருவர் இனையேல் அவர்என / அழா அற்கோ இனியே நோய்நொந் துறவி!**

**மின்னின் தூவி இருங்குயில் பொன்னின் / உரைதிகழ் கட்டளை கடுப்ப மாச்சினை**

**நறுந்தாது கொழுதும் பொழுதும் / வறுங்குரற் கூந்தல் தைவரு வேனே!"**

**(குறுந்தொகை -162)**

பொருளீட்டச் சென்ற தலைவன் விரைவில் திரும்பி வருவார் என ஆறுதல் கூறும் தோழிக்குத் தலைவி, நான் எவ்வாறு அழாமல் இருக்க முடியும்? தலைவன் இல்லாத காரணத்தினால் இந்த இளவேனில் காலத்திலும் மலர் இல்லாமல் வறிதாக இருக்கும் கூந்தலைத் தடவுகிறேனே என வருந்திக் கூறுகிறாள். ஒத்த தலைவனும் தலைவியும் களவொழுக்கத்திற்குப் பிறகு மணம் செய்துகொள்வதன் மூலம் கற்பொழுக்கத்திற்கு வருகின்றனர். என்றாலும் காதலை சொல்வதில் தயக்கமும் இருந்திருக்கிறது. இதனை வெள்ளி வீதியாரின் குறுந்தொகை பாடலொன்று உறுதிசெய்கிறது.

**"இடிக்கும் கேளிர் நும் குறை ஆக / நிறுக்கல், ஆற்றினோ நன்று மன்தில்லை**

**ஞாயிறு காயும் வெவ்அறை மருங்கில் / கைஇல் ஊமன் கண்ணில் காக்கும்**

**வெண்ணெய் உணங்கல் போலப் / பரந்தன்று, இந்நோய்; நோயன்று கொளற்கரிதே."**

**(குறுந். -58)**

பாறையின் மீது வைக்கப்பட்டிருக்கும் வெண்ணெய் சூரியனின் கதிர்களால் உருக ஆரம்பிக்கிறது. இதனைப் பார்த்துக்கொண்டிருப்பவன் கை இல்லாதவன் அத்துடன் ஊமையும் கூட; கைகள் இருந்திருந்தால் வேறிடத்தில் வைத்திருக்கலாம். வாய் இருந்தாலாவது யாரையாவது அழைத்துப் பாதுகாக்கலாம். அதுபோல இக்காதல் நோயை அடக்கிப் பாதுகாக்கவும் இயலவில்லை. பிறரிடம் வெளியிடுவதற்குரிய மனத் திண்மையும் இல்லை. கையில்லாத ஊமையின் நிலையில் தலைவிபடும்துயரில் காதலை வெளிப்படுத்த இயலாத ஆதங்கம் தொனிப்பதையும் காண முடியும்.

**"நிலவே, நீல் நிற. / யானே? புனையிழை நெகிழ்ந்த புலம்புகொள் அவலமொடு**

**கனையிருள் கங்குலும் கண்படை இலெனே; / அதனால், என்னொடு பொரும் கொல்இவ் உலகம்?**

**உலகமொடு பொரும்கொல், என் அலமரு நெஞ்சே?**

இரவெல்லாம் தூக்கமின்றித் தனிமைத் துயரில் வருந்தியுள்ளேன். ஊர் உலகமோ மகிழ்ச்சியாக இருக்கிறது. அதனால் இந்த உலகம் தன்னோடு மகிழவில்லையென்று நினைத்து என்னோடு வந்து போரிடுமா? அல்லது என்னுடைய துயரங்கொண்ட நெஞ்சமானது, தன்னோடு வருந்தவில்லையென்று சென்று உலகத்தோடு போய்ப்போரிடுமா? எதுவுமே தோன்றவில்லையே எனக்கு (எதுவுமே தோன்றாதவளை தனிமை துயரம் மட்டும் வருத்திக் கொண்டே இருக்கிறது). வெள்ளிவீதி, நன்முல்லை ஆகியோரின் பிரிவுத் துயரம் கல் நெஞ்சையும் கரைத்து விடும் ஆற்றல் பெற்றவை. மற்றுமொரு பெண்... மழைக்காலத்திற்குள் திரும்பி வந்துவிடுவேன் என்று சொல்லிப்போனவன் வெகுநாட்களாய் வராததால் காத்திருப்பின் உக்கிரம் தாளாமல் அவனைத் திட்டத் தொடங்குகிறாள்

**"வாரார் ஆயினும் வரினும் அவர் நமக்கு / யார் ஆகியரோ? தோழி! நீர்**

**நீரப் பைம்போது உளரி, புதல / பீலி ஒண்பொறிக் கருவிளை ஆட்டி**

**நுண்முள் ஈங்கைச் செவ்வரும்பு ஊழ்த்த / வண்ணத்துய்ம்மலர் உதிர், தண்ணென்று**

**இன்னாது எளிதரும் வாடையொடு / என் ஆயினாள் கொல் என்னா தோரே?"**

**(குறுந்தொகை - 110)**

அவர் இனி வராவிட்டாலும் வந்தாலும் எனக்கு யாரோ போன்றவரே தோழி! நீரில் மலரும் மொட்டுக்களை மலர்த்தி மயில் தோகை போன்ற கருவிளை மலர்களை அசைத்து நுண்ணிய முட்களையுடைய ஈங்கை மர அரும்புகளை விரித்து, வண்ண மலர்களை உதிர்த்தபடி சில்லென வீசி துன்பம் தரும் இந்த வாடைக்காற்றில் அவள் என்ன ஆனாளோ என்று வருந்தாதவன் வந்தால் என்ன? வரா விட்டால் தான் என்ன? என்பது அவள் கோபமக இருக்கிறது. பிரிவின்போது பொழுது சாயும் வேளைகள் தரும் துயரத்தை உணர்ந்திராதவர்கள் யார் இருக்க முடியும்? இந்தப்பாடலும் அப்படி ஒரு பிரிவின் துயரைப் பேசுகிறது..

**"எல்லை கழிய முல்லை மலர**

**கதிர்சினம் தணிந்த கையறு மாலை**

**உயிர்வரம்பு ஆக நீந்தினம் ஆயின்**

**எவன் கொல்? வாழி தோழி!**

**கங்குல் வெள்ளம் கடலினும் பெரிதே!**

**(குறுந்தொகை - 387)**

பகலின் எல்லை முடிந்து முல்லைப்பூக்கள் மலரத் தொடங்கிவிட்ட மாலை நேரம்! சூரியனின் சினம் தணிந்த பின்னால் வந்து கொண்டிருக்கும் இந்த தாங்கிக் கொள்ளவியலாத மாலை நேரத்தை உயிர் போவதற்கு முன்பாக என்னால் நீந்திக் கடந்து விட முடியுமா தோழி? இரவு வெள்ளம் கடலை விடவும் பெரிதாய் இருக்கிறது என்கிறாள் ஒரு பெண்! இரவென்ன வெள்ளம் போன்றதா? அதுவும் உயிர் போவதற்குள் நீந்திக் கடந்துவிட முடியாத கடல் போன்றதா!! என்ன அற்புதமான உவமை இது? இதைப் படித்ததிலிருந்து ஜன்னல் திறந்து இரவு வானம் பார்க்கையில் எல்லாம் இருள் கடலாய்ப் பொங்கிப் பெருகுவது போன்றதோர் பிம்பம் எழுவதை என்னால் தவிர்க்க முடிவதில்லை! இப்பாடலை எழுதியவர் தன் பெயரைக்கூட குறிப்பிட்டுச் சொல்லிக் கொள்ளாததால் கங்குல் வெள்ளத்தார் என்றே குறிக்கப்பட்டிருக்கிறார்! குறுந்தொகைப் பாடல்கள் ஒவ்வொன்றிலும் அளவிட முடியாத காதல் உணர்வுகள் தேக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு பெண்ணைப் பார்த்ததிலிருந்து ஒரு ஆண் பித்துப் பிடித்தவனாகிறான். அவனின் இயல்பு பிறழ்ந்த நிலையைக் காணச்சகிக்காத அவன் நண்பர்கள் அவனைக் கடிந்து கொள்கின்றனர். அப்போது தலைவன்,

**“இடிக்கும் கேளிர்! நும் குறை ஆக / நிறுக்கல் ஆற்றினோ நன்றுமன் தில்ல**

**ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில் / கைஇல் ஊமன் கண்ணிற் காக்கும்**

**வெண்ணெய் உணங்கல் போல/பரந்தன்று இந்நோய்; நோன்று கொளற்கு அரிதே”**

**(குறுந்தொகை - 58)**

என்று சொல்கிறான். என்னை இடித்துரைக்கும் நண்பர்களே! என் பிரச்சினையை உங்களால் தடுத்து நிறுத்த முடிந்தால் அது எனக்கு நன்மையுடையதாய் இருக்கும். வெயிலில் காய்ந்து கொண்டிருக்கும் பாறை ஒன்றின் மீது வைக்கப்பட்டிருக்கும் வெண்ணெயை கைகள் இல்லாத, வாய் பேசவியலாத ஒருவன் காக்க முயல்வதைப் போல நான் தவித்துக் கொண்டிருக்கிறேன். வெண்ணெய் உருகிப் பாறையில் பரவுவது போல காதல் என்னுள் பரவிக் கொண்டிருக்கிறது. இந்நோய் தாங்கிக் கொள்வதற்கு அரிதானது என்பதாகும்.

**“யாயும் ஞாயும் யாராகியரோ / எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்**

**நீயும் யானும் எவ்வழி அறிதும் / செம்புலப் பெயல் நீர்போல**

**அன்புடை நெஞ்சந்தாங் கலந்தனவே**

**(குறுந்தொகை - 40)**

உன் தாயும் என் தாயும் யாரோவென தொடர்பற்றவர்கள். என் தந்தையும் உன் தந்தையும் எவ்வகையிலும் உறவினர்கள் இல்லை. நீயும் நானும் கூட இதற்கு முன்பாய் அறிமுகமானவர்கள் இல்லை. பாலை மண்ணில் பெய்த மழை போல நம்மிருவர் நெஞ்சங்கள் தாமாகக் கலந்துவிட்டன என்பது இப்பாடல்.

**நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று / நீரினும் ஆரளவின்றே - சாரல்**

**கருங்கோற் குறிஞ்சிப் பூக் கொண்டு/ பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே. - (குறுந்.- 2)**

கரிய கொம்புகளில் குறிஞ்சி மலர்கள் பூத்துக் குலுங்கும் நாடு என் தலைவனின் நாடு. அப்பூக்களில் உண்ட தேனினை, வண்டுகள் தொகுத்துத் தேனடையாகக் கொடுக்கிறது. இத்தனை வளம் நிறைந்த குறிஞ்சித் தலைவனோடு நான் கொண்ட நட்பு, நிலத்தை விடப் பெரியது. வானை விட உயர்ந்தது. நீரினை விட ஆழமானது அறத்தொடு நிற்றல் என்பது அகத்துறைகளுள் ஒன்று. தலைவியின் காதலை பெற்றோருக்குத் தெரியப்படுத்துதல் என்பது இதன் பொருளாகும். இன்றைய காலத்தில் ஒரு பெண் தன் காதலை இயல்பாக தன் பெற்றோரிடம் கூறிவிடுகிறாள். ஆனால் அன்றைய காலத்தில் ஒரு பெண் தன் காதலைத் தன் பெற்றோரிடம் தெரிவிக்கப் பல படிநிலைகள் இருந்தன. அவற்றை இலக்கணப்படி காண்போமானால். பகற்குறி, இரவுக்குறி, முதலான இரு வழிகளிலும் நிகழ்ந்து வந்த தலைமக்களின் சந்திப்பு (மறைமுகக் காதல் வாழ்க்கை.) குறி இடையீட்டினால், சிற்சில இடையூறுகளால் தொடர் முடியாத நிலை ஏற்படும். அந்நிலையில் தலைவன் - தலைவியர் மணம் புரிந்து கொண்டு கற்பு வாழ்க்கை வாழ விரும்புவர். அது கருதித் தலைவியின் களவு ஒழுக்கத்தை முறையாக வெளிப்படுத்தி முறைப்படுத்தும் செயல்கள் நிகழும். அதனை அகப்பொருள் இலக்கணத்தில் அறத்தொடு நிற்றல் என வழங்குவர்.

தலைவன், தலைவியைச் சந்திக்க வரும் (காட்டு) வழி ஆபத்து மிகுந்தது என்று தலைவி அஞ்சுதல்; அன்புகொண்ட தலைவனை விடுத்து வேறு ஒருவனுக்குத்

தலைவியை மணம் முடிக்கப் பெற்றோர் முயலுதல்; தலைவி தலைவனைச் சந்திக்க இயலாதவாறு வீட்டுக் காவல் அதிகமாதல் முதலான காரணங்களால் அறத்தொடுநிற்றல் நிகழும். தலைவி – தோழிக்கும், தோழி – செவிலிக்கும், செவிலி– நற்றாய்க்கும், நற்றாய் – தந்தைக்கும் தமையன்மாரிடமும் உண்மை , உணர்த்தி அறத்தொடு நிற்பர். (நற்றாய் = பெற்ற தாய்)

**அகவன் மகளே! அகவன் மகளே! / மனவுக்கோப் பன்ன நன்னெடுங் கூந்தல்**

**அகவன் மகளே பாடுக பாட்டே / இன்னும் பாடுக பாட்டே –அவர்**

**நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே**

**(குறுந்தொகை – 23)**

தலைவன், தலைவியைச் சந்திக்க வரும் (காட்டு) வழி ஆபத்து மிகுந்தது என்று தலைவி அஞ்சுதல்; அன்புகொண்ட தலைவனை விடுத்து வேறு ஒருவனுக்குத் தலைவியை மணம் முடிக்கப் பெற்றோர் முயலுதல்; தலைவி தலைவனைச் சந்திக்க இயலாதவாறு வீட்டுக் காவல் அதிகமாதல் முதலான காரணங்களால் அறத்தொடுநிற்றல் நிகழும். தலைவினின் பிரிவால் தலைவி உடல் வாடித் தோற்றமளிக்கிறாள். இவளுக்கு என்ன குறை நேர்ந்ததோ என பெற்றோர் குறி பார்க்கிறார்கள். தெய்வங்களையும், குலத்தோரையும் அழைத்துப் பாடிக் குறிசொல்லிக் கொண்டிருக்கிறாள். செவிலித்தாய் அருகே இருக்க குறி சொல்லிக் கொண்டிருக்கிறாள் கட்டுவிச்சி குறி சொல்லும் போது தலைவியன் முகத்தில் பெரிய மாற்றம்... தலைவியை நன்கறிந்த தோழி கட்டுவச்சியிடம் மலை பற்றிய பாடிய பாடலை மீண்டும் மீண்டும் பாடு என்று சொல்கிறாள். கட்டுவிச்சி இயல்பாகவே குறிசொல்லும் போது தெய்வங்களையும், தம் மலைச்சிறப்பும் பாடுவது மரபு. தலைவி காதலிக்கும் தலைவன் வாழும் மலையைத் தான் கட்டுவிச்சி பாடுகிறாள். அதனால் கட்டுவிச்சியின் பாடல் தலைவிக்கு மிகவும் பிடித்திருக்கிறது. அதனை அறிந்தே தோழி அப்பாடலை மீண்டும் மீண்டும் பாடச் சொல்லிக் கேட்கிறாள். இது தான் அறத்தொடு நிற்றல் முறை. அடுத்து செவிலித்தாய் நற்றாய்க்கும், நற்றாய் தந்தை மற்றும் தமையனுக்கும் காதலை வெளிப்படுத்துவார்கள். களவு ஒழுக்கத்தால் தலைவியின் மேனி ( உடல் ), ஒழுக்கம் (இயல்புகள்) இவை வேறுபடுகின்றன. செவிலி, வேலனையும் கட்டுவிச்சியையும் (கட்டுவிச்சி – நெல்மணியை முறத்தில் இட்டுக் குறிசொல்பவள்) வரவழைத்துக் காரணம் கேட்கிறாள். அதனால் எப்பயனும் விளையவில்லை. இந்நிலையில் தலைவி தோழியிடம், தோழி! நம் வீட்டுக் காவலை மீறிச் சென்று, தலைவனும் நானும் கொண்ட காதலைத் தாயிடம் சொல்வது தவறாகுமா? என்று கேட்கிறாள்.

**“நெடுந்தேர் எந்தை அருங்கடி நீவி / இருவேம் ஆய்ந்த மன்றல் இதுஎன**

**நாம்அறி வுறாலின் பழியும் உண்டோ?”**

**(குறிஞ்சிப்பாட்டு: 20-22)**

தோழியே ! தாம் விரும்பியவர்க்கு என்னை மணம் முடிக்க நினைக்கின்றனர் தாயும் தந்தையும். அவர்களது விருப்பமும், எனது மனமும் ஒன்றிப் போகுமாறு செய்ய வேண்டும். காவலைக் கடந்து நானும் தலைவனும் தேர்ந்து கொண்ட மணம் இது என்று நாமே தாயிடம் எடுத்துச் சொன்னால் புகழே ஆகும். பழி ஆகாது, இவ்வாறு தலைவி தோழியை அறத்தொடு நிற்கத் தூண்டுகிறாள். அதன் படியே குறிஞ்சிப்பாட்டு முழுவதுமாகத் தோழி அறத்தொடு நிற்கிறாள். தினைப்புனம் காக்குமாறு செவிலி தலைவியையும் தோழியையும் அனுப்பிய ஒருநாள், தலைவியை நோக்கி வந்த சினம் கொண்ட யானையிடமிருந்து தலைவன் காப்பாற்றியதையும், அன்று முதல் அவர்களுக்கிடையே தோன்றிய காதலையும், தலைவன் தலைவியை மணந்து கொள்வதாக அருவிநீர் உண்டு வாக்குறுதி (சத்தியம்) அளித்ததையும், அவன் அழகையும், பண்புகளையும், குடும்ப வளத்தையும் எல்லாம் விரிவாகக் கூறிச் செவிலியின் மனம், காதலர் காதலுக்கு ஆதரவாக இசையும் வண்ணம் முயல்கிறாள் தோழி.

**“குறிஞ்சித்திணைக்கு மிகுந்த நயம் சேர்ப்பது அறத்தொடு நிற்றல் துறையாகும்.”**

**வரைவு கடாவுதல்**

இரவில் வந்து தலைவியைச் சந்தித்துத் திரும்புகிறான் தலைவன். இந்நிலை நீடிக்கிறது. தலைவனிடம் தலைவியை விரைவில் மணந்து கொள்ளுமாறு வேண்டுகிறாள் தோழி. இதனையே வரைவு கடாவுதல் (மணந்துகொள்ள வேண்டுதல் அல்லது தூண்டுதல்) என்பர். சூழலை விளக்கி மணம் புரியுமாறு தலைவனைத் தோழி வேண்டுவது என வரைவு கடாவுதலுக்குப் பொருள் கொள்ளலாம். வரைவு கடாவுதல் குறிப்பாலும், வெளிப்படையாலும் அமையப் பெறும். குறிப்பாய் உணர்த்தும் போது பயனற்றுப் போனால் மட்டுமே வெளிப்படையாய்க் கூறுதல் மரபு.

**“ஓங்கல் வெற்ப / ஒருநாள் விழுமம் உறினும், வழிநாள்**

**வாழ்குவள் அல்லள்என் தோழி... / கொடுந்தேன் இழைத்த கோடுஉயர் நெடுவரை”**

**பழம்தூங்கு நளிப்பின் காந்தள்அம் பொதும்பில் / பகல்நீ வரினும் புணர்குவை... (அகநானூறு-18 )**

வரைவு நீட்டிக்கின்றான் தலைவன். அதாவது, திருமணம் செய்ய முயலாமல் காலம் கடத்துகிறான். இரவில் வந்து தலைவியைச் சந்திக்கின்றான். இரவு வருகின்றவனைப் பகலில் வா என்று இப்பாடலில் தோழி கூறுகிறாள். உயர்ந்த மலைநாடனே ! இரவில் வரும் உனக்கு ஒருநாள் துன்பம் நேர்ந்தாலும் என்தோழி மறுநாள் உயிர்வாழ மாட்டாள். வளைந்த தேன்கூடுகள் கட்டப்பட்டுள்ள உயர்ந்த மலைச்சாரல் எம் ஊர். அம்மலைச் சாரலில் பழங்கள் பழுத்துத் தொங்கும் மரச்செறிவில் உள்ளது காந்தள் புதர். அப்புதரில் நீ பகற்காலத்தில் வந்தால் தலைவியைக் கூடலாம். இப்பாடல் தோழியின் நாவன்மைக்கு மிகச்சிறந்த சான்றாகிறது. பகலில் வரலாம் என அவள் கூறினாலும் பகலில் தேன் எடுக்க வருபவராலும், பழம் பறிக்க வருபவராலும், காந்தள் மலர் கொய்ய வருபவராலும் இடையூறு ஏற்படும் என்பதை மறைமுகமாக உணர்த்துகிறாள். ஆதலால் நீ விரைந்து இவளை மணந்து கொள்வதே நன்மை பயக்கும் என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறாள்.

**“வேரல் வேலி வேர்க்கோட் பலவின் / சாரல் நாட ! செவ்வியை ஆகுமதி !**

**யார்அஃது அறிந்திசி னோரே? சாரல் / சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்குஇவள்**

**உயிர்தவச் சிறிது ; காமமோ பெரிதே”**

**(குறுந்தொகை- 18, கபிலர்)**

இப்பாடலில் விரைந்து வந்து மணக்குமாறு தலைவனுக்குக் குறிப்பால் உணர்த்துகிறாள் தோழி. வளர்ந்த மூங்கிலை வேலியாகக் கொண்ட மலைச்சாரல் நாட்டினனே! உனது நாட்டில் வேலியின் உள்ளே வேரில் குலைகளை உடைய பலா மரங்கள் நிறைந்திருக்கும். எங்கள் மலையிலோ பலாவின் உயர்ந்த சிறு கிளையில் தாங்க முடியாதபடி பெரிய பழம் தொங்கும். அந்தக் கிளைபோல் தலைவியின் உயிர் மிகச் சிறியது. பெரிய பழம்போல் அவ்வுயிர் சுமக்கும் காமமோ பெரியது. யார் இதனை அறிவார்? நீ விரைந்து வந்து அவளை மணந்துகொள் என்பது பொருள்.

## இற்செறிப்பு

களவொழுக்கத்தில் ஈடுபட்ட தலைவியின் உடல் மாறுபாடு கண்ட தாய் அவளை வெளியில் செல்ல விடாது வீட்டின் உள்ளேயே நிறுத்திக் கொள்வாள். இந்த மரபினை இற்செறிப்பு என்பர்.

**“பாரி பலவுறு குன்றம் போலப்**

**பெருங்கவின் எய்திய அருங்காப் பினளே”**

**(நற்றிணை-253)**

கடையெழு வள்ளல்களில் ஒருவரான பாரியின் பலாமரம் நிறைந்த பறம்பு மலைபோலப் பேரழகு வாய்ந்தவள் தலைவி. அத்தலைவி அரிய காவலில் வைக்கப்பட்டுள்ளாள் என்பதாகும். இவ்வாறு இற்செறிப்பு என்ற அருங்காவல் வைப்பு, பல பாடல்களில் இடம் பெறுகிறது. தலைவி இற்செறிக்கப்பட்ட பின் அவளைப் பகலில் சந்திக்க இயலாதவன் ஆகிறான் தலைவன். இரவு நேரத்தில் அவளைச் சந்திக்க வருகின்றான். இரவில் வந்து தலைவியைச் சந்திக்கத் தோழி ஏற்பாடு செய்து வைக்கும் இடம் இரவுக் குறி எனப்படும். தொடர்ந்து இரவில் வரும் அவனைத் தடுத்து இனிமேல் இரவில் வராதே, மணம் புரிந்துகொள் என்று குறிப்பாகவும், வெளிப்படையாகவும் சொல்கிறாள் தோழி. இதனை இரவுக் குறி மறுத்தல் என்று கூறுவர்.

**“பகல்நீ வரினும் புணர்குவை” (அகநானூறு- 18)**

முன்னர் வரைவு கடாவுதலுக்குச் சான்றாகப் பார்த்த இப்பாடல் இரவுக்குறி மறுத்தற்கும் சான்றாகிறது. இரவில் வரும் தலைவன் தலைவியைச் சந்திக்க முடியாமல் திரும்பிச் செல்லுமாறு நேர்கின்ற தடைகள் பற்றிக் கூறுகின்றது குறிஞ்சிப் பாட்டு.

**“இரவரல் மாலைய னேவரு தோறும் / காவலர் கடுகினும் கதநாய் குரைப்பினும்**

**நீதுயில் எழினும் நிலவுவெளிப் படினும்”**

**(குறிஞ்சிப்பாட்டு : 239-241)**

காவலர், சினம் கொண்ட நாய், நிலவு, செவிலியின் விழிப்பு ஆகிய பல தடைகளை வென்று ஒவ்வொரு நாளும் இரவில் தலைவியைச் சந்திப்பது தலைவனுக்குப் பெருஞ்சவாலாக ஆகிறது.

இவ்வாறு பழந்தமிழ் இலக்கியத்தில் அகம் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் நாம் கவனிக்க வேண்டிய புள்ளி ஒன்று இருக்கிறது. ஆண், பெண் என்ற இருபாலரும் அகத்தைப் பாடியிருந்தாலும் இருவரின் மனநிலைக்கும் சமூகச் சூழலுக்கும் ஏற்ப ஒரு படைப்பு மாற்றம் பெறுகிறது. பெண் பாற் படைப்பாளிகளின் படைப்புகள் பெரும்பாலும் பெண் மனநிலையைப் பேசுவதாக அமைந்திருக்கிறது. குறிப்பாக, பெண் பாற் படைப்பாளிகளின் படைப்புகளில் தலைவியின் மனநிலை நேரிடையாகப் பேசப்படுவதைப் பார்க்கிறோம். அதாவது காதல் வயப்பட்ட பெண்ணின் குரலாக ஓங்கி ஒலிக்கிறது. இந்தக் குரல் ஆண் படைப்பாளர்களிடம் சற்று

குறைவாகவே இருக்கிறது. பெண்படைப்பாளிகளிடம் இருக்கும் வெளிப்படைத் தன்மை, ஆண் படைப்பாளிகளிடம் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். காரணம் பெண்ணின் இருப்பை வெளிப்படுத்துவதில் பெண் படைப்பாளிகள் உரக்கப் பேசுவதைப் பார்க்க முடிகிறது.

சங்க இலக்கியங்களைப் பொறுத்தவரை திணை என்னும் கோட்பாட்டுப் பின்பற்றுதலோடு அகத்தை பாடுவதில் மிக நேர்த்தியாக அக்கால படைப்பாளிகள் எழுதியிருக்கின்றனர். அகம் என்பது காதல், ஒரு ஆணின் மனதில் காதல் தொடங்கி, படிப்படியாக வளர்ச்சியுற்று திருமணத்தில் முடிந்து அதன் பின் தொடரும் கற்பு அகத்தையும் அந்தந்த பாத்திரங்களே நமக்குச் சொல்கின்றன.


1. **அன்னிதாமசு**

இலக்கியவியல் கோட்பாடும் அணுகுமுறையும், அமுதநிலையம் லிமிடெட், சென்னை, 1999

3. **சுப்பிரமணியன். ச.வே.,**

தொல்காப்பியம் தெளிவுரை,

மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2005

4. **முத்துசாமி. கா.,**

சங்க தமிழ்க் குறிப்புப் பொருள்,

அன்னம், தஞ்சாவூர், 2006

5. **கைலாசபதி. க.**

பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்,

குமரன் பப்ளிசர்ஸ், சென்னை, 1999

# இந்திய விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பு

*முனைவர். த. சம்பத்குமார் *உதவிப் பேராசிரியர், கல்வியல்புலம், மண்டல ஒருங்கிணைப்பாளர், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், தர்மபுரி*

**முன்னுரை**

**“மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டும் அம்மா**
**இவர் பங்கயக் கரங்களைப் பார்த்தே பாரில் நல்லறங்கள் வளருதம்மா”**

***–கவிமணி தேசியவிநாயகம் பிள்ளை***

**“நிமிர்ந்த நன்னடை, நோகொண்ட பார்வை, ஞாலத்தில் யார்க்கும் அஞ்சாத**
**ஞானச் செறுக்கொண்ட புதுமைப் பெண்களை வரவேற்றார்”**

*– மகாகவி பாரதியார்.*

**“வெற்றி பெற்ற ஒவ்வொரு ஆணுக்கும் பின்னாலும் ஒரு பெண் தயாக, தாரமாக, சமகாதாயாக இருப்பாள்”** என்பது உலக வழக்கு மொழி.

விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பு ஆண்களுக்கு நிகராக மதத்தானதாகும். 1857 ஆம் ஆண்டு முதல் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட ஹோல்கா மகாராணி அகிலாபாய், ஜான்சிராணி லக்குமிபாய், சரோஜினி நாயுடு பெண்களின் பங்கு மதிப்பிடத்தக்கது. 1890, சுவாணகுமாரி கோன்வால், நாவலாசிரியர் மற்றும் முதல் பட்டதாரி காதம்பரி கங்குலி ஆகியோர் இந்திய தேசிய காங்கிரசில் பங்களிப்பு செய்தனர்.

திருமதி. நோனிபாலா தேவி சுதந்திர இயக்கத்தில் இணைந்து அந்நிய பொருட்களைப் புறக்கணித்து போராடினார். காந்தியடிகள் தென் ஆப்பிரிக்காவிலிருந்து 1915 ஆம் ஆண்டு நாடு திரும்பியவுடன் புரண சுய ராஜ்ஜியத்தை அஹிம்சை முறையில் அடையப் போராடினார். சுதேசி இயக்கத்தில் சரோஜினி நாயுடு, ஊர்மிளா தேவி, துர்காபாய் தேஸ்முக், அம்புஜம்மாள், செசன்ட் தேவி, கஸ்தூரிபாய் ராம் ஆகியோர் துடிப்புடன் செயலாற்றினார்.

காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தில் ராசகுமாரி அமிர்த்கார், சுசித்ரா கிரிப்லானி, சரளா தேவி, சதுர்ராணி, முத்துலட்சுமி ரெட்டி, சுசீலா நாயர் மற்றும் அருணா அசம் அலி ஈடுபட்டனா. அதுபோல கஸ்தூரிபாய் காந்தி, கமலா நேரு, போடோ ராணி ருத்சிதா மற்றும் பலா தேசிய விடுதலை இயக்கத்தில் தங்களை இணைந்து பணியாற்றினர்.

இந்திய தேசிய இராணுவத்தில் டாக்டா லட்சுமி சுவாமிநாதன் மருத்துவராக இருந்து கொண்டு, ஆண்களுக்கு இணையாக விடுதலை போராட்டத்தில் ஈடுபட்டனா. 1928ல் மகிளா ராஸ்டிரிய சங்கம் லத்திகா கோய் என்பவரால் தொடங்கப்பட்டது. கமலாதாஸ் குப்தா மற்றும் கல்யாணி தாஸ் போன்றோர் புரட்சிகர இயக்கத்தில் பணி ஆற்றினர்.

மேற்படி சுருக்கமாகக் கண்ட, விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பு குறித்து விரிவாக இக்கட்டுரையில் காணலாம். பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எதிராகவும் மிகுந்த பங்களிப்பை வழங்கியுள்ளனா. இவ்வாறு ஒவ்வொரு பங்காளரின் பங்கு குறித்து வரிசையாகப் பார்ப்போம்.

**தில்லையாடி வள்ளியம்மை**

தென்னாப்பிரிக்காவின் பொன்நகரம் ஜோகனஸ்பாக்-ல் 1898ல் பிறந்தார். இந்தியருக்கு தேசியமும் தேசியக் கொடியும் இல்லையென வெள்ளையன் கேலி செய்தபோது தன் தன் சேலை முந்தனையைக் கிழித்து இதுவே தேசியக்கொடி என்று சொன்னார். அதிலிருந்து மூவண்ணக் கொடி உருவானது. காந்தியடிகளின் அறப்போரில் கலந்து கொண்டார். 16 வயது நிரம்பிய வள்ளியம்மை இதில் கலந்து கொண்டார், கைது செய்யப்பட்டார். உடல்நலம் குன்றி, சாவின் வாசலில் இருந்தபோது, இப்பொழுதும் சிறை செல்லத்தயாராக உள்ளேன் என்றார். 1969 ஆம் ஆண்டு காந்தியடிகளின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடிய தமிழக அரசு தில்லையாடி வள்ளிமைக்கு நினைவுச் சின்னம் நிறுவியது. சென்னையில் உள்ள தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் சென்னையில் அமைந்துள்ள 600வது விற்பனை நிலையத்திற்கு தில்லையாடி வள்ளியம்மை மாளிகை என்று பெயா சூட்டி சிறப்பித்தது.

**ஜான்சிராணி இலக்குமிபாய் ( 19 நவம்பா 1827 - 17 ஜூன் 1858)**

இந்திய வரலாற்றில் பெண் விடுதலைப் போராட்ட வீரர்களின் முக்கிய மாணவர் இவர் ஆவர். ஆணைப்போல வேடமணிந்து போர்களத்தில் போரிட்டார். தனது வாயால் குதிரையின் லகானைப் பிடித்துக்கொண்டு, இரு கைகளால் வாள் போர் புரிந்தார். அந்நிய படைகளிடம் சரணைய மறுத்து இறுதிமூச்சுவரை போராடினார்.

**அருண் ஆசிப் அலி**

இவர் கல்கத்தாவில் பிறந்து லாகூர், நைனிடாவில் கல்வி பயின்றார். கல்கத்தாவின் கோகலே பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார். 1928 ஆம் ஆண்டு ஆசிப் அலியைச் சந்தித்து திருமணம் முடித்துக்கொண்டார். பின்னர் காங்கிரஸ் சார்பில் நடைபெற்ற உப்பு சத்தியாகிரகத்தில் ஜோடியாகக் கலந்து சிறைவாசம் மேற்கொண்டனர். 1931 ஆம் ஆண்டு காந்தி இர்வின் ஒப்பந்தத்தின்படி விடுதலை செய்யப்பட்டனர். 1932 ஆம் ஆண்டு திஹார் சிறையில் உண்ணாவிரதம் மேற்கொண்டார். 1942 ஆம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் துணிச்சலுடன் பங்கேற்றார். தைரியமான மூத்த பெண்மணி என அழைக்கப்பட்டார். 1964 ஆம் ஆண்டு அமைதிக்கான பன்னாட்டு லெனின் பரிசு வழங்கப்பட்டது. பின்னர் 1997 அவரது மறைவிற்கு பின்னா பாரதரத்னா வழங்கப்பட்டது.

**இந்திரா காந்தி**

இந்திய விடுதலைப் போராட்டப் பெண்களில் முக்கியமாணவராக இந்திராகாந்தி ஆவார். 1930 ஆம் ஆண்டு வாணர் சேனை எனும் இயக்கத்தை தோற்றுவித்துத்தார். 1938-ல் இந்திய தேசிய காங்கிரசில் இணைந்து பணியாற்றினார். 1955ல் காங்கிரஸ் செயற்குழு உறுப்பினராகவும், 1958 மத்திய பாராளுமன்ற வாரியத்தில் உறுப்பினரானார். பின்னர் 1959-ல் இந்திய தேசிய காங்கிரசின் தலைவரானார். இந்தியாவின் சுய மரியாதை, தன்னம்பிக்கையாக உலகிற்கு திகழ்ந்தார்.

**கமலா நேரு**

பண்டிட் ஜவகர்லால் நேருவின் மனைவியாக மது, அந்நிய பொருட்களுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டார். வரிகொடா இயக்கத்தை ஒருங்கமைத்து முக்கிய பங்காற்றினார். 1917 ஆம் ஆண்டு இந்திரா பிரியதாசினி எனும் பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார். தன் கணவர் நேரு சிறையிலிருக்கும் போது சுவிஸ்சாலாந்தில் காசநோயால் இறந்தார். ஜெயபிரகாஷ் நாராயணனின் மனைவி பிரபாவதி தேவியுடனும், கஸ்தூரிபாய் காந்திவுடன் இணைந்து நட்புடன் காந்தி ஆசிரமத்தில் பணியாற்றினார்.

**விஜய லஷ்சுமி பண்டிட்**

ஜவகர்லால் நேருவின் சகோதரி விஜயலட்சுமி பண்டிட் ஆவர். இவர் ராணி லட்சுமிபாய், சரோஜினி நாயுடுவின் கொள்கைகளில் ஈடுபட்டு ஒத்துழையாமை போராட்டத்தில் ஈடுபட்டார். 1940 ஆம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அமெரிக்காவில் நடைபெற்ற பசிபிக் பெண்கள் மாநாட்டில் கலந்து கொண்டார். ஐக்கிய நாடுகளின் கூட்டத்தில் பெண்களின் நிலை குறித்து விளக்கினார். 1936, 1946-ல் உத்திரபிரதேசத்தின் பாராளுமன்றத்திற்கு தேர்வு செய்யப்பட்டார். 1932 நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டார். பல்வேறு நாடுகளுக்கு இந்திய தூதராக இருந்துள்ளார். 1962-1964 மஹாராஷ்டிராவில் ஆளுநராக செயல்பட்டார். 1979 ஆம் ஆண்டு ஐனா மனித உரிமை கமிசனில் இந்திய தூதராக செயல்பட்டார். இந்தியாவின் பரிணாம வளாச்சி (1958) எனும் நூலை எழுதினார்.

**கே.பி. ஜானகியம்மாள்**

1917 ஆம் ஆண்டு மதுரையில் வசித்துவந்த பத்மநாபன் இலட்சுமி தம்பதியின் புதல்வியாகப் பிறந்தார். வறுமையில் இருந்த அவர் குடும்பத்தில் பாசமும் பண்பும்

நிறைவாக உள்ளது. தனது 12 வயதில் 29 ரூபாய் சம்பளத்திற்கு நாடகத்தில் சேர்ந்து கதாநாயகி நிலைக்க உயர்ந்தார். வள்ளி திருமணம், கோவலன், மனோகரா, நல்ல தங்காள், அரிச்சந்திரா மயான மண்டபம் போன்ற நாடகங்களில் நடித்தார். திருமணத்திற்கு பிறகு தேசபக்தி பாடல்களை மட்டுமே பாடுவார். 1940ல் மதுரையில் குருசாமி கே.பி. ஜானகி உட்பட சிலரைக் கொண்டு முதல் கட்சினை உருவாக்கப்பட்டது. பின்னர் கைது செய்யப்பட்டு 6 மாதம் கடுங்காவல் தண்டனை பெற்றார். விலைவாசி உயர்வு, கள்ள மார்க்கெட், மில் தொழிலாளர் பிரச்சனை, வங்க தேச பஞ்ச நிவாரண நிதி வசூலித்தல் போன்ற போராட்டங்களில் பங்கு கொண்டார். 1967-ல் மதுரை கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தோந்தெடுக்கப்பட்டார். 1972-ல் மாதா சங்க மாநாட்டில் மாநிலத் தலைவராகத் தோந்தெடுக்கப்பட்டார்..

### ருக்மணி தேவி அருண்டேல்

1904 ஆம் ஆண்டு நீல கண்ட சாஸ்திரி சேஷம்மாள் தம்பதியருக்கு மகளாக பிறந்தார். சென் அடையாறில் திபா சாபிகல் சொசைட்டி எதிரே குடியேறினார். பிரம்ம ஞானசபையின் தலைவராகிய அன்னிபெசன்ட் அம்மையாருடன் இருந்து பணிகளைக் கவனித்தார். ரஷ்யா சென்று பாவ்லோ நடனத்தைக்கற்று, 1935 ஆம் ஆண்டு அடையாறு பிரம்மஞான சபையில் பரதநாட்டியம் அரங்கேறியது. தேவசாசியில்லா பெண்கள் நடனமாடுவது இதுவே முதல் முறையாகும். கலாசேத்திராவின் புகழ் உலகெங்கிலும் பரவியது. சென்னைக்கு வரும் வெளிநாட்டு காரர்கள் நடன நிகழ்ச்சிகளை தவறாமல் கண்டு களிக்கின்றனர்.

### அம்புஜம்மாள்

1899ல் பிறந்து 1910 தேசிகாச்சாரை என்பவரை மணந்து கொண்டார். 1950 காந்தியடிகளும் கஸ்தூரி அம்மையாரும் சென்னை வந்தபோது, லட்சுமிபதி, துர்க்காபாய் முகந்த்மு, கோதை நாயகி போன்றோர்களின் நட்பு கிடைத்தது. சுதேசிய கொள்கைகளுக்காக பல முறை போராடியுள்ளார். தன்னிடமுள்ள விலையுயர்ந்த நகைகளைவிற்று, காந்திஜியின் தாழ்த்தப்பட்ட மக்கள் நலநிதிக்கு அளித்தார். தந்தை பெரியாரோடு காந்தியடிகளின் பெயரையும் இணைத்து தொண்டு நிறுவனம் அமைத்தார். 1964 ஆம் ஆண்டு பத்மஸ்ரீ விருது பெற்று, காந்திஜியின் செல்லமகள் என பெயர் பெற்றார். 1930 ஆம் ஆண்டு சென்னை ராட்டன் பஜாரில் அந்நிய துணிக்கடை எதிரிலேயே மறியல் செய்தபோது, சாக்கடைநீர் குழாய் வாயிலாக பீச்சியடிக்கப்பட்டது. அந்நியத்துணிக்கடை மறியல் போராட்டத்தின் போது கைது செய்யப்பட்டு லீலாவதி லதா பிரபு ஆகியோர் தலைச்சேரி நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லும் வழியில் காவலர்களால் அவர்களது தாலி அறுக்கப்பட்டது. இதனால் அவ்விடம் “தாலியறுத்தாம் தலைச்சேரி” என்று வழங்கலாயிற்று.

### கே.பி. சுந்தராம்பாள்

1908 ஆம் ஆண்டு தகடூரை அடுத்த கொடுமுடிதான் சுந்தராம்பாள் பிறந்தார். வறுமையின் காரணமாக வேலுநாயகர் நாடகக் கம்பெணியில் சேர்ந்து, குழந்தை நட்சத்திரமாக நடித்தார். அவரது பாடலுக்கு நல்ல வரவேற்று கிடைத்தது. 1917-ல் இலங்கைச் சென்று ஒரு நாடகக் குழுவில் இணைந்தார். 1926-ல் கிட்டப்பா சுந்தரம்பாள் ஜோடியாக நடித்த வள்ளி திருமணம் நாடகம் கொழும்புவில் அரங்கேறியது. பேசும் படங்கள் வராத காலங்களில் கிட்டப்பா – சுந்தராம்பாள் பாடிய இசைத்தட்டு பாடல்கள் மூலைமுடுக்கெல்லாம் எதிரொலித்தன. மகாத்மாவை இரண்டு முறை சந்தித்தார். 1937 காந்தி ஈரோடு வட்டாரத்தில் சுற்றுப்பயணம் செய்தார். 1958 காமாசரால் மேல்சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

### அன்னை கஸ்தூரிபாய்

குஜராத் போர்பந்தால் பிறந்து, காந்தியடிகளை மணந்து கொண்டார். 1918-ல் நடந்த கைராட்டை வா கொடாச் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டும் பெண்களுக்குக் கற்றுக் கொடுத்தார். பெண்களுக்கு தூய்மை, எளிமை, ஒழுக்கம், கல்வி ஆகியவற்றைக் கற்றுக்கொடுத்தார். 1939 ராஜ்காட்டில் அரசியல் சீர்திருத்த சத்தியாகிரகத்தில் பங்கு பெற்றார். கிரம்பாக் சிறையில் அடைக்கப்பட்டார். ராஜ்காட் மன்னா வாக்கு மீறியதை எதிர்த்து காந்தியடிகள் உண்ணா நோன்பு இருந்தார். 1942 காந்தியடிகள் சிறை சென்றதால், அவர் பேசவேண்டிய கூட்டங்களில் பேசினார். 1943 நோன்பு மேற்கொண்டு, 1944-ல் காலமானார்.

### வேலு நாச்சியார்

இந்தியாவின் சுதந்திரத்திற்காக வித்திட்ட முதல் கதாநாயகி தமிழகத்தில் பிறந்த வேலுநாச்சியாரைச் சேரும். 1772 ஜுன் 25ல் நடைபெற்ற போரில் வெள்ளையர்களால் தன் கணவர் சிவகங்கை மன்னர் முத்துவருகநாதர் கொல்லப்பட்டதை அடுத்து ராணியார் தம் குழந்தைகளுடனும், மருதுபாண்டியர்களுடனும் திண்டுக்கல் அருகேயுள்ள விருப்பாட்சிக்கு சென்று ஏழு ஆண்டுகள் காத்திருந்து ஹைதர் அலி துணையுடன் 5000 சிப்பாய்களைக் கொண்டு வெள்ளையர் படைகளையும், ஆற்காடு நவாப் படைகளையும் வெற்றிக் கொண்டார்.

**குயிலி**

ராணி வேலுநாச்சியாரின் உயிர்த்தோழியாவார். நாட்டின் விடுதலைக்காக மனித வெடிகுண்டாக மாறிய அவரது தியாகம் மறக்க முடியாது.

**கொடிகாத்த மூதாட்டி**

1942 செப்டம்பா மாதம் 29 தேதி தாமலக் கிராமத்திலிருந்து சுதந்திரப்போராட்ட வீரர்கள் 5 அணிகளாகப் புறப்பட்டு, திருமதி ஹஸ்ரா தலைமையில் சென்றார். போலீசாரும், இராணுவத்தினரும் ஊர்வலத்தினர் மேலும் ஒரு அடி எடுத்து வைத்தால் சுட்டு விடுவதாக எச்சரித்தனர். இடது கையைத் துப்பாக்கியால் சுட்டனர். கொடியை வலக்கைக்கு மாற்றினார். வலக்கையையும் சுட்டனர். ஆனால் கொடியை மார்போடு அனைத்துக் கொண்டார். இராணுவத்தினர் நெற்றியில் துப்பாக்கியால் சுட்டபோதும், தேசியக் கொடியை விடவே இல்லை.

**அகிலாண்டம்மாள்**

இந்திய விடுதலை போராட்டத்தில் ஈடுபட்ட தமிழகத்தின் முதல் பெண்மணி ஆவர். 1875 ஆம் ஆண்டு கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் பிராமணர் வகுப்பில் பிறந்தவர். தமிழ் புலமை காரணமாக சுதந்திரபோராட்ட கவிதைகளை வடித்தார். 1905 ஆகஸ்ட்டு சுதேசி கும்மிகள் பாடல்களை புனைந்தார். இவரது எளிய நடை, ஓசை நயமுள்ள பாடல்கள் மக்களிடம் நாட்டுப்பற்று, விடுதலை உணர்வை ஊட்டியது. அரசியல் பிரச்சாரப் பொதுக்கூட்டங்களில் நல்ல தமிழ் பேசி, மக்களை பெருமளவில் கவர்ந்து நாட்டுப்பற்றை ஊட்டினார்.

**பண்டிதை அசலாம்பிகை அம்மையார்**

விழுப்புரம் திருக்கோவில் இரட்டை மலை எனும் ஊரில் பிறந்தார். 1916 ஆம் ஆண்டு முதல் இந்திய சுதந்திர போராட்டத்தில் கலந்து கொண்டு, கவிதைகள் வாயிலாக சுதந்திர உணர்வைத் தூண்டினார். அந்நியாகளின் பொருளாதார சுரண்டல்கள், அநீதி, கலாச்சார அழிவிற்கு எதிராக குரல் கொடுத்தார். 1920 கடலூரில் சுதாசனன் தலைமையில் நடைபெற்ற காங்கிரஸ் பொதுகூட்டத்தில் ஒத்துழையாமை இயக்கத்திற்கு குறிப்பாக பெண்கள் அதிகம் கலந்து கொள்ளச் செய்தார்.

**பெண் தளபதி லட்சுமி**

1930 இராணிமோ கல்லூாயில் இண்டா மீடியிட்டை முடித்த லட்சுமி, பின்னர் 1937 மருத்துவபடிப்பை நிறைவு செய்தார். நேதாஜி இயக்கத்தைச் சேர்ந்த சுஹாசினி தலைமறை வாழ்க்கை வாழ லட்சுமி வீட்டில் இடமளித்தார். அப்போதுதான் நேதாஜியின் தீவிரவாதக் கொள்கைகளையின் பற்று கொண்டார். இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்த நேரம், ஆங்கிலேயருக்கு எதிராக இந்திய விடுதலை இயக்கம் என்ற அமைப்பை ஏற்படுத்தினார். இதன் சிங்கப்பூர் பிரிவு செயலாளராக டாக்டா இலட்சுமி நியமிக்கப்பட்டார். மலேசியா, தாய்லாந்து, பர்மா ஆகிய நாடுகளுக்குச் சென்று நிதி திரட்டினார். இந்நிதியைக் கொண்டு இந்திய தேசிய இராணுவம் உருவாக்கப்பட்டது. 1943 இந்திய விடுதலை இயக்கத்தின் மகிளா பிரிவு தோற்றுவிக்கப்பட்டது. 1943 ஆண்டிற்கு பின்னர் ஜான்சிரானி ரெஜிமெண்ட் என்று உருவாக்கிறேன். கேப்டன் ஆக்கப்பட்டார். இந்தியர்களால் உருவாக்கப்பட்ட முதல் சீருடை பெண்படை இதுதான். 1943 இந்தியாவை சுதந்திர இந்தியாவாக அறிவித்தார். இந்திய தேசிய இராணுவத்திற்கு துணைப்படையாகக் கேப்டா லட்சுமி தலைமையில் ஜான்சி படையும் உடன் சென்றது. படைவீரர்களுக்கு சிகிச்சை அளிக்கும் பொறுப்பு இவரது ஆகும். 1945 ஆற்காடு மந்திரிசபையில் ஓராண்டு நிறைவு விழாவில் எழுச்சியுரை ஆற்றினார். கேப்டன் சேகல் என்பவரை மணந்து காந்தி சேவா தள தொண்டாகளுக்கு பயிற்சி அளித்தார். 1972 பங்களாதேச போரில் நிதியும் மருத்துவ உதவியும் வழங்கினார்.

**பேகம் ஹாசாரத் மஹால்**

பேகம் ஹாசார்த் மஹால், ராணியாக இருந்த போதிலும் விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளார். இதற்கென நாடு கடத்தப்பட்டு நேபாளம் சிறையில் அடைக்கப்பட்டார். 1857-58 நடைபெற்ற முதலாம் விடுதலைப் போரில் தனது ஆதரவாளர்களுடன் கலந்துகொண்டார். 1879 ஆம் ஆண்டு காட்மண்டுவில் உயிரிழந்தார். இந்திய அரசாங்கம் 1984 ஆம் ஆண்டு இவரைக் கௌரவிக்கும் வகையில் தபால் தலை வெளியிட்டது.

**மேடம் காமா**

இந்திய தேசியக்கொடி விடுதலையின் அடையாளம். பன்னாட்டு சமூகவியலாளர்களின் கூட்டமைப்பு மாநாடு ஜெர்மனியிலுள்ள ஸ்ட்டாகார்சி நகரில் 1907 ஆம் ஆண்டு நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் அம்மாநாட்டில் கலந்து கொண்டனர். ஒரு இந்தியப் பெண்மணி வண்ணச்சேலையில் துணிவுடன் காணப்பட்டார். ஒரு தேசியக் கொடி பச்சை, காவி, சிவப்பு போன்ற மூன்று நிறங்களைக் கொண்டுள்ளது. சிவப்பு பலத்தையும், காவி வெற்றியையும், பசுமை

துணிச்சலையும், எட்டு இதழ் தாமரை உள்ளது. வந்தே மாதரம் எனும் பாடல் தாய்நாட்டிற்கு வணக்கத்தை தெரிவிக்கிறது. தேசிய கொடியை வீரசவக்கார் வடிவமைத்தார். அமெரிக்காவில் நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டதால் இந்தியாவின் முதல் பண்பாட்டு பிரதிநிதி என அழைக்கப்பட்டார்.

**சரோஜினி நாயுடு (13 பிப்ரவா 1879-2 மார்ச் 1949)**

மிகச்சிறந்த போராளி, பேச்சாளர், கவிஞர் சரோஜினி நாயுடு இந்திய தேசிய காங்கிரசின் தலைவராகத் தோந்தெடுக்கப்பட்டார். இவர் கிலாபத் இயக்கத்திற்கு பிரச்சாரம் செய்தார். காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்திற்கென பாடுபட்டார். 1930 இல் ஜாலிநன் வாலாபாத் எனும் இடத்தில் கலந்து கொண்டு பாடல் இசைத்தார். கோபால கிருஷ்ண கோகலேயுடன் இணைந்து கவிதைகளை பெண்கள், கல்வி, இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கென படைத்தார்.

**கஸ்தூரிபாய் காந்தி (ஏப்ரல் 11, 1869 - 22 பிப்ரவரி, 1944)**

காந்தியடிகளின் துணைவியார் அனைவராலும் அன்யாக பா என அழைக்கப்பட்டார். பெண்களின் சத்தியாகிரகம் குஜராத்தில் வரிகொடா இயக்கம், ராஜ சத்தியாகிரம் போன்ற போராட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்தினார். 1906 ஆம் ஆண்டு காந்தி பிரம்மசாயத்தை கடைபிடித்தார். 1904 - 1914 வரை வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் கைது செய்யப்பட்டதால், மூச்சு சுவாச நோயால் உடல் நலிவுற்றது 1944ல் இறந்தார்.

**பத்மஜா நாயுடு**

ஹைதராபாத் இந்திய தேசிய காங்கிரசில் இணை தோற்றுவித்தவர்களில் ஒருவர் ஆவர். அந்நிய பொருட்களைப் புறக்கணிக்க போராடினார். 1942 ஆம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் கலந்து கொண்டார். இந்திய விடுதலை பெற்றவுடன் மேற்கு வங்காளத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

**சுசித்ரா கிருபலானி**

1946 ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரசின் பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டார். இந்திராகாந்தியால் மிகவும் பாராட்டு பெற்றவர் ஆவர். 1952, 1957 சிறுதொழில் நிறுவன அமைச்சராக பணியாற்றினார். 1963ல் உத்திரபிரதேச முதலமைச்சராக இருந்தார். எனவே இம்மாநிலத்தின் முதல் பெண் முதலமைச்சா இவரே.

**சகோதரி நிவோதிதா (மார்கரைட் எலிசபெத்ரோபல்)**

சுவாமி விவேகானந்தான் இந்துமத தத்துவங்களால் ஈர்க்கப்பட்ட வெளிநாட்டுப் பெண்மணி ஆவார். சுவாமி விவேகானந்தா, அரபிந்தா, ஆகியோரின் தத்துவங்களைப் பின்பற்றியவர் ஆவர். 1895 ஆம் ஆண்டு விவேகானந்தரை இலண்டனில் சந்தித்து பின்னர் 1898 ஆம் ஆண்டு கல்கத்தாவில் குடியேறினார். 1898 நவம்பர் மாதம் ராமகிருஷ்ணர் சாரதா மிசன் ஆரம்பிக்கப்பட்டு இந்திய பெண் குழந்தைகளுக்கு அனைத்து பிரிவினருக்கும் கல்வி வழங்கினார்.

**அரமிந்தோ அம்மா (மோரிசா ரிச்சாட்)**

அம்மா பாண்டிச்சோயில் ஆர்யா எனும் பத்திரிக்கையில் எடிட்டராகப் பணியாற்றினார். ரவீந்தரநாத் தாகூர் அவர்களைச் சந்தித்த பின்னர், பாண்டிச்சேரியில் 1920 ஆசிரமம் தொடங்கினார் ஆரோவில் எனும் பன்னாட்டு நகரத்தை பாண்டிச்சேரியில் கட்டமைத்தார். அரவிந்தான் பற்றாளர்கள் சந்திக்கும் தியானிக்கும் முக்கிய இடமாக பாண்டிச்சேரி விளங்கியது. இந்திராகாந்தி அம்மையாரால் துடிப்புமிக்க பெண்மணி, இந்திய பண்பாட்டையும், தியானத்தையும் பரப்பியவர் என புகழ் பெற்றவர் ஆவர்.

**அன்னிபெசன்ட் அம்மையார்**

இலண்டனில் இருந்து கொண்டே இங்கிலாந்தின் செயல்பாடுகள் குறித்து விமாசனம் செய்தார். 1914 ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரசில் இணைந்தார். பெண்களுக்கு சம உரிமை வழங்க வேண்டுமென்ற பாலகங்காதர திலகரின் கருத்துக்களின்படி செயல்பட்டார். இந்திய தேசிய காங்கிரசின் முதல் தலைவி ஆவார். அம்மையார் அவர். தியாசபிக்கல் சொசைட்டி எனும் தொண்டு நிறுவனத்தை தொடங்கி செயல்படுத்தினார். பெண்கள், குழந்தைகளுக்கென சிறு கதைகள், நூல்களை எழுதினார். தனது கணவர் பிராங்க் என்பவரை விவாகரத்து செய்துவிட்டு முழு மனதாக தொண்டு புரிந்தார்.

**மீரா பெண் மற்றும் சரளா பெண்**

இவர்கள் இருவரும் மஹாத்மா காந்தியின் இரு ஆங்கில குழந்தைகள் ஆவர். காந்தியடிகளின் ஆஸ்ரமத்திலேயே தங்கி பல்வேறு விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டனா. காதி பொருட்களை நாடு முழுவதும் பரப்பினார். விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்றவர்களுக்கு காதி பொருட்களை விற்று நிதி திரட்டினார்.

**முடிவுரை**

சமுதாயத்தில் பெண்களை குறித்த கருத்து, எண்ணங்களுக்கு எதிராக உண்மையிலே துணிச்சல், தலைமைப்பண்பு, வீரம் உள்ளனர் என்பது தெளிவாகிறது. காந்தியின் அஹிம்சைப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பு சமநிகராகவும் மகத்தானதாகவும் இருந்ததை அறிய முடிகிறது. அனைத்து தரப்பு பெண்களும் தன்னார்வத்துடன், போராட்டம், உண்ணாவிரதம், நன்கொடை போன்றவற்றில் தங்களை ஈடுபடுத்தியது விடுதலைப் போராட்டத்திற்கு மிகப்பொய பங்களிப்பை வழங்கியுள்ளது.

# தமிழ் நாவல் இலக்கியமும் பத்திரிகைகளும் (1930கள் வரை)

***முனைவர் மு. வையாபுரி,** *உதவிப் பேராசிரியர், தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை-15.*

**முன்னுரை**

தமிழ்ப் புனைகதை வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி தனித்த கவனத்திற்கு உரியதாகும். ஏனெனில் அந்தக் காலப் பகுதியிலேயே முதன் முதலாகத் தமிழில் எளிய உரைநடை வடிவில் கதைகள் எழுதப்பட்டன. அக்கதைகள் மொழிபெயரப்பாகவும், தழுவல்களாகவும், மக்கள் வழக்கிலிருந்த கதைகளின் தொகுப்பாகவும், பல்வேறு பத்திரிகைகளில் வெளிவந்து மக்களிடத்தில் வரவேற்புப் பெற்றனவாகவும் அமைந்தன. இவ்வாறான செயல்பாடுகளுக்குகளனாக அமைந்த அக்காலச் சூழல் குறித்து இக்கட்டுரை விளக்குகிறது.

**தொடக்கம்**

தமிழச் சூழலில் நாவல் இலக்கியத்தின் தொடக்க காலம் என்பது சுமார் 75 ஆண்டுகளின் தொடர் செயல்பாடுகளின் தொடர் விளைவு எனலாம். ஐரோப்பிய தாக்கம், சமூக, அரசியல், பொருளாதார மாற்றங்களின் விளைவு, புதிய கல்வி முறை, அச்சு ஊடக அறிமுகம் ஆகியவற்றினால் மக்களின் மனதில் ஏற்பட்ட ஒரு வகை இடைவெளயை இட்டு நிரப்ப தேவைப்பட்ட ஒரு ஊடகமே நாவல் இலக்கியமாகும்.

ஆங்கிலக் கல்வி அறிவும், பாரம்பரிய தமிழ் அறிவும் ஒருங்கே பெற்ற சிலர் ஆங்கிலம் முதலான பிற மொழிகளில் உள்ள நாவல், சிறுகதை போன்றவற்றினை வாசிக்கும் வாய்ப்பினை பெற்றனர். அவை போன்றே தமிழிலும் படைக்க முற்பட்டனர். தொடக்கத்தில் சிலர் ஆங்கிலம் முதலான பிற மொழிகளிலிருந்த நாவல்களின் தழுவலாகவும், மொழிபெயர்ப்பாகவும் சில முதன் முயற்சிகளை செய்தனர். இன்னும் சிலர் தமிழ்ச் சூழலில் மக்கள் வழக்கிலிருந்த கதைகளைத் தழுவி சிறு சிறு கதைகளை எழுதியும், தொகுத்தும் வெளியிட்டனர். இவ்வாறான செயல்பாடுகள் 1850கள் தொடங்கி மெல்ல மெல்ல வளர்ந்து 1875களுக்குப் பிறகு ஒரு முழுமையான நாவல் இலக்கியம் எழுதுவதற்கான சூழல் ஏற்பட்டது.

**முதன் முயற்சிகள்**

மேற்கண்ட பின்புலத்தின் தொடரச்சியாகத்தான் 1879இல் மாயூரம் வேதநாயகம்பிள்ளை தமிழின் முதல் நாவலான பிரதாபமுதலியார் சரித்திரத்தை வெளியிட்டார். இதன் பிறகு அவருடைய சுகுணவிலாசம் நாவலும் வெளிவந்தது. 1890களிலிருந்து விவேகசிந்தாமணி பத்திரிகை தமிழில் தொடர் கதைகளை வெளியிடும் பணியை தொங்கி வைத்தது. இப்பத்திரிகையில் இராஜமய்யரின் கமலாம்பாள் சரித்திரம் தொடராக வெளிவந்து பின்னர் தொகுத்து வெளியிடப்பட்டது. இதே காலப் பகுதியில் கிருபாய் சத்தியநாதனின் கமலம் முதலிய இருநாவல்கள் ஏற்கனவே ஆங்கிலத்தில் எழுதப்பட்டு பின்னர் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டது. இதன் சமகாலத்தில் குருசாமிசரமாவின் பிரேமகலாவத்தியம் நாவல் வெளவந்து பெரிதும் வரவேற்புப் பெற்றது.

அடுத்து இக்காலக் கட்டத்தில் முக்கியமான படைப்பாளிகளில் ஒருவரான அ. மாதவையாவின் பத்மாவதி சரித்திரம் வெளிவந்தது. இவ்வாறு அங்கொன்றும் இங்கொன்றுமாக இலக்கியத் தரமுடைய நாவல்கள் வெளிவந்திருப்பினும், நவீன இலக்கிய வகையான நாவலை கடுமையாக விமர்சனம் செய்யும் போக்கும், அதனை

மறுதலிக்கும் வகையில் தூய செந்தமிழ் நடையில் கதைகளை எழுதி அவற்றையும் நாவல் என்று குறிப்பிடும்/உரிமை கொண்டாடும் போக்கு நிலவியது.

இன்னும் சிலர் ஆங்கிலம் முதலான மொழிகளில் வெளிவந்த பல நாவல்களையும் சிறுகதைகளையும் தழுவி தமிழ்ச் சூழலுக்குத் தகுந்த வடிவில் மாற்றி தங்கள் படைப்புப் போலவே வெளியிட்டனர். இன்னும் சிலர் பாலுணர்வுகளைத் தூண்டும் வகையிலும், அக்காலத் தமிழ்ச் சமூகத்தின் இயல்புகளுக்கு மாறான வகையிலும் உறவுமுறைகளையும் பழக்க வழக்கங்கயையும் விவரிக்கும் கதைகளை மொழிபெயர்த்தும் தழுவியும் வெளியிட்டு தங்களையும் உயரிய நாவலாசிரியர் என்று தங்களைத் தாங்களே புகழ்ந்துகொண்டனர்.

**பத்திரிகை ஆசிரியர்களும் நாவலும்**

மேற்கண்ட தரப்பினர் அல்லாது, அக்காலத்திய பல பத்திரிகைகளின் ஆசிரியர்களும், அச்சக உரிமையாளர்களும் தங்கள் பெயரில் பல்வேறு கதைகளை வெளியிட்டு அவற்றையும் நாவல் என்றும், தாங்களும் நாவலாசிரியர்கள் என்றும் அழைத்துக்கொண்டதோடு, அந்நாவல்கள் பற்றிய மதிப்புரைகளை தங்கள் பத்திரிகையில் வெளியிட்டும் மகிழ்ந்தனர். இன்னும் ஆழமாகக் குறிப்பிட வேண்டுமெனில் பெரும் செல்வந்தர்கள், வணிகர்கள், ஜமீன்தார்கள் போன்றவர்களும் சிறு சிறு கதைகளையும், தொடர்கதைகளையும் வெளியிட்டு தங்களையும் நாவல் ஆசிரியர்கள் வரிசையில் இணைத்துக்கொண்டார்கள். இன்னும் சிலர் பெண்களின் புனைபெயரில் பல்வேறு கவர்ச்சி மிகு கதைகளை எழுதி வெளியிட்டனர்.

**சமுதாய எதிரவினை**

கதைகள், நாவல்களை பெரிதும் கல்வி கற்றவர்கள் அல்லாது ஓரளவிற்கே தமிழை எழுதவும் படிக்கவும் தெரிந்த சராசரி தமிழ் அறிவு கொண்டவர்களும் எழுத முற்பட்டனர். அவற்றின் விளைவாக அக்காலத்திய கதை நூல்களில் தொடர்ப்பிழைகள், ஒற்றுப்பிழைகள், ஒருமை பன்மை முதலான இலக்கணப்பிழைகள், அச்சுப்பிழைகள் என பிழைகளின் கூடாரமாகவே அவை இருந்தன. அவை மட்டுமின்றி தமிழப் பண்பாட்டிற்கு ஒவ்வாத மேற்கத்திய பழக்க வழக்கங்கள் அப்பட்டமாக அப்படியே அக்கதைகளில் இடம்பெற்றிருந்தன.

இவ்வாறான செயல்பாடுகள் அக்காலத்திய நடுநிலையாளர்கள், தமிழ் மொழி ஆர்வலர்கள், பண்பாட்டில் அக்கறை கொண்டவர்கள் ஆகியோரிடையே பெரிதும் அதிரவலைகளை உருவாக்கியது. அதன் விளைவாக தமிழ் கதை – நாவல் இலக்கியம் கடும் விமர்சனங்களை எதிர்கொள்ள நேரிட்டது. தமிழ் மொழி, பண்பாட்டைச் சீரழிக்கும் அவ்வாறான நாவல்களை புறக்கணிக்க வேண்டும் என்றும், தமிழ்நாட்டுப் பெண்களின் கண்ணியத்திற்கும் கற்பிற்கும் கேடு விளைவிக்கும் இவ்வகை நாவல்களை தீயிட்டு அழிக்க வேண்டும் என்றும், அவற்றை பெண்கள், சிறுவர்கள் படிக்க முடியாதவாறு மறைவான இடங்களில் வைக்க வேண்டும் என்றும் கடுமையான வாதங்கள் முன் வைக்கப்பட்டன.

**பத்திரிகைகளும் எதிரவினைகளும்**

நாவல் இலக்கியத்திற்கு எதிரான தங்களுடைய கடுமையான கருத்துக்களை வெளியிடுவதற்கும் விவாதங்களை முன் வைப்பதற்கும் அக்காலத்தில் பெரும் வளர்ச்சி கண்டு வந்த பத்திரிகைகளே களமாக அமைந்தன. குறிப்பாக பல பத்திரிகை ஆசிரியர்களே இவ்வாறான விவாதத்தைத் தொடங்கி வைத்தனர். அக்காலத்தில் வெளிவந்த பத்திரிகைகளில் நாவல் இலக்கியம் குறித்த விமர்சனங்கள் வெளியிடாத பத்திரிகைகளே இல்லை எனலாம்.

கி.பி.1890கள் முதல் கி.பி.1940கள் வரையான கால இடைவெளியில் தமிழ்ச் சூழலில் வெளியிடப்பெற்ற ஞானபோதினி, விவேகசிந்தாமணி, வித்யாபாநு, விவேகபோதினி, செந்தமிழ், அமிரதகுணபோதினி, பாரதமணி, ஆனந்தபோதினி, பாரதி, குமரன், புரணசந்திரோதயம், மணிக்கொடி, கலாநிலையம், மாருதி, சக்தி, வித்யா விஹாரிணி, தாருல் இஸ்லாம், நல்லாசிரியன், விவேகோதயம், நவசக்தி, வைசியமித்திரன், பஞ்சாமிரதம், ஜோதி ஆகிய இருபத்தியைந்து இதழ்களில் வெளயிடப்பெற்ற கதை, நாவல், சிறுகதை பற்றிய விமர்சனங்கள், மதிப்புரைகள், கட்டுரைகள் போன்றவை அக்கால இலக்கிய ஆளுமைகளின், இலக்கிய ஆர்வலர்களின் மனப் போக்குகளை வெளிக்காட்டுவனவாக உள்ளன.

நாம் வாழும் சமகாலத்தில், தமிழ் மொழியில் ஓரளவுக்கு எழுதவும் படிக்கவும் கணினியில் தட்டச்சு செய்யவும், இணையத்தைப் பயன்படுத்தவும், தமக்கென தனி வலைப்புக்களையும், வலைப் பதிவுகளையும், முகநூல் போன்ற சமூக ஊடகங்களில் கணக்கையும் கொண்டுள்ள எவரும் தான் நினைத்ததை நினைத்தவாறு கவிதையாகவோ, கட்டுரையாகவோ, கதையாகவோ, கருத்துத் தொகுப்புகளாகவோ எழுதுவதற்கும் வெளியிடுவதற்கும் விவாதிப்பதற்கும் வாய்ப்பாக மின் ஊடகம் பெரிதும் பயன்படுகிறது. இதுபோன்றதொரு

சூழல்தான் தமிழ்ச் சமூகத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் நிலவியது.

இப்பொழுது மின் ஊடகங்களின் செல்வாக்கு போன்று அக்காலச் சூழலில் அச்சு ஊடகம் குறிப்பாக தமிழ் இதழ்கள் ஓரளவுக்கு ஆங்கிலக் கல்வி பெற்ற மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்தது. சமூகத்தின் அனைத்து தரப்பினரும் ரசிக்கும்படியான, புரிந்துகொள்ளத்தக்க உரைநடையை ஊடகமாகக் கொண்ட பல கதைகளும், நாவல்களும், சிறுகதைகளும் படைக்கப்பட்டன. அவற்றுள் பல இலக்கியத் தரம் உடையனவாகவும் இருந்தன. இருப்பினும் இலக்கியம் படைத்தல் என்பது ஒரு குறிப்பிட்ட வரக்கத்தினருக்கே உரியது என்கிற மனநிலையில், அப்பொழுது எழுதப்பட்ட கதைகள், நாவல்கள், சிறுகதைகள் பலவும் சமகால அறிவு ஜீவிகளால் குறைத்து மதிப்பிடப்பட்டன அல்லது விமர்சிக்கப்பட்டன. அவர்களின் விமர்சனங்களையும் விவாதங்களையும் வெளியிடுவதற்கு ஏதுவாக, அவர்களால் நடத்தப்பெற்ற இதழ்களை, பத்திரிகைகளை ஒரு வாய்ப்பாக பயன்படுத்திக்கொண்டனர். நான் இங்குப் பட்டியலிட்ட இதழ்களும் அவ்வாறான பணிகளைச் செய்தவையே.

**முடிவுரை**

அக்கால தமிழ் இதழ்களில் இலக்கியத்தரத்தினை வலியுறுத்தி தலையங்கங்கள் எழுதுவது பரவலாக காணப்பட்ட ஒன்றாகும். ஓலைச்சுவடியிலிருந்து அச்சாக்கம் செய்யப்பட்ட நூல்கள் பற்றிய செய்திகளும், புதிய நாவல், சிறுகதை, உரைநடைக் கதை நூல்கள் பற்றிய விளம்பரங்களும் அக்கால இதழ்களில், பத்திரிகைகளில் பரவலாக வெளியிடப்பெற்றன. தமிழும் தமிழ் இலக்கியமும் பழமையிலிருந்து விடுபட்டு ஒரு மறுமலர்ச்சி பெற்று வந்த சூழல் அது. இவ்வாறான சூழலில்தான் தமிழில் நாவல் இலக்கியம் தன்னை நிலைநிறுத்திக்கொள்ள முற்பட்டது. 1930-1945களில் நிலவிய உலக அரசியல், பொருளாதார சூழல்கள் இந்தியாவிலும் எதிரொலித்தன. அதன் விளைவாக வங்கம் போன்ற இந்திய மொழிகளிலிருந்து பெருமளவு நாவல்கள் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டன. அதற்கு காரணம் அவை தேசியத்தை வலியுறுத்துவதாகவும் சமகால இந்திய சூழலை மையப்படுத்தியும் எழுதப்பட்டமைதான். இதற்கு பிறகான காலக் கட்டத்தில் தமிழச் சூழலில் நாவல் ஒரு முழுமையான இலக்கிய வகையான மன ரதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, நம் மண்ணுக்கே உரிய வகையில் தரமான நாவல்கள் படைக்கப்படத் தொங்கின.

**பயன்பட்ட நூல்கள்**

1. தமிழில் புனைகதை உருவாக்கம்(1930க்கு முற்பட்ட காலச் சூழல்), மு. வையாபுரி, முனைவர் பட்ட ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம்,2004.

2. தமிழ் நாவல் நூறாண்டு வரலாறும் வளர்ச்சியும், பெ.கோ.சுந்தரராஜன், சிட்டி, கிறித்தவ இலக்கியச் சங்கம், சென்னை.

# பிரபஞ்சன் புனைக்கதைகளில் புதுச்சேரி ஆளுநர்கள்

*டே.பெமிலா, *முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் சென்னை-15.*

**முன்னுரை**

புதுச்சேரி மாநிலம் அளவிலே சிறியதாயினும் அதன் வரலாற்றுச் சிறப்பால் ஓர் உன்னத இடத்தைப் பெற்றுள்ளது. முந்நூறு ஆண்டுக்கால பிரெஞ்சியரின் ஆக்கிரமிப்பாலும், ஆட்சி அதிகாரத்தாலும், ஒன்றிய ஆட்சிப் பரப்பாகப் புதுச்சேரி மாநிலம் தமிழகத்திலிருந்து வேறுபடுத்தப்பட்டுள்ளது. இவ்வகையில் மத, இன, மொழி கடந்த நிலையில், ஒருங்கிணைந்த மனித நேயக் கலாச்சாரம் நிலவுகின்ற புதுச்சேரி தனி மாநிலமாக உருக்கொண்டுவிட்டது. இந்தியாவில் உள்ள ஏனைய மாநிலங்களுக்கு எல்லா நிலைகளிலும் முன் மாதிரியாகவும் வழி காட்டியாகவும் புதுச்சேரி விளங்கி வருகின்றது. பிரபஞ்சன் தன்னுடைய புனைக் கதைகளில் புதுச்சேரி ஆளுநர்களைக் குறிப்பிட்டுள்ளார். அதனை இக்கட்டுரை விளக்குகின்றது.

**புதுச்சேரி மாநிலம்**

புதுச்சேரி ஒன்றிய ஆட்சிப்பரப்பு என அழைக்கப்படும் புதுச்சேரி மாநிலம் புதுச்சேரி, காரைக்கால், மாகி, ஏனாம் ஆகிய நான்கு பகுதிகளைக் கொண்டதாகும். புதுச்சேரி, காரைக்கால் பகுதிகள் தமிழ்நாட்டிலும், மாகி கேரளாவிலும், ஏனாம் ஆந்திராவிலும் அமைந்துள்ளன. பிரெஞ்சியராட்சிக்கு உட்பட்டிருந்த காரணத்தால் இப்பகுதிகள் அரசியல் அடிப்படையால் இணைக்கப்பட்டுப் புதுவை மாநிலம் என்றழைக்கப்படுகிறது.

**புதுச்சேரி-பெயர் காரணம்**

புதுச்சேரிக்குப் பல்வேறு பெயர்கள் வழங்கப்பட்டுள்ளமை அதன் தொடர்பான வரலாறு, இலக்கியம், நாட்டுப்புற வழக்காறுகள், புராணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் புலனாகின்றன.

பொதுகே, பொதுகா, அகத்தீசுவரம், வேதபுரம், வேதபுரி, சண்முகாபுரம், பொலெசெரே, புதேஹேயிரா, புதிஷேரி, புதுச்சேரி (புதுவை), பிச்சேரி, பொந்திசேரி, பாண்டிச்சேரி என்பன புதுச்சேரியின் பெயர்களாக வரலாற்றின் பல்வேறு காலக்கட்டங்களில் வழங்கப்பட்டள்ளன. பொதுகே என்பதுதான் புதுச்சேரியின் மிகப் பழைய பெயராக இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இது பொதுக்கம் அல்லது பொதிகை என்பதன் திரிபாக இருந்திருக்கலாம். பிரெஞ்சியர் ஆக்கிரமிப்பால் புதிதாக உருவாக்கப்பட்ட குடியிருப்பு என்னும் பொருளில் இவ்வூருக்குப் புதுச்சேரி என்னும் பெயர் ஏற்பட்டது. புதுச்சேரி என்னும் பிரெஞ்சு உச்சரிப்பில் உள்ள திரிபடைந்ததால் பிரெஞ்சியர் ஆட்சிக் காலத்தில் புதுச்சேரி-பொந்துசேரி, போந்திசேரி-பாந்திசேரி என வழங்கப்பட்டு, பின்னர் மக்கள் தங்கள் பேச்சு வழக்கில் பாண்டிச்சேரி எனவும் அழைத்து வந்தனர் (சு.தில்லைவனம், புதுச்சேரி மாநிலம் வரலாறும் பண்பாடும், பக்.8,9)

**பிரபஞ்சன்**

புதுச்சேரி மாநிலத்துக்காரர் தம்முடைய இருபது ஆண்டுகள் சிறுகதையிலும் மானுடம் வெல்லும், வானம் வசப்படும் நாவல்களிலும் புதுச்சேரியை ஆட்சி செய்த பிரான்சுவா மார்த்தேன், துய்மா, துய்ப்ளெக்சு போன்ற ஆளுநர்களை முக்கிய கதை மாந்தர்களாகச் சிறப்பித்துள்ளார். ஆளுநர்கள் குவர்னர்கள் என இவரது புனைக் கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

**புதுச்சேரி பிரெஞ்சியர் வசமாதல்**

போர்த்துக்கீசியர், டேனிஷ்காரர் புதுச்சேரியை ஆண்டனர். பின்னர் பிரெஞ்சியர் கைப்பற்றினர்.

கி.பி 1672–ஆம் ஆண்டு ஜூலை 25ஆம் நாள் பிளாங்கே தெலா ஹாயே (*Blangqet dela Haye*) என்ற பிரெஞ்சுத் தளபதி கோல்கொண்டா இராணுவத்தைத் தோற்கடித்துச் சென்னையில் உள்ள சாந்தோம் பகுதியைக் கைப்பற்றினார். (சு.தில்லைவனம், புதுச்சேரி மாநிலம் வரலாறும் பண்பாடும், ப.94).

பிளாங்கே தனது உதவியாளர் பெல்லான் தெ லெஸ்பினே (*Bellenger de Lespians*) என்பவரை ஹைதராபாத் நிசாமின் செஞ்சிப் பிரதிநிதியான நாசிர் முகமதுகானிடமிருந்து புதுச்சேரியைப் பெறுவதற்காக அனுப்பி வைத்தார்.

கி.பி.1673–ஆம் ஆண்டு பிப்ரவரி நான்காம் நாள் புதுச்சேரியில் பிரெஞ்சியர் தங்களது ஆட்சித் தொடக்கத்திற்கு வித்திட்டனர். (சு.தில்லைவனம், புதுச்சேரி மாநிலம் வரலாறும் பண்பாடும், ப.96).

**பிரான்சுவா மார்த்தேன்**

பிரெஞ்சிந்திய வணிக நிறுவனத்தின் ஆண்டொன்றுக்கு 600 பவுன் சம்பளத்தில் வணிகராக நியமிக்கப்பட்டவர் மார்த்தேன் ஆவார். தன்னுடைய திறமையாலும் உழைப்பாலும் முன்னேறிய பிரான்சுவா மார்த்தேன் புதுச்சேரி பிரெஞ்சிந்திய வணிக நிறுவனத்தின் இயக்குநர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். பிரெஞ்சு ஆதிக்கத்தை இந்தியாவில் பரவச் செய்யும் நடவடிக்கைகளில் பிரான்சுவா முழுமையாக ஈடுபட்டார். பிரெஞ்சிந்தியாவின் முதல் ஆளுநராகவும் ஆனார். இவருடைய திறமையாலும் முயற்சியாலும் புதுச்சேரி நகரம் மாபெரும் வளர்ச்சி அடைந்தது.

புதுச்சேரி இன்று இருக்கும் நிலைமைக்காக அவருக்கு (மர்தேனுக்கு) நன்றிக்கடன் பட்டுள்ளது என்று கிலாரெண்ட் தெ ஏஞ்சலிம் பாதிரியார் கூறுகிறார்.

**பெனோ துய்மா**

துய்மா என்பவர் பிரான்சுவா மார்த்தேனுக்குப் பிறகு புதுச்சேரியின் ஆளுநர் ஆனார்.

மனித நேயமிக்க மனிதராக மானுடம் வெல்லும் நாவலில் இவரை காண முடிகின்றது.

மராட்டியப் போர் கலவரத்துக்குப் பயந்து மக்களில் பலர் புதுச்சேரி வந்தனர்.

மராட்சியர் படையெடுப்பால் பெண்ணை ஆற்றுக்கு அந்தப் புறமும், இந்தப் புறமும் சகஜ வாழ்க்கை அடியோடு பாழாகிப் போக கூடலூர் திருப்பாதிரிப் புலியூர், பண்ணுருட்டி திருவதிகை, அந்தண்டை சிதம்பரம் வரை மனுஷர்கள் குஞ்சு குழந்தைகளை அழைச்சுக் கொண்டு புதுச்சேரி வந்துவிட்டார்கள். (மானுடம் வெல்லும் ப.242)

மராத்தியர்களால் கைது செய்யப்பட்ட திருச்சி அரசர் சந்தா சாகிப்பின் மனைவி அரசி அத்தர் புதுச்சேரியில் அடைக்கலம் கொண்டிருந்தார். மராத்திய தளபதி ராகுஜி போன்ஸ்லே, குவர்னர் துரையிடம் அத்தரையும் அவரது பொக்கிஷங்களையும் தரும்படி கேட்ட பொழுது துரை மறுத்துவிட்டார்.

சந்தா சாயிப்பின் பெண்ஜாதியை எந்தக் காரணத்தை முன்னிட்டும், எக்காலத்தும் எங்கள் பாதுகாப்பை விட்டு அனுப்பி வைக்க முடியாது. அவளையும் சரி, அவள் கொண்டு வந்த பொக்கிஷங்களையும் சரி, அனுப்பி வைக்க தாம் ஒரு போதும் சம்மதிக்க மாட்டோம் என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார் துரை! (மானுடம் வெல்லும் ப.224)

கி.பி.1738–ஆம் ஆண்டில் தஞ்சை மன்னரிடம் இருந்து காரைக்காலைப் பிரஞ்சியர் பெற்றனர். கி.பி.1740ஆம் ஆண்டில் மராட்டிய

மன்னர் சாகுஜி என்பவர் தம்முடைய தளபதிகளான இராகுஜி / போன்சுலே, பத்தேசிங் ஆகியோரின் தலைமையில் ஒரு பெரும்படையைத் தென்னாட்டிற்கு அனுப்பி வைத்தார். கி.பி.1740ஆம் ஆண்டு மே மாதம் 20-ஆம் நாள் நடைபெற்ற மராட்டியப் படையெடுப்பில் கர்நாடக நவாப் தோஸ்த் அலிகான் கொல்லப்பட்டார். நவாபின் எஞ்சிய குடும்ப உறுப்பினர்கள் புதுச்சேரியில் தஞ்சம் புகுந்தனர். மராட்டியர் மிரட்டலுக்கு அஞ்சாது பிரெஞ்சிந்திய ஆளுநர் துய்மா அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தார். (அ.இராமசாமி புதுச்சேரி வரலாறு, ப.65).

**ஜோசப் பிரான்சுவா துய்ப்ளேக்சு**

துய்மாவிற்குப் பின் ஆளுநர் ஆனவர் துய்ப் ளேக்சு ஆவார். வானம் வசப்படும் நாவலில் துய்ப்ளேக்சும் அவரது மனைவி மதாம்ழானும் புதுச்சேரியை ஆட்சி செய்த முறைமையை விளக்கமாகப் பதிவு செய்துள்ளார் பிரபஞ்சன்.

**முடிவுரை**

பிரபஞ்சன், படைப்பிலக்கியத்தில் புதுச்சேரி மாநிலம் அழகாகப் பதிவுச் செய்யப்பட்டுள்ளது. புதுச்சேரியை ஆட்சி செய்த ஆளுநர்களை கதை மாந்தர்களாக வலம் வரச் செய்து வாசகர்களுக்கு வரலாற்றையும் அறிந்து கொள்ளச் செய்துள்ள எழுத்தாளர் பிரபஞ்சன் போற்றுதற்குரியவராவார்.

# சங்ககாலத் தொழில்களில் விலங்குகளின் பங்களிப்பு

*இரா. ரவி, முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத் துறை, அரசு கலைக்கல்லூரி, அரியலூர் – 621 713.

இலக்கியங்கள் தாதோன்றிய சமுதாய விழுமியங்களை, நம்பிக்கைகளை, தொழில்களை, ஆன்மீகப் பண்பாட்டுக் கூறுகளைத் தன்னுள் கொண்ட கருவூலமாகத் திகழ்ன்றன. சங்ககால மக்கள் பல்துறைத் திறனாளர்களாகத் திகழ்ந்துள்ளனர். அவர்கள் தொழில் துறையில் வளர்ச்சிப் பெற்றிருந்துள்ளனர். சங்ககாலத் தொழில்களுக்கு விலங்குகள் ஆற்றியுள்ள பங்களிப்புக் குறித்து இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

**சங்ககாலத் தொழில்கள்–ஓர் அறிமுக**

சங்க காலத்தில் பல்வேறு தொழில்கள் நடைபெற்றுள்ளன. அவை அறிவுசார்ந்த தொழில்களாகவும், உடல் உழைப்புசார் தொழில்களாகவும் நடைபெற்றுள்ளன, அக்காலத்தில் ஏறத்தாழ நூற்றுக்கு மேற்பட்ட தொழில்கள் நடைபெற்றுள்ளன. அவற்றுள் வேளாண்மையும், வணிகமும் முதன்மைத் தொழில்களாக இருந்துள்ளன. அக்காலத்தில் பொருளாதார வளர்ச்சிக்குத் தொழில்கள் துணை நின்றுள்ளன. அறநெறி மாறாத தொழில் முறையைக் கையாண்டு (அறத்தால் வருவதே இன்ப ) என்ற வாழ்வியல் நோக்கோடு மக்கள் பயணித்துள்ளனர். அக்காலத் தொழில்களில் விலங்குகள் பங்களிப்புக் குறிப்பிடத்தக்கதாகத் திகழ்ந்துள்ளது,

**வணிகம்**

சங்க காலத் தமிழர்கள் உள்நாட்டில், வெளி நாடுகளில் வணிக செய்துள்ளனர். மேலை நாடுகளில், கீழை நாடுகளில் வணிகத் தொடர்புகளைக் கொண்டிருந்தனர். இவ்வணிகத் தொடர்பு சங்க காலத் தமிழர்களின் வணிக வளத்தை வெளிப்படுத்துகிறது. வணிக வளப்பொருளாதார வளர்ச்சிக்குரிய மூலாதாரமாக விளங்யுள்ளது.

உள் நாட்டில் கிடைக்கும் பொருட்களை ஓரிடத்திலிருந்து வேறு இடத்திற்குக் கொண்டு சென்று வணிக செய்துள்ளனர். அவர்கள் பொருட்களைக் கொண்டு செல்வதற்கு வண்டிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. வண்டிகள் செல்லுவதற்கு இயலாத பாதைகளில் விலங்குகளைப் பயன்படுத்தியுள்ளனர். எருது, எருமை, கழுதை, யானை ஆய விலங்குகள் வணிக வாகனங்களாய்ப் பயன்படுத்தப்பட்டுள்ளன. உப்பு மூட்டைகளை எருதுகள் பூட்டிய வண்டிகளில் ஏற்றி ஊரூராகச் சென்று விற்பனை செய்துள்ளனர்.

இதனை,

**“பல் எருத்து உமணர் பதிபோகு நெடுநெறி”** **( பெருபாண்.65 )**

என்று விளக்கப்பட்டுள்ளது.

மிளகு மூட்டைகளைக் கழுதைகளின் முதுல் இருபுறமு தொங்க விட்டு ஏற்றிச் சென்று விற்பனை செய்துள்ளனர். இக்காட்சி,

**“புணர்ப்பொறை தாங்ய வடு ஆம் நோன் புறத்து**
**அணர்ச்செவிக் கழுதைச் சாத்தொடு”** **( பெருபாண்.79-80 )**

எனச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

வெளி நாட்டு வணிகத்தில் தமிழர்கள் தனித்துவ மிக்கவர்களாகத் திகழ்ந்துள்ளனர். தமிழகத்திலிருந்து துறை முகங்களின் வாயிலாகப் படகு, மரக்கப்பல்களில் பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளனர். வெளிநாடுகளிலிருந்து குதிரைகளை இறக்குமதி செய்துள்ளனர். அவ்வாறு கொண்டு வந்த மரக்கலங்களில் இங்ருந்து உலர்ந்த மீன் வகைகளை ஏற்றுமதி செய்துள்ளனர். அக்காலத்தில் மீன் ஏற்றுமதி பொருளாகவும், பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடப்பட்டுள்ளன. மீனினங்கள் வணிகப் பொருளாகவும் நாட்டின் பொருளாதாரப் பெருக்கத்திற்குத் துணை செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கவையாகும்.

யவனர்கள் குதிரைகளை இறக்குமதி செய்து அவற்றிற்கு ஈடாக பொன், உப்பு, மீன் முதலியவற்றை ஏற்றிச் சென்றுள்ளனர்.

இதனை,

**"நனந்தலைத் தேஎத்து நன்கலன் உய்மார்,**

**புணர்ந்து, உடன்கொணர்ந்து புரவியொடு அனைத்து"**

**மதுரைக். 322-323**

என்று காட்டப்பட்டுள்ளது.

அக்காலத்தில் வணிகத்தில் பண்டமாற்று முறை பின்பற்றப்பட்டுள்ளது. விலை உயர்ந்த பொருள்களை வாங்குவதற்கு மட்டுமே நாணயங்களைப் பயன்படுத்தியுள்ளனர். பண்டமாற்று முறையில் விலங்குகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. 'மான் இறைச்சிக்கு கள்ளும்' (பெருபாண்.161-165), 'பச்சை பயற்றுக்கு மீனும்' (ஐங்குறு.47), பண்டமாற்று முறையில் மாற்றிப் பயன்படுத்தியுள்ளனர்.

மேலும், யானை தந்தங்களை மதுவுக்குப் பண்டமாற்றாகப் பயன்படுத்தியுள்ளனர். இதனை,

**"அண்ணல் யானை வெண்கோடு கொண்டு**

**நறவு நொடை நெல்லின் நாண்மழ் அயருங்"**

**அக.61:9-10**

என்று எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**வேளாண்மை**

சங்க காலத்தில் வேளாண்மை முதன்மை தொழிலாக விளங்யுள்ளது. இத்தொழிலில் விலங்குகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. நிலத்தை உழுது பண்படுத்திப் பயிரிடுவதற்கு எருது, எருமை ஆகிய விலங்குகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சங்க காலத்தில் உழவர்கள் பூமியில் ஈரத்தன்மை மிக்க நிலத்தை உழுதுள்ளனர். அவர்கள் உழவுக்குப் பொருத்தமான எருதுகளைத் தேர்வுச் செய்து நிலத்தை உழுதுள்ளனர். இதனை,

**ஈரச் செவ்வி உதவின ஆயினு**

**பல் எருத்துள்ளு நல் எருது நோக்**

**வீறு வீறு ஆயு உழவன். புற.289:1-3**

என்று சித்திரிக்கப்பட்டுள்ளது.

சங்ககாலத்தில் வேளாண்மை தொழிலுக்கு விலங்குகள் பங்காற்றியுள்ளன.

**வேட்டை**

சங்க காலத்தில் வேட்டையாடி உணவு சேகரித்து உண்ணு நிலை இருந்துள்ளது. குழுக்களாக வேட்டையாடுவதற்குச் சென்றுள்ளனர். குறிஞ்சி திணையில் வேட்டையாடு தொழில் நடைபெற்றுள்ளது. வேட்டையில் மான், முயல், உடுபு, பன்றி, யானை முதலிய விலங்குகளை வேட்டையாடியுள்ளனர்.

அக்காலத்தில் வேட்டையாடுதல் தொழில்களுக்கு நாயைப் பயன்படுத்தி உணவு சேகரிக்கப்பட்ட நிலையை,

**"அரைநாள் வேட்ட அழுங்ன், பகல்நாள்,**

**பகுவாய் ஞமலியொரு வைபுதல் எருக்,**

**தொகுவாய் வேலித் தொடர்வலை மாட்டி**

**முள் அரைத் தாமரைப் புல்இதழ் புரையு**

**நெடுங்செவிக் குறுமுயல் போக்குஅற வளைஇ"**

**பெருபாண்.111-115**

என்று எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

**போர்**

சங்க காலத்தில் மக்களைப் பாதுகாக்கப் படைகள் இருந்துள்ளன. அப்படைகளில் விலங்குகள் முதன்மையாகத் திகழ்ந்துள்ளன. யானை படை, குதிரை படை முதலியவை தனித் தனி படை அமைப்புகளாக இருந்துள்ளன.

எதிரிகளோடும் போரிடும் போது அவர்களுடைய தடைகளைத் தகர்த்தெறியவு, விளை வயல்களைப் பாழாக்கவும் யானைகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

**"சிறு கண் யானை செவ்விதின் ஏவி**

**பாசவல் படப்பை ஆர் எயில் பல தந்து"**

**புற.6:13-14**

என்று காட்டுகிறது.

குதிரை படைகளைக் கொண்டு பகைவர் நாட்டில் புமுதிப் பறக்கப் போரிட்டுள்ளனர் என்பதை,

**“பெயல் உறழக் கணை சிதறி,**

**பல புரவி நீறு உகைப்ப” ( மதுரைக்.183-184)**

என்று எடுத்துரைக்கிறது.

போரிடுவதற்கு முன்பு எதிரிகள் நாட்டு பசுக்களைக் கவர்ந்துள்ளனர்.

**மேய்த்தல்**

சங்க காலத்தில் மக்களின் வாழ்வியலில் கால்நடைகள் துணையாக இருந்துள்ளன. கால் நடைகளின் வாயிலாக பால், தயிர், வெண்ணெய், நெய் முதலிய பொருட்கள் உற்பத்திச் செய்துள்ளனர். உற்பத்திப் பொருட்களைத் தங்களின் தேவைகளுக்குப் பயன்படுத்தியது போக மீதி உள்ளவற்றை வெளி இடங்களுக்குக் கொண்டு சென்று விற்பனை செய்து தங்களுக்குத் தேவையான பொருள்களை வாங் வந்துள்ளனர். இவற்றை வழங்கு கால்நடைகளைப் பராமரிப்பது அவர்களுடைய தொழில்களில் ஒன்றாகத் திகழ்ந்துள்ளன. பசுக்களை மேய்த்துப் பாதுக்காத்து, பராமரிப்பவர்களை ஆயர்கள் என்று அழைத்துள்ளனர். மேய்த்தல் தொழிலில் ஈடுப்படுவோரை

**“ஆடுடைய இடைமகன்“ குறுந்.221-4**

என்று,

**“பண்பில் கோவலர் தாய்பிரித் தியாத்த**

**நெஞ்சமர் குழவி” அக.293-11-12**

என்று விளக்கப்பட்டுள்ளன.

சங்க காலத் தொழில்களில் விலங்குகள் பங்காற்றியுள்ளன. வேளாண்மை தொழிலில் நிலத்தை உழுது பண்படுத்துவதற்கு எருதுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. விளைபொருட்களை ஓரிடத்திலிருந்து எடுத்துச் சென்று விற்பனை செய்வதற்கு எருதுகள், கழுதைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலை நாடுகளிலிருந்து குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. அதற்கு ஈடாக மீன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. போர்த் தொழிலில் யானை, குதிரைகள் எதிரிகளைத் தாக்க அழிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. விலங்குகளை மேய்த்துத் தங்களின் வாழ்வாதாரத்தை வளப்படுத்தியுள்ளனர்.

# ஆன்மீகமும் வழிபாடும்

*முனைவர் சு.இளவரசி, *உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத் துறை ஸ்ரீ சாரதா நிகேதன் மகளிர் அறிவியல் கல்லூரி. கரூர் - 639 005.*

பாரதநாடு பழம்பெருநாடு. மனித குலத்திற்கு அளிப்பதற்கு சிறப்பான மிகப் புராதனமான அறிவுக்களஞ்சியம் கொண்டதே நம்நாடு. நான் இந்த வாழ்க்கையிலேயே பிறவிப்பயனை அடைய வேண்டும் என்ற ஆன்மீக நாட்டம் வேறு எந்த நாட்டிலும் நான் கண்டதில்லை. ஆன்மீக நாட்டம் என்பது இந்த உலகில் இந்த உடலில் இந்த வாழ்க்கையிலேயே அடைய வேண்டிய பரம்பொருள் எனும் இலட்சியத்தை அடைவிப்பதாக இருக்க வேண்டும். பாரத நாட்டில் ஆன்மீக இலட்சியம் என்பது வீடுபேறு ஆகும். மனித வாழ்க்கை என்பது மத சம்பந்தமான பிரார்த்தனை மூலம் சொர்க்கத்திற்குச் செல்லும் பயணமாக மட்டுமே இருக்கும்.

**ஆன்மீகக் கலாச்சாரம்**

கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார். அவருடைய அருள் அனைவருக்கும் கிடைக்கும் என்ற தனித்தன்மைக்குரிய உலகக் கொள்கைதான் இந்து கலாச்சாரத்திற்கு அடிப்படை. கடவுளைப் பற்றிய நமது இந்த பார்வைதான் உலக சகோதரத்துவம் அனைத்து உயிர்களிடத்தும் மரியாதை, இயற்கை அன்னையைப் போற்றுதல் முதலிய பண்புகளை ஊட்டி வளர்க்கிறது. இதுதான் நமது ஆன்மீக கலாச்சாரத்தின் சிறப்பான தன்மையாகும்.

**கடவுளின் அம்சம்**

உலகில் உள்ள அனைத்தும் கடவுளின் அம்சம் என்கிறது. எனவேதான் இந்துக்கள் எல்லாவிதமான வழிபாடுகளையும் எந்த மொழியிலும் கூறப்படும் பிரார்த்தனைகளையும் ஏற்றுக் கொள்கிறார்கள். கடவுள் என்பவர் கண்ணுக்கும் புலப்படாத தூரத்தில் ஒரு நீதிபதி போல் வீற்றிருப்பவராகச் சித்தரிக்கப்படுவதுண்டு. அந்த இடத்திற்குச் சென்று கடவுளுடன் வாழ்வதே இலக்காக வைக்கப்படுவதுண்டு.

**கடவுளின் அருள்**

அருள் உனக்காக உள்ள ஒரு பொருள். ஆனால் மற்ற மத பாரம்பாயங்களில் அருள் என்பது சொர்க்கத்தில் வாழும் கடவுளின் சொத்து. அவரால் கொடுக்கப்படுவது அவர் எந்த அடிப்படையில் கொடுப்பார்? அவர் எப்படி ஒருவருக்கு அருள் கொடுத்து மற்றவர்கள் அனைவரையும் தவிர்க்க விடுவார்? அவா அதிர்ஷ்டச்சீட்டு முறையில் கொடுக்க முடியாது அல்லவா? ஒருவருக்கு கடவுள் எந்த அடிப்படையில் அருளை வழுங்குகிறார். நம்மைப் பொறுத்தவரை கடவுளால் பகிர்ந்தளிக்கும் பொருள்ளல்ல அருள். அருள் என்பது நாம் அடைய வேண்டிய பொருள். அது இப்பொழுது பெறுவதாகவோ அல்லது ஏற்கனவே பெறப்பட்டதாகவோ இருக்கலாம். ரப்பர் மரத்திலிருந்து ரப்பர் எடுப்பது போல் நாம் கடவுளிடமிருந்து அருளைப் பெற வேண்டும்.

**பிரார்த்தனை**

ஒரு கோரிக்கையில்லாமல் பிரார்த்தனை இல்லை. பிரார்த்தனை என்னுடைய கோரிக்கையை அடைவதற்காக இருக்கலாம். பிரார்த்தனை செய்வதால் புண்ணியங்கள் செழுமைப் படுத்தப்படுகின்றன. பாவங்கள் விலகும் அல்லது அதனுடைய தாக்கம் குறையும். அர்ஜீனனுக்கு நிகழ்ந்தது போல், தலைக்கு வந்த துன்பம் தலைப்பாகையுடன் நீங்கும்.

**இறை ஒளி**

உண்மை இருந்தால், இறைவன் இருந்தால், அவர் நமக்குள்தான் இருக்க வேண்டும். ''நான் என் கண்களால் இறைவனைக் கண்டிருக்கிறேன்'' என்று என்னால் சொல்ல இயல வேண்டும். இல்லையானால் என்னிடம் மதம் இல்லை நம்பிக்கைகளோ, கோட்பாடுகளோ, அறிவுரைகளோ மதம் ஆகாது. அனுபூதி. இறையனுபவம் இதுதான் மதம். உலகம் போற்றும் இந்த மகான்களின் பெருமை எங்கே இருக்கிறது? இவர்கள் விஷயத்தில் இறைவன் என்பது வெறும் கொள்கை அல்ல. இறைவனின் பிரதிபிம்பத்தில் ஒரு சிறு பகுதி கலந்திருப்பதால்தான் உலகம் உண்மையாகத் தோன்றுகிறது. நல்லவனிடம் நாம் அன்பு செலுத்தக் காரணம் , அவன் முகத்தில் இந்த இறைஒளி சற்று மிகுதியாக வீசுவது தான். இந்த ஒளியை நாமே பெற வேண்டும் வேறு வழியே இல்லை.

**ஆதிகாரணன்**

அவனன்றி ஓரணுவும் அசையாது அனைத்திற்கும் இறைவனே ஆதிகாரணன். தற்போது கேட்பவனும் அவனே கேட்பிப்பவனும் அவனே எனவே, நின் உள்ளத்தில் எழும் ஐயங்களைத் திருவருள் உணர்த்தும் வண்ணம் தீர்த்துவைக்க முயல்வேன். அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய், ஆனந்த பூர்த்தியாகி அருளொரு நிறைந்தவன் இறைவன். அவன் அனைத்து இடங்களிலும் இருக்கின்றான்.

**ஆலய வழிபாடு**

வினைகள் வெந்து மறுபிறப்பு உண்டாகாதிருப்பதற்கு ஆலய வழிபாடு இன்றியமையாதது.

**''மாலற நேயமும் மலிந்தவா வேடமும்**

**ஆலயந் தானும் அரனெனத் தொழுமே''**

என்கிறது சிவஞானபோதம்.

பாமரர் மட்டுமல்ல இறைவனது அருளைப் பெற்ற ஞானிகளும் ஆலயம் சென்று வழிபட வேண்டும். ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்கிறது கொன்றை வேந்தன்.

ஆலயம் என்பது ஆண்டவன் திருவடியில் ஆன்மா லயிப்பதற்கு உரிய இடம் என்று பொருள் மற்றும் ''ஆ'' என்பது ஆணவ மலத்தையும் ''லயம்'' என்பது அடங்கியிருத்தலையும் உணர்த்தும். ஆகவே ஆலயம் என்பது ஆணவமலம் அடங்குவதற்குரிய இடம் என்றும் பொருள் ஆகும்.

தூயமன, வாக்கு, காயத்துடன் ஆலயத்திற்குச் செல்ல வேண்டும். ஆகவே ''தூய்மையில்லாமல் செய்யும் வழிபாடு. பத்தியம் இல்லாமல் மருந்து சாப்பிடுவது போன்றதாகும்.'' ''தெய்வத்திற்குச் சத்தியம் வைத்தியத்திற்குப் பத்தியம் மிக மிக அவசியம்''.

சிவம், சத்தி, நாதம், விந்து நான்கும் அருவம், சதாசிவம், உருவாருபமாக உள்ளது. இதனை வணங்கினால் எல்லாவற்றையும் வணங்கிய புண்ணியம் உண்டாகும். ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்கிறது திருமந்திரம் எனவே சமயச் சின்னங்களையெல்லாம் ஒவ்வொருவரும் அவசியம் அணிந்து கொள்ள வேண்டும்.

**ஆண்டவனின் ஆறு தன்மைகள்**

ஆண்டவனுக்கு ஆறு தன்மைகள் உள்ளன. அவை மங்கலம், வியாபகம், இடாகெடுத்தல், இளமை, பேராற்றல், பேரொளி எனப்படும்.

| | | |
|---|---|---|
| ''மங்கலம் | – | சிவம் |
| வியாபகம் | – | விஷ்ணுமூர்த்தி |
| இடாகெடுத்தல் | – | கணபதி |
| இளமை | – | முருகன் |
| பேராற்றல் | – | பராசக்தி |
| பேரொளி | – | சூரியன்'' |

**ஆலயத்திற்குச் சென்று வழிபடல்**

இறைவனை ஆலயத்திற்குச் சென்றுதான் வழிபட வேண்டும் என்பது போல நம்முடைய வேத நூல்களில் விதிகள் இருப்பதற்குக் காரணம் பசுவின் உடம்பு முழுக்க பால் பரவியிருந்தாலும் மடியின் மூலமாகத்தான் பாலைப் பெற முடியும். காதைப் பிடித்திழுத்தால் பால் வராது. காதுதான் வரும். பூமியனடியில் எங்கும் வியாபித்திருக்கும் தண்ணீரை நாம் உபயோகப்படுத்த வேண்டுமாயின் ஓரிடத்தில் கிணறு வெட்டித் தானே தண்ணீரை எடுக்கிறோம். அன்றி வெயிலிலே வெப்பம் நிறைந்திருக்கிறது ஆனால் நேராக சூரியனுடைய வெயிலிலே ஒரு துண்டை வைத்தால் அது பற்றி எரியாது. வெதும்பும் ஆனால் சூரிய காந்தக் கண்ணாடியின் கீழே வருகின்ற மற்றொரு வெயிலிலோ துண்டையோ பஞ்சையோ வைத்தால் திக்கென்று தீப்பிடித்துச் சாம்பலாகிப் போகும். நோ வெயிலுக்குத் துண்டைக் கொளுத்துகின்ற ஆற்றல் இல்லை. சூரிய காந்தக் கண்ணாடியின் கீழே வருகின்ற வெயில் அந்தத் துண்டை எரித்து விடுகிறது. எங்கும் பரந்து விரிந்திருக்கின்ற ஆதித்தன் ஒளயை அந்தச் சூரிய காந்தக்

கண்ணாடி சேர்த்து, ஈர்த்து அனுப்புகிறது. அதுபோல. எங்கும் நிறைந்திருக்கின்ற இறைவனுடைய திருவருளை சைவ சமயக் குரவர்களும், ஆழ்வார்களும், அருணகிரிநாதர், ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் போன்ற அருளாளர்களும் வேதவித்துகளுமாக இருக்கின்ற பெரியோர்களும் மந்திரயந்திரத்தினாலே சேர்த்து ஈர்த்துத் திரட்டி வைத்திருக்கின்றார்கள்.

மற்ற இடங்களில் இறைவனை வழிபடுவது வெயிலிலே வேட்டியை வைப்பது போல, ஆலயங்களிலே இறைவனது சந்நிதானத்திலே வழிபடுவது சூரிய காந்தக் கண்ணாடியின் கீழே வேட்டியை வைப்பது போல இது உடனே தீப்பிடித்துக் கொள்கிறதல்லவா? அதுபோல, அங்கு நம் வினைகள் வெந்து போகும் ஆகவே வினைகள் வெந்து மறுபிறப்பு உண்டாகாதிருப்பதற்கு ஆலய வழிபாடு இன்றியமையாதது.

**இறைவழிபாடு**

இறைவழிபாடு என்பது உலகில் பன்னெடுங்காலமாக நடைபெற்று வரும் புனிதமான செயலாகும். இவ்விறை வழிபாட்டினை மேற்கொள்பவர்கள் மட்டுமல்லாது அவர்களின் சந்ததியினரும் குறைவுபடாத செல்வச் செழிப்போடு உலகில் வாழ்வர் என்பதனை,

**“வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்**
**பழிதீர் செல்வமொடு வழிவழி திறந்து**
**பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே”**

என எடுத்துரைக்கும் தொல்காப்பிய நூற்பாவால் உணரமுடிகின்றது.

**இறைவன் ஒருவனே**

“ஒன்றே குலம் ஒருவனே தேவன்” என்று இறைவன் ஒருவனே என்பதை வற்புறுத்துகிறார் திருமூலர்.

**“சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை**
**அவனோடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை”**

என்பதன் மூலம் அவ்வொருவன் சிவனே என்று பரம்பொருளுக்கு சிவன் எனறு பெயா சூட்டியுள்ளார்

**இறைவன் பற்றிய பொன்மொழிகள்**

- இறைவனது படைப்பில் பகுத்தறிவே மிகச்சிறந்த பயனுடைய பொருள்.
- இறையச்சமே ஞான அறிவிற்கு மூலாதாரமாகும்.
- நண்பர்களுள் சிறந்தவனே இறைவனுக்கும் தோழனாவான்.
- இறைவன் பாதையில் உயிர்த் தியாகம் செய்வதைவிடப் பெற்றோர்க்குப் பணிவிடை செய்தல் மேலாகும்.

**இறைவனின் இயல்பு**

**“தீயினும் வெய்யன் புனலினும் தண்ணியன்**
**ஆயினும் ஈசன் அருளறியார் இல்லை**
**சேயனும் அல்லன் அணியன் நல்லன்பாக்குத்**
**தாயினும் நல்லன் தாழ் சடையோனே”**

என்று இறைவனின் இயல்புகளைத் திருமூலர் இப்பாடலில் அற்புதமாய்ப் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

தீ என்றால் வெப்பமாகவும், நீர் என்றால் குளிர்ச்சியாகவும் அதனதன் இயல்புகளிலும் இறைவன் இரண்டறக் கலந்துள்ளான் என்கிறார்.

இவ்வுண்மையை உணர்ந்தால் தான்,

**தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா – உன்னை**
**தீண்டும் இன்பம் தோன்றுதடா நந்தலாலா**

என்று பாடியுள்ளார் பாரதி.

**இறைவனின் இருப்பிடம்**

இறைவனைத் தேடத்துவங்குகிறேன். ஆவனைக் காண விழைகிறேன். எங்கிருக்கிறான் அவன்? எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறான் என்றால் அவ்வளவு பெரிய பிரமாண்டத்தை அற்பனாகிய என்னால் தரிசிக்க முடியாதே என்று ஐயுறுவார்க்குத் திருமூலர் கூறுவது

**“மாடத்து உளானலன் மண்டபத்தான் அவன்**
**கூடத்து உளானலன் கோயிலுள்ளான் அவன்**
**வேடத்து ஊனாலன் வேட்கைவிட்டார் நெஞ்சில்**
**மூடத்து உளேநின்று முத்திதந்தான் அன்றே”**

பெரிய மாடங்களில் அவன் இல்லை. அழகிய மண்டபங்களிலும் அவன் இல்லை. அகன்ற கூடங்களிலும் அவன் இல்லை. ஏன் கோயில்களிலும் அவன் இல்லை. மனிதர்களால் உருவாக்கப்படும் பல்வேறு சிலை வடிவங்களிலும் அவன் இல்லை. ஆசைகளை அறுத்தவர். நெஞ்சின் உள்ளே அறிவு மயக்கம் மறைந்த இடத்திலே இருந்துகொண்டு முக்தியின்பம் தருகிறார் என்கிறார்.

**இறைவனைக் காணும் வழிமுறைகள்**

இறைவன் உன்னுள்ளேயே இருக்கிறான். உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்

அதிலேதான் பரம்பொருள் வீற்றிருக்கிறது என்கிறார். ஊனுடம்பு ஆலயத்திலே உள்ளமெனும் கருவறையிலே ஒய்யாரமாய் வீற்றிருக்கும் இறைவனைக் காண்பதற்கு திருமூலா வழிமுறைகளைக் கூறுகிறார்.

**"ஒன்று கண்டேன் இவ்வுலகுக்கு ஒரு கனி**

**நன்று கண்டாய் அது நமச்சிவாயக் கனி**

**மென்று கண்டால் அது மெத்தென்று இருக்கும்**

**தின்று கண்டால் அது தித்திக்கும் நானன்றே"**

நமச்சிவாய என்னும் ஐந்தெழுத்தின் சிறப்பினை உணர்த்தும் பாடல். மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம் என்பார்கள் மனம் செம்மையாவதற்கு மந்திரம் செபிக்க வேண்டியது அவசியம்.

நமச்சிவாய மந்திரம் உச்சரிக்க எளியையானனு. அதனால்தான் மென்று கண்டால் அது மெத்தென்று இருக்கும் என்கிறார்.

**நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்**

**வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்**

**ஊன்பற்றி நின்ற உணாவுறும் மந்திரம்**

**தான்பற்றிப் பற்றத் தலைப்படும் தானே**

என்று அறிவிக்கிறார்.

நமச்சிவாய என்னும் மந்திரத்தை உச்சரிக்க உச்சரிக்க வானிற்கும் பூமிக்குமாய் நின்ற அப்பரம்பொருள் நமக்குள் காட்சி தரும். தெய்வ அருளின் மூலம் தான் பெற்ற போன்பத்தை இவ்வுலக மக்கள் அனைவரும் பெறட்டும் என்று ஆசீர்வதிக்கிறார். நாமும் நமச்சிவாய என உச்சரித்து நலம் பெறுவோம்.

## புறவழிபாடும் அகவழிபாடும்

ஒருவர் கோயிலுக்கு வருவதும் வழிபடுவதும் பயனற்றது. உடம்பாலும், மனத்தாலும் தூய்மையாக இருப்பவர்களின் பிரார்த்தனைகளை கடவுள் நிறைவேற்றுகிறார். ஆனால் தாங்களே தூய்மையற்றவர்களாக இருந்துகொண்டு பிறருக்கு மதபோதனை செய்பவர்கள் இறுதியில் தோல்வியையே அடைகிறார்கள். புறவழிபாடு என்பது அக வழிபாட்டின் அடையாளம் மட்டுமே. அக வழிபாடும் தூய்மையும் தான் உண்மையான வழிபாடு ஆகும்.

## தீர்த்தத் தலங்கள்

தீர்த்தத் தலங்கள் புனிதமான பொருட்களாலும், மகான்களாலும் நிரப்பி இருப்பவை மகான்கள் வாழ்கின்ற இடங்களில் கோயில் எதுவும் இல்லையென்றாலும், அந்த இடங்கள் தீர்த்தத் தலங்களே நூறு கோயில்கள் இருந்தாலும், அங்கே புனித மற்றவர்கள் இருப்பார்களானால் தெய்வீகம் மறைந்துவிடும். தீர்த்தத்தலங்களில் வாழ்வதும் மிகவும் கடினமான காரியம். சாதாரண இடங்களில் செய்யப்படும் பாவங்களை எளிதாக நீக்கிக் கொள்ள முடியும். ஆனால் தீர்த்தத் தலங்களில் செய்யப்படும் பாவத்தை நீக்கவே முடியாது.

## வழிபாடுகளின் சாரம்

மனத்தூய்மை, பிறருக்கு நன்மை செய்வது இதுவே அனைத்து வழிபாடுகளின் சாரமாகும். ஏழையிடமும் பலவீனாடமும் நோயுற்றோரிடமும் இறைவனைக் காண்பவனே உண்மையில் கடவுளை வழிபடுகிறான். விக்கிரமத்தில் மட்டுமே இறைவனைக் காண்பவனின் வழிபாடு ஆரம்ப நிலையில் உள்ளது. ஒரே ஏர் ஏழைக்காயினும் அவனது சாதி, இனம், மதம் போன்ற எதையும் பாராமல், அவாடம் இறைவனைக் கண்டு அவனுக்கு உதவிகள் செய்து தொண்டாற்றுபவனிடம் இறைவன் மிகவும் திருப்தி கொள்கிறார். கோயில் மட்டுமே தம்மைக் காண்பவனைவிட இவனிடம் அதிக மகிழ்ச்சி கொள்கிறார்.

## நற்காமம்

மனத்தூய்மையுடன் இருங்கள், உங்களை நாடி வரும் ஏழைகளுக்கு உங்களால் இயன்ற உதவி செய்யுங்கள், இது நற்காமம். இதன் பலனாக உங்கள் இதயம் தூய்மை பெறும். எல்லோரிலும் உறைகின்ற இறைவன் வெளிப்பட்டுத் தோன்றுவார். கடவுள் எல்லோரது இதயத்திலும் எப்போதும் இருக்கிறார்.

## சுயநலப் பாவம்

நம் நன்மையை மட்டுமே நினைக்கின்ற சுயநலம், பாவங்கள் அனைத்திலும் முதற்பாவமாகும். நானே முதலில் உண்பேன். மற்றவர்களைவிட எனக்கு அதிகமான பணம் வேண்டும். எல்லோருக்கும் முன்னால் நான் முக்திபெற வேண்டும் என்றெல்லாம் நினைப்பவன் சுயநலவாதி. சுயநலமற்றவனோ நான் கடைசியில் இருக்கிறேன். கடைசியில் இருந்து செல்வதைப் பற்றி எனக்கும் கவலையில்லை. நான் நரகத்திற்குச் செல்வதால் என் சகோதராகளுக்கு உதவ முடியுமானால் அதற்கும் தயாராக இருக்கிறேன் என்கிறான். இத்தகைய சுயநலமற்ற தன்மையே மதத்திற்கான உரைகல் சுயநலம் இல்லாதவனே மேலான ஆன்மீகவாதி அவனே இறைவனுக்கு அருகில் இருக்கிறான்.

**சுயநலக்காரன்**

சுயநலம் கொண்டவர் அனைத்துக் கோயில்களையும் வழிபட்டிருந்தாலும், புண்ணியத்தலங்கள் அனைத்தையும் பார்த்திருந்தாலும், சிறுத்தையைப் போல் தன் உடம்பு முழுவதிலும் மதச் சின்னங்களைத் தீட்டிக் கொண்டிருந்தாலும் அவர் இறைவனிடமிருந்து விலகியே இருப்பான்.

இலைகளுக்குத் தண்ணீர் விட்டால் வேருக்குப் போகாது. வேருக்குத் தண்ணீர் விட்டால் விருட்சம் முழுவதும் பரவும். அவ்வாறு இறைவனுக்கு நாம் ஒரு பொருளை அபிஷேகம் செய்கிற பொழுது அகில உலகத்திற்கும் அந்தப் பலன்போய் நன்மை செய்கிறது. ஆகவே இறைவனுக்குச் செய்வதெல்லாம் உயிர்களுக்குச் செய்வதுபோல். அதனால்தான் அபிஷேக ஆராதனைகளை எல்லாம் நம் முன்னோர்கள் வைத்துள்ளனர். "பாதை சரியாக இருந்தால் பலன் வந்தேயாக வேண்டும்."

இவ்வாறாக இறைவனது அருளைப் பெறுவதற்கு ஆலயங்களை நாடிச்சென்று தம் ஆன்மாவை ஆனந்தப்படுத்தி அருள்பெற வேண்டும். "தூணிலும் இருப்பார் கடவுள் துரும்பிலும் இருப்பார்" என்பதை உணர்ந்து கொண்டு கெட்ட எண்ணங்களை நீக்கி நல்லெண்ணத்திற்கு விளக்கேற்றி வாழ்க்கையே பிரகாசமாக அமைய ஒவ்வொருவரும் கடவுளை நிந்தித்து நமச்சிவாய மந்திரத்தை நாளும் ஓதி பெறுவோம் பயனை என்று சிறப்பானதொரு முடிவெடுத்து ஆன்மீக வளர்ச்சிக்கு தளர்ச்சியின்றி பணியாற்றி பயன்பெறுவோம்.

**அடிக்குறிப்புகள்**

1. ஸ்வாமி தயானந்த ஸரஸ்வதி, ஹிந்துவின் கடமை, ப – 3
2. மேலது ப – 6
3. சுவாமி விவேகானந்தா, நாம் யார்? ப – 47
4. கிருபானந்தவாரியார், ஆலயம் ஏன்? ப – 5
5. மேலது ப – 10
6. மேலது ப – 53
7. முனைவர் த.செல்வராசு, இலக்கியமும் வாழ்வியலும், ப – 21
8. சுவாமி விவேகானந்தா, எது வழிபாடு? ப – 2
9. சுவாமி விவேகானந்தா, வாழும் வழி ப – 5.

# ஹைக்கூ கவிதைகளில் சுற்றுச்சுழல் பாதிப்புகள்

* **சா.சதீஸ்குமார்,** *முனைவா பட்ட ஆய்வாளா(ப.நே), ந.க.ம கல்லூரி, பொள்ளாச்சி.*

**முன்னுரை**

சங்க காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் இயற்கையோடு ஒன்றி இயற்கைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படுத்தாமல் வாழ்ந்து வந்தனர். இறைவன் நமக்களித்த மிகப்பெரிய நன்கொடை இயற்கை எனலாம். ஆனால் நாம் இப்போது அந்த இயற்கை வளங்களைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சுரண்டி வருகிறோம். அதனால் இயற்கை வளங்கள் பாதிக்கப்படுவதோடு நம்முடைய எதிர்கால சந்ததியினரும் பாதிக்க வழிவகுக்கின்றோம். இதற்கு மக்கள் தொகைப் பெருக்கமும், அறிவியல் வளர்ச்சியும் அடிப்படைக் காரணிகளாகின்றன. இயற்கை வளங்களான நிலம், நீர், காற்று, மரம் ஆகியவை மாசு அடைவதால் ஏற்படும் பாதிப்புகளை ஹைக்கூக் கவிதைகளில் கவிஞர்கள் எவ்வாறு பதிவு செய்துள்ளனர் என்பதைப் பற்றி விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சுற்றுச்சுழல் வரையறை**

நம்மைச் சுற்றியுள்ள சுற்றுப்புறமே சுற்றுச்சுழல் ஆகும். நாம் அன்றாடம் பயன்படுத்துகின்ற பொருள்களாலேயே சுற்றுச்சுழல் பெருமளவில் பாதிப்படைகின்றன. சுற்றுச்சுழல் பாதிப்படைவதால் இயற்கை தன் இயல்பை இழக்கும் அபாயம் ஏற்படுகின்றது. 'சுற்றுச்சுழல்' என்ற சொல்லிற்கு கோ. சடகோபன் அவர்கள் "சுற்றுச்சுழல் என்ற சொல் புவி, புவியைச் சார்ந்த பரப்பு, காற்று, நீர், சூரிய ஒளி, ஆறுகள், மலைகள், இயற்கை நிலச்சரிவு, கடற்கரை, காடுகள், பயிரினம், உயிரினம், உயிர்வாழும் இடம், மேற்பரப்பிலுள்ள வானம் போன்றவை சேர்கின்றன. இவை எல்லா உயிரினங்களாலும் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. இதனால் சுற்றுச்சுழல் அழகான மற்றும் நிறைவான சுழல் அமைப்பாக விளங்குகின்றது" (சுற்றுச்சுழல் பொருளியல், ப-2) என்று விளக்கம் கூறியுள்ளார்.

சுற்றச்சூழல் காரணிகளுள் எவையெல்லாம் அடங்குகின்றன என்பதனைப் பற்றி "சுற்றுச்சூழலியல் என்பது அறிவியலில் அண்மையில் வளர்ந்து வரும் ஒரு துறை, மனிதனைச் சுழ்ந்துள்ளது என்றாகும் போது நீர், காற்று, வான், மலை, மரம், செடி, கொடி, விலங்கினங்கள் என்பன அனைத்தும் உள்ளடங்குகின்றன" (அறிவியல் தமிழ் இலக்கியம், ப – 176) என்று தம் நூலில் கூறியுள்ளார்.

இயற்கைச் சுழல் மிகவும் இன்று பாதிக்கப்பட்டுள்ளது. தூய காற்றை மக்கள் சுவாசிக்கவும், மழை வளத்தைப் பெருக்கவும் மரங்கள் நடப்படுகின்றன. ஆனால் அறிவியல் வளர்ச்சியின் காரணமாக ஏற்பட்ட போக்குவரத்து, தொழிற்சாலைக் கழிவுகள் ஆகியவற்றால் நம்முடைய இயற்கை பாதிக்கப்பட்டு வருகிறது என்பதை ஏனோ நினைக்க மறுக்கின்றோம்.

**சுற்றச்சூழல் மாசு**

சுற்றச்சூழல் மாசடைவதற்கு மனிதர்களாகிய நாம் தான் மிக முக்கிய அங்கம் வகிக்கின்றோம். அதற்கு அன்றாடம் நாம் உபயோகிக்கின்ற பொருட்களே காரணமாகின்றன. அறிவியல் வளர்ச்சியின் செயல்பாட்டால் இயற்கை மாசுபட்டு விடுகிறது. மாசு என்பதற்கு க்ரியாவின் தமிழ் அகராதி "ஒரு பொருளில் நீக்க வேண்டியதாக உள்ள அல்லது ஒன்றின் தூய்மையைக் கெடுக்கும் வகையில் சேரும் அழுக்கு மாசு ஆகும்" (ப-861) என்று பொருள் தருகிறது.

அறிவியல் வளர்ச்சியின் விளைவாக நமக்கு பல்வேறு நன்மைகள் ஏற்பட்டு இருப்பினும் அவற்றால் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றி மட்டும் நினைக்க மறுக்கிறோம். அவற்றுள் முதன்மையாகத் திகழ்பவை மின்சாதனப் பொருட்கள் என்பதனை, "மனிதன் அன்றாட வாழ்வின் உபயோகத்தில் உள்ள குளிர்சாதனப் பெட்டி, ஏர்கண்டிஷனா, ஏசோசெல், தரைப்பஞ்சு மெத்தைகள், சுத்தம் செய்யும் வேதியல் பொருட்கள், தீயனைப்புக் கருவிகள் முதலானவை ஓசோன் சேதத்திற்குக் காரணம்" (பூமிக்கு அச்சுருத்தல், ப-ப25) என விவேகானந்த கேந்திரம் எடுத்துரைக்கின்றது.

நிலம், நீர், காற்று, வானம் ஆகிய இயற்கைக் காரணிகள் எவ்வாறெல்லாம் பாதிப்படைகின்றன என்பதைப் பற்றிய ஹைக்கூ கவிஞனின் ஆதங்கத்ததைப் பின்வரும் நிலைகளில் காணலாம்.

**நிலம் மண் மாசு**

நாம் இப்பூமியில் வாழ்வதற்கு ஏன் நிற்க, நடக்க, உட்கார என அனைத்து நிலைகளுக்கும் ஆதாரமாக விளங்குவது நிலம் ஆகும். நாம் வீடு கட்டி வாழ்வதற்கும், நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் நிலம் மிகவும் இன்றிமையாததாக அமைகின்றது. அத்தகைய நிலத்தின் வளத்தை அதாவது விவசாயத்துறையில் மகசுலை அதிகரிப்பதற்கு இராசாயன உரங்களைப் பயன்படுத்துவதால் மண்ணில் வாழும் உயிரினங்கள், பறவையினங்கள், ஏன் மனித இனங்கள் அழிவதற்குக் கூட நாம் பாதை வகுக்கின்றோம் என்றே கூறலாம்.

நிலம் என்பதற்கு மதுரைத் தமிழ்ப்பேரகராதி "இடம், தலம், நானிலத்தின் பொது, தேசம், பூமி" (பாகம் - 2, ப - 236) எனும் பலபொருள்களைத் தருகிறது.

நாம் நம்முடைய வாழ்க்கைச் சுழலில் எவ்வளவோ முன்னேற்றம் அடைந்து கொண்டே தான் இருக்கின்றோம். அதே போல் நாம் வாழும் இடப்பெயர்கள் கூட மாற்றம் அடைகின்றன. கிராமம் நகரமாய், நகரம் மாநகரமாய் வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டு இருக்க அவை மாசு அடைவதை கவிஞர் ஸ்ரீரங்கராஜபுரம் துளசி,

**"வளர்ச்சியல் முன்னேற்றம்**

**பேரூராட்சி நகராட்சியில்**

**குவியும் குப்பைகள்"**

**(எலிக்குஞ்சுகளும், படிநெல்லும், ப - 30)**

என்னும் ஹைக்கூவில் அன்றாடம் குவியும் குப்பைக் கழிவுகளால் மண்வளம் பாதிக்கப்படுலதைச் சுட்டியுள்ளார். மேலும் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதால் ஏற்படும் விளைவுகளை கவிதைத் தம்பி

**வயல் செழிக்க**

**உயிர்விட்டது**

**வரப்பில் வாழ்ந்திட்ட மண்புழு**

**(நிலவுக்கு சோறூட்டும் வானம், ப - 27)**

எனும் ஹைக்கூவில் பயிர் விரைவாக வளர்வதற்காக விளைநிலங்களில் தெளிக்கப்படும் இராசாயன உரங்களால் உழவனின் நண்பனான மண்புழு தன் உயிரை மாய்க்கிறது என்று கூறி இந்தப் பயிர்களை உண்ணக்கூடிய மனிதர்களும் ஒருநாள் இந்நிலைக்கு ஆளாகப் போகிறான் என்று எச்சரிக்கிறார்.

**நீர் மாசு**

நாம் வாழ்கின்ற நிலப்பகுதியானது மூன்று பக்கம் நீராலும், ஒரு பக்கம் நிலத்தாலும் சுழப்பட்டுள்ள பகுதி என்பது அறிவியல் அறிந்த உண்மையாகும். அந்நீர்ப்பகுதியானது இப்போது சுருங்கிக் கொண்டே வருகிறது. நாம் உயிர்வாழத் தேவை நீராகும். அத்தகைய நீரானது தொழிற்சாலைகளிலிருந்து வெளிவருகின்ற கழிவுகளால் மாசு அடைகிறது. அதனால் ஏற்படும் பாதிப்பு எண்ணிலடங்காதது.

நீர் மனித உடலுக்கு மட்டுமல்ல மண்ணில் வாழ்கின்ற அனைத்து உயிரினங்களுக்கும் நீர்தான் ஆதாரமாக விளங்குகின்றது என்பதற்கு சித்ரா மணாளன் தன்னடைய நூலில் மனிதன் உடலில் 85%, யானையில் உடலில் 75%, கிழங்குவகையில் 80%, தக்காளியில் 95% நீர் நிரம்பியுள்ளது. இது போன்று ஒவ்வொரு உயிரினங்களும் நீரால் நிரப்பப்பட்டது (பஞ்ச பூதங்கள் பற்றிய அறிவியல் உண்மைகள், ப - 62) என்று விளக்கியுள்ளார்.

விவசாய நிலங்களையெல்லாம் விற்றுவிட்டோம். நீர் நிலைகளையாவது காப்பாற்றுங்கள் என்று கவிஞன் தனது இணலாமையைத் தனது கவிதையில்,

**"ஏரிகளைக் காப்பாற்றுங்கள்**

**வயலெல்லாம் நட்டுவிட்டோம்**

**கட்டிடங்களை"**

**(தமிழ்மதி, மழைப்பாட்டு, ப - 22)**

என்ற ஹைக்கூவில் இன்று விளைநிலங்கள் எல்லாம் வானுயர்ந்த குடியிருப்புகளாகி வருகின்ற சுழலையும், இயற்கை அழகோச்சும் அழகு பூமி, கிராமம் அங்கும் அறிவியல் தொழில் நுட்பத்தின் காரணத்தினால் ஆலைக் கழிவுகள் கலந்துவிட்ட தன்மையினை மு.முருகேசன்,

**“முகம் காட்ட மறுக்கிறது**

**சாயக் கழிவு நீர்**

**கலந்தோடும் நதி”**

**(வரும் போலிருக்கிறது மழை, ப – 48)**

எனும் ஹைக்கூவில் நதி நீரெல்லாம் சாயக்கழிவு நீராக மாறி தனது அடையாளத்தை இழந்து விட்ட பரிதாபத்தைத் தனது கவிதையில் பதிவு செய்துள்ளார்.

**காற்று மாசு**

மனிதன் உயிர்வாழ நீர் எவ்வாறு முக்கியமோ அதனைப் போன்றே காற்றும் மிக முக்கியமாகும். காற்றானது நமக்கு மரங்கள் மூலம் கிடைக்கிறது. அக்காற்று வாகனம் மற்றும் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் புகையால் மாசு அடைவதோடு அக்காற்றைச் சுவாசிக்கும் மனிதர்கள் பாதிப்படைகின்றனர்.

வாகனங்களிலிருந்து வெளிவரும் புகையினால் ஏற்படுகின்ற விளைவுகளைப் பற்றி கார்பனானது முடிவுறா எரியூட்டத்தின் விளைவாகக் கார்பன் மோனாக்சைடாக மாறுகிறது. கார்பன் மோனாக்சைடு பெருமளவில் தானியங்கி வாகனங்களிலிருந்து வெயிவருகிறது. இது மனிதனுக்கு மயக்கம், சுவாசக் கோளாறு மற்றும் மரணத்தைக் கூட விளைவிக்கிறது (சுற்றுச்சுழல் கல்வி, ப – 102) விளக்கமான கருத்து அனைவராலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக அமைகின்றது.

தொழிற்சலைகளிலிருந்து வெளிவருகின்ற புகையால் கிராமத்தக் காற்றும் மாசு அடைவதைப் பற்றி,

**ஆலைப் புகை கண்டு**

**அஞ்சித் திரும்பியது**

**கிராமத்துக் காற்று**

(மு.முருகே, வரும் போலிருக்கிறது மழை, ப – 24) எனும் ஹைக்கூவும், போக்குவரத்து வாகனங்களினால் கார்பன் டை மோனாக்சைடு காற்றின் இயல்பினை மாறுதலடையச் செய்துவடும். இதனால் ஓசோன் மண்டலம் பாதிக்கப்படும் சுழ்நிலையை மயிலாடுதுறை இளையபாரதி மற்றும் ரேவதி இளையபாரதி ஆகிய கவிஞர்கள்,

**“வாகனப் பெருக்கம்**

**புகை மண்டலம்**

**துளைபடும் ஓசோன்”**

**(அன்றில்கள், ப – 25)**

எனக்கூறி வருத்தப்படுகின்றனர்.

**வான மண்டல மாசு**

நிலம், நீர், காற்று இம்மூன்றில் ஏற்படுகின்ற மாசுக்களும் சென்று சேரும் புகழிடமாக வானம் அமைகின்றது. இம்மூன்று மாசுக்களாலும் வானத்திலும் மாசு ஏற்பட்டு மழை வளம் குறைகிறது. மழைவளம் குறைவதால் மண்ணில் வாழும் அனைத்து உயிரினங்களும் பாதிப்படைகிறது.

பசுமை இல்லா வாயுவான சி.எஃப்சி ஓசோன் குடையில் ஓட்டைகளை ஏற்படுத்துகிறது. இவ்வோட்டைகள் வாயிலாக ஊடுருவி வரக்கூடிய புற ஊதாக்கதிர்கள் பூமியின் மேற்பரப்பில் வாழும் மனிதர்களுக்கும் வெப்பத்தால் தோல் புற்றுநோய் ஏற்படுத்த வல்லது. இக்கடும் வெப்பக் காற்று ஒசோன் ஓட்டையில் உண்டாவதை,

**“ஓசோன் பலூன்**

**ஓட்டையானது**

**பூமியில் வெப்பக் காற்று”**

**(கி.இராமசாமி, ஹைக்கூ இதழ், ப – 9)**

எனக் குறிப்பிடுகிறது. மண்ணிற்கு ஆதாரமாக இருந்து மழைப் பொழிவினைத் தரக்கூடிய மரங்களை மனிதர்களாகிய நாம் அழிப்பதாலேயே வானம் காயப்படுவதாக,

**வெட்டப்படும் மரங்கள்**

**காயப்படும்**

**வானம்**

(மின்மினியின் வெளச்சத்தில், ப – 24)

கம்பம் மாயவன் தனது கவிதையில் கூறி தானும் காயப்பட்டு இக்கவிதையை வாசிப்போரும் காயப்படும்படி அழுத்தமாகப் பதிவு செய்துள்ளார்.

**முடிவுரை**

இன்றைய சுழலில் நம்முடைய சுற்றுச்சுழலுக்கு நம்மால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைப் பற்றிக் ஹைக்கூக் கவிஞர்கள் தங்களுடைய கவிதை வரிகள் மூலம் எடுத்துக் கூறியுள்ள கருத்துக்களை மனதில் கொண்டு இனிவரும் காலங்களிலாவது நிலம், நீர், காற்று, வானம் ஆகிய இயற்கை வளங்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் வாழ முனைவோம் என்பதை எடுத்துக் கூறும் வழிகலனாக ஹைக்கூ கவிதைகளைப் படைத்து உலகிற்கு எடுத்துரைக்க முற்படுகின்றனர் என்பதை நம்மால் உணரமுடிகிறது.

# வெல்லம் தயாரிப்பில் புழங்கு பொருட்கள்

*பா.சதீஷ், *பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர், பாரதியார் பல்கலைக்கழகம், கோயமுத்தூர்-46.*

தமிழ்நாட்டில் நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் வட்டாரத்திற்குட்பட்ட காவிரி கரையில் அதிகம் விளையும் பயிர்களில் மிகவும் முக்கியமானவை கரும்பு, மஞ்சள், வெற்றிலை, வாழை, கோரை போன்றவையாகும்.

மனிதன் தான் வாழ்கின்ற பூவியியற் சூழலுக்கு ஏற்ப தன்னுடைய வாழ்ககை முறையினை அமைத்துக் கொள்கின்றான்.

ஒவ்வொரு நிலத்தைச் சார்ந்த மக்களும் அங்கு கிடைக்கும் பொருட்களை அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கையை அமைத்துக் கொள்கின்றான்.

மனிதன் உயிர் வாழ்வதற்கு உணவு மிகவும் முக்கியமாதாகும் மக்கள் அவர்கள் வாழ்கினற சுழலுக்கு ஏற்ப உணவு பழக்க வழக்கங்களை மேற்கொண்டனர்.

ஒவ்வொரு உணவுகளிலும் சிறந்த மருத்துவகுணங்களை உடையது என முன்னோர்கள் அறிந்து அதை உலகிற்கு உணர்த்தியும் உணர்ந்தும் அதனை உண்டு வாழ்ந்தனர் இயற்கையாகவும் அரோக்கியமாக உணவே மருந்து என வாழ்ந்தனர் கரும்புச்சாறு சிறந்த இயற்கை மருத்துவப் பொருளாகும் கரும்புச்சாற்றை கொண்டு வெல்லம் தயாரிக்கப்படுகிறது. வெல்லம் கட்டிடக்கலைக்கும் உணவுக்காகவும் மருத்தாகவும் பயன்படுத்தி உள்ளனர்.

நவநாகரீக காலத்திற்கு ஏற்றவாறு பழங்காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் வெவ்வேறு வடிவம் பெற்றுவிட்டன. உற்பத்தி செய்யப்படும் முறைகளும் பெரும் பகுதி நவீனத்திற்கு ஏற்றவாறு மாறிவிட்டன ஆனால் வெல்லம் தயாரிக்கும் தொழில் மட்டும் பலநூற்றாண்டுகள் கடந்தும் அதே பழங்கால முறைப்படி தயாரிக்கப்பட்டு வருகின்றது.

**முதல் நிலை**

முதன் முதலில் அடிமைகளை வைத்து கரும்புச்சாறு பிழிந்து எடுக்கப்பட்டது.

**இரண்டாம் நிலை**

டீசல் இயந்திரம் பயன்படுத்தப்பட்டது

**மூன்றாம் நிலை (தற்பொழுது)**

மின் மோட்டார்

இந்த மாற்றமே வளர்ச்சியாக தற்பொழுது கருத்தில் கொள்ளலாம்.

கரும்பு உற்பத்தி தொடங்கிய நாள் முதல் வெல்லம் தயாரிக்கும் தொழில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது பழங்காலம் முதல் தற்பொழுது வரை உற்பத்தியில் பயன்படுத்தப்படும் உற்பத்தி சார் புழங்கு பொருட்கள் இன்றுவரை தொடக்கத்தில் பயன்படுத்தியவைகளையே இன்றும் பயன்பாட்டில் உள்ளன.

**முன்னுரை**

பாரமத்தி வேலூர் வட்டாரத்தில் ஆற்று நீர்ப் பாசனமே அதிகம் காணப்படுகிறது. கரும்பு பணப்யிராக பயிரிடப்படுகிறது பெரும்பான்மையான பகுதிகளில உள்ளது.

இதனை மையமாகக் கொண்டு பலநூறு வெல்லம் தயாரிக்கும் ஆலைகள் உள்ளன. இப்பகுதியில் வெல்லம் மற்றும் அச்சுவெல்லம் தயாரிக்கத் துணைபுரியும் ஆலைகளில் உள்ள புழங்கு பொருட்கள் பற்றியும் அப்பொருட்களைப் பயன்படுத்தி வெல்லம் தயாரிக்கும் முறையினை விலக்குவதாகவும் இக்கட்டுரை அமைந்துள்ளது.

**புழங்கு பொருட்கள் பட்டியல்**

1. அடிமைகள் (தொடக்க காலம்)

டீசல் இயந்திரம் (இடைப்பட்ட காலம்)

மின்மோட்டார் (தற்காலம்)

2. கரும்பு அரவை இயந்திரம்

3. சல்லடை

4. பால்பம்பு

5. பொய பால் அண்டா (அ) தொட்டி

6. அடுப்பு

7. அடுப்புச் சன்னல்

8. புகைக்கூண்டு

9. கொப்பரை

10. ஓரவாரை

11. மட்டித்தட்டு

12 மட்டிப்பெட்டி

13. பாவேட்டி

14. எரிபொருளான கரும்புசக்கை

15. சாம்பல் தள்ளி (அ) வழிப்பான்

16. சக்கை தள்ளி

17. துணி

18. கூடை

19. அச்சுமரம்

20. சுரண்டிகள்

**டீசல் என்ஜின்**

இது டீசல் மூலமாக இயக்கப்படும் இதனால் டீசல் என்ஜின் என இதனை அழைக்கப்படுவார்.

இது இரண்டு சக்கரத்தை கொண்டும் மையப்பகுதி செவ்வக வடிவில் என்ஜின் அமைக்கப்பட்டிருக்கும்.

இதில் பொருத்தப்பட்டுள்ள இரண்டு உருண்டை வடிவில் உள்ள சக்கரத்தில் பெல்ட் பொருத்தி பெல்ட்டால் கிரசரை இயக்கப்படுகின்றன இதுவே அடிமைகளுக்கு அடுத்து பயன்படுத்தப்பட்ட முதல் பொருள்.

டீசல் என்ஜினில் சிறிய பெல்ட்டின் மூலம் பால்பம்பு இயக்கப்படுகின்றது.

**1. மின்மோட்டார்**

இது மின்சாரத்தால் இயக்கப்படுகின்றது. (மின்சாரம் மூன்று மின் முனை) பெல்ட்டால் கிரசரை இயக்கப்பயன்படுகின்றது.

ஒரு சக்கரம் மற்றும் சில உதிரிப்பாகங்களையும் கொண்டிருக்கும்.

ஒரு சக்கரத்தில் பெல்ட் இணைக்கப்பட்டிருக்கும் பெல்ட்டின் மற்றொரு முனை கிரசான் ஒரு சக்கரத்துடன் இணைக்கப்பட்டிருக்கும்.

மின் மோட்டாரில் சிறிய பெல்ட்டின் மூலம் பால்பம்பு இயக்கப்படுகிறது.

மின்மோட்டார் கொண்டு கிரசரை இயக்கம் அரசு மான்யமாக இதற்கு மின்சாரம் வழங்கப்படுகிறது.

**2. கரும்பு அரவை இயந்திரம் (கிரசா)**

கரும்பினை அரைத்துப் பாலினை (கரும்புச்சாறு) எடுக்க இவ்வியந்திரம் பயன்படுகின்றது. இதில் உருளை வடிவிலான ரோலா இருக்கும் இதில் பம்பு பல்சக்கரம் என பல பாகங்கள் உள்ளன. ரோலார் கரும்பை உள்வாங்கி (நசுக்கி ரோலாமுலமாக) பாலினை பிரித்த சக்கை தனியாக பால் தனியாக ( கரும்புச்சாறு ) வெளியேற்றப்படும்.

**சல்லடை**

வெளியேற்றப்படும் பால் சல்லடையில் (இரும்பு வடிவிலான சதுரமான ) விழுந்து சக்கைத் துரும்புக்கள் தங்கிவிடும் பின்பு பால் அண்டாவில் சேமித்த வைக்கப்பட்டு தேவைக்கு ஏற்ப பம்பு மூலமாக எடுத்து பயன்படுத்தப்படும்.

**3. பால் அண்டா (ட்ரம் அல்லது தொட்டி)**

பால் அண்டாவானது இரும்பால் செய்யப்பட்டுச் செவ்வக வடிவில் இருக்கும் இது அடுப்புக்கு அருகில் இருக்கும்.

இது தேவைக்கு ஏற்ப 5 அடி உயரமும் 6 அடி அகலமும் கொண்டு நான்கு கால்களின் துணைகொண்டு நிறுத்தப்பட்டிருக்கும் சில ஆலைகளில் தொட்டி சிமெண்டால் கட்டப்பட்டிருக்கும்.

கரும்புச்சசாறானது குழாய் மூலம் இழுக்கப்பட்டு பால் அண்டாவை வந்தடையும் பின் கொப்பரைக்கு குழாய்கள் மூலமாக மாற்றப்படும் தேவைக்க ஏற்ப.

**4. கொப்பரை (காய்ச்சும்)**

காய்ச்சும் கொப்பரை 2 அடி உயரமும் தேவைக்கு ஏற்ப 5 முதல் 8 வரையிலான

அடி விட்டமும் கொண்ட வட்டவடிவமானவை இதன் அமைப்பு மேல்பகுதி அகன்றும் கீழ்பகுதி சற்று

குறுகிகாணப்படும் இந்த கொப்பரை இரும்புத்தகட்டின் மூலம் உருவாக்கப்படுகிறது. இதனை அடுப்பின் மேல் வைத்து பால் (கரும்புச்சாறு) காய்ச்சப்படும்.

**தேய்க்கும் கொப்பரை**

தேய்க்கும் கொப்பரை 2 அடி உயரமும் தேவைக்கு ஏற்ப 5 முதல் 8 அடி எனவிட்டமும் கொண்ட சதுரவடிவானவை மேல்பகுதி அகன்றும் கீழ்ப்பகுதி சற்று குறுகிகாணப்படும்.

இந்த கொப்பரை மரத்தின் மூலமாக உருவாக்கப்பட்டது இது அடுப்பின் கீழ்சற்று இடைவெளியில் 2 அடி தாழ்வாக வைக்கப்படும்.

காய்ச்சும் கொப்பரையில் தயாராகும் பால் ( பாகுவாக மாற்றி) ஊற்றித் தேய்க்கும் கொப்பரைக்கு மற்றப்பட்டு பின்பு அதனை உருண்டை வெல்லம் அல்லது அச்சு வெல்லமாக மாற்றப்படும்.

**அடுப்பு**

கொப்பரை விட்டத்திற்கு ஏற்ப அகலமும் ஆழம் 4 அடி முதல் தேவைக்கு ஏற்ப அமைக்கப்பட்டிருக்கும் அடுப்பு வட்டமாக அமைக்கப்பட்டிருக்கும் அடுப்பு வட்டமாக அமைக்கப்பட்டிருக்கும்.

**புகைக்கூண்டு**

வட்ட வடிவாக அதன் உயரம் 15 அடி முதல் அவாகளுடைய நிலைக்கு ஏற்ப உயரப்படுத்தி உள்ளனர். அதன் விட்டம் 2.5 அடி முதல் 3 அடி வரை இருக்கும்.

**சக்கை**

கிரசர் மூலம் கரும்பு பிழிந்து வெளவரும் கரும்பு சக்கை வெளியில் காயவைத்து பின்பு எரிபொருளாக பயன்படுத்தப்படும்.

**ஒரவாரை**

இது எழு அடி உயரமும் ஒரு அடி நிளமும் ½ அடி அகலமாக இருக்கும் இதனை வெல்லம் உருவாக கரும்புச்சாற்றை (பாலை) கிளரி கொப்பரையில் ஒட்டிக்கொள்ளமாறு வெல்லப்பாகனை சுரண்டவுலம் வெளியேற்றவும் இதைப்பயன்படுத்துகிறார்கள்.

**மட்டித்தட்டு**

கரும்புச்சாறு வெல்லமாக மாற்றும்பொழுது கரும்புச்சாற்றில் உள்ள அழுக்கு (மட்டி) எடுத்து மட்டிப்பெட்டிக்குள் போடப்படுகிறது. மட்டித்தட்டு சுத்தமான வெல்லமாக உருவாக அழுக்கு என்ற மட்டி நீக்கப் பயன்படுத்தப்படுகிறது.

**மட்டிப்பெட்டி (கரும்புச்சாறு அமுக்கவருவதை சேகாக்கும் தொட்டி (அ) பெட்டி**

மட்டிப்பெட்டி அடுப்பிற்கு மேல் கொப்பரைக்க அருகில் பாவு தொட்டிக்கு அதிராக கொப்பரையை அடுத்த வைக்கப்படும். கொப்பரைக்கு ஏற்ப மட்டிப்பெட்டி அளவு இருக்கும் தோரயமாக 2அடி உயரமாகவும் 4 அடி அகலமாகவும் அடிப்பகுதியில் உயரப்பத்த இரும்பால் நாற்காலிபோல் நான்கு கால்கள் அமைக்கப்பட்டிருக்கும் பெட்டியின் இரு பகுதியிலும் வட்ட வடிவமான இரும்பு கொக்கி பயன்படுத்தப்படுகிறது. இதனை கொண்டு எளிதில் மற்றப்பகுதிகளுக்கு எடுத்துச் செல்லமுடியும்.

**சக்கை தள்ளி**

கரும்பில் உள்ள சாறுதனியாகவும் சக்கை தனியாகவும் பிரித்த பின்னர் சக்கை மட்டும் எரிபொருளாக பயன்படுத்தப்படுகிறது. இது தூளாக இருக்கும் எனவே இதனை அடுப்பிற்குள் தள்ள சக்கை தள்ளி பயன்படுத்தப்படுகிறது. எரித்த பின்பு சாம்பலை வெளியேற்றவும் பயன்படுத்தப்படுகிறது. எரிபொருளான சக்கையை உலர்ந்த காயவைக்க பயன்படுத்தப்படுகிறது. சக்கை தள்ளி அமைப்பு Y வடிவமாக இருக்கும்.

**அச்சு மரம்**

இரண்டு அடி அகலமும் 15 முதல் 20 அடிவரை நீளமும் கொண்டு துளைகளை பலகொண்டு கரும்புச்சாறு வெல்லபாகுவாக மாறியபின்பு துளையில் நிரப்பி உருளையை கொண்டு தேய்த்து பின்பு திருப்பிக் கொட்டப்படுகிறது.

**உருளை**

½ அடி விட்டமும் 1½ அடி (அ) 2அடி அகலமும் கொண்டதாக இருக்கும் துளைக்குள் சரியாக நிரம்ப அழுத்தப் பயன்படுத்தப்படுகிறது.

**துணி**

1 அடி அகலமும் 1 அடி நிளமும் கொண்ட வெள்ளைத்துணி உருண்டை வெல்லம் உருட்டி வைக்கபாவு தொட்டிக்குள் பயன்படுத்தப்படும்

**சிப்பம்**

வெல்லம் இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகிறது. ஒன்று அச்சுவெல்லம் மற்றொன்று குண்டு வெல்லமாக தயாரிக்கப்படுகிறது. இதனை கிலோவாக நிரப்பி மூட்டையாக தைத்து விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

**ஆலைத்தளம்**

ஆலையின் தளம் தோராயமாக ½ ஏக்கர் முதல் 1வரை அல்லது தேவைக்கு ஏற்ப ஆலையின் தளம் அமைக்கப்படும். கரும்பு அரவைக்கு கொண்டு வருவதற்கு முன்பு சேமித்து வைக்கவும் கரும்பை சாறு பிழிந்து கரும்பு சக்கையை உலர்த்தி எரிபொருளாக காயவைத்து சேமிக்கவும் அடுப்பு மற்றும் புகைபோக்கி கிரஷர் வெல்லம் சேமித்து வைக்கும் கிடங்கு இவை அனைத்தும் அலைத்தளத்திற்குள் அமையும்.

# ஆ. மாதவன் சிறுகதைகளில் எதார்த்தவாதச் சிந்தனைகள்

*சு. சுபாஷினி, *முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்), என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி – 642 001.*

தமிழ் இலக்கிய உலகம் சங்க காலத்திலிருந்து இன்று வரை பற்பல மாற்றங்களைப் பெற்று வந்துள்ளது. சங்க காலப் புலவனின் பாடுபொருள் காதலும், வீரமுமாக இருந்து வந்துள்ளமையைத் தனிநிலைச் செய்யுள்களில் மூலம் அறிய முடிகிறது. தொடர்ந்து வந்த காலங்களில் புதிய இலக்கிய வகையான காப்பியங்கள் தோன்றின. இவை தொடர்நிலைச் செய்யுள் அமைப்பைக் கொண்டவை.

தண்டியாசிரியர் காவியம் என்பது இப்படித்தான் இருக்கவேண்டுமென்று இலக்கணம் வகுத்துள்ளார். அதாவது, காவியத்தின் தொடக்கத்தில் வாழ்த்து அல்லது வணக்கம் அமைய வேண்டும். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருள்களையும் விளக்க வேண்டும். பல உட்பிரிவுகள் அமைதல் வேண்டும். எண்வகைச் சுவைகளும் பயின்று வரவேண்டும், என்று இலக்கணம் வகுத்துள்ளார்.

தமிழ் இலக்கியங்கள் காலந்தோறும் வடிவங்களில் மட்டுமின்றிக் கருத்தாக்கங்களிலும் பல்வேறு மாற்றங்களை அடைந்து வந்துள்ளன.

ஐரோப்பியர் வருகையால் ஏற்பட்ட அரசியல், சமூக மாற்றங்களைக் கொண்டு இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியங்கள் தோன்றின. அவை சிறுகதை, புதினம், புதுக்கவிதை, கட்டுரை எனப் புதிய வடிவங்களில் கிளைத்தெழுந்தன. இப்புதிய தமிழ் இலக்கிய வடிவங்கள் பெரும்பாலும் நடப்பியல் உண்மைகளையே கருத்தாக்கங்களாகக் கொண்டு விளங்குகின்றன. மேற்கண்ட இலக்கிய வடிவங்களில் குறிப்பிடத்தக்கனவாகச் சிறுகதைகள் விளங்குகின்றன.

சிறுகதை என்பது இதுதான் என்று அருதியிட்டு விளக்குவது கடினமான செயல்தான். இது இப்படித்தான் என்று வரையறை செய்தால் சிறுகதைகள் எல்லாம் அந்த இலக்கணத்திற்குள் அடங்கும் என்றும் கூறிவிட இயலாது. எனவேதான் சிறுகதையை அளிப்பதில் பொருளில்லை என்கின்றனர்.

தமிழ்ச்சிறுகதை உலகின் தந்தை என்று வ.வெ.சு.ஐயர் அவர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டார். அவர் காலத்துக்கு முன்பே சிறிய உருவத்திலான கதைகள் எழுதப்பட்டு வந்தன. 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வீரமாமுனிவர் அக்காலத்து மடாதிபதிகளின் இழிநிலையை எடுத்துக்காட்டும் வகையில் பரமார்த்தகுரு கதை என்ற அங்கத நூலை எழுதினார்.

இவ்வாறாக மனித மனத்தை ஈர்க்கும் சக்தி கதை வடிவத்துக்கு உண்டு. இன்றைய இயந்திர இயக்க வாழ்க்கையில் நீண்ட கதைகளை விடச் சிறிய கதைகளே மக்களிடம் முதலிடம் பெறுகின்றன. மக்கள் சமுதாயத்தின் நடப்பியல் சிக்கல்களைச் செப்பனிடும் சக்தி கதைகளுக்கு உண்டு. அவ்வகையில் ஆ.மாதவன் கதைகளில் உள்ள எதார்த்தவாத சிந்தனைகள் பற்றி இங்கு சற்று விரிவாகக் காணலாம்.

தமிழ்ச் சிறுகதை உலகில் தமக்கென ஒரு முத்திரை பதித்து இன்னும் எழுதிக் கொண்டிருப்பவர் ஆ.மாதவன் அவர்கள். இவர் அறுபதுகளின் ஆரம்பத்தில் தமிழ்ப்படைப்புலகில் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டவர். தமிழகத்துத் தென்கோடி நாஞ்சில் வட்டத்திலிருந்து குடிபெயர்ந்து கேரளத் தலைநகரமான திருவனந்தபுரத்தை வாழும் இடமாகக்

கொண்டவர். திருவனந்தபுரத்தின் முக்கிய வியாபார மையமான சாலைக் கடைத்தெருவில் செயல்படும் முதலாளிகள் முதல் தொழிலாளிகள் வரையிலான பலதரப்பட்ட மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளை அப்படியே பதிவு செய்து இவர் படைத்த கடைத்தெருக் கதைகள் தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் ஒரு மைல்கள் என்று கூறலாம்.

சாதாரண மக்களின் வாழ்க்கை. வாழ்வியல் நம்பிக்கை, உலகியல் நிகழ்வுகள் யாவும் எதார்த்த முனைப்போடு தம் படைப்புகளில் காட்டியிருப்பதைச் சுட்டிக்காட்டி அவரை (ஆ.மாதவன்) ஓர் ஏதார்த்தவாதியாக அறிமுகம் செய்யலாம். தம் கதைகளில் வரைந்து காட்டும் கதைக்களமும் பின்புலமும் இவரது கதைக்கு நம்பகத்தன்மையைக் கொடுக்கிறது. அத்தகைய எதார்த்தவாத சிந்தனைகள் நாம் இங்கு காண்பது அவசியமாகிறது எனலாம்.

## எதார்த்தம்

எதார்த்தம் என்று இன்று வழங்கப்படும் சொல் "யதார்த்தம்" என்று வழங்கப்பட்டு வந்திருக்கிறது உள்ளது உள்ளபடி என்ற பொருளிலேயே அது வழக்கில் இருந்திருக்கிறது.

வாழ்க்கையை அப்படியே உள்ளதை உள்ளபடியே படம் பிடித்துக் காட்டுவது எதார்த்த நெறியாகாது. இதனை இயல்புநெறி *Natuyalism* என்று கூறுவர். "யதார்த்த நெறி என்பது இதற்கும் ஒருபடி மேலே சென்று சமுதாயப் பிரச்சனைகளையும் முரண்பாடுகளையும் அணுகி ஆராய்ந்து எதிர்காலச் சமுதாய வளாச்சியை மனதில் கொண்டு இலக்கியம் படைப்பதாகும்."

உண்மையைக் கூறல் என்ற நிலையில் தேவையானவற்றை மட்டும் தோந்தெடுத்துக் கூறும் திறன் இலக்கிய ஆசிரியனுக்கு வேண்டும். அவன் படைப்பில் எதார்த்தம் இழையோடிக் கருத்துகளைப் பரப்ப வேண்டும்.

**"யதார்த்தம் என்பது உண்மையைத் தேடிக் காணும் நெறி உள்ளதை உள்ளவாறே படம்பிடித்து விடின் உண்மை துலங்கும் என்பதில்லை. இயற்கையில் முக்கியமானதும் முக்கியமற்றதும் பயனுள்ளதும், பயனற்றதும், செத்ததும், உயிருள்ளதும் கலந்து விரவிக் கிடக்கின்றன. இவற்றை நுணுக்கமாக வருணித்து விடுவதால் ஒரு பொருளின் உள்ளியல்பு அல்லது சிறப்பியல்பு தெளவாகாது தள்ள வேண்டியதைத் தள்ளிக் கொள்ள வேண்டியதைக் கொள்ள வேண்டும். மேலோட்டமான நுணுக்க விவரங்களையும் ஊடுருவி உள்ளியல் பினைக் கண்டறிதல் வேண்டும். இது எதார்த்த நெறியாகும்"** என்பார் சாலை இளந்திரையன்

எதார்த்த ஆசிரியன் சமுதாயத்தின் இயக்கம் பற்றி நன்கு தெரிந்து கொண்டவனாக இருத்தல் வேண்டும். உண்மை மாந்தர்கள் சமுதாயத்தில் எந்தத் தன்மையோடு நடத்தப்படுகிறார்கள் என்பதனைப் பரந்த வெளியாகப் பார்த்தவனாக, பார்ப்பவனாக இருக்க வேண்டும். இவ் எதார்த்தத்தை உள்வாங்கிக் கொண்ட ஆ.மாதவன் தன்னுடைய கதைகளில் எதார்த்தத்தை வெளிப்படுத்தி தனித்துவம் பெற்றுள்ளார். இவ்வகையான எதார்த்தங்களை கொண்ட சிறுகதைகளில் ஒரு சிலவற்றை மட்டும் இங்கு காணலாம்.

## தம்பதியான் நாடகம்

ஆசிரியர், ஒரே நேரத்தில் வித்தியாசமான முறையில் நாடகமாடும் தம்பதியான் மனங்களைக் காட்டுகிறார். லலிதாவுக்கு கணவனைவிட, காரோட்டிதான் தேவைப்படுகிறான். அவள் கணவனுக்கோ ஒரு மாதவி தேவைப்படுகிறாள். ஆனால் இருவரும் பொய்யான அன்பையும் பாசத்தையும் பொழிந்து தங்கள் மோகத்தை மறைக்கிறார்கள். சமுதாயத்தில் இப்படிப்பட்டவர்களும் இருக்கிறார்கள் என்பதை தெளிவாகவும், எதார்த்தத்தை தத்ரூபமாகக் காட்டியுள்ளார்.

"அப்பாடா ஒரு வழியாக ரயிலும் புறப்பட்டது. உங்கள் மனைவியின் தொல்லையும் ஒழிந்தது. இனி ரெண்டு வருசம் நம் காதலுக்கு எந்த வித தடையுமில்லை" என்று சொல்லி அவன் கைகளை எடுத்து தன் மடி மீது வைத்துக் கொண்டாள்.

அதே நேரத்தில் ரயில் நிலையத்தை விட்டு வெளி வந்த அவளையும் சுமந்து கொண்டு புறப்பட்ட அந்த சிவப்பு ஹெரால்ட் காரை ஓட்டிக்கொண்டிருந்தவனின் அருகிலேயே அமா்ந்திருந்த அவள் தோலை மெதுவாகத் தொட்டு என்ன லல்லி ஒரு வழியாக உன் பட்டதாரிக் கணவனையும் ஏற்றிக் கொண்ட ரயில் புறப்பட்டதோ இல்லையோ, அப்பா எங்கே நீ நடித்த நடிப்பிற்கு அவன் டிக்கட்டை கான்சல் பண்ணிவிட்டு இறங்கி வந்து விடப் போகிறானோ என்று நினைத்தேன். நல்ல நாடகம் ஆடினே போ.. (ஆ.மாதவன்)

இக்கருத்தினை ஒத்தவாரு ஆண்டாள் பிரியதாஷினி அவர்கள் மறைமுகத் தொடர்பு குடும்பச் சிதைவுக்கு வழிவகுத்தனை,

**உன்னைப் போல**

**அழகில்லை என் மனைவி**

**அழுக்காயிருக்கிறாள்**

**புலம்பல் புராணம்**

**அழுக்காக்கியது**

**அவள் தானே என்று தன்னுடைய**

**(மன்மத எந்திரம் ப-28)**

அழகாக கூறியுள்ளார்.

ஆண், பெண் இருவான் மனநிலையும் சரிவர ஒத்துப் போகாததால் சமுதாயத்தில் ஏற்படும் இழிநிலையினை எதார்த்தமாக வெளப்படுத்தியுள்ளார்.

**கடமை தவறுதல்**

பெண்களைக் காணுமிடமெல்லாம் ஆண்கள் உற்றுப் பார்த்தலை (*Male Gaze*) சாதாரணமாகக் காணமுடிகிறது. கசாப்புக் கடைக்காரன். தான் வாங்கப் போகும் ஆட்டையோ, மாட்டையோ பார்ப்பது போன்ற பார்வை. இத்தகைய மேற்ச்சார் பார்வை ஆணின் ஆதிக்கத்தையும் அவர்கட்குப் பெண் மேலுள்ள அவர்வையும் காட்டுகிறது. ஆண் தன் பாலுணர்வுத் தாபத்தை தீர்க்கும் ஒரு பொருளாகவே பெண்ணைப் பார்க்கிறான் என்கிறார் செ.கணேசலிங்கன். (பெண்ணடிமை தீர ப.90) பெண்ணின் மீது கொண்ட மோகத்தின் காரணமாக தன் கடமையை தவறிய பூசாரியைப் பற்றி ஆ. மாதவன் கூறியது யாதெனில்,

பூசாரி என்பதனால் அவருக்குக் கோயிலில் தனிமரியாதை உண்டு. அதைக் காத்துக் கொள்ளும் பொருட்டு நேர்மையாகவும், மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாகவும் விளங்க வேண்டிய பூசாரி, திருமணமான பெண்ணின் மீது மோகம் கொண்டு வழிதவறியமைக்கு அப்பெண்ணே அவனுக்கு தண்டனையை புகட்டினாள்.

திடீரென்று, செண்டை வாத்தியங்களின் தமிலோகத்தையும் மீறி கார்த்தியாயின் உக்ர தேவியாக அலறிக் கொண்டு வெடிக்கிறாள்...... "கார்த்தியாயினியின் மேல் படர்ந்த தெய்வ அருள், ஆக்ரோஷக் கட்டளையாக அலறுகிறது.... உம்..... துரத்துங்கள்...... அவன் கோயில் தீண்டக்கூடாத பாபி. அவன் புழு அரித்த கூடு.... விரட்டிவிடு அவனை - நாட்டு எல்லையை விட்டே விரட்டிவிடு...." (ஆ.மாதவன் சிறுகதைகள் ப.46) இவ்வாறாக, பெண்ணின் மீது கொண்ட மோகத்தினால் தன்னுடைய புனிதத்தன்மையை இழந்த பூசாரியின் வாழ்க்கையைத் தத்ரூபமாக் எதார்த்தம் கலந்து சித்தாத்துள்ளார்.

**கவனக்குறைவும் அலட்சியமும்**

ஒரு குடும்பத்தலைவன் போதைப் பழக்கத்திற்கு ஆளானால் அக்குடும்பத்தின் நிலை மோசமானதாக மாறிவிடும். குடும்பத்திற்குத் தேவையான எதையும் வாங்க இயலாமலும், எதிர்காலத்திற்காக எதையும் சேமிக்க இயலாமலும் போவதோடு, சமுதாயத்தில் அவமானமே மிஞ்சும்.

அன்றாடம் ஏதேனும் தொழில் செய்து தன் ஒரே மகனையும், மனைவியையும் காப்பாற்றும் பொறுப்பு அவனுடையது. ஆனால் ஒரு குடிகாரனின் மனம் எப்படிப்பட்டது? குடிகாரன், குடிப்பதற்கு எதையும் செய்யத் தயாராயிருப்பான் என்பதை, ".....பெற்ற பிள்ளே செத்துக் கெடந்தா மூக்கு முட்டக் குடிச்சிக்கிட்டு வந்து நிக்கக் கூடிய உங்களே எனக்குத் தொயாதா" "டேய் மக்களே பழனிச்சாமி. உன் அப்பன் உன்னையும் வித்துக்குடிச்சிட்டாருடா......." (ஆ.மாதவன் சிறுகதைகள் ப.364) என்ற பாஞ்சாலியின் கூற்று புலப்படுகிறது. மேலும் குடிகாரனும் சொறிநாயும் சமம் என்னும் நாட்டுப்புறக் கூற்றை உறுதி செய்வதாகும் உள்ளது. தன் ஒரே மகன் இறந்த போது ஏற்படும் வருத்தம் சாதாரணமானதல்ல. ஆனால் குடிப்பழக்கம் அதையெல்லாம் மறந்துவிட்டுத் தன்னுடைய தேவை ஒன்றையே பூர்த்தி செய்யத் தூண்டுகிறது. இவ்வாறு, போதையின் அடிமைத் தனத்தை எதார்த்தமாகவும் ஆழமாகவும் கூறியுள்ளார்.

**தேவையான துணை**

இன்றைய சமூகத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பல்வேறு சிக்கல்களுள் ஒன்று முதிர்கன்னியாக இருக்கும் நிலை. வரதட்சனை, பொருளாதார நெருக்கடி, பிறப்பியம் போன்றவற்றால் சில பெண்களின் திருமணம் தள்ளிக்கொண்டே போகிறது.

"பால்ய விவாகத்திற்குப் பதிலாக, வயது முதிர்ந்த பெண்களுக்குக் கலியாணமாகவில்லையே என்ற பிரச்சனை இப்பொழுது கிளம்புகிறது" (காலப்போக்கில் மாறிவரும் ஆண், பெண் உறவுமுறைகள் (கட்டுரை) வாழ்வியல் களஞ்சியம் தொ.8 ப-10) என்பார் ந.சிதம்பர சுப்பிரமணியன்.

புவனா மனோதத்துவ ஆசிரியை. ராமன் புவனாவின் மாணவன். மனோதத்துவ ஆசிரியையாக

இருந்த போது புவனாவின் மனம் மாணவன் பக்கம் செல்கிறது. ஆண்துணை என்ற எண்ணமே அப்போது அவள் மனதில் நிரம்பியிருக்கிறது. ராமனுக்குத் திருமணம் நிச்சயமாயிருக்கிறது என்பதை அறிந்தவுடனே அவள் வாழ்வின் எதார்த்தமான நிலையைச் சிந்தித்துச் செயல்படுகிறாள்.

புவனா, உன்னை நான் மணந்து கொண்டது, எனது சுகத்திற்காக, எனது உற்றம் உறவிற்கெல்லாம் இது பிடிக்கத்தான் இல்லை. நாளைவரப்போகிறான் பார் என் மகன் ராமன். அவனுக்கும் இதில் வெறுப்புதான்.

ராமா உன்னை நான் வென்று விட்டேனடா. நான் உன்னை முந்திக்கொண்டு, உன்னை பெற்றவளின் அடுத்த பிரதிநிதியாக வந்து நிற்கிறேன். வா வந்து தாயே என்று என்னை வணங்கு. அப்பா மேல் கோபம் வேண்டாம். ஏதோ நம்மையும் மிஞ்சி காரியம் நடந்து விட்டது (ஆ.மாதவன் சிறுகதைகள் ப.39)

இவ்வாறு, முதிர்கன்னியின் நிலையினையும், அவளின் மனோபாவத்தையும் மிகவும் எதார்த்தமான நிலையில் தெளிவாகவும் அதனை வெளிப்படுத்தியுள்ளார்.

சிறுகதை ஆசிரியர் வாழும் உலகம் கற்பனை உலகம் அல்ல. கண்முன்னே காணும் உண்மை உலகம். அது அந்த வாழ்க்கையில் மக்கள் உண்மையோடு சம்மந்தப்பட்டவர்கள் அவர்கள் வாழ்க்கையைச் சித்தரிக்க ஏணிப்படி தேவையில்லை. இத்தகைய சமுதாயத்தைச் சித்தரிப்பதற்கு ஆசிரியர் ஓர் எதார்த்தவாதியாகவும், ஆழ்ந்த சிந்தனை உடையவராகவும் தான் இருக்க வேண்டுமென்பது மிக முக்கியம். அத்தகைய உலகைக் கலை நுணுக்கமாக உள்ளது உள்ளபடியே நம் கண்முன் படம்பிடித்து காட்டியுள்ளார் ஆசிரியர் ஆ.மாதவன் அவர்கள் ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதற்கு ஏற்றவாறு இக்கதையின் மூலம் அவருடைய எதார்த்தத்தை அனைவரும் அறிய இயலுகிறது.

# சங்கப் புற இலக்கியங்களில் மகளிர் கலைகள்

*ம. ஆனந்தவள்ளி, *முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், அரசு மகளிர் கலைக்கல்லூரி, கிருஷ்ணகிரி.*

**முன்னுரை**

இலக்கியம் என்பது மனிதனின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகும். இதில் சங்க இலக்கியங்கள் சமூக அமைப்பினைக் காட்டும் பெட்டகங்களாக திகழ்கின்றன. சங்க இலக்கியங்கள் என்பது பாட்டும் தொகையுமாக காணப்படுகிறது. இவ்வாறு அமைந்துள்ள இவ்விலக்கியத்தின் பாடுபொருட்களாக அமையும் பொருட்களில் பெண்களுக்கு மிக முக்கியமான பங்கு உண்டு. அக்கால இலக்கியங்களிலிருந்து, இக்கால இலக்கியங்கள் வரை பெண்களைப் பற்றி அமையாத இலக்கியங்களே இல்லை எனலாம். அவ்வகையில் சங்கப்புற இலக்கியங்களில் மகளிரின் கலைச் செயல்பாடுகளை குறிப்பிடும் வகையில் இவ்வாய்வு கட்டுரை அமைகிறது.

'கலை' என்பது மனிதனின் உள்ளத்தை தன் வயப்படுத்தி ஆற்றலை வெளிப்படுத்துவதாகும். கலை என்ற சொல் முதலில் வழங்கிய போது செயல் திறமையைக் காட்டுவதும், அழகு ஏற்படும் வகையில் செய்வதும், சுவை பயக்க வல்லதும் பற்பல காரியங்களுக்கு உதவுவதுமான அறிவையும் ஆற்றலையும் குறித்தது. ஆகவே கலையில் செயல், பயன், திறமை, அழகு, சுவை என்ற அம்சங்கள் உள்ளனவென்று கலைக்களஞ்சியம் கூறுகிறது. கலை என்பது அளவும் பொருத்தமும் தன்னுள் அடக்கி நிற்பது, அதே சமயத்தில் உள்ளத்திற்கு உவகை ஊட்டுவது: உள்ளத்தைத் தன்பால் ஈர்ப்பது, என்று இராசமாணிக்கனார் கூறியுள்ளார். கலை என்னும் சொல் 'கல்' என்னும் ஏவற் பகுதியிலிருந்து தோன்றியதாகும். கல்வி என்னும் சொல்லுக்கு இது முதனிலையாகும்.

**கலை– சொற்பொருள் விளக்கம்**

கலை என்பதற்கு ஆண்மான் வகை, ஆண்குரங்கு, ஆடை, சேணம், பகுதி, ஒளி, நுட்பமான கால அளவு, எழுத்து, நூல், மொழி, உடல், பெண்களின் இடையணி, காப்பூரவகை என்றெல்லாம் தமிழ் அகராதிகளில் பொருள் கூறப்பட்டுள்ளன. வடமொழியில் காம சூத்திரத்தை எழுதிய வாதஸ்யாயனார் அறுபத்து நான்கு கலைகளின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார். புத்தர் வரலாற்றைக் கூறும் 'லலித விஸ்தரம்' என்னும் நூலிலும், சமண நூல்களிலும், இந்து நூல்களிலும் அறுபத்து நான்கு கலைகளின் பெயர்கள் காணப்படுகின்றன. சமணர் நூல்களில் ஆடவர் கலைகள் எழுபத்திரண்டு என்றும், பெண்களுக்குரிய கலைகள் அறுபத்து நான்கு என்றும் கூறப்பட்டுள்ளன. அவை ஆடல், பாடல், இசைக்கருவிகள், கவிதை, பூ வேலைகள், உடைஅலங்காரம், காதணிகள், வாசனைப் பொருட்கள், நகைகள், உதட்டிற்கு வண்ணம் தீட்டுவது, முகம் முதலிய உறுப்புகளுக்கு ஏற்ப மண–நிறப் பொடிகளைப் பயன்படுத்துதல், ஆண்களும், பெண்களும் சேர்ந்து நீராடும் பொழுது விளையாட்டாக நீரில் மிருதங்கள் போல் ஒலிகளைக் கிளப்பும் கலைகள் என்றவாறு குறிப்பிடப்பட்டுள்ளமை கலைக் களஞ்சியம் வழி அறியப்பட்டது. இவ்வகையில் சங்கப்புற நூல்களில் இடம் பெற்றுள்ள மகளிர்களும், ஆடை ஆபரணங்கள், விளையாட்டு, ஆடல், பாடல் போன்ற பல கலைகளில் தங்களை ஈடுபடுத்தியுள்ளனர். மகளிர் பாவை விளையாட்டு, நீர்விளையாட்டு, கழங்காடுதல், ஓரை விளையாட்டு, வண்டல் இழைத்தாடுதல், எண்ணி விளையாடுதல் போன்ற விளையாட்டுளிலும், பூப்பறித்தல், நீராடுதல், கூத்தாடுதல், ஓசை எழுப்புதல் போன்ற கலைச்செயல்பாடுகளிலும் ஈடுபட்டுள்ளனர் என்பது தெரிகிறது.

**விளையாட்டு**

விளையாட்டு என்பது சிறுவர் முதல் பெரியவர்கள் வரை மேற்கொள்ளும் ஒரு கலையாகும். பொழுது போக்கிற்காகவும். திறமையை வெளிப்படுத்தும் விதமாகவும் நிகழ்த்தப்படும், விதிமுறைகளை உடைய செயல்பாடு, உண்மை என்று எடுத்துக் கொள்ள வேண்டாதது, வேடிக்கையாகச் செய்யப்படுவது என்றெல்லாம் பொருள் கூறியுள்ளது க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி. அசதியாடல், அம்புலி அழைத்தல், அலவன் ஆட்டல், உலாவல்,ஊசல், எண்ணி விளையாடல், சுண்ண விளையாட்டு, சூது, நீர் விளையாட்டு, பந்தாடுதல், பறவைகளைக் காணலும் அவற்றின் செயல்கள்போல் செய்தல், பறவை விலங்குகளுடன் விளையாடல் போன்றவை இருபாலருக்குரிய விளையாட்டுகள் என்றும், பெண்பாலருக்கு மட்டும் உரிய விளையாட்டுக்களாக எதிரொலி கேட்டல், கண் புதைத்து ஒளிந்தாடல், கவன், கழங்கு, குரவை, சிறுசோறு, சிற்றில் செய்தல், செடி–கொடி வளர்ப்பு, பறவை வளர்ப்பு, விலங்கு வளர்ப்பு, பாவை விளையாட்டு, பிசி–நொடி விளையாட்டு, புள் ஒட்டல், மணற்குவியலில் மறைந்தாடல், மலர் கொய்தலும் மாலை தொடுத்தலும், வள்ளைப்பாட்டு போன்றவை என்றும் சங்க இலக்கிய விளையாட்டுக் களஞ்சியத்தில் முனைவர் சு. சிவகாமசுந்தர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

**கழங்காடுதல்**

கிழங்கு என்பதற்கு கழற்சிக்காய, கழற்சி விளையாட்டு, வெளியாட்டு, சூது, வேலனாடல் என்றும், கழங்காடுதல் என்பதற்கு பெண்கள் ஆடும் கழற்சிக்காய் ஆட்டம் என்றும் அகராதியில் பொருள் கூறப்பட்டுள்ளன. இவ்வகையில் பெரும்பாணாற்றுபடையில் மகளிர் முத்துப்போன்று வார்ந்த மணலிடத்தே பொன்னாலான கழலை ஏந்தி ஆடுவதை,

**“முத்து வார்மணல் பொற்கழங்கு ஆடும்”**

**(பெரும்–335)**

என்ற வாயும், சிலம்பும் வளையல்களும் அணிந்த மகளிர், பொருநையாற்று மணல் மேட்டில் பொன்னாலாகிய கழற்சிக் காய்களைக் கொண்டு வீசி விளையாடுவது,

**செறி அரிச் சிலம்பின், குறுந்தொடி மகளிர்**

**பொரும் செய் கழங்கின் தெற்றி ஆடும்**

**(புறம் 36 3–4)**

இப்புறநானூற்று வரிகளும், ஒளி பொருந்திய நெற்றியினையுடைய மகளிர் கழற்சிக் காயொடு முல்லை நிலமெங்கும் திரிந்து கொண்டிருப்பதை,

**ஒண் நுதல் மகளிர் கழலொடு மறுகும்**

**(பதிற்று 30 வரி –28)**

இப்பதிற்றுப்பத்து வரிகளும் தெரிவிக்கின்றன. இதனால் பொன் காய்களைக் கொண்டு சங்கப்புற மகளிர் விளையாடியுள்ளதும், காய்களைக் கையில் கொண்டு திரிந்தமையும் அறியப்பட்டது.

**பாவை விளையாட்டு**

பாவை விளையாட்டு என்பது அழகிய உருவம் கொண்ட பொம்மையை வைத்தாடும் விளையாட்டாகும். இவ்விளையாட்டை மென்மையான தோள்களைக் கொண்ட பெண்கள், பாவையைச் செறிந்த மணலில் வைத்து விளையாடி பாதுகாத்துள்ளனா. இதை

**“தெற்றிப் பாவை திணி மணல் அயரும்**

**மென் தோள் மகளிர் நன்று புரப்ப”**

**(புறம் 283 வா 12–13)**

என்னும் புறநானூற்று வரிகள் குறிப்பிடுகின்றன.

**ஓரை விளையாட்டு**

ஓரை என்றால் மாதர் கூட்டம், மகளிர் விளையாட்டு, விளையாடிடம். குரவை, இராசு, ஒரு முகூர்த்தம், நேரம், சித்திரான்னம், கூகை, இரண்டரை நாழிகைப் பொழுது, அணிகலன் என்றும், ஓரைப்பாவை என்றால் மகளிர் விளையாட்டுப் பாவை என்றும், ஓரையயாதல் என்றால் ஓரைப்பாவையை வைத்துக்கொண்டு மகளிர் விளையாடுதல் என்றும் தமிழ் அகராதியின் பொருள் தந்துள்ளது. இவ்வகையில் மெல்லிய வளையணிந்த மகளிர் ஓரை விளையாட்டு விளையுள்ளதை,

**“ஓரை ஆயத்து ஒண் தொடி மகளிர்”**

**(புறம் 176 வா–1)**

இவ்வரி தெரிவிக்கிறது.

**மணல் விளையாட்டு**

மணலைக் கொண்டு அழகிய உருவம் செய்து விளையாடும் விளையாட்டு மணல் விளையாட்டாகும். இத்தகைய விளையாட்டில் சங்கப்புறப் பெண்கள் ஈடுபட்டுள்ளனர். துய அணிகலன்களையுடைய பேதைப்பெண்கள் வண்டல் மண்ணால் இழைத்த பாவைக்கு மலரைச் சூட்டி பின் பொருநையாற்று நீரில் விளையாடுவது,

**“அரி மயிர்த் திரள் முன்கை,**

**வால் இழை, மட மங்கையர்**

**வரி மணல் புனை பாவைக்குக்**

**குலவுச் சினைப் பூக் கொய்து**

**பொருநைப் புனல் பாயும்,"**

**(புறம் -11 வா-1-5)**

இவ்வரிகளினாலும், மாடத்தில் வாழும் ஒளியுடைய வளையணிந்த மகளிர், முற்றிய நீண்ட சிப்பியில் முத்துப்போன்ற, வெண்மையான ஒழுங்குபட்ட மணல் திடலில் உள்ள மேட்டில் விளையாடியதை,

**"முதிர் வார் இப்பி முத்த வார் மணல்,**

**கதிர் விடு மணியின் கண் பொரு மாடத்து,**

**இலங்கு வளை மகளிர் தெற்றி ஆடும்"**

**(புறம் 53 வா 1-3)**

என்ற வரிகளினாலும் மருத நிலத்து மகளிர் நெய்தல் நிலத்து மணற்குன்றில் வண்டல் இழைத்தாடுவது,

**"இளையோர் வண்டல் அயரவும்"**

**(பொரு -187)**

இப்பொருநராற்றுப்படை வரியினாலும் அறியப்பட்டது. இதனால் மகளிர் பொருநையாற்று மணலில் வண்டல் தலைத்தும், மணல் மேடுகளிலும், குன்றுகளிலும் மணல் விளையாட்டு விளையாடியமையும் தொகிறது.

**எண்ணி விளையாடுதல்**

எண்ணி விளையாடுதல் என்பது சாலைகளில் செல்லும் வண்டிகளையோ அல்லது பிற பொருள்களையோ எண்ணுதல் தொடர்பாக அமைந்தது. இவ்வகையில் பறம்பு மலையின் உயர்ந்த சிகரத்தில் ஏறி நின்று பாரிமகளிர் பகை மன்னான் குதிரையை எண்ணியவர்கள், பாரிமன்னன் இறந்த பிறகு உப்பு வண்டிகளை எண்ணி விளையாதை,

**"ஈத்து இலைக் கப்பை ஏறி உமணர்**

**உப்பு ஒய் ஒழுகை எண்ணுப மாதோ"**

**(புறம் 116 வா 7-8)**

இப்புறநானுற்று பாடலில் கபிலர் குறிப்பிட்டுள்ளார்.

**வள்ளைப்பாட்டு**

மகளிர் நெல் குற்றும்போது ஒரு தலைவனைப் புகழ்ந்து பாடும் பாட்டு வள்ளைப்பாட்டாகும். இத்தகைய வள்ளைப்பாட்டைதிணைக்குத்தும்போதுமகளிர் பாடியமையை,

**"தினைகுறு மகளிர் இசைபடு வள்ளையும்"**

**(மலை-342)**

இம்மலைபடுகடாம் பாடல் வா சுட்டுகிறது.

**மலர் கொய்தல்**

மகளிர் பொழுது போக்கிற்காகவும், சுற்றத்தார்க்கு விரும்பி வழங்கும் பொருட்டும் இச்செயலில் ஈடுபட்டுள்ளனர். பெரிய நீர்த்துறையில் நீர் முகந்து செல்லும் பெண்டிர் செங்கழுநீர் மலர்களைப் பறித்துச் சென்று ஊர்களில் வரும் சுற்றத்தார்க்கு விரும்பி வழங்குவர். இதை,

**"நீர் தரு மகளிர் குற்ற குவளையும்,**

**வன்புலக் கேளிர்க்கு வரு விருந்து அயரும்"**

**(புறம் 42 வா 16-17)**

இப்புறப்பாடல் வரிகளால் அறியப்பட்டது.மென்மையான இயல்புடைய மகளிர் மருத நிலத்திலுள்ள தாமரைப் பூவை நெய்தற் பூவோடு அறுக்கும் செயலை,

**"வள் இதழ்த் தாமரை நெய்தலொடு அரிந்து**

**மெல்லியல் மகளிர் ஒல்குவனா இயலி"**

**(பதிற்று 78 வா 4-5)**

இப்பாடல் வரிகளும், வளையணிந்த மகளிர் பச்சை அவலை இடித்த உலக்கையை அருகிலுள்ள வாழை மரத்தில் சார்த்தி விட்டு, வள்ளைப் பூவினபை பறிப்பா என்பதை,

**"அவல் எறி உலக்கை வாழைச் சோத்தி**

**வளைக் கை மகளிர் வள்ளை கொய்யும்,"**

**(பதிற்று 29 வா1-2)**

என்ற பாடல் வரிகளும் வெளிக்காட்டுகின்றன. வேங்கை மரத்தின் பெரிய கிளைகளில் தோன்றிய மணம் பொருந்திய மலர்களைப் பறிக்கும் மகளிர் புலி, புலி என்று ஆரவரம் எழுப்புவதை,

**"கருங்கால் வேங்கை இருஞ்சினைப் பொங்கா**

**நறும் பூக் கொய்யும் பூசல்"**

**(மதுரை 296-297)**

**"தலைநாள் பூத்த பொன் இணர் வேங்கை**

**மலை மார் இடூஉம் ஏமப் பூசல்"**

**(மலை 305-306)**

இப்பாடல் வரிகள் தெளிவுப்படுத்துகின்றன. இதன் மூலம் மகளிர் சுற்றத்தார்க்கு விரும்பி வழங்கும் பொருட்டும், நிலத்தில் வேலைச் செய்யும் பொழுது ஆரவாரம் எழுப்பியும், மலர் கொய்தலில் ஈடுபட்டுள்ளனர் என்பது பெறப்படுகிறது.

**நீர் விளையாட்டு**

மலைகளில் இருந்து வரும் அருவிநீரை குடைந்தும், குளம், ஆறு போன்ற நீர் ஆதாங்களில் விரும்பியும், நீந்தியும் விளையாடுவது நீர் விளையாட்டாகம். மகளிர் விரும்பி விளையாடும் நீர் விளையாட்டில், நீரை குடைந்தாடியதை,

**"புனல் ஆடு மகளிர் கதுமெனக் குடைய"**

**(பொரு-241)**

இவ்வரியும், சுரபுன்னை, அகில், சந்தனம் போன்றவற்றை நீராடும் மகளிர்க்குத் தெப்பமாக நீர் கொண்டு வந்து தருவதை,

**"நறுவீ நாகமும் அகிலும் ஆரமும்**
**துறைஆடு மகளிர்க்கத் தோட்புனை ஆகிய**
**பொருபுனல் தரூஉம்" (சிறு 115-117)**

என்ற வரிகளும் தெளிவுப்படுத்துகின்றன. ஆழமான இடத்தில் நீராடும்பொழுது மகளிரின் காதுகளில் அணிந்திருக்கும் பொன்னாற் செய்த அழகிய குழை ( காதணி ) கழன்று விழுவதும் புனலாடுங்கால் நீரில் நழுவி விழும் என்று நினைத்து, மகரக் குழையை கரையில் வைத்துப் பின்னர் மறந்து போவதும் முறையே,

**"புனல் பாய் மகளிர் ஆட ஒழிந்த**
**பொன் செய் பூங் குழை"**

**(பதிற்று 86: வரி10-11)**

**"வண்டல் ஆயமொடு உண்துறைத் தலைஇ,**
**புனல் ஆடு மகளிர் இட்ட பொலங்குழை**
**இரைதேர் மணிச்சிரல் இரைசெத்து எறிந்தென,**
**புள் ஆர் பெண்ணைப் புலம்புமடற் செல்லாது,**

**(பெரும் 311-314)**

இப்பாடல் வரிகளால் அறிய முடிகிறது. மகளிர் தாம் அணிந்துள்ள மாலை தம் கணவரின் மாலையோடு கூடும் வண்ணம் நீராடுவதை,

**"தழைந்த கோதை தாரொடு பொலியப்**
**புணர்ந்து உடன் ஆடும்இசையே"**

**(மதுரை 265-266)**

என்ற மதுரைக்காஞ்சி வரிகள் காட்டுகின்றன. தெய்வ மகளிர் அருவியில் நீராடும் பொழுது நீரை கையால் குடையுந்தோறும் தோன்றும் இனிய ஓசையை,

**"அருவி நுகரும் வான் அர மகளிர்**
**வரு விசை தவிராது வாங்குபு குடைதோறும்**
**தெரி இதழ் கொண்ட நும் இயல் போல் இன் இசை"**

**(மலை294-296)**

மலைபடுகடாம் பாடல் வரிகள் வெளிப்படுத்துகின்றன. மேலும் செறிந்த மணலிற் செய்த வண்டற்பாவைக்குப் பூவைப் பறித்துச் சூட்டும் இளமகளிர், குளிர்ந்த பொய்கையில் இளமைந்தருடன் விளையாடும் காட்சி,

**"..... திணி மணல்**
**செய்வுறு பாவைக்குக் கொய் பூத்தைஇ**
**தண் கயம் ஆடும் மகளிரொடு கை பிணைந்து"**

**(புறம்243 வரி 1-3)**

இப் புறநானூற்றுப் பாடல் வரிகளாலும், வயலிடத்தில் உள்ள ஆம்பல் தண்டினால் செய்த வளையணிந்த மகளிர், செம்மையான அவலினை, வாய் நிறையக் கொண்டவராய்க் குளிர்ந்த நீரில் பாய்ந்தாடுவதை,

**"ஆம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர்**
**பாசவல் முக்கி, தண் புனல் பாயும்"**

**(புறம் 63 வா 11-13)**

இப்பாடல் வாகளாலும் தெரிந்து கொள்ளப்பட்டது. இதனால் மகளிர் நீரை கடைந்தாடுவதும், வாசனைப் பொருட்களைக் கொண்டும். குழையை கரையில் கழற்றி வைத்தும் தெய்வ மகளிரின் இனிய ஓசையும், குளிர்ந்த பொய்கையில் இளமைந்தருடனும், அவலினை வாயில் கொண்டும் நீராடியுள்ள செயல்கள் பற்றி அறியப்பட்டது.

**கூத்துக்கலைகள்**

பழந்தமிழ் மக்களிடம் இருந்து வந்த கூத்துக் கலைகளாக வெறிக்கூத்து, கருங்கூத்து, வள்ளிக்கூத்து, கழனிக்கூத்து, போன்றவை குறிக்கப்பட்டுள்ளன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், முதலிய நானிலங்களிலும் கூத்தர்கள் இருந்து வாழ்ந்துள்ளனர் என்பது சங்க நூல்களால் அறியமுடிகிறது. குறிஞ்சி நிலகடவுளாகிய முருகப் பெருமானை வழிப்படுவதற்காக ஆடும் கூத்து குன்றக் குரவை அல்லது குரவை எனவும், முல்லை நில கடவுளாகிய திருமலை வழிபட்டு ஆடும் கூத்து ஆய்ச்சியர் குரவை எனவும் பெயர் பெறுகிறது. இவ்வகையில் சங்கப் புற மகளிரும் குரவை, துணங்கைக் கூத்து வகைகளை ஆடியுள்ளனர்.

**குரவைக் கூத்து**

குரவை என்பது எழுவர் மங்கையர் செந்நிலை மண்டலக் கடகக் கைகோர்த்து அந்நிலையைக் கொப்ப

நின்று ஆடும் கூத்தாடும். ஆண், பெண் ஆகிய இருபாலருக்கும் உரியது குரவையாடுதல். குறவர் தொண்டகப் பறை கொட்டக் குரவையாடுவர். இதை காணும் மகளிர் குரவைக் குரிய இலக்கணப்படி பாடிக்கொண்டே ஆடுவர். பரதவருடைய மகளிர் எந்நாளும் ஆடும் குரவைக்கூத்தின் ஓசை. வேலனை வழிபடும்போது மகளிர் ஆடும் குரவைக் கூத்து போன்றவற்றை மதுரைக்காஞ்சி வரிகளும், வளையணிந்த மகளிர்க்கு ஆடவர் முதற்கை தந்து குரவையாரும் இயல்பினை புறநானூற்றுப் பாடல் வரிகளும் குறிப்பிட்டுள்ளன. அவை முறையே,

**“பரதவா மகளிர் குரவையொடு ஒலிப்ப”**

**(மதுரை-97)**

**“சீர் மிகு நெடுவேட் பேணி, தழூஉப் பிணையூஉ**

**மன்று தொறும் நின்ற குரவை”**

**(மதுரை-614-615)**

**“மெல் இணர்க் கண்ணி மிலைந்த மைந்தர்**

**எல் வளை மகளிர்த் தலைக் கை தரூஉந்து”**

**(புறம் 24 வரி 8-9)**

என்றவாறு பாடலில் அமைந்து காணப்படுகிறது. நன் செய் நிலங்களில் பயிரை அழிக்கின்ற நாரையைத் துரத்தும் மகளிர் பசிய பொன்னாற் செய்த ஆபரணங்களைக் களையாமல் பல இடங்களில் புதிது புதிதான குரவைக் கூத்தை இரவிலும் பகலிலும் நிகழ்த்திய காட்சியை,

**“மருதம் சான்ற மலாதலை விளை வயல்**

**செய்யுள் நாரை ஒய்யும் மகளிர்**

**இரவும் பகலும் பாசிழை களையார்**

**குறும்பல் யாணாக் குரவை அயரும்”**

**(பதிற்று 73 வரி 8-11)**

இப்பதிற்றுபத்து பாடலில் அரிசில் கிழார் குறிப்பிட்டுள்ளனா.

**துணங்கைக்கூத்து**

துணங்கை என்பது முடங்கிய இரு கைகளையும் விலாப் புடைகளில் ஒற்றி அடித்துக்கொண்டு அசைந்தாடும் ஒரு வகை கூத்து. மகளிர் விழாக் காலங்களில் துணங்கைக் கூத்தாடவர். ஆடவர் அம்மகளிர்க்கு தமிழ்ப் பண்பாட்டு வரலாறு என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். மகளிர் துணங்கைக் கூத்து ஆடும் இடங்களில் அவர்கள் தம் தலையிலும், தழையாடைகளிலும் ஆம்பல் மலரணிந்து ஆடும் பொழுது உதிர்ந்த மலர்களை பசுக்கள் தின்னும் காட்சியும், முழவு ஒலிக்கேற்ப மகளிர் ஆடுகின்ற துணங்கை கூத்திற்கு ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் முதற்கைத் தந்ததையும், பதிற்றுப்பத்துப் பாடல் வரிகள் தெரியப்படுத்துகின்றன. இவை முறையே,

**“கலிகெழு துணங்கை ஆடிய மருங்கின்**

**வளைதலை மூதா ஆம்பல் ஆர்நவும்”**

**(பதிற்று 13, வரி 5-6)**

**“சுடரும் பாண்டில் திரு நாறு விளக்கத்து,**

**முழா இமிழ் துணங்கைக்குத் தழூஉப்பிணைஆக,**

**சிலைப்புவல் ஏற்றின் தலைக்கை தந்து,**

**(பதிற்று 52 வரி 13-15)**

இவ்வாறு அமைந்து காணப்படுகிறது. இதனால் மகளிர் ஆடைகளிலுள்ள மலர்கள் உதிர்ந்து விழும் அளவிற்கு ஆரவாரம் செய்து துணங்கை ஆடியுள்ளனர் என்பதும், மகளிருக்கு மன்னன் முதற்கைத் தந்து ஆடியமையும் தெளிவாகிறது.

**நிறைவாக**

சங்ககால மகளிர் பொன்னாலான கழங்கு வைத்தும், செறிந்த மணலில் பாவையைவைத்தும் விளையாடியுள்ளனர் என்பது தெரிகிறது. பாவைக்கு மலர்ச் சூட்டி விளையாடி, பின் பொருநையாற்று நீரிலும், வெண்மையான ஒழுங்குபட்ட மணல்திடலில் உள்ள மேட்டில் விளையாடியது அறிந்து கொள்ளப்பட்டது. பாரி மகளிர் தன் தந்தை இருந்த பொழுது குதிரையையும், தந்தை இறந்த பிறகு உப்பு வண்டிகளையும் எண்ணி விளையாடியுள்ளனர். மகளிர் சுற்றத்தார்க்கு விரும்பி வழங்கும் பொருட்டு பெரிய நீர்த்துறைகளில் மலர் கொய்தும், மருத நிலத்தில் தாமரைப் பூவை, நெய்தற் பூவோடும், வள்ளபை பூவினையும், மணம் பொருந்திய மலர்களைப் பறிக்கும் மகளிர் புலி, புலி என்கின்ற ஆரவாரம் எழுப்பியும் பூக்களைப் பறித்துள்ளனர். என்பது புலப்படுகிறது. மேலும் நீரை குடைந்தும், தன் காதிலுள்ள மகரக்குழைகளை கழற்றி வைத்தும் நீரில் விளையாடியுள்ளனர். பழங்கால மக்களின் கூத்துக்கலைகளில் குரவை, துணங்கை போன்ற கூத்துக்களை ஆடியுள்ளமையும் இதன் வழி அறியப்பட்டது. இதனால் சங்கப் புற மகளிரின் கலைச் செயல்பாடுகள் குறித்து தெரிந்துக் கொள்ள முடிந்தது.

# தமிழ்ப்புதினங்களில் பரதவர்களின் மரபுவழி அறிவு

*ச. அருள்செல்வி, *உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,, பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி,கோவை.*

**முன்னுரை**

தமிழர் பண்பாட்டு வரலாற்றின் மூலாதாரமாகவும், அனுபவ அறிவின் பதிவுகளாக சங்ககாலம் தொடங்கி இன்றுள்ள பரதவர்களின் மரபுசார்ந்த அறிவியல் கூறுகள் காணப்படுகின்றன. பரதவர்களின் கடல் தொடர்பான மரபுவழி அறிவு, கருத்தோட்டங்கள் அவர்களது தொழிலோடும், வாழ்விடத்தோடும் பின்னிப்பிணையப் பெற்றவை. அக்கருத்தோட்டங்கள் அவர்களது பண்பாட்டு வாழ்வியலோடு கொண்டுள்ள தொடர்புகளை விளக்க முயல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**மரபு – விளக்கம்**

மரபும், வழக்காறுகளும் பண்பாட்டின் அங்கங்களாகும். ஒவ்வொரு பண்பாட்டைச் சேர்ந்த மக்களின் சமூகப்பண்பாட்டு வாழ்க்கை முறையில் அவரவர் பண்பாட்டு மரபுசார்அறிவு முக்கியமானதும், தனித்துவமானதும் ஆகும். *'Tradition'* எனும் ஆங்கிலச்சொல்லிற்கான தமிழ்ப்பதமாக மரபு என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. *'Tradition'* என்ற ஆங்கிலச்சொல் இலத்தீன் சொல்லான *'Traditio'* எனும் இலத்தீன் சொல்லிற்கான அர்த்தம் கையளித்தல் என்பதாகும். ஆகவே மானிடவியலில் மரபு என்பது குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தினுள் சமூகப் பண்பாட்டுவயமாக்கத்தின் வழியாகக் கடத்தப்படுகின்ற விழுமியங்கள், வழக்கங்கள், அறிவுத்திறன்கள், நம்பிக்கைகள், நடத்தைமுறைகள் ஆகியன சார்ந்த வடிவங்களுக்குப் பதிலாக பயன்படுத்தப்படும் ஒன்றாகும். இது கடந்த காலத்தை நிகழ்காலத்துடன் இணைக்கின்றது.

**கடல் சூழலியலை அறியும் மரபு அறிவு**

பரதவர்கள் கடலை அன்றாடம் பயன்படுத்துவதால் அதனை நன்கு புரிந்து வைத்துள்ளனர். இக்கடல் வெளி குறித்த அவர்களின் அறிவு பல நூற்றாண்டுகளின் பட்டறிவாகும்.மீன்பிடி தொழில் தொடர்பான இந்த செயல்பாடுகள் அவர்களுக்குக் கடல் குறித்த சூழலியல் அறிவைத் தந்துள்ளது. இந்த அறிவு இல்லை என்றால் கடலுக்குச் சென்று மீன்பிடிக்க முடியாது. கடல்பற்றிய புரிதல், கடல் பற்றிய புதிர்கள், நீரோட்டங்கள், எந்தெந்தக்காலங்களில் என்னென்ன காற்று அடிக்கும், கடலுக்குள் இருக்கும் பாறைகள், எந்தெந்த பாறைகளில் என்னென்ன மீன்கள் கிடைக்கும், எந்தெந்தக் காலங்களில் என்ன மீன்கள் கிடைக்கும் இவைபோன்ற புரிதல்கள் பரதவர்களிடம் மிகநுணுக்கமான அனுபவ அறிவாக நிறைந்துள்ளன என்பதை ஆய்வுக்குரிய புதினங்கள் புலப்படுத்துகின்றன.

**"வாநீவாடு பொறுத்து நிக்கிது பாத்தியா? இந்த நீவாடு மாறுனாதாம் தோணி உருவிச் சாடும். வாநீவாட்டுச் சாட்டைக்கி இந்த றாலு இன்னும் ஒரு வாரத்துல நம்ம கடலுல படணும்."** என்று தொம்மாந்திரை கூறுவதிலிருந்து நீரோட்டம் பற்றிய புரிதல் உள்ளதை அறியலாம்.

நான் எட்டு வயசிலேயிருந்து கடல் மேல வாரவன் அன்னைகெல்லாம் படகாயிருந்துச்சு? இந்த கட்டு மரத்த நம்பித்தான் கடல் தாண்டி ஒரே நேரத்துல ஏழு நீரோட்டத்த எதிர்த்து வந்திருக்கேன் என்று ஆறுகாட்டுத்துறை புதினத்தில் சுப்பு கூறுவதிலிருந்து அனுபவ அறிவை உணரலாம்.

**சேலாளி**

பரதவர் சமுதாயத்திற்குள் சேலாளி என்று ஒருவரைக் குறிப்பிடுவர். வானிலை என்று குறிப்பிடுவது போன்று கடல் நிலையைக் குறிப்பிடும் சொல்லாட்சியே சேலு ஆகும். கடலின் நீரோட்டம், காற்று, நட்சத்திரங்கள், பாறை, மீன்பாடு ஆகியவை பற்றிய கணிப்பே சேலு ஆகும். இவ்வாறு கடலின் தன்மையை மிகச்சரியாகக் கணிக்கும் ஆற்றலைப் பெற்ற ஒருவர்தான் சேலாளி என்றழைக்கப்படுகின்றார்.

**“நம்ம கடல் முழுசுமே பாறக்கடல்தான். பயிஞ்சி பாவத்த தாண்டுனாலே பாற மலமேரி மடிஞ்சி மடிஞ்சி வளந்திருக்கும். நங்குரத்த எங்க எறக்கனாலும் பாறைல போயி பதிஞ்சிரும். மரக்கணத்துக்கு ஒன்னும் ஆவாது”** என்று ஆறுகாட்டுத்துறை புதினத்தில் சுப்பு என்ற மூத்த கடலோடி இளைஞர்களான சேகர், வீரன் இருவருக்கும் கடற்பறைகளைக் குறித்து விளக்கினார்.

**கடல் சார்ந்த மரபு வழி அறிவியல்**

பரதவர்கள் மிகத் தொன்மையான காலத்திலேயே நீரியல், வானியல் நூல்களை அறிந்திருந்தனர். இவர்கள் கடலின் நீரோட்டங்களையும், கடலில் மீன்கள் தரும் ஒலிகளையும், கடற்பறவைகளின் போக்கையும் கடல் நீரின் தட்பவெப்ப நிலைகளையும், விண்மீன்களின் நிலைகளையும் கொண்டு, காற்று, புயல், மழை முதலியவைகளை முன்கூட்டியே அறிந்திருந்தனர் இரவு நேரங்களில் விண்மீன்களின் இருப்பிடத்தையும், கரையோரப் பகுதிகளின் வெளிச்சங்களையும் கொண்டு கடலில் தாங்கள் இருக்கும் இடத்தையும், கடல் நீரின் ஆழத்தையும் கடலுக்கடியில் உள்ள பாறைகள், குன்றுகள் முதலியவைகளையும் மிகத்துல்லியமாக அறிந்து கலங்களைச் செலுத்தினர்.

**நீர்வாடைக் கண்டறியும் முறை**

கொற்கை புதினத்தில் தோணியில் செல்லும் போது தண்டல் நீவாடை கண்டறிய, **“காற்று இல்லாத நேரத்தில் தோணியின் சமையலறைலிருந்து அடுப்புச் சாம்பலை எடுத்து அதனை நீர்விட்டுப் பிசைந்து கட்டியாக உருட்டி மெதுவாகக்கடலில் போட்டால் அது கரைந்து செல்லுவதை வைத்து நீரோட்டம் செல்லும் திசையினை அறிகின்றனர்.”** ஒருபிடிச்சோற்றைக் கடலில் போட்டு சோற்றுப்பருக்கைகள் போகும் திசை வைத்தும் நீரோட்டம் பற்றி கண்டறிகின்றனர்.

**புயல் கணிப்பு**

குமரிக் கடல் பகுதியில் வைகாசி, ஆனி, ஆடி மாதங்களில் சோழக்காற்று வீசும் மேற்கு, தென்மேற்கு, தென்வடக்கு ஆகிய திசைகளில் மின்னல் வெட்டுவது இயல்பு. மின்னல் உச்சிக்கு நேர்மேல் வானத்திலிருந்து கீழ்நோக்கிப்பாய்ந்தால் அது புயலின் அறிகுறியாகும். இம்மின்னல் தோன்றியதும் திடீரென காற்று வீசுவது நின்றுவிடும். வானம் வெளுத்துக் காணப்படும். இச்சூழலில் வானத்தில் எத்திசையிலாவது அம்புக்குறி வடிவில் அமைந்த சிறிய குச்சியினைப்போல மேகம் அடர்த்தியாகக் கறுத்து எத்திசைநோக்கி இருக்கின்றதோ அத்திசைநோக்கி புயல் அடிக்கும் சில நேரங்களில் இரண்டு திசைக்காற்றுகள் ஒன்றோடு ஒன்று மோதும், இதனால் காற்றுத் தகராறு கடலில் உருவாகும். இச்சூழல் ஏற்பட்டால் மீனவர்கள் கரைசேர்வது கடினம். படகில் செல்பவர்கள் பாய்மரத்தை அவிழ்த்துவிட்டு காற்றுடன் போராடி துடுப்புக்களைத் தொகுத்து கரைசேர்வார். சில நேரங்களில் படகு கவிழ்வதும் உண்டு. நாற்பது வருசமா கடல்ல போறவ நான் சொல்லுதேன், காத்து அமுங்கி கிடக்கு. இப்படி இருந்துச்சின்னா சுழலி கிளம்புமின்னு........ கேட்டியா. என்று மரியானின் தந்தை எச்சரிக்கையாக கூறுவதை அலைவாய்க்கரையில் புதினங்களில் அறியலாம்.

**கட்டுமரத்தை வடிவமைத்தல்**

மரங்களைக் கொடிகளினால் கட்டியமைத்த சாதனத்தைத் தமிழர் கட்டுமரம் என்றனர். அதுவே இன்று மனிதன் விஞ்ஞான அறிவின் முதிர்ச்சியால் கண்டுப்பிடித்திருக்கும் அணுசக்திக் கப்பல்களுக்கெல்லாம் தாயாகும். ஆழிசூழ்உலகு புதினத்தில் முழுக்ககட்டுமரம் கொண்டு கடலுக்குள் செல்லும் பரதவரின் தொழிலை மையப்படுத்தி உள்ளார் ஆசிரியர். கட்டுமரத்தை வடிவமைத்து, அதில் புதியவகை நுட்பத்தை உருவாக்கி பாதுகாப்பாகவும், சீராகவும் செல்லும் வகையில் அணியத்து பலகை அமைப்பை உருவாக்கியவர் மிகத்திறமையான ஓடாவி தொம்மந்திரை. கட்டுமரங்களை வடிவமைப்பதில் கைதேர்ந்தவர். மலையாளத்து ஓடாவிகள் கூட கட்டுமரம் வெட்டிக் கொண்டிருக்கும் போது சந்தேகங்களைத் தொம்மந்திரையைக் கேட்டுச் சரி செய்வது வழக்கம்.

**அணியத்துப்பலகை**

அணியத்துப்பலகை என்பது புதிதாக தொம்மந்திரையால் உருவாக்கப்பட்ட தொழில்நுட்பம் நீரோட்டத்தைச் சமாளித்து மரத்தை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர சரியான ஒரு வடிவமைப்பு தேவை. இது பற்றி சிந்தித்த தொம்மந்திரை தான் புதிதாக வெட்டிய மரத்தில் அணியத்தில் பலகை சொருக ஒரு தொண்டி போட்டார். இந்த அமைப்புக்கு எதிர்ப்புகள் கிளம்பின.

**“அணியத்துப் பலகை சொருகுவதற்கு முன்னால் அங்கேயும் இங்கேயும் அலைக்கழிந்து**

**ஆடி ஓடிக் கொண்டிருந்த மரம் சீரான வேகமெடுத்து ஓடுவதற்கு பிந்தலைக்கு இணையான ஒரு கட்டுப்பாடு அணியத்தில் செங்குத்தாக நீரைக்கிழித்துக் கொண்டு ஓடும் அந்த பெரிய பலகையில் கொடுக்கப்பட்டிருப்பதை அறிந்து பின் அனைவரும் தொம்மந்திரையின் யோசனையை ஏற்றனர்.”**

**கடல் நீரோட்டங்கள் குறித்த மரபு அறிவு**

கடல் நீரோட்டத்தை அறிந்து கொள்வது என்பது சீரிய அறிவியலாகும். இதனை கொற்கை, ஆழிசூழ் உலகு முதலான புதினங்களை நாம் படித்தோமானால் நன்கு புலப்படும். கடல் பயணங்களுக்கு மட்டும் அல்ல; கடலின் உயிரிக்கத்துக்கே மிகப்பெரிய உந்துசக்தி நீரோட்டம். ஜோ.டி.குருஸ் அவர்கள் ஆழிசூழ்உலகு, கொற்கை புதினங்களில் கடல் பயணத்தின் போராட்டங்களைத் தத்துரூபமாக படைத்துள்ளார். தோணிகளிலும், கட்டுமரங்களிலும் பயணிக்கும் பரதவர்கள் கடலின் நீரோட்டங்களை, திடீரென மாறுகின்ற அலைகளின் தன்மைகளை எதிர்கொள்வதை விவரித்துள்ளார்.

**“ஆடி மாசம் ஆரம்பிச்சாலே கடலடி அதிகமாகத்தாம் இருக்கும். கடல்ல உயிர்வ போறதே இந்த மாசங்கள்லதான் சாமி. சில நேரங்கள்ல அரநீவாடு பொறுத்து நிற்கும். றாலத்தவிர ஒரு மச்சம் ஒட்டாது”** என்று காகுசாமியாரிடம் தொம்மந்திரை கூறுகிறார். மேலும் புதினங்களில் பாத்திரங்களின் உரையாடல் வழியாக, பலவித நீரோட்டங்களின் பெயர் மற்றும் தன்மைகளைச் சுட்டியுள்ளார். அதன்படி பார்த்தோமானால் 18 விதமான கடல் நீரோட்டங்களை அறிய முடிகின்றது. கடலுக்குள் ஆயிரக்கணக்கில் மைல்கள் நின்று பாய்ந்து செல்லக்கூடியவை இந்த நீரோட்டங்கள். உலகின் பல இடங்களில் கடலின் தட்பவெப்ப நிலையை மாற்றுவதிலும் நீரோட்டங்களுக்கு முக்கிய பங்கு உண்டு.

**“ஒரு கடலோடி இந்த நீவாடை வகை பிரிச்சுப்பாக்கத் தெரிஞ்சு வெச்சிருக்கிறது. ரொம்ப முக்கியம் அப்பம்தான் எந்த நீவாட்டுக்கு எந்த மீன் அகப்படும்னு தெரியும். எந்த நீவாட்டுல போனா, சீக்கிரம் போய்ச் சேரலாமுன்னு தெரியும். வள்ளம்னு இல்ல, எவ்ளோ பெரிய கப்பலாயிட்டு இருந்தாலும் சரி; நீவாட்டுல ஓட்டினா, சுளுவா ஓடும். எரிபொருளும் மிச்சம், நேரமும் மிச்சம். 19”** என்று தோமையார் கதாபாத்திரம் கொற்கை புதினங்களில் எடுத்துக் கூறுவதன் மூலம் நீவாடு தெரியாதவன் மீனவனில்லை என்ற உண்மை புலப்படுகின்றது.

**காற்றின் திசை மற்றும் தன்மை பற்றிய மரபு அறிவு**

தோணியின் ஓட்டத்துக்கு அவசியமான காற்றை எட்டுவகையாகப் பகுத்துள்ளார்கள். காற்று வீசாத நிலையினைக் குறிக்க இளக்கமில்லை மிதவலாயிருக்கு என்ற சொற்களைப் பயன்படுத்துகிறார்கள். பரதவர்கள் கடலில் அடிக்கின்ற காற்றினை கீழ்க்கண்ட விதமாக வகைப்படுத்தியுள்ளனர்.




ஒருகடலோடி பள்ளிக்கூடத்தின் பக்கமே போகாதவராக இருந்தாலும் கொஞ்சம் நீரியல் நுட்பங்களும், கொஞ்சம் வானியல் நுட்பங்களும் அவரை அறியாமலேயே அவருக்குள் வந்து விடுகின்றன. ஒவ்வொரு திசையில் வீசும் காற்றுக்கும் ஒவ்வொரு குணம் உள்ளது. அதற்கு ஏற்றாற்போல் நீரோட்டம் மாறுபடும். மீன்பாடும் மாறுபடும் என்பதை அனுபவ அறிவில் அறிந்திருக்கின்றனர். இயற்கை சக்திகளுள் ஒன்றான காற்று மீன்பிடித்தொழிலில் மிக முக்கிய பங்கை வகிக்கின்றது. காற்று மனிதசக்திக்கு அப்பாற்பட்டது என்பதனை **‘காத்த எதுத்து தப்ப முடியாது’** என்ற வழக்காறு மூலம் பரதவர்கள் வெளிப்படுத்துகின்றனர். காற்றின் வலிமை, வீசும் திசை ஆகியவை கடலுக்குச் செல்லும்போது கணக்கில் எடுக்கப்படும். இதனை **‘காத்த கணக்கில் எடுக்காம கடல்ல போலாமா’** என்னும் பழமொழி மூலம் குறிப்பிடுவர். எனவே பெரும்பலும் பரதவர்கள் கடலில் காற்று அடிக்கும் எதிர்த்திசையில் செல்வதை விட காற்றின் திசையிலேயே செல்வது வழக்கம். சோழக்காற்றைப் பற்றி கொற்கை புதினத்தில் செய்தி இடம் பெறுகின்றது. சூறாவளிக்காற்று பேயாய் வந்து விழுந்தது. சுழற்றியடித்த காற்றில் தோணி பலமாக ஆடியது.

**“சோழக்காத்துதாம்....... காணாக்காரன் மட்டும் என்ன ஆனாலும் மடிய வுடக்கூடாதின்னு**

**சொல்லுங்கல"** என்று தண்டல் கிலுக்கு உதவியாட்களிடம் சொல்கிறார்.

**"எல, காத்து வாடக்கொண்டல் வுழுந்து வருது போல....... காணாவ இழுத்து ஒரு நாலஞ்சி டிகிரி வார்பால வரச் சொல்லு"** என தண்டல் கோஸ்தா பிலிப்பிடம் கூறுகின்றார்.

**"கச்சாம் தேரம் பாத்தியளா காத்துக்கு சரக்குவள சரியா ஏத்த முடியல. காத்து சரியில்லயின்ன ஒடன அப்படியே வழிஞ்சி குந்துகால் வளசலுக்குள்ள வந்து பாலத்த தொறந்து வாரோம்."** இவ்வாறு, காற்றின் திசைக்கும், வேகத்திற்கும் ஏற்றார்போல தோணியை செலுத்துவதைப் பற்றி கொற்கை புதினம் வழி அறியலாம்.

**விண்சார் கடலியல் மரபு அறிவு**

விண்மீன்களை உற்றுநோக்கியதன் அடிப்படையில் அமைந்ததே மரபுவழிக்கடற்செலவாகும். திசையறியவும், நேரம் அறியவும், காற்று மழையினை அறியவும் சில விண்மீங்களை இவர்கள் துணையாகக் கொண்டுள்ளனர். இதனையே விண்சார் கடலியல் (*Astro Navigation*) என்பர். விண்மீன்கள் ஒவ்வொன்றிற்கும் பெயர்கள் இட்டுள்ளனர் அனுபவம் வாய்ந்த கடலோடிகள் வானிலுள்ள நட்சத்திரங்கள் மூலம் திசையைப் பார்த்துக் கடற்கரைக்கு வந்து விடுகின்றனர். கடலோர கிராமங்களிலுள்ள மீனவர்கள் நட்சத்திரங்களை வெள்ளி என்றே அழைக்கின்றனர்.

**நட்சத்திரங்கள் உதவியுடன் கரையை அறிதல்**

இரவில் இருட்டிலே கடலின் நடுவில் திக்குத்தெரியாமல் பரதவர்கள் தவிக்கும் போது,வானில் உள்ள நட்சத்திரம் கொண்டு கடற்கரையை அறியும் அனுபவ அறிவு கொண்டவர்கள் என ஆறுகாட்டுத்துறை புதினம் எடுத்துக்காட்டுகின்றது.

**அன்னாந்து வெள்ளியப் பாரு. அந்தக்கப்ப வெள்ளிய பாத்துக்கிட்டே வல்லாங்கையிபக்கம் மரத்த செலுத்துனா நேரா நம்ம தொறையில கொண்டாந்து வுட்டுரும். சாமுவேல் அன்னாந்து வானத்தைப் பார்த்தான். ஏழெட்டு நட்சத்திரங்கள் ஒரேயிடத்தில் இருந்தன. பார்ப்பதற்கு கப்பல் போலவே இருந்தது. அதைப் பார்த்தபடியே பக்கவாட்டில் இடதுகையை நீட்டினான்.**

**இப்படி திக்குலயா மாமா இருக்கு நம்ம ஊரு?**

**ஆமாம், நேரா போனாக்க நம்ம ஊரு. தெக்க சாச்சிப் போனா கோடியக்கர. வடக்க சாச்சிப் போனா நாகப்பட்டிணம். அங்குட்டு இருக்குறது வடக்கத்தி ஊருவ.**

கடலில் மீன்பிடித்துக் கொண்டிருக்கும்போது கடலில் எந்த இடத்தில் இருக்கின்றோம் என்பதை மேற்குத்தொடர்ச்சி மலை மூலம் அறிந்து கொள்ள முடியும். இவ்வாறு அறிந்து கொள்வதற்கு நேர்மதி என்று பெயர். கரையிலிருந்து கடலில் எவ்வளவு தூரத்தில் இருக்கின்றோம் என்பதை மருந்துவாழ் மலை மூலம் அறிந்து கொள்ளும் அனுபவ அறிவினை வாடியாமதி என்பர்.

**நடுக்கடலிலிருந்து கடற்கரையை அறியும் அனுபவ அறிவு**

ஆறுகாட்டுத்துறை புதினத்தில் நடுக்கடலில் பலமான காற்றினால் ஏற்பட்ட சுழல் காரணமாக தத்தளித்து, பின்பு சுழல் தணிந்து பிறகு திசைகள் அறியும் தெளிவின்றி மற்றவர்கள் தவிக்கின்றனர். அப்போது அனுபவம் வாய்ந்த கடலோடி சுப்பு கடல் அலையைக் கொண்டு திசையினையும், கடற்கரைக்குச் செல்கின்ற வழியினை உணர்த்துகின்றார். இதனை, **"செத்தபொறு, இன்னம் கொஞ்சம் கடல் அடங்கட்டும். தாயலதட்டிப்போறத வச்சிகரையைக் கண்டுபிடிச்சிடலாம் என்றார் சுப்பு."**

**"பெரிய அலையொன்று முன்செல்ல அதன் பின்னே சின்னச்சின்ன அலைகள் தொடர்ந்து சென்றன. இஞ்ச பாத்தியளாடா தாயலய இதான்டாலே தாய் அல. இதுதான் கரயாக்கப் போற அல. இந்த அல வாக்குலயே போனா கரயாக்க பெயிறலாம். மரத்த வுடுங்க பாய் கட்டிவுட்டா ஓட்டத்தூல வெரசா பெயிடும்."**

என்று சுப்பு பேசுவதன் மூலம் அலைகள் பற்றிய நுட்பமான பார்வை, அறிதலின் நுட்பத்தை கடலோடிகள் அறிந்திருந்தனர். ஆறுகாட்டுத்துறை புதினத்தில் கடல் அனுபவம் மிக்க கடலோடிகளின் அறிவினை சு.தமிழ்ச்செல்வி சுட்டுக்காட்டியுள்ளார். கடலில் ஆழம், அலைகளில் தன்னை, கடலில் ஏற்படும்சுழல், திசையைக்கண்டறிதல் போன்ற தகவல்களை அறியலாம்.

**"இந்த பாறக் கடலப்பத்தி ஒங்களுக்கு தெரியுமா சித்தப்பா. செல சொழலு மரக்கணத்தையே கவுத்து வுட்டுருமாமுல்ல என்று வீரன் என்ற இளைஞன் கேட்கும் போது, அனுபவம் வாய்ந்த கடலோடி சுப்பு என்பவர்,"**

**"இருவது பாவத்துக்கு மேல சொழலுல சிக்கிறக்கொடாது. பாறையும் மடுவும் பெரிசாருக்கும். சொழ்லும் வேகமாருக்கும். அரிமேரி சொழலுல சிக்கிக்கிட்டா அவ்வளவுதான்.**

**மரக்கனைத்துல ஒரு சில்ல கொட முழுசாப் பார்க்க முடியாது"** என்ற சொல்வதன் மூலம் கடல் சுழலில் அகப்பட்டால் நேரிடும் ஆபத்தை அவரின் அனுபவ அறிவால் உணர்கின்றார்.

### முடிவுரை

பரதவர்கள் மிகத்தொன்மையான காலத்திலேயே நீரியல், வானியல் சாஸ்திரங்களை அனுபவ அறிவால் உணர்ந்திருந்தனர். கடலின் நீரோட்டங்களையும், கடல் நீரின் தட்பவெப்பநிலைகளையும், இரவு நேரத்து விண்மீன்களின் நிலைகளையும் கொண்டு புயல், மழை வரும் நேரங்களை உணர்ந்துகொள்ளும் ஞானம் பெற்றிருந்தனர்.

மரபுசார் அறிவும் பண்பாடும் நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றவை. ஒன்றின் பிரதிபலிப்பு பிறிதொன்றில் நேரடியாகவும், மறைமுகமாகவும், தாக்கம் செலுத்தக் கூடியன. பரதவர்களின் தொழில்சார்ந்த மரபு அறிவு என்பது ஏனையவற்றைவிடத் தனித்துவமானது. நெய்தல் சமூகத்தினர் கடல்சார்ந்த வாழ்வுடன் தொடர்புடைய வகையில் தங்களுடைய மரபுசார் அறிவினை தங்கள் இனக்குழுவிற்குள் வாழையடி வாழையாக தக்கவைத்து, அவற்றின் துணைக் கொண்டு செழுமையானப் பண்பாட்டு நெறியினை வாழ்வியலாகக் கொண்டிருந்தார்கள் என்பதனை அறியமுடிகின்றது.

### பார்வை நூல்கள்


ஜோ.டி. குரூஸ் – ஆழிசூழ்உலகு

ஜோ.டி. குரூஸ் – கொற்கை

சு. தமிழ்செல்வி – ஆறுகாட்டுத்துறை

க. சண்முகம் – பண்டைத்தமிழர் அறிவியல்

அ. இராகவன் – நம்நாட்டு கப்பற்கலை

# பெருந்தகு பாடினி

*ஏ. மேனகா, *உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை, அன்னை வேளாங்கண்ணி மகளிர் கல்லூரி, சென்னை.*

மக்களது வாழ்வியலைப் பண்பாட்டை நாகரிகத்தை எடுத்துக்காட்டும் கண்ணாடி கலை. சமூகத்தை அடையாளப்படுத்தும் கருவி. பண்பாட்டுப் பெட்டகம். கலைஞனின் உள்ளத்தில் இலங்கும் உலகத்தைப் புலப்படுத்துபவை. நிகழ்த்துவோரையும் பார்வையாளரையும் ஒரே உணாவில் இணைக்கும் இயல்புடையவை.

கலை நிகழ்த்தக் கூடிய கலைஞனின் இனப்பண்பாட்டை வெளிப்படுத்தும் இயல்புடையது. அவன் பிறந்து வளர்ந்த சூழல் சமூகம் அரசியல் வரலாறு என அனைத்து நிலைகளையும் பதிவாக்கி வெளிப்படுத்தும் இயல்புடையது. அத்தகைய கலையினைத் தொழில் முறையாக பயன்படுத்தி அதன் மூலம் பெற்ற வருவாயைக் கொண்டு வாழ்க்கையை நடத்திய கலைஞர்களைச் செவ்வியல் இலக்கியம் இனம் காட்டுகின்றது.

பாணர், பாண்மகள், பொருநர், வயிரியர், நகைவர், அகவுநர், ஆடுநர், இயவர், கண்ணுளர், கூத்தர், அகவன்மகளிர், கோடியர், துடியர், பறையர், முழவர், பாடினி, பாண்மகள், ஆடுமகள், விறலியா, கட்டுவிச்சி, என சங்க இலக்கியம் கலைஞர்களைப் பட்டியலிடுகின்றது.

கலைஞர்கள் சமூகத்தின் குறியீடு. தம்மைச் சுற்றியுள்ள சூழல் சமூகம் ஆகியவற்றை உற்றுக் கவனித்து உள்வாங்கி அவற்றையே கலையாகக் வெளிப்படுத்தும் கற்பனையாளர்கள். சமூகத்தின் உயர்வைப் போற்றவும் சமூக அவலங்களை எடுத்துக்காட்டி உரக்கக் கூறவும் கலைஞர்களால் முடியும். அத்தகு சிறப்பு மிகுந்த கலைஞர்களுள் ஒருவராக திகழும் பெருந்தகு பாடினி குறித்த பதிவாக இக்கட்டுரை அமைகிறது.

**பாடினி**

பாடினி என்ற சொல் பாடின என்று பாடுபவளைக் குறிக்கும் சொல்லிலிருந்து வந்திருக்கலாம் எனக் கூறுகிறது தமிழ் லெக்சிகன்.

'பாடு' என்ற வினைச்சொல்லின் பெண்பாலைக் குறிக்கும் விகுதியாக 'நி' இணைந்து பாடினி என்ற சொல் உருவாயிற்று என்பர். பாணர் குழுவினருடன் பயணப்பட்ட குரலிசைக் கலைஞர் பாடினி.

**"ஒரு திறம் பாடினி முரலும் பாலையங் குரலின்"** **(பா:17:17)**

பண்ணமைத்து பாடும் திறம் பெற்றவள் என்பதை பரிபாடல் புலப்படுத்திக் காட்டுகிறது.இசைக்கல்வியின் பெருமை முழுவதற்கும்தகுதியுடையவள் என்பதை,

**" .......... பெருந்தகு பாடினி"** **( பெருநா.47 )**

என்ற பாடலடி தெரிவிக்கின்றது.

அரசனின் மறத்தைப் புகழ்ந்து பாடியவளாக காட்சிப்படுத்துகிறது சங்க இலக்கியம்.

**"புறம் பெற்ற வயவேந்தன்**
**மறம் பாடிய பாடினியும்மே"** **( புறம்11:10-11 )**

**“ஆடுநடை அண்ணல் நின் பாடுமகள் காணியா”**

**(பதிற்44:7)**

**“வாரியும் வடித்தும் உந்தியும் உறழ்ந்தும்**

**சீருடை நன்மொழி நீரொடு சிதறி”**

**(பொருநா - 23 - 24)**

யாழினை நரம்புகள் கூடுமாறு தழுவியும், உருவியும் ஒன்றைவிட்டு ஒன்றைத் தெறித்தும் சீர்களை உடைய பண்ணை நீர்மையோடு பாடக்கூடிய ஆற்றல் வாய்ந்தவள் பாடினி என அவாதம் புலமையை வியந்து உரைக்கின்றது பொருநராற்றுப்படை.

**பாசறையில் பாடினி**

**“உரவுக்களிற்றுப் புலாஅம் பாசறை**

**நிலவின்அன்ன வெள் வேல் பாடினி”**

**( பதிற் 61 : 15-16)**

புலால் நாறும் பாசறையில் நிலவின் ஒளியைப் போன்று வெண்மையான ஒளியை வீசும் மன்னனின் வேற்படையைப் புகழ்ந்து பாடக்கூடிய பாடினியை பதிற்றுப்பத்து காட்சிப்படுத்துகிறது. அவள், மன்னனின் புகழ் பாடும்போது முழவடித்து பாடுவதாக புறம் கூறுகிறது.

**“பிசி பிணிக் கொண்ட மண்களை முழவிற்**

**பாடினி பாடும் வஞ்சிக்கு” (புறம் 11:10-11)**

**“முழவில் போக்கிய வெண் கை**

**விழவின் அன்ன நின் கலிமகிழானே”**

**(பதிற்61:17-18)**

இசைக்கும் முழவின் தாளத்துக்கு ஏற்பத் தாளத்தை அமைத்துக் கையை அசைத்து பாடுபவள் என்கிறது.

“வறுமையின் காரணமாகவோ மன்னனிடம் வந்தால் பெரும் பொருள் பெறுவோம் என்பதற்காகவோ தம்மை ஆதாப்பதற்காகவோ மன்னனை மிகுதியாக புகழ்ந்து பாடினாள் மகிழ்ச்சி அடைவான் என்பதற்காகவோ யாம் வரவில்லை” என நேரடியாக தம் உள்ளக் கருத்தை மன்னனிடம் பதிவுசெய்திருக்கின்ற பான்மையை பதிற்றுப்பத்து (61) நவில்கின்றது. உம்முடைய நல்ல புகழே எம்மை நின்னிடம் வரச்செய்தது என்று கூறுவதிலிருந்து ‘அரசனின் மெய்க்கீர்த்தியை’ பாடுபவளாகவும் காட்சிப்படுத்துகிறது சங்க இலக்கியம். மேலும்மன்னன் இருக்கும் பாசறைக்கு சென்று பாடியவளாகவும் காணமுடிகிறது.இதனால் இவளை மன்னனுடன் இணைத்துப் ‘பாடினி வேந்தே’ (பதிற். 14,17) என மன்னன் அழைக்கப் படுகிறான். இவ்வாறு விளிக்கப்படுவதற்கு உரையாசிரியர்கள் மகளிரைத் தனித்துப் பாடுவது மரபன்று. ஆதலால் ஆண்மகனொடு சேர்த்துப் பாடுதலே வழக்கு என்கிறார்கள்.

**எழில் நலம்**

**பாடினி ஆற்றின் கருமலைப் போன்ற கூந்தலை உடையவள்.**

**பிறைத்திங்களைப் போன்ற நெற்றியை உடையவள்.**

**விற்போன்ற புருவத்தை உடையவள்.**

**குளிர்ந்த கண்ணை உடையவள்.**

**இலவ மலர் இதழ் போன்ற இனிய மொழி பேசும் வாயினை**

**உடையவள்.**

**முத்துக்கள் போன்ற பற்களை உடையவள்.**

**அழகிய மலர் குழை அணிந்த காதிகள்.**

**நாணத்தால் கவிழ்ந்த கழுத்தினள்.**

**மூங்கிலைப் போன்ற தோளினள்.**

**மெல்லிய மயிரிழை உடைய முன்கையினள்.**

**காந்தம் போன்ற மெல்லிய விரலினள்.**

**கிளியின் வாயைப் போன்ற நகத்தை உடையவள்.**

**நீர்சுழி போன்ற கொப்புழை உடையவள்.**

**பிறரால் உண்டு என்று அறியப்படாத இடையை உடையவள்.**

**வரிசையாய் வண்டுகள் இருந்தாற்போன்ற மணிகள் கோர்க்கப்பட்ட மேகலை அணிந்த அல்குலை உடையவள். இலக்கணம் பொருந்திய கணைக்காலை உடையவள்.**

**கணைக்காலுக்குப் பொருத்தமான திருத்தம் உடைய நாயின் நாக்கைப் போன்ற சிற்றடியை உடையவள். மயில் போன்ற சாயலை உடையவள்.**

**(பொருநர் 25-47)**

என பாடினியின் அழகு நலம் நீண்ட வருணனைகளாக அமைகிறது. எனினும் மேட்டுக் குடியினர்கான குறியீட்டுச் சொற்கள் பயன்படுத்தவில்லை. மாறாக நாயின் நாக்கினை அவளது பாதத்திற்கு உவமையாக கூறியிருப்பதை எண்ணிப்பார்க்க முடிகிறது.

இசைக்கல்வியின் பெருமை முழுமைக்கும் தகுதியுடைய பெண்பாற்கலைஞரைச் சமூகம் அழகுப்பதுமைகளாகவும், காட்சிப் பொருளாகவும், போகத்திற்குரியவராகவும், முடி முதல் அடி வரை புனைந்துரைத்துள்ள பான்மையை இங்கு உணரமுடிகின்றது.

**வழிபாடு செய்தல்**

இசைக்கல்வியின் பெருமை முழுவதற்கும் தகுதியையுடைய பாடினி பாடிய தாளத்துக்குப் பொருத்தமாக நாள்தோறும் யானை உலா வரும் வழியை உடைய காட்டில் தங்கி, வழயில் நடந்து வந்த வருத்தம் தாங்கி இலை இல்லாத மரத்தின் அடியில் வலையை மேலே கட்டியதைப் போன்ற மெல்லிய நிழலில் காட்டில் உள்ள தெய்வங்களுக்கு மனம் மகிழ்ச்சியாய்ச் செய்யும் முறைமைகளைச் செய்து முடிக்க கூடியவள் பாடினி.

**"…..பெருந்தகு பாடினி**
**பாடின பாணிக்கு ஏற்ப நாள்தொறும்**
**களிறு வழங்கு அதாக் கானத்து அல்கி**
**இலை இல் மராஅத்த எவ்வம் தாங்கி**
**வலை வலந்தன்ன மென்நிழல் மருங்கில்**
**காடு உறை கடவுட் கடன் கழிப்பிய பின்றை"**

**(பொருநர்47-52)**

காட்டில் வாழ்கின்ற காளி, கூளி முதலிய தெய்வங்களுக்குப் பலி தந்து தடாரியை வாசித்து பாடுதல் செய்தல் பாடினியின் கடனாக இருப்பதைச் சங்கப்பாக்கள் பதிவுசெய்கின்றன.

**பாடினி பெற்ற பாசில்கள்**

இவர்கள் பெற்ற பாசல்கள் வாயிலாக இவர்தம் புலமையினை அறியமுடிகிறது.

**"சென்மோ பாடினி நன்கலம் பெறுகுவை"**

**(பதிற் 87)**

**"இழை பெற்ற பாடினிக்குக்**
**குரல்புணர்சீர்க் கொளைவல் பாண்மகனும்மே"**

**(புறம் 11)**

**"ஒள்அழல் புரிந்ததாமரை**
**வெள்ளி நாரால் புப்பெற்றிசினே**
**பாடினி மாலை அணிய**
**வாடாத் தாமாரை சூட்டுவன் நினக்கே"**

**(புறம் 319)**

**"புரிமாலையர் பாடினிக்குப்**
**பொலந்தாமரைப் பூம்பாணரொடு**

**(புறம் 361)**

**"வாடா மாலை பாடினி அணியப்**
**பாணன் சென்னிக் கேணி பூவா**
**எரிமருள் தாமரைப் பெருமலா தயங்க"**

**(புறம் 364)**

**"நூரின் வலவர் நுணங்கு அரில் மாலை**
**வால் ஔ முத்தமொடு பாடினி அணையக்"**

**(பொருநர் 159 - 162)**

நல்ல அணிகலன்கள், பொன் தாமரையான மலர் பொன்னா மாலை, முத்தமாலை, களிறும் தேரும் (மதுரை 749 - 752) முதலானவற்றை பாசாக பெற்றுள்ளனர்.

இத்தகைய பரிசில்களை வழங்கிய மன்னர்கள், தம்மை ஆதாப்பவர்கள் இறந்தால் பாடினி பூச்சூடுவதில்லை என்பதை புறப்பாடல் விளக்கி நிற்கிறது.

**"இளையோர் சூடார் வளையோர் கொய்யார்**
**நல்யாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்**
**பாணைன் சூடான் பாடினி அணியாள்**
**ஆண்மை தோன்ற ஆடவாக் கடந்த**
**வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை**
**முல்லையும் புத்தியோ ஒல்லையுர் நாடே"**

**(புறம் 242)**

**தொகுப்புரை**

இயற்கையின் வழி பிறந்த உழைப்பின் ஊடக மொழி கலை. கலைஞனின் உள்ளத்தில் காணப்படும். உலகத்தைக் கலைகள் புலப்படுத்திக் காட்டுகின்றன. அக்கலைஞர்களுள் "பாடினி" எனும் பெண்பாற் கலைஞர் முறைப்படி

- இசைகளைத் தெரிந்து தேர்ந்து நுட்பமாக வடிவமைத்துக் கொண்ட திறனிசை கலைஞர்
- இசைக்கல்வியின் பெருமை முழுவதற்கும் தகுதியுடையவள்
- மறத்தை புகழ்ந்து பாடியவள்
- பாசறைக்குச் சென்று மன்னனின் வேலினை புகழக் கூடியவள்

➢ அரசனின் மெய்க்கீர்த்தியைப் பாடுவதற்காகவே அரசனை அணுகிய கலைஞர்.

➢ பாடினி வேந்தே என்று அழைக்கப்பெறும் சிறப்புக்குரியவள்

➢ பழுமரம் தேரும்,பறவை போல் மன்னனை நாடிவரும் வழியில் உள்ள தெய்வங்களை வணங்கக் கூடியவள்

➢ பல பரிசில்களைப் பெற்றவள்

என இக்கலைஞரை காட்சிப்படுத்தி இருக்கின்றது செவ்வியல் இலக்கியம். பாணார்குலம் இன்றேல் அரசனின் வீரம், புகழ் கொடை, கல்வி, நாடு, போர் என அவனது சிறப்பு இல்லை என்ற வகையில் தகவல் தொடர்பாளராக சங்கச் சமூகத்தில் வாழ்ந்த பெண்பாற் கலைஞரை, இசைக்கல்வியின் பெருமை முழுமைக்கும் தகுதியுடையவளை, இச்சமூகம் காட்சிப்பொருளாகவும், அழகுப்பதுமைகளாகவும், போகத்திற்குரியவளாகவும் முடிமுதல் அடிவரை புனைந்துரைத்து காட்சிபடுத்தியிருக்கின்ற பான்மை வழி பெண்ணிற்கான இருப்பினை உணரமுடிகிறது.

**துணைநூற் பட்டியல்**

**1.கு.வே. பாலசுப்பிரமணியம்,** சங்க இலக்கியத்தில் கலையும், கலைக்கோட்பாடும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1998

**2.பக்தவச்லபாரதி,** பாணர் இனவரைவியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2012.

**3. வை. மு. ஷாஜகான் கனி,** தமிழ்நாடக வகையும் வரலாறும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2010.

**4.வெ. வரதராசன்,** தமிழ்ப்பாணர் வாழ்வும் வரலாறும், அம்பத்தூர், சென்னை, 2007.

# புதுக்கோட்டைஒரு லயக்கோட்டை

*முனைவர் சு.ஜெய்சங்கர், *உதவிப்பேராசிரியர், இசைத்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர் – 608 002.*

**முன்னுரை**

பண்டைய காலம் முதலே நமது பாரத நாடு கலை, பண்பாடு, கலாச்சாரம் போன்றவற்றில் பரந்து விரிந்து தற்காலம் வரை பெருமைமிகு நமது பண்பாட்டை உலகிற்கு பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது. குறிப்பாக நமது கலைகள் நம் நாட்டின் பொருமையையும், தொன்மையையும் வெளி உலகிற்கு எடுத்துக்காட்டுவதில் சிறப்புடன் திகழ்கின்றன. நுண்கலைகள் பல வகைப்படுகிறது. அவற்றுள் உயரிய கலையாகிய இசைக்கலையின் இரு கண்களாகத் திகழும் சுருதியும், லயமும் இசைக் கோட்டையான புதுக்கோட்டைப் பகுதிகளில் மன்னர்களின் காலத்திற்கு முன்பிருந்தே தழைத்தோங்கி தொன்று தொட்டு சீரிய வளர்ச்சியடைந்து வந்துள்ளது. இசையின் இரு கண்களில் ஒன்றான லயம் என்ற தாளமானது மனிதனின் நாடித்துடிப்பைப் போன்றது. மனித நாடித்துடிப்பு சீராக இருக்குமேயானால் மட்டுமே மனிதன் நன்முறையில் உயிர் வாழமுடியும் என அனைவரும் அரிந்த ஒன்று. அதுபோல் லயம் என்னும் தாளம் சீராக இருந்தால் மட்டுமே இசையும் சீராக கேட்பதற்கும், இசைப்பதற்கும் ஏற்றதாக அமையப்பெறும். அவ்வகையில் லயம் என்ற தாளத்தை வளர்த்த பெருமை புதுக்கோட்டை பகுதியையே சாரும் என்பதில் ஐயமில்லை. இப்பகுதியில் பிறந்த பல லயக்கலை நிபுணர்கள் இசைக்கலைக்கு தங்களது பங்களிப்பை அளித்து நுண்கலையான இசைக்கலையை மேன்மைப் படுத்தி வளர்த்துள்ளனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் முருகானந்த சாமிகள் என்ற மாண்புண்டியாப் பிள்ளை அவர்கள்.

**முருகானந்தசாமிகள் என்ற மாண்புண்டியாபிள்ளை (கஞ்சிரா) 1859-1922**

கர்நாடக இசைக்கு இவர் ஆற்றிய பணி சிறப்பானது. இவர் புதுக்கோட்டை சமஸ்தானம் டவுன், வடக்கு மூன்றாம் வீதியில், அகம்படிய குலத்தில் அய்யாசாமி சேர்வை, நல்லம்மாள் ஆகியோரின் புதல்வராக டிசம்பர் மாதம் 14-ம் தேதி 1859-ஆம் வருடம் பிறந்தார். இளமைக் காலத்தில் திண்ணைப் பள்ளிக் கூடத்தில் கல்வி பயின்ற பிள்ளைக்கு, 'புதுக்கோட்டை சமஸ்தான மன்னர் ஹிஸ்ஹைனஸ் ராமச்சந்திரத் தொண்டைமான்' ஆட்சிகாலத்தில், அவரது தந்தை பார்த்து வந்த லாந்தர் பணியை அரண்மனையில் (ரூ.2.50 பைசா சம்பளம்) பிள்ளை பார்த்து வந்ததால் அனைவரும் 'லாந்தர் மாமுண்டி' என்று அழைத்தனர்.

**சமஸ்தான கச்சேரிகளில் மாண்புண்டியின் ஆர்வம்**

அரண்மனையில் லாந்தர் பணியை பார்த்ததோடு மட்டுமல்லாமல் குஸ்திபோடுவதிலும், நாடகம், லாவணி போன்ற பெரிய குழுக்களுக்கு டேப்பு அடிப்பதிலும் மிகவும் ஆர்வமுடையவராக இருந்ததினாலேயே பிள்ளைக்கு மனோலயம் ஏற்பட்டுவிட்டது. அச்சமயம் புதுக்கோட்டை சமஸ்தான அரண்மனையில் நடைபெறும் நாதஸ்வர கச்சேரிகளையும், நன்னுமியான் – சோட்டுமியான் சகோதரர்கள் ராஜ தர்பாரில் பாடிக்கொண்டு டோலக் வாசிப்பதை கேட்பதிலேயும் ஆர்வம் கொண்டிருந்தார் என அறியப்படுகிறது.

**மாண்புண்டியின் குருகுல வாசம்**

அரண்மனை நாதஸ்வர குழுவில் தவில் வாசித்து வந்த திருக்கோகர்ணம் **மாரியப்பன்** என்பவர் ஒரு திருமண ஊர்வலத்தில் தவில் வாசித்ததை நீண்ட நேரம் ரசித்து கேட்ட பிள்ளை, தவில் வித்வானை நெருங்கி, மிகவும் பணிவுடன் அண்ணா, என்னை நீங்கள் தங்களின் சீடனாக ஏற்றுக்கொண்டு என் கண்களைத் திறந்துவிடவேண்டும் என கேட்டுக்

கொண்டார். உடனே மாரியப்பத் தவில்காரர் மாமுண்டி, உனக்கு லயத்தொழிலில் மிகுந்த ஆர்வமும், நல்ல ஞானமும் இருக்கிறதென்பதை பல சமயங்களில் அறிந்திருக்கிறேன். இன்றுமுதல் நீ **“என் பிள்ளைதான். என் கூடவே இரு எனக்குத் தெரிந்த லய வித்தையை உனக்குப் போதிக்கின்றேன்”** என கூறி தன்னுடைய சீடனாக ஏற்றுக்கொண்டார். அன்றுமுதல் அரண்மனையில் லாந்தர் வேலை நேரம் போக மற்ற நேரங்களில் தன் குருநாதான் உத்தரவுப்படி குருவிற்கு தொண்டுபுரிந்து கொண்டும், தனக்கு போதிக்கும் லய வித்தைகளைப் பயிற்சி செய்து கொண்டும் வந்தார். இதனால் மகிழ்வுற்ற மாரியப்பத் தவில்காரர், லயத் தொழிலில் அதி தீவிரமான அறிவுடைய ஒரு சீடன் தமக்கு கிடைத்ததுடன், தான் கற்பிக்கும் லய வித்தைகளை, இரண்டு கையால் அடிக்க வேண்டிய சொற்கட்டுகளையெல்லாம் ஒரே கையில் அடித்து வருகிறானே என்று அதிசயமடைந்தார். சில காலம் யோசித்துப் பின் ஒருநாள் மான்பூண்டியாபிள்ளையை அழைத்து, **மான்பூண்டி நீ ஒத்தைக்கை வாத்தியத்தில் நான் கற்பிக்கும் பாடங்களை அடித்துத் தயார் செய்து கொள்கிறாயா? என கேட்டதனடிப்படையில்** பிள்ளை மிகுந்த பணிவுடன் ‘குருநாதரின் விருப்பம் எப்படியோ அப்படியே சித்தமாக இருக்கிறேன் என்று கூறினார்.’

### கஞ்சிரா இசைக்கருவியை கண்டுபிடித்தல்

இவரது குருநாதான் விருப்பப்படி, பிள்ளை ஒரு தாளக்கட்டையை கொண்டுவந்து அதைக் குடைந்து அதில் உடும்புத்தோலை கட்டி, அதற்கு காசுபோட்டு ‘கஞ்சிரா’ என்ற ஒத்தைக்கை கருவியை தயார்செய்து, தனது குருநாதரின் முன் வாசித்துக் காண்பித்தார். **“வெளி உலகத்தில் கச்சேரிகளில் இந்த வாத்தியத்தை வாசிப்பதற்கு தங்களின் சம்மதமும் ஆசிர்வாதமும் கிடைத்தால் இதைத் துணிந்து செய்யலாமென்று நினைக்கிறேன்”** என்றார். குருநாதரும் இதைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்து, மாமுண்டி இந்த வாத்தியம் உனக்கு ஏற்றதாய் உள்ளது. இதில் நீ பொய் வித்வானாக விளங்குவாய் என பாராட்டினார்.

### கஞ்சிரா இசைக்கருவியை அரங்கேற்றம் செய்தல்

பிள்ளை கஞ்சிராவில் மிருதங்க சொற்கட்டுக்களை வாசித்து தயார் செய்து கொண்டு பெரிய கச்சேரிகளிலும், பஜனைகளிலும் இசைத்து இதை ஒரு வாத்தியம் (இசைக் கருவி) என வித்வான்கள் ஒப்புக்கொள்கிறார்களா? என்பதை உறுதிபடுத்திக்கொள்ள முடிவு செய்தார். முதலில் தஞ்சாவூரில் வாழ்ந்த பிரபல மிருதங்க வித்வான் நாராயணசாமியப்பாவை சந்தித்து, தன்னை அறிமுகம் செய்து கொண்டபின், தான் கண்டுபிடித்த கஞ்சிரா இசைக்கருவியை இசைத்து, அரங்கேற்றம் செய்துபோகவே வந்தேன் என கூறினார். அதற்கு நாராயணசாமியப்பா இவ்விடம் நாளைக்கு பஜனை நடைபெறும் அதில் உம்முடைய வாத்தியத்தை வாசிக்கும்படி செய்வோம் என்று கூறினார். மறுநாள் இரவு பஜனையில் பிள்ளை அவர்கள் கலந்துகொண்டு கஞ்சிரா கருவியைத் தண்ணீர் தெளித்து தோலை பதப்படுத்தி மெதுவாக தட்டிப்பார்த்து, அங்கு மீட்டிக் கொண்டிருந்த தம்புரா சுருதியில் கஞ்சிராவின் நாதத்தை இணைத்து, மிருதங்கத்தை போலவே சுருதிமயமாகச் சேர்த்து, அங்கு பாடப்பட்ட கீர்த்தனைகளுக்கு ஏற்றபடி கஞ்சிராவில் நடை அமர்த்தி அனைவரையும் வியக்கவைத்தார். அச்சமயத்தில், நாராயணசாமியப்பர் மாமுண்டியாபிள்ளையைப் பார்த்துத், தனியாகவும் வாசிக்க வருமோ? என்று கேட்டார். உடனே தனி ஆவர்த்தனம் வாசித்தார். அங்கிருந்தவர்களில் சிலர் தாளம் போட்டுக்கொண்டே வந்தனர். ஒரு ஜாதியாக அமர்த்திக்கொண்டு போட்டுவரும் தாளத்தில், மற்றொரு ஜாதியாக ஜதிகளை வாசித்து நடைபேதம் செய்து வாசிக்கும் முறை, ஒன்று இருக்கிறதென்று அங்கிருந்தவர்கள் யாருமே கேட்டதில்லை. தாளம் போட்டவர்கள் ஒவ்வொருவராக நின்று இறுதியில் நாராயணசாமியப்பர் மட்டுமே தாளம் போட்டு வந்தார். உடனே நாராயணசாமியப்பர் பிள்ளையைப் பார்த்து இப்படி கஞ்சிரா வாசித்தால் மிருதங்கமே தேவையில்லை. மிருதங்கத்தில் உள்ள சகல அம்சங்களும் இதில் இருக்கிறது. நீ உலகம் போற்றும் மகா வித்வானாக வருவாய் என்று ஆசிர்வதித்து பொன்னாடை அணிவித்து ரூ.10/– சன்மானமும் கொடுத்து சிறப்பித்தார்.

### கஞ்சிரா கண்டுபிடிப்பால் கிடைத்த மதிப்பு நிலை

பிள்ளை கும்பகோணம் சென்று சிவக்கொழுந்து நாயனக்காரர் என்ற நாதஸ்வர வித்வானை சந்தித்து, தான் கண்டுபிடித்த கஞ்சிரா கருவியை அரங்கேற்றம் செய்ய வந்துள்ள விபரத்தை கூறி திருப்படினம் பஞ்சாபகேசசாஸ்திரிகள் மடத்தில் நடைபெற்ற பஜனையில் அனைவரின் முன்னிலையிலும் அனைவரும் வியக்கும்படி இசைத்துக்காட்டினார். லய சம்பந்தமாக அதுவரைக் காணாத புதுமையெல்லாம் கண்ட **சிவக்கொழுந்து நாயனக்காரர், இதுவரை யாராலும் கண்டுபிடிக்கப்படாத இந்த இசைக்கருவியை புதுக்கோட்டை மாண்பூண்டியா பிள்ளையால் நாம் கண்டு ரசித்தோம். ‘கஞ்சிரா வாத்தியத்திற்கும், லய சம்மந்தமான அதீத வழிகளுக்கும், சிருஷ்டிகர்த்தா**

**மாண்புண்டியாபிள்ளை தான்’** என்று பெரிதும் போற்றி மரியாதை செய்து அனுப்பியதாக தரவுகள் தெரிவிக்கின்றன. பின்னர், பிள்ளை பல வித்வான்களிடம் வாசித்துக் காட்டியும், வாதில் வென்றும் சென்னை வந்து சேர்ந்தார். திருவெட்டீஸ்வரன் பேட்டையில் இருந்த போஜ நாயுடு என்ற ஒரு இசை ரசிகர் பிள்ளையை ஆதரித்து அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்தார்.

**மாண்புண்டியின் பெருந்தன்மை**

முன்னொரு காலத்தில் திருவையாறு சுப்பிரமணிய ஐயர் என்ற வித்வான் சென்னையில் மிகவும் பிரபலமாக இருந்தார். அவருக்கு பக்கவாத்தியம் வாசிக்கும்படி பிள்ளையை சிலர் ஏற்பாடு செய்தனர். திருவையாறு சுப்பிரமணிய ஐயர் நான் பாடுவதற்கு நீர் வாசித்துவிட்டால் நான் என்ன செய்ய வேண்டும்? அப்படி நீர் வாசிக்கத் தவறினால் என்ன செய்யவேண்டும்? என்பதை முடிவு செய்து கொண்டு கச்சேரியை நாம் ஆரம்பிக்கலாம் என்று கூறினார். அதற்கு பிள்ளை, தற்சமயம் நீங்கள் எது வேண்டுமானாலும் பந்தயம் கட்டும்படியான நிலையில் உள்ளீர்கள். என்னிடம் இந்த கஞ்சிராவைத் தவிர வேறொன்றுமில்லை. ஆதலால், நான் வாசிக்கத் தவறினால் இன்றுடன் இந்த வாத்தியத்தை அரங்கேற்றம் செய்யாமல் சமுத்திரத்தில் கொண்டுபோய் விட்டுவிடுகிறேன். நம்முடைய தொழிலே பந்தயம் என்றார். சுப்பிரமணிய ஐயரும் அதற்கு இணங்கி நான் தோற்றுவிட்டால் நான் உங்கள் கையை பிடித்து என்னுடைய ஸ்தானத்தில் உங்களை அமர்த்திவிட்டு அத்தோடு இந்த தொழிலை செய்வதில்லை எனக் கூறி, கச்சேரியை ஆரம்பித்தார்கள். சுப்பிரமணிய ஐயர் நெடுங்காலமாக தான் தயார் செய்து வைத்த அபூர்வ பல்லவியைப் பாடினார். அந்த பல்லவியை பாடக்கேட்டவுடனேயே பிள்ளை வாசித்துவிட்டு, இன்னும் அதில் அநேகவிதமான மனோதர்மங்கள் வாசித்துக் காட்டவே, அதனைக் கேட்டு, வியப்புற்ற திருவையாறு சுப்பிரமணிய ஐயர் மேடையில் எழுந்து நின்று நான் புதுக்கோட்டை மாண்பூண்டியர்பிள்ளையிடம் தோற்றுவிட்டேன். இனிமேல் அவர் தான் என் நிலையில் இருக்கவேண்டும் என்றார். அதைக் கேட்ட பிள்ளை என் வித்தையை இவ்வளவு தூரம் செய்துகாட்ட இடம் தந்தீர்களே நீங்களே உட்காருங்கள் என்றார். சபையில் கூடி இருந்தவர்கள் அனைவரும் பிள்ளையின் பெருந்தன்மையையும், நோக்கத்தையும் கண்டு மிகவும் போற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

**மாண்புண்டியின் சீடர்கள்**

தமிழ்நாடு முழுவதும் பல இசை நிகழ்ச்சிகளில் கஞ்சிரா இசைக்கருவியை இசைத்து, **கர்நாடக இசை உலகிற்கு கஞ்சிரா என்ற ஒரு பெரிய ஆபரணத்தை மாண்பூண்டியர் பிள்ளை அளித்தார்** என்று கூறினால் மிகையாகாது. கஞ்சிரா என்ற இசைக்கருவி மாண்பூண்டியர்பிள்ளையால் இசையுலகிற்கு அளிக்கப்பட்ட மிகப்பெரிய கொடையாகும். பிள்ளையிடம் பலர் சீடர்களாக இருந்தனர். அதில் குறிப்பிடத்தக்கவர்கள் புதுக்கோட்டை தெட்சிணாமூர்த்திபிள்ளை, பழநி முத்தையர்பிள்ளை, சேத்தூர் ஜமீன்தார் போன்றவர்களாவர். நாடக ஆசிரியரான சங்கரதாஸ்சுவாமிகள், பிள்ளையிடம் பல ஆண்டுகள் சீடராக இருந்து லய சம்பந்தமான பல நுணுக்கங்களை கற்றார்.

**மாண்புண்டியின் கற்பித்தல் பணி**

பிள்ளை தன்னுடைய மனோபாவத்திற்கு ஏற்றார்போல் ஒரு பாடகரைத் தயார் செய்து வைக்கவேண்டுமென்று நோக்கம் கொண்டார். ஆகையால் கோனேராராஜபுரம் வைத்தியனாத பாகவதரை தயார் செய்து, அவருடைய கச்சேரிகளில் தம்முடைய கஞ்சிரா வாத்தியத்துடன், தம்முடைய சீடர்களான புதுக்கோட்டை தெட்சிணாமூர்த்தி பிள்ளையையும், பழனி முத்தையர் பிள்ளையையும் மிருதங்கம் இசைப்பதற்கு அந்த கச்சேரிகளில் கலந்து கொள்ளச்செய்து, அடிக்கடி பல ஊர்களில் கச்சேரியை நடத்தி, தம்முடைய கஞ்சிரா வாத்தியத்தை உலகப் புகழடையச் செய்து கொண்டே, தன்னுடைய சீடர்களையும் புகழடையச் செய்த பிள்ளையின் இசைப்பணி போற்றுதற்குரியதாகும். முருகப்பெருமானின் மேல் பக்தி கொண்டிருந்த பிள்ளை, தன் வீட்டில் வேல் ஒன்றை வைத்து அதற்கு தினமும் பூஜை செய்துவந்தார். அதுசமயம் 10 நாட்கள் வரை, தமிழ் நாட்டில் உள்ள அனைத்து வித்வான்களும், பிள்ளையின் வீட்டிற்கு வருகைபுரிந்து கச்சேரிகளை நிகழ்த்தி வருவது வழக்கமாக இருந்தது.

**மாண்புண்டியின் லயத்திறமையினால் ஈர்க்கப்பட்ட தெட்சிணாமூர்த்திப்பிள்ளை**

பிள்ளையின் கஞ்சிரா நாதத்தினாலும், லய சம்பந்தமான அபூர்வமான வழிகளினாலும் பெரிதும் ஈர்க்கப்பட்ட காரைக்குடி வீணை சகோதரர்களும், ஜலதரங்கம் சுப்பையரும் தம் கச்சேரிகளில் பிள்ளையின் கஞ்சிராவை மிகவும் முக்கியமாக சேர்த்துக்கொண்டு பல நிகழ்ச்சிகளை நடத்தி வந்தது குறிப்பிடத்தக்கது. புதுக்கோட்டை தெட்சிணாமூர்த்திபிள்ளை அடிக்கடி மாண்பூண்டியர் பிள்ளையைப் பற்றிப் பேசும்போதெல்லாம் அவர்களைப் பற்றி லய சம்பந்தமாக பேசவேண்டுமானால் நமக்கும், ஆதிசேஷனைப் போல ஆயிரம் நாவுகள் இருந்தால் நாம் பேசலாம் என்றும்,

பாசுபதாஸ்திரத்துக்கு இணையும் எதிர்ப்பும் எவ்விதம் இவ்வுலகில் இல்லையோ, அதுபோல் மாண்பூண்டி அண்ணாவின் லய சம்பந்தமான காரியங்களுக்கும் இணையும் இல்லை எதிர்ப்பும் இல்லை இதை முருகன் அறிவார் இது சத்தியம் என்று மெய்மறந்து பேசிப் போற்றினார் எனக் கூறுப்படுவதன் வாயிலாக மாண்பூண்டியர் பிள்ளையின் இசைத்திறன் அறியப்படுகிறது.

**முருகானந்தசாமியின் இறுதிகாலம்**

புதுக்கோட்டை சமஸ்தானத்திற்கு தனது இசைப்பணியின் வாயிலாகப் பெரும் புகழை சேர்த்தும், கர்நாடக இசை உலகத்திற்கு கஞ்சிரா என்ற இசைக் கருவியாகிய பெரிய ஆபரணத்தை அளித்த மகான் மாண்பூண்டியர்பிள்ளை தம்முடைய 62-ஆம் வயதில் சன்னியாசம் மேற்கொண்டு முருகானந்தசாமி என்ற பெயருடன், துன்மதி வருடம், தை மாதம் 4-ஆம் தேதி, 1922-ஆம் வருடம் (ஜனவரி மாதம் 17-ஆம் தேதி), செவ்வாய் கிழமை தம்முடைய இல்லத்திலேயே, வேல்வைத்து பூஜை நடத்திய சந்நிதானத்தின் முன்பாகவே, தம்முடைய சீடர்களை பஜனை செய்யும்படி தெரிவித்தார். பஜனை பாடியவர்களை திருப்புகழ் பாடும்படிக் கூறி அப்பொழுதே இயற்கை எய்தினார். புதுக்கோட்டை சமஸ்தானத்தில் லாந்தா வேலைபார்த்து வந்த மாண்பூண்டியர்பிள்ளை மிகச்சிறந்த கஞ்சிரா வித்வானாகத் திகழ்ந்ததற்கும், கஞ்சிராவை கண்டு பிடித்து, இசையுலகிற்கு அளித்ததற்கும், இசையுலகில் புதுக்கோட்டையை ஒரு லயக்கோட்டையாக ஒளிவீசச் செய்ததற்கும் சமஸ்தானத்தின் அரண்மனை மிகப்பெரிய வாய்ப்பினையும், ஊக்கத்தினையும், அங்கீகாரத்தையும் அளித்திருந்தது என்பதை சமஸ்தானத்தின் இசைவரலாற்றுப் பதிவுகள் புலப்படுத்துகின்றன.

# சங்க இலக்கியத்தின் வழி அறியலாகும் திருமாலின் திருத்தலங்களும் உறைவிடங்களும்

*இரா.ஜெயந்தி, *முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, ந.க.ம கல்லூரி, பொள்ளாச்சி – 642 001.*

திருமாலின் திருத்தலங்களைக் குறித்து, **"திருமால் உறையக்கூடிய திருத்தலங்களை சங்கப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. இருந்தையூர், குளவாய், திருவரங்கம், திருவெஃகா, திருவனந்தபுரம் திருமாலிருஞ்சோலை"** போன்ற திருத்தலங்கள் குறிப்பிடப்படுகின்றன. இவற்றுள் முதலிரண்டு பதிகளைப் பற்றிய குறிப்பு பரிபாடல் திரட்டில் வரும் திருமால் பாடல்கள் தொவிக்கின்றன.

**"இந்தச் செய்யுள் வாயை நீயே**
**எடுத்துக்காட்டி எழுதலாமே"** **(பா, திரட்டு, 1:5)**

இருந்தையூர் மதுரைமக்கள் சென்று வழிபடும் வகையில் வையைக் கரையிலே அமைந்திருந்தது. இருந்தையூர்க் கோயிலை சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர் ஸ்ரீ இருந்த வளமுடையார் கோயில் என்கிறார். (சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும்). குளவாய் என்பதும் மதுரையைச் சார்ந்த தலமாகவே குறிப்பிடப்படுகிறது.

இருந்தையூர், குளவாய், திருவரங்கம், திருவெஃகா, திருவனந்தபுரம், திருமாலிருஞ்சோலை ஆகிய இயற்கைசார் இடங்களே திருமால் உறையக்கூடிய தலங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. திருமால் உறையக்கூடிய ஒவ்வொரு இடங்களின் சிறப்பையும், சங்கப் பாடல்கள் வழி நின்று அறியமுடிகின்றன.

**திருமால் இருந்தையுரில் வீற்றிருத்தல்**

நீர்ப்பெருக்கு எடுத்து ஒடுகின்ற வையை ஆற்றின் கரையில் இருந்தையூர் என்னும் இடத்தில் திருமால் எழுந்தருளியுள்ளதை,

**"வான் ஆர் எழிலி மழைவளம் தந்த**
**தேன் ஆர் சிமைய மலையின் இழிதந்து**
**நான் மாடக் கூடல் எதிர்கொள்ள ஆனா**
**மருந்து ஆகும் தீம் நீர் மல்துறைமேய**
**இருந்தையுர் அமர்ந்த செல்வ"** **(பா, திரட்டு, 1-5)**

என்னும் அடிகள் விளக்குகின்றன. வையை ஆறு தோன்றக்கூடிய இடமாகிய சையமலையில் வானத்திலிருந்து மேகங்கள் மழையை மிகுதியாகப் பொழியச்செய்கின்றன.

**குளவாயில் திருமால் வீற்றிருத்தல்**

குளவாய் என்னும் இடமானது மதுரையைச் சார்ந்த தலமாக (சங்கத்தமிழரின் வழிபாடும் சடங்கலை, ப.37) உ.வே.சா குறிப்பிடுகிறார். இப்பகுதியில் திருமான் பாம்புப் படுக்கையாகிய ஆதிசேடனுக்குரிய கோயில் இருந்ததை,

**"தொல்சீர்**
**வரைவாய் தழுவிய கல்சேர் கிடக்கைக்**
**குளவாய் அமர்ந்தான் நகர்"** **(பரி, தி. 1:63)**

என்னும் அடிகள் தெரிவிக்கின்றன. குளவாய் என்னும் பகுதியானது தொன்மை மிக்கதாகவும், புகழை உடையதாகவும் மலைப்பகுதியாகவும் விளங்கியது. குளவாய்ப் பகுதியில் கல்நிலத்தில் ஆதிசேடனின் திருக்கோயில் காணப்பட்டதை அறியமுடிகின்றன.

**திருவரங்கத்தில் திருமால் கோயில்**

சோழான் உறையுரை அடுத்து விளங்கக்கூடிய திருவரங்கத்தில் பங்குனி உத்தரத் திருவிழாவைப் பற்றிய குறிப்புக் காணப்படுவதால் திருவரங்கத்தில் திருமால் கோயில் இருந்ததை அறியமுடிகின்றன. இதனை,

**"வருபுனல் நொதரும் இருகரைப் போயாற்று**

**உருவ வெண்மணல் முருகுநாறு தண்பொழிற்**

**பங்குனி முயக்கம் கழிந்த வழிநாள்**

**வீஇலை அமன்ற மரம்பயில் இறும்பில்**

**தீஇல் அடுப்பின் அரங்கம் போல"**

**(அகம், 137:7-11)**

என்னும் அடிகளால் அறியமுடிகின்றன. காவிரியாற்றின் நீர்ப் பெருக்கினால் கரைகள் இடிந்து விழக்கூடியதாக இருந்தன. கரையில் வெண்மையான மணலும், குளிர்ச்சி பொருந்திய சோலை காணப்பட்டது. அந்தச் சோலையில் உத்தர நட்சத்திரமும் பௌர்ணமியும் இரண்டும் சேர்ந்த நல்ல நாளில் பங்குனி உத்தரத் திருவிழா நடைபெற்றது.

அங்குள்ள அடர்ந்த காட்டில் மரங்களும், பூக்களும் காணப்பட்டன. பங்குனி உத்தரத் திருவிழா நடைபெற்று முடிந்த அடுத்த நாளில் தீருவாரங்கத்திலுள்ள அடுப்பூக்களானது நெருப்பு இல்லாமல் வெறுமையாக இருந்தது என்பதனைப் பாடல் வரிகள் மூலம் அறியமுடிகின்றன்.

திருவரங்கமானது கடற்கரையையும், சோலைகளும் சூழ்ந்த இடமாக விளங்கியதை உணரமுடிகின்றது. திருவரங்கத்தின் இயற்கை அழகு சூழ்ந்த இடத்தைத் திருமால் உறையக்கூடிய இடமாக இருந்துள்ளதையும் அறியமுடிகின்றன. இருந்தையூர், குளவாய் போன்ற இடங்களைப் போல திருவரங்கமும் இயற்கைசார் வழிபாட்டு இடமாக விளங்கியதைப் பாடல் வரிகள் அறிவிக்கின்றன. திருவரங்கம் ஒரு ஊராகக் கருத்தப்படாமல் அழகு நலமுடைய ஆற்றிடைக் குறையாகக் கருதப்பட்டதாகப் பாடல்கள் மூலம் கருதவேண்டியுள்ளது.

**"அந்தில் அரங்கத்து அகன்பொழில் அகவயில்"**

**(சிலம்பு, 11:6)**

என்று திருவரங்கம் குறித்து சிலப்பதிகாரப் பாடல் வழி அறியமுடிகின்றன.

**திருவெஃகாவில் திருமால் தங்கியிருத்தல்**

திருவெஃகா என்னும் சோலைகளில் திருமால் உறைந்திருப்பதை,

**"……………………… நிடுகுலைக்**

**காந்தள்அம் சிலம்பில் களிறுபடிக் தாங்கு**

**பாப்பணைப் பள்ளி அமர்ந்தோன் ஆங்கண்**

**வெயில் நுழைபு அறியா, குயிலநுழை பொதும்பர்"**

**(பெரும்பா: 372-375)**

என்னும் அடிகள் தெரிவிக்கின்றன. நீர்த்துறையிலிருந்து சிறிது தூரத்தில் ஒருமலை காணப்படுகின்றது. அந்த மலையில் காந்தள் மலான் பூங்கொத்துக்கள் காணப்படுகின்றன. மலையில் யானை கிடப்பதைப் போல பாம்பணையில் கிடந்த திருமால் திருவெஃகாவில் பள்ளி கொண்டுள்ளார். என்று திருவெஃகாவின் சிறப்பு குறித்துக் கூறப்பட்டுள்ளன. அங்குள்ள சோலைகளில் கதிரவன் நுழைந்து செல்ல முடியாதபடி மரங்கள் அடர்த்தியாக உள்ளன. கதிரவனால் நுழைய முடியாத இடத்தில் குயில்கள் நுழைந்து செல்லக்கூடிய காட்சியையும் பாடல் வரிகள் மூலம் விளக்குவதை அறியமுடிகின்றன.

திருவெஃகா என்பது காஞ்சியில் உள்ள திருமால் திருப்பதியாகும். திருமாலின் நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்றாகக் குறிப்பிடப்படுகின்றது. இத்திருப்பதியில் பாம்புப் படிக்கையில் கிடப்பதைப் போன்று காட்சியளிக்கிறார். ஆயிரம் தலைகளை உடைய ஆதிசேடனின் பாம்புப் படுக்கைக்கு காந்தள் மலர் புத்த பக்கமலை உவமையாகக் கூறப்பட்டுள்ளது. மலையில் உள்ள களிறு போன்று திருமால் பள்ளி கொண்டிருக்கிறார் என்று திருமாலுக்குக் களிறு உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

திருமால் மரங்கள் மிகுதியாகக் காணப்படும் சோலைகள் திருமால் பள்ளி கொள்வதற்கான தலமாக விளங்குகின்றது. நீர், மலை, குன்றைப்போலவே மரங்கள் அதிகமாக உள்ள சோலைகளும் வழிபாட்டு இடங்களாகத் திகழ்ந்ததை திருமால் உறைந்துள்ள இடம் பற்றி குறிப்பிடுவதிலிருந்து அறியமுடிகின்றன. திருமாலின் மற்ற உறைவிடங்களைப் போன்றே திருவெஃகாவும் நீர்வளமும், மரங்கள் சூழ்ந்த சோலையாகவும் விளங்குவதைப் பாடல் அடிகள் உணர்த்துவதன் மூலம் தெளிவாகின்றன.

திருமாலுக்கு களிற்றை உவமையாகக் கூறியிருப்பதைப் போன்றே திருங்கை யாழ்வாரும்,

**“உறியார்ந்த நறுவெண்ணெய் ஒளயாற் சென்றங்கு**
**உண்டானைக் கண்டாய்ச்சி உரலோடு ஆர்க்கத்**
**தறியார்ந்த கருங்களிறே போல நின்று**
**தடங்கண்கள் பனிமல்கும் தன்மையானை”**

**(பெரிய திருமொழி, 2:10:6)**

என்று குறிப்பிடுகின்றார். சோலையில் வெயில் நுழைய முடியாததைக் குயில் நுழையக்கூடியதாக விளங்கியதை,

**“வெயின்லானி யறியாத விரிமாத் தண்காவில்**
**குயிலாலும்”**

**(கலி, 30:7-8)**

என்ற பாடல் அடிகளும் குறிப்பிடுகின்றன.

**திருமாலிருங்குன்றத்தில் திருமால் வீற்றிருத்தல்**

திருமாலும் திருமாலின் சகோதரளான பலராமனும் தங்கியிரக்கும் திருமாலிருங்குன்றானது மிகுந்த சிறப்பு வாய்ந்ததாக,

**“புல வரை அறியாப் புகழொடு பொலிந்து**
**நில வரைத் தாங்கிய நிலைமையின் பெயராத்**
**................. ................. .................”**

**( பரி, 15:1-2 )**

என்னும் பாடல் அடிகள் குறிப்பிடுகின்றன.

மலைகள் நில எல்லைகளைத் தாங்கி நிற்கும் பணியைச் செய்கின்றன. அந்த மலைகள் சிறப்பினை அறிவின் எல்லையால் அறியமுடியாதபடி மிகுந்த சிறப்புடன் விளங்குகின்றன. பல மலைகள் இருந்த போதிலும் நிலத்திலுள்ளவர்களின் பசியாகிய வெம்மையைப் போக்கி மற்றவர்களுக்கு அதிகமான பயன்களை சில மலைகளே விளைவிக்கின்றன. அத்தகைய சிறந்த மலைகளின் வரிசையில் திருமாலிங்குன்றமும் காணப்படுகின்றது. தெய்வங்களே விரும்பும் அளவு விறப்புப்பெற்றிருந்த திருமாலிருங் குன்றமே திருமாலும், பலதேவனும் தங்கியிருக்கும் தலமாக உள்ளது.

மலையிலிருந்து தோன்றி கல் என்ற ஓசையுடன் ஒலிக்கக்கூடிய கடலும், கடற்கரை நிறத்தால் மாறுபட்டாலும் அருகருகே உள்ளன. அதேபோன்று சொல்லும், பொருளும் எப்பொழுதும் ஒன்றாக இணைந்தே காணப்படுகின்றது. கடலும், கடற்கரையும் போலவும், சொல்லையும் பொருளையும் போலவும் நிறத்தாலும், தொழிலாலும் பலராமனும், திருமாலும் வேறுபட்டுக் காணப்படுகின்றனர். தொழிலாலும், நிறத்தாலும் வேறுபட்டாலும் இருவரும் இணைந்தே திருமாலிருங்குன்றத்தில் தங்கியிருக்கின்றன. இருவரும் தங்கியிருப்பதால் குன்றம் எப்பொழுதுமே நிலைத்து நிற்கக் கூடியதாக விளங்குவதைப் பாடல் அடிகள் குறிப்பிடுகின்றன.

திருமாலிருங்குன்றம் தெய்வங்களே விரும்பி உறையக்கூடிய அளவு சிறப்புப் பெற்றுத் திகழ்கின்றது தெய்வங்கள் மலைகளில் விரும்பி உறைவதையும் பாடல் வரிகள் எடுத்துக்கூறுகின்றன. திருமால் உறையும் இடங்களில் மலையும் சிறப்பிடம் பெற்றுத் திகழ்வதை அறியமுடிகின்றன.

சிறப்புப் பொருந்திய மலையே திருமாலின் உறைவிடமாகக் கொள்ளப்படுகின்றது. குன்றுகள் பசியின் கொடுமையைப் போக்கக்கூடிய பணியைச் செய்வதை அறியமுடிகின்றன. திருமாலும், பலராமனும் இணைந்து இருப்பதால் குன்றின் சிறப்பானது மேலும் மிகுந்த புகழை உடைளயதாய் விளங்குவதையும் பாடல் வரிகள் பதிவு செய்கின்றன. திருமாலும், பலராமனும் நிறத்தால் வேறுபட்டு இருந்தாலும் இருவரும் இணைந்தே இருப்பதைக் காணமுடிகின்றன. ஒருநாட்டிற்கு மலை சிறப்புடையதாக விளங்குவதை,

**“தேன் தூங்கும் உயர்சிமைய மலை**
**நாறிய வியன் ஞாலத்து”**

(மதுரை 3-4)

என்னும் அடிகளிலும்,

**“சினமிகு முருகன் தண்பரங்குன்றத்து”**

**(அகம், 59:9)**

என்னும் பாடல் அடியிலும் குறிப்பிடுவதிலிருந்து நாட்டில் உயர்வுடையதாய் மலைகள் விளங்குவதைப் பாடல் அடிகள் எடுத்துக் கூறுகின்றன.

திருமாலும், பலராமனும் போல கடலும் கானலும் விளங்குவதை,

**“மாயவனும் தம்முனும் போலே மறிகடலும்**
**கானலும் சேர் வெண் மணலும் காணாயோ”**

**(திணைமா, 58)**

என்னும் அடிகளில் திருமால், பலராமன் ஒன்றாகச் சேர்ந்தே இருப்பதைப் பாடல் வரிகள் உணர்த்துகின்றன. திருமாலிருஞ் குன்றத்தின் சிறப்புக் குறித்து,

**“தென்கொடு இசைக்குத் திலதமாய் என்ற**
**திருமாலிருஞ்சோலை மலை”**

**(திருவாய், 10:7:4)**

என்று நம்மாழ்வார் திருமாலிருங்குன்று குறித்துப் புகழ்ந்த பாடுவதையும் காணமுடிகின்றது. மலைகளில் தெய்வங்கள் உறையும் என்ற நம்பிக்கை திருமாலிருங்குன்றத்தில் திருமால் தங்கியிருப்பதன் மூலம் தெளவாகின்றது.

**ஆலமரமும் ஆற்ஷீடைக் குறையும்**

திருமால் உறையக்கூடிய பல இடங்கள் குறித்து,

**"அழல் புரை குழை கொழு நிழல் தரும் பல சினை**
**ஆலரும் கடம்பும் நல் யாற்று நடுவும்**
**கால் வழக்கு அறுநிலைக் குன்றமும் பிறவும்**
**அவ்வவை மேவிய வேறு வேறு பெயரோய்"**

**(பா, 4:66-68)**

என்னும் அடிகள் குறிப்பிடுகின்றன. ஆலமரம் நெருப்பின் நிறத்தையும் இளந்தலைகளையிம் நிழல்தரும் பல கிளைகளையும் உடையது. அந்த ஆலமரமானது திருமால் உறைவிடமாகக் கருதப்பட்டுள்ளது. ஆற்றிடைப்பகுதியும், காற்று இடையில் புகாத மலைகளும், ஏனைய இடங்களும் அந்தந்த இடங்களுக்குப் பொருத்தமாக பல தெய்வப்பெயர்களுடன் திருமால் காணப்படுகின்றன.

திருமால் உறையும் இடத்திற்கு ஏற்றபடி பல பெயர்களில் வழங்கப்பட்டிருப்பதை அறியமுடிகின்றன. ஆலமரத்தின் கீழ் முனிவர்களுக்கு அறம் கூறும் சிவபெருமானாக தட்சிணாமூர்த்தியாகவும் வீற்றிருக்கின்றான். கடம்ப மரத்தில் முருகனாகவும், ஆற்றிடைக் குறையில் திருமாலாகவும் காட்சியளிக்கின்றான். திருமால் ஒருவனே உறையும் இடங்களுக்கு ஏற்ப பல பெயர்களிலும் அறியப்படுவதாகப் பாடல் அடிகள் எடுத்துரைக்கின்றன.

மரங்கள் வழிபாட்டுப் பொருளாகக் கொண்ட இயற்கை வழிபாட்டை திருமால் தம் உறைவிடமாகவும் கொண்டுள்ளதிலிருந்து மரவழிபாட்டின் முக்கியத்துவம் குறித்து அறிவதற்கு சங்கப் பாடல்கள் சான்று அளிக்கின்றன. ஆற்றல் வாய்ந்த மரங்களை திருமால் உறைவிடமாகக் கொண்டுள்ளதைப் பாடல்அடிகள் மூலம் அறியமுடிகின்றன. மரவழிபாட்டின் வளர்ச்சிப் போக்கையும் அறியமுடிகின்றன.

திருமாலின் திருத்தலங்களும் உறைவிடங்களும் இயற்கை சார்ந்த இடங்களகவே காட்சியளிப்பதை அறியமுடிகின்றன.

# இராஜம் கிருஷ்ணன் புதினங்களில் காணலாகும் வர்க்கப் போராட்டம்

*K.விஜயலட்சுமி, *முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை, தேசியக்கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி – 620 001.*

தமிழ் மொழிக்கு மேனாட்டார் தொடர்பால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் கிடைத்த புதிய வகை இலக்கிய வடிவம் புதினம் ஆகும். புதினம் என்பது 'நாவல்' (*Novel*) என்னும் ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கம் ஆகும். ஆரம்ப காலத்தில் இது 'நவீனம்' என்றே அழைக்கப்பட்டது.

தமிழில் 1879ஆம் ஆண்டில் மாயுரம் வேதநாயகம்பிள்ளை அவரகளால் எழுதப்பட்ட 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்ற நூலே தமிழில் தோன்றிய முதல் புதினமாகும்.

தமிழ் மண்ணில் தன் பயணத்தைத் தொடங்கிய தமிழ்ப் புதினம் இன்று இந்தியாவின் மாநில எல்லைகளைக் கடந்து எண்ணிக்கையாலும் தரத்தாலும் உலக அளவிற்குச் சென்றுள்ளது. உத்திகள், உருவம், உள்ளடக்கம் ஆகிய மூன்று இயல்புகளையும் உள்ளடக்கிக்கொண்டு உலகத்தரம் வாய்ந்த உன்னதமான புதினங்கள் தமிழில் வெளிவந்துள்ளன. இருபதாம் நூற்றாண்டு மக்கள் வாழ்வின் அனைத்துக் கூறுபாடுகளையும் பிரதிபலிக்கும் பத்தாயிரத்திற்கும் அதிகமான புதினங்கள் படைக்கப் பட்டுள்ளன. இருபதாம் நூற்றாண்டைத் தமிழ்ப் புதின இலக்கியத்தின் பொற்காலம் என்றே அழைக்கலாம்.

இக்காலக்கட்டத்தில் வெளவந்த புதினங்களுள் வர்க்க முரண்பாட்டைக் கருப்பொருளாகக் கொண்ட நூல்கள் மிகக்குறைவே ஆகும். பாடாளிகள் படும் பாட்டையும், பொருளாதார விடுதலை ஒன்றே அவர்களின் உண்மையான விடுதலை. அதை அடைவதற்கு ஒரே வழி வரக்கப் போராட்டமே ஆகும் என்பதையும் வலியுறுத்தி வெளிவந்த புதினங்களுள் குறிப்பிடத்தக்கவை தொ.மு.சி. ரகுநாதனின் 'பஞ்சும் பசியும்', டி. செல்வராஜின் 'தேனீர்', 'மலரும் சருகும்', ஐசக் அருமைராஜனின் 'கீறல்கள்', பொன்னீலனின் 'கரிசல்', தனுஷ் கோடி ராமசாமியின் 'தோழர்' ஆகியவையாகும்.

உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் வர்க்கப் போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனாலும் அவற்றை இலக்கியத்தில் வெளிப்படுத்தத் துணிந்தவர்கள் மிகச் சிலரே ஆவர். அவர்களுள் துணிச்சல் மிக்க படைப்பாளராகத் தன்னிகரற்று விளங்குகிறார் இராஜம் கிருஷ்ணன்.

இராஜம் கிருஷ்ணன் இருபத்தைந்து புதினங்களையும், பதினேழு குறும் புதினங்களையும், நூற்றுக்கணக்கான சிறுகதைகளையும் எழுதியுள்ளார். எல்லாப் படைப்புக்களிலும் மனிதாபிமானமும், சமூக உணர்வும் நிறைந்து காணப்படுகிறது. 'இராஜம் கிருஷ்ணன் புதினங்களில் காணலாகும் வர்க்கப்போராட்டம்' என்பதே ஆய்வுப் பொருளாகும். ஆதலால் பாட்டாளி வர்க்கத்தின் வாழ்க்கைப் போராட்டத்தைப் பற்றிப் பேசும், சேற்றில் மனிதர்கள், அலைவாய்க்கரையில், கரிப்பு மணிகள், கூட்டுக் குஞ்சுகள் ஆகிய நான்கு புதினங்கள் மட்டுமே ஆய்வுப் பரப்பின் எல்லையை வரையறுக்கின்றன.

நிலவுடைமைச் சமுதாயத்தையும், முதலாளித்துவத்தின் போக்குகளையும், பாட்டாளி வர்க்கம் படும்பாட்டையும் பற்றிய இந்த ஆய்வுக் கட்டுரை இயக்கவியல் நெறிகளைப் பின்பற்றிச் சமுதாயவியல் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.

இராஜம் கிருஷ்ணனின் புதினங்கள் உழைப்பாளிகளின் எளிமையான வாழ்க்கையையும், அவர்களின் வர்க்கப் போராட்டங்களையும் சித்திரிப்பதில் அதிக அக்கறை காட்டுகின்றன.

இராஜம் கிருஷ்ணன் தமது கதைக்கான களங்களுக்கு நேரடியாகச் சென்று, எண்ணற்ற இடர்ப்பாடுகளைச் சந்தித்து, உற்று நோக்கி, ஆய்வு செய்து, புதினம் என்ற கலை வடிவத்தைப் பயன்படுத்தி வர்க்கப் போரினை வெளிப்படுத்துவதில் வெற்றி காண்கிறாா். சமுதாய ஆய்வை நிகழ்த்தி சமூகப்புரட்சி பற்றிப் பேசும் இவர், இயக்கவியல் பற்றியும் சமுதாயவியல் பற்றியும் எந்த அளவு அறிவு பெற்றிருக்கிறார் என்பதற்கு இவருடைய புதினங்களே விடை சொல்லும் என்பதில் ஐயமில்லை.

புதினங்களின் கதைப் பின்னலும், காட்சி சித்திரிப்பும், இயற்கை வருணனையும், படைப்பாளரின் மொழி நடையும், பாத்திரங்களின் உரையாடலும், நிகழ்ச்சிகளின் ஒட்டுமொத்த இயைபும் சிறப்பாக அமைந்துள்ளன. புதின வடிவ விதிகளுக்கு இலக்கியமாகத் திகழும் வல்லமை பெற்றவை இவருடைய புதினங்கள் என்பதில் ஐயமில்லை.

இவருடைய புதினங்களில் தன்னிகரற்ற தலைமைப் பாத்திரங்கள் இல்லை. சராசரி மனிதர்களே சமர் புரியும் பேராளிகளாக வருகிறார்கள்.

இராஜம் கிருஷ்ணன் தாம் பேசுவதைவிட அழுத்தமாக நிகழ்ச்சிகளைப் பேச வைக்கிறார். வாசகர்கள் உபதேசிக்கப்படாமல் உணர்த்தப்படுகிறார்கள். கேட்பதற்குப் பதிலாகக் காண்கிறார்கள். கலைநுட்பம் செறிந்த இவர் மொழியைச் சரியாகக் கையாளும்போது ஓவியராக மாறிவிடுகிறார்.

வர்க்கப் போராட்டங்களை மையமாகக் கொண்டு எழுதப்படும் புதினங்களில் பொதுவாக ஏற்படும் சிக்கல் ஒன்றுண்டு. அழகியல் குறைந்தால் வெற்றுப் பிரச்சாரமாகப் போய்விடும். அழகியல் உணர்வு மிகுந்தால் வர்க்கப் போராட்டத்தின் வலிமை புலப்படுத்தப்படாமல் போய்விடக்கூடும்.

இராஜம் கிருஷ்ணன் இந்தச் சங்கடம் நேராமல் புதினம் படைக்கிறார். கலைத்திறமும், கதைப் பொருளும் சரியான விகிதத்தில் கலக்கப் பட்டிருப்பதால் அவரதம் புதினங்கள் இலக்கிய வளர்ச்சிக்கு உதவுவதோடு சமுதாயப் பயனையும் விளைவிக்கின்றன.

ஆரவாரமான சொல்லடுக்குகள், அலங்காரமான வருணனைகள் இல்லாமல், கண்ணுக்கு முன்னர் தெரிவதை எளிமையான நடையில், இயல்பான வருணனைகளோடு இவர் தருவது கதைக்கு வலிமை சேர்க்கிறது.

இவருடைய எழுத்துக்கள் போராடும் மக்களுக்குப் புதிய விடியலைக் காட்டுமா? அவர்கள் வாழ்வை உயர்த்துவதற்கு வழிகாட்டும் வல்லமை பெற்றவையா? என்பதை அறிவதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

“சேற்றில் மனிதர்கள்” என்னும் புதினம் தஞ்சை மாவட்டத்தில் வாழும் உழவுத்தொழில் செய்யும் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கைப் போராட்டத்தை விவரிக்கிறது. கூலிக்குப் பாடுபடும் பாட்டாளிகள், குத்தகை நிலத்தில் உழைப்போர், நில உச்சவரம்புச்சட்டத்தின் செயல்பாட்டில் கைப்பற்றப்பட்ட நிலத்தைப் பெற்று உழவு செய்வோர் ஆகியோரின் வாழ்வியல் சிக்கல்களை இப்புதினம் ஆராய்கிறது. பண்ணையார்களின் மனிதாபிமானம் இல்லாத செயல்பாட்டையும் இப்புதினம் வெளிப்படுத்துகிறது. அரிசனங்கள் என்ற பெயர்மாற்றமும், ஆலயப் பிரவேசச் சட்டமும், நில உச்சவரம்புச்சட்டமும், கூலி தொடர்பான சட்டம் என்று இன்னும் எத்தனையோ சட்டங்கள் தீட்டப்பட்டன. திட்டங்கள் போடப்பட்டன. இருப்பினும் பாட்டாளி வர்க்கத்தின் வாழ்வில் ஏற்றம் ஏதும் வந்தபாடில்லை. எதைச் சாதிப்பதற்காகச் சட்டங்கள் உருவாக்கப்பட்டனவோ, அதை அவை சாதிக்காதபோது போராட்டம் தவிர்க்க முடியாததாகிறது.

தொழிற்கல்வி கற்க விரும்பும் பெண்ணை ஏமாற்றி விபச்சாரத்தில் வீழ்த்திட முனைகிறது உடைமை வர்க்கம். கோயிலைக் காரணம்காட்டி, பாட்டாளிகள் குடியிருக்கும் குடிசைகளைப் பிய்த்து எறிகிறது முதலாளித்துவம். எதிர்த்துப் போராடப் புறப்படும்போது கோயில் கொள்ளை வழக்கு இவர்கள் தலைமேல் விழுகிறது. கூலி உயர்வு கேட்டால் பாட்டாளிகளின் கூட்டாளிகளையே பகையாளியாக மாற்றிப் போராட வைக்கிறது ஆதிக்க வர்க்கம். தன்னை எதிர்த்துப் போராடும் பாட்டாளி வர்க்கத்தைச் சாதியின் பெயரால் பிளவுபடுத்திப் பலகீனப்படுத்துகிறது. வாழும்போது கோயிலுக்குச் செல்லவும் தடை, செத்தபின்பு சுடுகாடு செல்லவும் தடை. போராட்டம் வெடிக்கிறது. ஓயாமல் தொடர்கிறது நிலவுடைமை வர்க்கத்தின் ஆதிக்கம் சமுதாயத்திலும், சாதிகளுக்குள்ளும் குடும்பத்திலும் துயர் விளைவிக்கிறது. பாட்டாளி தம் உரிமைகளை மீட்டெடுப்பதற்கு அவர்கள் நடத்தும் போராட்டம் பற்றி இப்புதினம் விளக்குகிறது.

**“குடிப்பதற்கு நீர வேண்டும்**

**குடியிருக்க இடம் வேண்டும்**

**புதைப்பதற்குச் சுடுகாடு வேண்டும்”**

என்ற முழக்கத்தோடு போராட்டம் தொடர்கிறது. புதினம் முடிகிறது. இத்தகைய வர்க்கப் போராட்டங்களால் ஓரிரு

நாட்களில் வெற்றி கிட்டிவிடும் என்று சொல்லிவிடமுடியாது. ஆனால் வெற்றி கிட்டும்வரை போராட வேண்டும் என்பதே பாட்டாளிகளின் கடமை என்பதை இராஜம் கிருஷ்ணன் எடுத்தியம்புகிறார்.

அலைவாய்க்கரையில் என்னும் புதினம் கடலோரத்தில் வாழும் மீனவர்களின் போராட்ட வாழ்க்கையை விவரிக்கும் நூல். இறுக்கமான வாழ்க்கையமைப்பையும், தனித்தன்மைமிக்கப் பண்பாட்டையும் கொண்டவர்கள் மீனவர்கள்.

பிற தொழிலாளர்களைவிட அதிகமான உழைப்பையும் இடரப்பாட்டையும் சந்திக்க வேண்டியவர் பரதவர்கள். அலைகளினூடே டகட்டு மரத்தைச் செலுத்துதல், ஆழக்கடலில் வலைவீசுதல், புயலுக்கும் சுறாவின் தாக்குதலுக்கும் ஈடுகொடுத்தல், தேவைக்கேற்பப் பாயை விரித்தும் சுருட்டியும் கட்டுதல், பிடித்த மீன்களை விழிப்புடன் கொண்டு வருதல், கடலுக்குள் உள்ள பாறைகளின்மீது மோதிக்கொள்ளாமல் கரை சேர்தல் ஆகியவை எளிமையான செல்கள் அன்று என்பதைத் தெளிவாக விளக்குகிறார் ராஜம் கிருஷ்ணன்.

இத்தனைத் துன்பங்களையும் தாங்கிக்கொண்டு, கடலில் மீன்பிடித்து வந்தவுடன் வட்டக் காரனுக்கு மீனும், கோயிலுக்கு வரியாகத் துளியும் பரம்பரையாகக் கொடுத்து வந்ததை, இளைஞர்கள் இனிமேல் கொடுக்கப் போவதில்லை என்று முடிவெடுத்துச் செயல்படத் தொடங்கினர். தங்களைச் சுரண்டுகிற கோயிலையும், இடைத்தரகர்களையும் எதிர்த்துப் போராடத் தொடங்கினர். இதை அறிந்த சாமியார் தண்டத்தொகை கட்ட ஆணையிட்டார். மீறிச் செயல்பட்ட அனைவரையும் கிறித்துவ மதத்திலிருந்து தள்ளிவைக்க ஆணையிட்டார் பாதிரியார். பாதிக்கப்பட்டவர்கள் நீதிகேட்டு அலைந்தனர். எனினும் ஏழையின் கூக்குரல் என்றைக்கும் வென்றதில்லை. காவல்துறையின் கடுமையான தாக்குதல்கள் என்ன செய்வதென்று அறியாத நிலையில் திருச்சபையால் நீக்கப்பட்ட கிறித்துவர்கள் அனைவரும் இந்து மதத்திற்கு மாறினர். சுரண்டலுக்கு எதிரான போராட்டம் மதப்போராட்டமாக மாறிப்போனது. இடையில் கட்டுமரக்காரர்களுக்கும் எந்திரப் படகுக் காரரகளுக்கும் இடையே கடும் போட்டி எழுகிறது. முதலளித்துவம் தன்னைக் காத்துக்கொள்வதற்காக பாட்டாளிகளுக்குள்ளே விரோதத்தை வளர்த்துவிடும் கொடுமையும் நடக்கிறது. உழைப்புக்கேற்ற ஊதியம் இல்லை. ஆகையால் மீன் விற்பதில் சண்டைநிகழ்கிறது.

எந்திரப்படகுகளை ஒருசாரசரி எரித்துவிடுவதன் மூலம் போராட்டம் திசை தவறிப் போய்விடுகிறது. அநீதியைத் தாங்கமுடியாதவனின் போர்க்குணம் வட்டக்காரனைக் கொல்லும் அளவுக்குப் போய் விடுகிறது. புதிய சிக்கல் உருவாகிவிடுகிறது. தனிப்பட்டவர்களின் தாக்குதல்களால் சுரண்டலை வென்றுவிட முடியாது. திட்டமிடாமலும், நெறிப்படுத்தாமலும் ஒன்றுபடாமலும் நடத்தப்படும் போராட்டங்கள் ஒருநாளும் வெற்றி பெறப்போவதில்லை என்பதை இப்புதினம் தெள்ளத்தெளிவாக இயம்புகிறது. இயக்கவியல் விதிமுறைப்படி நிகழாத போராட்டங்கள் சரியான தீரவை எட்டுவதில்லை என்பதை இராஜம் கிருஷ்ணன் அழகாகச் சித்திரிக்கிறார்.

கரிப்பு மணிகள் என்னும் புதினம் உப்பளங்களில் வேலை பார்க்கும் ஆடவர், மகளிர், சிறுவர், சிறுமியர் ஆகிய தொழிலாளர்களின் வாழ்க்கையைச் சித்திரிக்கிறது.

உப்பளத் தொழிலாளர்களின் பணி மிகக் கடுமையானதாகும். பாத்திகளில் பாய்ச்சப்பட்ட நீரைக் காலால் குழைத்து, மித்துச் செய்நேர்த்தி செய்தல், உப்பைக் குவித்தல், ஜிப்சம் சுமத்தல், உப்பு மூட்டைகளைச் சுமந்து வண்டியில் ஏற்றுதல் முதலான பணிகளைத் தொழிலாளர்கள் செய்கின்றனர். ஆண்கள், பெண்கள் அனைவரும் இடர்ப்பட்டுக் கடுமையாக உழைக்கின்றனர். கடுமையான பணி எனினும் குறைந்த கூலியே கிடைக்கிறது. பணி பாதுகாப்பும் இல்லை. பெண்கள், குழந்தைகளின் நிலை பரிதாபகரமானது. கங்காணிகள் சுரண்டுவதை தடுக்க முடியாத நிலை. பெண்கள் கைக்குழந்தையை மட்டுமல்லாது கருவிலிருக்கும் குழந்தையையும் சுமந்தவாறே உழைக்கின்றனர். பெண்கள் அழகும் இளமையும் உடையவர்களானால் முதலாளிகளின் இச்சைக்கு இசைய வேண்டும். இல்லையெனில் வேலை இல்லை. சிறுமைகளை எதிர்த்துப் பெண்கள் போராட வேண்டும் என்று வலியுறுத்துகிறார் இராஜம் கிருஷ்ணன். போர்க்குணம் கொண்ட பாட்டாளிகளின் ஒருங்கிணைந்த எழுச்சியின் முதிர்ச்சியே புரட்சியாகும் என்பதை உணர்ந்து இருக்கும் இராஜம் கிருஷ்ணன், இப்புதினத்தில் பெண்மை அனைவரையும் ஒன்று சேர்த்து வர்க்கப் போராட்டத்தை நடத்துவதாகக் காட்டுகிறார். ஆண், பெண் சம ஊதியமில்லாத நிலை, மழைக்காலத்தில் வேலை இல்லை, ஊதியமும் இல்லாத நிலை, காப்பீடும், நல நிதியும் பெற முடியாத நிலை, கூலியோடு கூடிய விடுமுறை இல்லாத நிலை ஆகியவற்றை மாற்றி அமைத்திட வேண்டும் என்ற யதார்த்த நிலையைப் புதினத்தில் வெளிப்படுத்துகிறார் நாவலாசிரியர்.

கூட்டுக்குஞ்சுகள் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் உழைக்கும் சிறுவர் சிறுமியரைப் பற்றி அதிகம் பேசும் புதினம் இதுவாகும். பொருளாதார மேதைகளாகவும், விஞ்ஞானிகளாகவும்,

கலைத்துறையில் சிறந்தவர்களாகவும் திகழ வேண்டியவர்கள் இளம் பருவத்திலே கடுமையான பணியிலே தள்ளப்படுகிறார்கள். குறைந்த கூலியே பெறுகிறார்கள். இவர்களுக்குள் சாதிவேற்றுமை உண்டு. பாசப்பற்றாக் குறையும் உண்டு. இங்கே உழைக்கும் பெண்களின் நிலை இடரப்பாடுகள் நிறைந்தது. பாலியல் தொந்தரவுகளையும், அவமானங்களையும் சகித்துக் கொள்ள வேண்டிய துன்பம் இளம்பெண்களுக்கு இருந்தது. முதலாளிகளைப் பொறுத்த வரை பெண்களால் ஊதியச் செலவு குறைகிறது. கண்காணிகளைப் பொறுத்தமட்டில் இலவசமாகத் தங்கள் வேட்கைக்குப் பெண்களை அடைகிறார்கள். உழைப்பு நேர மிகுதி, குறைந்த ஊதியம், மானத்திற்கும் பாதுகாப்பின்மை, பிள்ளைகளை நன்கு வளர்க்க முடியாமை, எதிர்கால நம்பிக்கை இன்மை ஆகியவை எல்லாம் சேர்ந்து தொழிலாளர்களை உரிமைக் கிளர்ச்சிக்கு உந்தித் தள்ளுகிறது. வேலை நிறுத்தம் பெயரளவில் வெற்றி பெறுகிறது. தொழிலாளிகளும், நல அமைப்புகளும் அவ்வப்போது உருவாகும் சிக்கல்களுக்காகப் போராடினார்களே அல்லாமல் நிலைத்த தீர்வுகளுக்காகப் போராடவில்லை என்பதை இராஜம் கிருஷ்ணன் புலப்படுத்துகிறார்.

இராஜம் கிருஷ்ணன் சேற்றில் மனிதர்கள் என்னும் புதினத்தில் உழவுத் தொழிலாளர்கள் பற்றியும், அலைவாய்க் கரையில் என்னும் புதினத்தில் பரதவரைப் பற்றியும், கரிப்பு மணிகள் புதினத்தில் உப்பளித் தொழிலாளர்கள் பற்றியும், கூட்டுக் குஞ்சுகளில் தீப்பெட்டித் தொழிலாளர்கள் பற்றியும் எழுதுகிறார். இத்தொழிலாளர் ஒவ்வொரு வகையிரின் வாழ்க்கைப் போராட்டமும் அடுத்த வகையினருடைய போராட்டங்களிலிருந்தும் வேறுபட்டதாகும். புதினங்களில் நிகழும் கிளர்ச்சிகளும், வேலைநிறுத்தங்களும் ஒரு துவக்க நிலை முயற்சிகளாக உள்ளனவே ஒழிய, முதிரந்த முடிவான தீர்வை நோக்கிய வர்க்கப் போராட்டங்களாக வடிவம் பெறவில்லை.

நிலவுடைமையமைப்பும், முதலாளித்துவ அமைப்பும் உழைக்கும் தொழிலாளர்களை இடையீடே இல்லாமல் சுரண்டுகின்றன. தங்களுடைய உழைப்பால் அளிப்பரும் செல்வத்தைப் படைக்கும் பாட்டாளிகள் அடிமைத் தனத்திலும், அறியாமையிலும், வறுமையிலும் சிக்கி உழல்கின்றனர். வர்க்கப் போராட்டம் வராமல் தடுப்பதற்குய எல்லா வழிமுறைகளையும் சுரண்டல்வாதிகள் பின்பற்றுவார்கள். முறையான கல்வியறிவும், சரியான சமூக விழிப்புணர்வும் கொண்ட பாட்டாளிகளின் ஒருங்கிணைந்த வர்க்கப் போராட்டத்தால் மட்டுமே நிரந்தரமான தீரவினைக் கொடுக்க முடியும். சமத்துவ சமுதாயம் படைப்பதே முடிவான தீர்வு என்று இராஜம் கிருஷ்ணன் கருதுகிறார். இராஜம் கிருஷ்ணனின் புதினங்கள் கலை வடிவால் இலக்கியமாகவும், கருத்துச் செறிவால் வர்க்கப் போராட்டத்தின் புரட்சிக் குரலாகவும் திகழ்கிறது.

# புறநானூற்றில் மன்னர்களின் மனிதநேயம்

*இரா. விஷ்ணுப்பிரியா, *உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை , ந. க. ம. கல்லூரி, பொள்ளாச்சி.*

உலகில் தோன்றி மறையும் உயிர்கள் பலவற்றுள்ளும் மனிதப் பிறவியே சிறந்தது. ஏனெனில், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் எப்படி வாழ்நதனவோ அப்படியே வாழ்ந்து கொண்டிருக்கின்றன பறவை இனங்களும், விலங்கினங்களும். அவ்வகையில் மனிதன் மட்டுமே சிந்தனையைத் துணையாகக் கொண்டு விண்ணையும் தொட்டு முட்டி நிற்கின்றான். மனித குலம் உயர்வடைவதற்கு மனிதனை மனிதனாக மதிப்பதற்கு அவனிடம் இருக்க வேண்டியது மனிதநேயப் பண்பாகும். அப்பண்பு புறநானூற்றில் எவ்வகையில் கையாளப்பட்டுள்ளது என்பதை ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது.

**சொல், விளக்கம் : (மனித நேயம்)**

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி "மனிதநேயம் என்ற சொல்லிற்கு சமூக ரீதியில் சக மனிதன் மீது கொள்ளும் அன்பு, மதிப்பு போன்றவை" என்றும் மனிதாபிமானம் என்ற சொல்லிற்கு "மனிதன் சக மனிதனின் மீது காட்டும் பாவும், இரக்கமும் கலந்த உணர்வு" (ப. 109) எனவும் விளக்கம் தருகின்றது. ஆங்கிலத்தில் மனித நேயத்தை "Humanity" என்று அழைப்பா. "மனித நேயம் மனிதாகளை நேசிப்பது" (மனிதநேயமும் ஆன்ம நேயமும், ப. 4) என்று தவத்திரு ஊரன் அடிகளார் மனித நேயம் என்ற சொல்லிற்கு விளக்கம் அளிக்கின்றார்.

**பிட்டங்கொற்றன்**

குட நாட்டில் பிட்டங்கொற்றன் என்றொரு குறநிலத் தலைவன் ஆட்சி புரிந்து வந்தான். அவனது நாடு குதிரை மலையை அகத்தே கொண்டிருந்தது. இப்போது சஞ்ச பருவதமென ஒரு சிலரால் மொழி பெயாக்கப்பட்டிருப்பினும் குதிரை மூக்கு என்ற பழைய தமிழ்ப்பெயருடன் தென்கன்னடம் மாவட்டத்தில் உப்பினங்காடித் தாலுக்காவில் வழங்கி வருகிறது (சேர மன்னா் வரலாறு, ப. 207) என்று ஔவை சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள் குறிப்பிடுகின்றார். குட்டுவன் கோதையின் இணை பிரியாத நண்பனாக விளங்கியவன். காரி கண்ணனாராலும், உறையுர் மருத்துவன் தாமோதரனாராலும் பாடல் பெற்றவன். ஒரு வள்ளலாகவும், சேரனின் படைத்தலைவனாகவும் புகழ் பெற்றவன். சிறந்த அணிகலன்களைப் பாசில் பெறும் வேட்கையுடன் வாழ்கின்றவர்களுக்கு மிகுதியாகத் தருபவன்.

**"இன்று செலினும் தருமே" (புறம். 171: 1)**

என்ற பாடலில் இன்று செலினும் சிறிதுநாள் கழித்துச் செலினும் பின்னையும் முன்னே தந்தேன் என்று நினையாது நாள்தோறும் சென்றாலும் பொய்யானாகி வறிய உண்கலத்தை நிரப்புபவன் எனக் கூறப்பட்டுள்ளது. இதன்மூலம் நாளைய தலைமுறைக்கு ஆகுமென்று செல்வத்தைச் சேர்த்து வைக்காது இன்று எல்லோருக்கும் கொடுத்து மனம் மகிழும் ஒரு மனித நேயப் பாங்கை இங்கு காண முடிகின்றது.

**சேரமான் வஞ்சன்**

சேரமான் வஞ்சன் புறநானூற்றின் வழி அறியப்பெறும் ஓர் அரசன் ஆவான். புறம். 398 –ல் திருத்தாமனார் இம்மன்னனைப் பாடியுள்ளார். பாயல் என்னும் மலைக்கு உரியவன். இயல், இசை, நாடகம் முத்தமிழ்களிலும் வல்லமை பெற்றவன். கொடைத்தன்மையில் சிறந்தவன்.

ஒரு பொருளைப் பிறருக்குக் கொடுக்கும் போது அன்புடன் கொடுக்க வேண்டும் என்பதும் தன்னை நாடி வந்தவர்களுக்கு ஆடையையும், உணவினையும் பகிர்ந்து கொடுக்கும் அருள் உள்ளம் எல்லோரிடமும் இருக்க

வேண்டும் என்பதும் இயலாத ஒன்று. இத்தகைய அருள் உள்ளம் இம்மன்னனிடம் வெளப்பட்டு நிற்பதை,

**“விரும்பிய முகத்தன் ஆகி என் அரைத்**

**............ ............... .................**

**........... ................ .................**

**முரை செல அருளியோனே” (புறம்: 398: 18 - 29)**

என்ற பாடல் வரிகள் விளக்குகின்றன.

ஒருவனை வறுமையுற்றவனாகக் காட்டுவதில் அவனுடைய ஆடை முக்கியப்பங்கு வகுக்கின்றது. ‘ஆடையில்லா மனிதன் அடை மனிதன்’, ‘ஆள் பாதி ஆடை பாதி’ என்பது பழமொழி. அவ்வகையில் இங்கு புலவர் பாசிலராகச் சென்றவுடன் நார் நாராய்க் கிழிந்திருந்த அவான் உடையை நீக்கி, தன் இடையில் உடுத்தி இருந்த புகையை விரித்தாற் போன்ற உயர்ந்த ஆடையைத் தந்ததோடு உணவு உண்பதற்கு வழங்கியதோடு, தான் உண்ணும் உண்கலத்தில் இருந்த துண்டித்த மானிறைச்சியாகிய வறுத்த பொரிக்கறியையும், கொக்கின் நகம் போன்ற முகம் முறியாத நெல்லாசிச் சோற்றையும் சுற்றத்தார் வயிறு ஆர உண்ணவும் தந்தவன் என்ற செய்தி இடம் பெற்றுள்ளது.

இங்கு மானிறைச்சியை உட்கொள்ளுவது மனித நேயமா என்று நோக்காது தன் தட்டில் இருப்பதைப் பிரியமோடு பிறருக்கு அன்பாய் வழங்கும் நேயமே சிறந்து நிற்கின்றது.

**பெருஞ்சோற்று உதியன்சேரல்**

கடைச் சங்க கால சேர மன்னர்களின் வரலாறு பெருஞ்சோற்று உதியஞ்சேரல் என்ற சேர மன்னனை முதலாக வைத்தே தொடங்குகின்றது. குட்டநாடு வஞ்சிமா நகரைத் தலைநகராகக் கொண்டு சேர நாட்டை ஆண்ட மிகவும் பழையோனாகிய இம்மன்னனைப் புறநானூற்று பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன் என்று குறிக்கின்றது. மேலும்,

**“ஈர்ஐம் பதின்மரும் பொருது, களத்து ஒழிய**

**பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்”**

**(புறம். 2: 15 - 16)**

என்ற வரிகள் வடநாட்டில் பாரதப்போர் நடைபெற்ற போது இரு படையினருக்கும் வேற்றுமை பாராட்டாது சோறளித்ததன் காரணமாக பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன் எனப் பெயர் பெற்று மனித நேயத்தன்மை உடையவனாகக் கருதப்படுகின்றான்.

சிலப்பதிகாரத்திலும்,

**“ஓர் ஐவர் ஈரைம் பதின்மா உடன்றெழுந்த**

**போரில், பெருஞ்சோறு போற்றாது தானளித்த**

**சேரன், பொறையன், மலையன்.....”**

**(சிலப்பு. 29: 25 - 27)**

எனச் சிறப்பிக்கப்படுகின்றான்.

உதியன் இரவலர்க்கு உணவு அளித்தலைத் தன் தலைசிறந்த கடமையாகக் கொண்டிருந்தான் என்பதும், அவன் அடுக்களையில் எப்போதும் இரவலர் ஆரவாரம் இருக்கும் என்பதையும்,

**“கொடைக்கடன் ஏன்ற கோடா நெஞ்சின்**

**உதியன் அட்டில் போல ஒலி எழுந்து”**

**(அகம். 168: 6 -7)**

என்ற வரிகள் குறிப்பிடுகின்றன.

**யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை**

குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறையின் மரபு வழியில் தோன்றி சேரநாட்டு அரியணையில் அமர்ந்தவன் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை. ஐங்குறுநூற்றைத் தொகுப்பித்தவன், யானை தனது சிறுகண்ணைக் கொண்டு பருவுடலைத் தாங்கி நெறியறிந்து இயங்குகிறது. அதுபோல சிறு முயற்சி செய்துபெரும் பயனை விளைவிக்கும் அறிவுடையவன் என்னும் கருத்துப்பட இப்பெயர் இவனுக்கு ஏற்பட்டிருக்கலாம் என்பர். யாவர்க்கும் குறைவில்லாது வழங்கும் குடநாட்டார்க்கு மன்னன் ஆவான்.

**“வரையா ஈகைக் குடவாகோவே!”**

**(புறம்: 17: 40)**

என்ற வாயின் மூலம் இதனை அறியலாம். தன்னை வந்தடைந்தோரையும், அவர்தம் சுற்றத்தையும் மகிழ்வுடன் உண்ணச் செய்பவன் தன்னைப் புகழ்ந்து பாடி விளங்கிய செவ்விய நா பின்னும் பிறருடைய புகழைப் பாடாதவாறு செல்வத்தைக் காத்துப் போற்றாது வழங்கும் பண்புடையவன் என்பதை,

**“சேர்ந்தவர் தம் கடும்பு ஆர்த்தும்**

**...................................**

**ஓம்பாது ஈயும் ஆற்றல் எம்கோ!”**

**(புறம். 22: 27 - 33)**

என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றது.

**“ஆற்றுமின் அருள் ஆருயிர் மாட்டெல்லாம்”**

**(வளை. பா. 19. 1)**

என்ற கூற்றிற்கு ஏற்ப இம்மன்னனின் தன்மை மனித நேயம் மிக்கதாக அமைந்துள்ளது.

**கோப்பெருஞ்சோழன்**

நட்பிற்கு இலக்கணமாகப் புகழப்பெற்றவன். உறையுரை ஆண்டவன். பொத்தியார் என்பவரை அவைப்புலவராகக் கொண்டவன். நட்குணங்கட்கு இருப்பிடமானவன். பாடுகின்றவர்களுக்குப் பலவற்றைக் கொடுத்து நல்ல புகழினையும், கூத்தாக்குக் கொடை நேர்ந்து அவாகளிடம் நல்ல பேரன்பையும் உடையவன்.

**“பாடுநாக்கு ஈத்த பல் புகழன்னே**

**ஆடுநாக்கு ஈத்த போ அன்பினனே”**

**(புறம். 221: 1,2)**

என்ற வரிகளின் மூலம் இதனை அறியலாம்.

தமக்குத் துணையாகத் சோந்த இனத்தோடு கூடி மதுவை நிரம்ப உண்டு பெரிய பாணராகிய சுற்றத்தைப் பாதுகாத்தவன் (புறம். 224) என்பதை அறிய முற்படும் போது எல்லோரையும் அரவணைத்து மகிழ்ந்திருந்த மனிதநேயக் கூற்றை இம்மன்னிடம் காண முடிகின்றது.

**கிள்ளி வளவன்**

சங்க காலச் சோழ மன்னர்களில் புகழ் பெற்றவர் வரிசையில் குறிப்பிடத்தக்கவன் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன். இவன் உறையுரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவன். குளமுற்றம் என்னும் இடத்தில் இறந்தவன் என்னும் பொருளில் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் என்று குறிப்பிடப் பெற்றுள்ளான்.

அளவில்லாத பெரிய ஈகையை உடையவன். அவனுடைய நெடிய வாயிலில் செல்வதற்குக் காலம் பார்த்து நிற்க வேண்டியது இல்லை. பகற்பொழுதில் இரவலாக்குத் தோனை வழங்குபவன். பொன்னால் ஆகிய தாமரையைச் சூடாமல் பாணர்கள் போதலும் இல்லை. இதனை,

**“கிள்ளி வளவற் படாகுவை ஆயின்**

**.............................................**

**சூடாயாதல் அதனினும் இலையே”**

**(புறம். 69: 16.21)**

என்ற வரிகள் குறிப்பிடுகின்றது.

தைத்திங்களின் குளிர்ந்த குளம் போல பலரும் கொண்ட பின்னும் குறையாத சோறுடைய அகன்ற நகரம். அது உணவிற்கென உண்டாக்கப்பட்ட நெருப்பையன்றி ஊர் சுடுகின்ற நெருப்பினை அறியாது, தண்ணீரும், உணவுமாகிய இரு மருந்தைப் பசிப்பிணிக்குத் தரும் நல்ல நாட்டை உடையவன் கிள்ளிவளவன். அங்கு பாணன் விறலியுடன் மெல்ல நடந்து சென்றால் செல்வத்தைப் பெறலாம். கொடைப்பொருள் பெறுவமோ என்று நினைக்க வேண்டாம். உறுதியுடன் பெறுவாய் என்று கோவுர்கிழார் குறிப்பிடுகின்றார். இதனை,

**“தே எம் தீம் தொடைச் சீறியாழ்ப் பாண**

**...................................................**

**நினைக்க வேண்டா வாழ்க, அவன் தாளே”**

**(புறம். 70: 1 – 19)**

என்ற பாடல் வரிகள் புலப்படுத்துகின்றது.

வரகாசியைப் பாலிட்டு சமைத்த உணவைத் தேனுடன் கலந்து உண்ணவும் செய்து, முயலின் இறைச்சியைத் தந்ததோடு உள்ளம் குளிரும்படி நடந்து கொண்டான் என்பதையும் இப்பாடல் குறிப்பிடுகின்றது.

வேட்டையாடி வாழ்ந்த அன்றைய சமூகத்தில் முயலைக்கொன்று இறைச்சியை அளிப்பது என்பது மனித நேயமன்று என்று நினைப்பதை விட அது புலவர்களுக்குப் பிடித்த உணவு வகையாகக் கொண்டு உணவு ஈந்த பண்பு நலனையே மையமாகக் கொண்டதால் இச்செயலினை மனித நேயத்திற்குள் சேர்க்கலாம். பொதுவாக ஊனிலிருந்து விட்டமின் ‘ஏ’ சத்து கிடைக்கின்றது. இது கண் பாதுகாப்பு, வளர்ச்சி, சுகம், பல் எலும்புகளின் உறுதி, நோய் அணுக்களைத் தடுத்தல் ஆகியவற்றிற்கு அவசியம் ஆகும் என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டியுள்ளது.

**பாண்டியன் நெடுஞ்செழியன்**

கடைச்சங்க காலத்துப் பாண்டியர்களில் பெரும்புகழ் பெற்றவன் இந்நெடுஞ்செழியன். இவன் சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறனுடைய புதல்வன் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். தலையாலங்கானப் போரில் பெற்ற வெற்றியால் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்று சிறப்பிக்கப் பெறுகின்றான். தமிழக வரலாற்றில் மிக இளம்வயதில் அரசுரிமை எய்தியவர்களில் இம்மன்னனும் ஒன்று.

வாயிலிடத்துத் தடுத்து நிறுத்தாமல், படையாளர் முதலியோரும் வருவாராக என்று கூறி முறை வேண்டு நாக்கும், குறை வேண்டு நாக்கும் எளிமையாய் இருந்து

பாணர், பாடினி அவர்களால் பாதுகாக்கப்படும் பெரிய இரவலர்க்கு எல்லாம் நீர் யாவிர் என அவர்களைக் கேளாமல், அவர்கள் காட்டிய அளவினைக் கொண்டு கொடுஞ்சியை உடைய நெடிய தேர்களை, யானைகளோடும் கொடுத்தவன் என்பதை,

**“வரையா வாயில் செறா அது இருந்து**

**..............................................**

**கொடுஞ்சி நெடுந்தோ களிற்றொடும் வீசி”**

**(மதுரை. 748 - 752)**

என்ற அடிகள் புலப்படுத்துகின்றது.

கைம்மைநோற்பதன் பொருட்டு தம் கூந்தலைக் களைந்த பெண்களைக் கண்டு இம்மன்னன் அந்த அளவியே போரில் தன் வேலைச் செலுத்தாது இருந்தமையை,

**“சிதைதல் உய்ந்தன்றோ நின் வேல் செழிய**

**.......................................................**

**குவை இருங் கூந்தல் கொய்தல் கண்டே”**

**(புறம். 25: 9 - 14)**

என்ற வரிகள் குறிப்பிடுகின்றது.

போர் செய்தல் அக்காலத்தில் இயல்பு எனினும் பெண்கள் துயரப்படுகின்ற மன வேதனையைக் கண்ட உடனேயே உள்ளம் பதறுகின்றதோடு செலுத்த இருந்த வேலைச் செலுத்தாது விட்டது இங்கு மனித நேயமாய்ச் சிறப்புற்று நிற்கின்றது.

**சேரமான் குட்டுவன் கோதை**

பழைய திருவாங்கூர்ச் சமஸ்தானத்தைச் சேர்ந்ததும் இந்நாள் கேரள மாநிலத்திலுள்ளது மான கோட்டையம், கொல்லம் ஆகிய நகரங்கள் அடங்கிய பகுதி குட்டநாடு என்று வழங்கப்படுகிறது. குட்டம் என்பது குழி, அல்லது பள்ளம் எனப் பொருள்படும். பொருளடிப்படையில் ஏரி, உப்பங்கழி முதலிய நீர் நிலைகளை பகுதியாகக் கொண்டிருத்தலால் அப்பகுதி குட்டநாடு என வழங்குவதாகக் கூறுவர். குட்ட நாட்டை ஆண்டவர் என்ற பொருளில் சேர மன்னர்களின் ஒரு பகுதியினர் குட்டுவா கோ, குட்டுவன் என்று அழைக்கப்பட்டனர். இம்மரபின் வழியாகத் தோன்றியவன் சேரமான் குட்டுவன் கோதை. இவனை எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் புறம் - 54ல் பாடியுள்ளார்.

கைம்மாறு கருதாது எல்லோருக்கும் பயனைத் தருகின்ற மழையும் நாணும்படி தன்னை நாடி வருவோர்க்கு அளவில்லாது வழங்கும் கொடைப் பண்பை உடையவன் இக்குட்டுவன் என்பதை,

**“வானம் நாண வரையாது, சென்றோர்க்கு**

**ஆனாது ஈயும் கவிகை வண்மை”**

**(புறம். 54: 6 - 7)**

என்ற வரிகள் சுட்டி நிற்பதைக் காண முடிகின்றது. முன் பின் அறிமுகமில்லாத ஒருவருக்கு உயிர்களிடத்தில் இயல்பாகத் தோன்றுகின்ற மன நெகிழ்ச்சியாகிய அருள் தன்மை உடையவன் என்பதை அறிய முடிகின்றது.

ஒரு சிறிய விதையே பெரிய மரத்தை உருவாக்கும் தன்மை கொண்டது. அவ்வகையில் ஒரு சில மன்னர்களின் சிறப்பான ஆட்சி குறித்தும் அவர்கள் செய்த மனிதநேயம் குறித்தும் இக்கட்டுரையின்வழி அறியமுடிகின்றது.

**“வாழ்க மனித நேயம்**

**வளாக மனிதருள் நேயம்**

**ஓங்குக மனித இனம்”**

# ஐங்குறுநூற்றில் நெல்

*பா.பரணி, *முனைவர் பட்ட ஆய்வாளர், ஈ.வெ.ரா கல்லூரி, திருச்சிராப்பள்ளி.*

செம்மொழி இலக்கியமாம் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று ஐங்குறுநூறு இயற்கைப் பின்புலத்தை மையமிட்டு கதைமாந்தர்கள் பேசுவதாக அமைந்துள்ளது இந்நூல். இயற்கை என்பது தாவரங்கள், மலை, கடல் என பல வகை இருந்தபோதிலும், தாவர வகைகளுள் ஒரு வித்திலை இனத்தைச் சேர்ந்த நெல் பற்றி ஐங்குறுநூற்றில் காணலாகும் செய்திகளை இங்கே காண்போம்.

**நெல் பற்றிய பொதுவானக் கருத்து**

கிராமினே (*Gramineae*) என்ற தாவரக் குடும்பத்தைச் சேர்ந்த நெல், தானிய வகைகளுள் ஒன்று. இதில் சிறுதானியம் என்ற வேறொரு வகையும் உண்டு.

***ORYZA SATIVA*** என்ற தாவரப் பெயரைக் கொண்டது நெல். தற்காலத்தில் காணப்படுவது போலவே சங்ககாலத்தில் வாழ்ந்த மக்களும் நெல்லரிசி சோற்றையே விரும்பி உண்டனா என்பதை இலக்கியங்களின் வாயிலாக அறியமுடிகிறது.

இந்தியாவிலும், சீனாவிலும் சேர்ந்து ஏறத்தாழ 5000 முதல் 6500 நெல் வகைகளுள் பன்னெடுங்காலமாக பயிரிடப்பட்டு வந்துள்ளன என தாவர ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

பள்ளு நூல்களில் 150-க்கும் மேற்பட்ட நெல்ரகங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த நெல் ரகங்களுக்கு ஏற்ப தொழில் நுட்பங்களை ஆராய்ந்து மகசூலைப் பெருக்கியதோடு, அவற்றிற்கு சிறப்பான பெயர்களையும் கொடுத்தனர் தமிழர்கள்.

4 அடி வரை உயரமாக வளரும் ஓராண்டுச்செடி 5-6 மாதங்களில் முதிர்ந்து விளையும் நெற்பயிர்களும் இந்நாளில் உருவாக்கப்பட்டுள்ளன.

செயற்கை ஒட்டு முறையில் பல வகைப்பட்ட நெல்வகைகள் உருவாக்கப்பட்டடுள்ளன. சுழ்நிலைக்கு ஏற்ப நன்கு விளையும் நெல் வகைகள் நமது நாட்டிலும், பிலிப்பைன்ஸ், ஜப்பான் போன்ற அயல் நாடுகளிலும் உருவாக்கப்படுகின்றன.

**இலக்கியத்தில் நெல்**

பழந்தமிழர் நெல்லரிசி சோற்றை மட்டுமே உண்டனா என சொல்ல இயலாது. தங்களுடைய வசதி வாய்ப்புக்கு ஏற்றவாறு உணவு முறைகள் மாறுபட்டன. அக்காலத்தில்,

(அ) நெல்லரிசி

(ஆ) குதிரைவாலி

(இ) சாமை

(ஈ) வரகு

(உ) தினையரிசி என பல ரகங்கள் உண்டாலும், நெல்லரிசி சோற்றையே பொதும் விரும்பி உண்டனா என்பதை ஆற்றுப்படை நூல்களின் வாயிலாக அறியலாம்.

நெல்லரிசி சோறு போன்று வேறொன்றும் சுவையாய் குழம்போடு பொருந்துவதில்லை. பச்சரிசி, புழுங்கலரிசி என்னும் இருவகையினுள் தமிழர்கள் விரும்பி உண்பது புழுங்கள் அரிசியாகும். ஏனெனில் உடம்பின் சுட்டைத் தணிப்பதால் வெப்பமான நாட்டிற்கு ஏற்றதாகும். குழம்பின் சுவையையும் மிகுதியாய் காட்டும்.

**“இருங்காருலக்கை யிரும்புந் தேய்த்த**

**அவைப்புமான் அரிசி மலை வெண்சோறு”**

**(சிறு:193-194) (4)**

என்ற பாடல்வரிகளால் அறியலாம்.

**ஐங்குறுநூற்றில் நெல்**

ஐங்குறுநூற்றில் வயல் சார்ந்த பகுதியான மருதத்திணையில்தான் நெல் பற்றிய குறிப்பு அதிகமாகக் கிடைப்பதால், மருதநில மக்களின் உணவாக நெல்லரிசிதான் அமைந்திருக்க வேண்டும். பட்டினப்பாலையில் கொழுங்கஞ்சி ஆறுபோலப் பரந்து ஓடியது என்று கூறியதால், தமிழர்கள் நெல்லுணவையே விரும்பி உண்டனா என்பதையும் அறியலாம். புறநானூற்றில் ஒரு பாடலில் விறலியை ஆற்றுப்படுத்தக்கூடிய புலவர், நீ முதுகுடுமியிடம் சென்று, அவனை புகழ்ந்து பாடினால், நீர் ஊற்றி வைக்கப்பட்ட கூழ் உணவை தவிர்த்து, உயர்ந்த உணவான நெல்லுணவை சாப்பிடலாம் என்று கூறுவதிலிருந்து அறியலாம்.

நெல் என்ற பொதுப்பெயராலும் வெண்ணெல், செந்நெல், ஐவனம் என்ற சிறப்புப் பெயராலும் ஐங்குறுநூற்றில் பயின்று வந்துள்ளது.

நெல் பற்றிய குறிப்பு காணப்படும் பாடல் எண்கள் பின்வருமாறு,

**மருதத்திணை**

| | | |
|---|---|---|
| நெல் | - | 1, 3, 4, 95, 49 |
| செந்நெல் | - | 27 ( T.K.9) |
| வெண்ணெல் | - | 49, 58 |
| கதிர் | - | 99 |

**குறிஞ்சித்திணை:**

| | | |
|---|---|---|
| ஐவனம் (மலைநெல்) | - | 267, 285 |
| கதிர் | - | (282) |

குறிஞ்சித்திணைப் பாடல் ஒன்றில் **‘நெய்யோடு மயக்கிய உழுந்து’** என்று குறிப்பிடப்பட்டுள்ளமையால், உழுந்து அவர்களுடைய உணவாக இருந்திருக்க வேண்டும்.

அதனை எவ்வகையாக உண்டனர் என்பது பற்றி குறிப்பு இல்லை. ஆனால் அவர்களுக்கு முக்கிய உணவாக இருந்தமையால்தான் உழுந்து வீணாகாமல் இருக்க நெய் (எண்ணெய்) தடவுதல் முறை அக்கலத்திலேயே இருந்துள்ளது. இதனோடு தினை, வள்ளிக்கிழங்கு, சிறுதினை, கோரைக்கிழங்கு போன்றவை இவர்களுடைய உணவாக இருந்துள்ளது. மருதத்திணைக்கு அடுத்து நெல் பற்றிய குறிப்பு குறிஞ்சித்திணையில் காணப்படுவதால், மலைவாழ் மக்களுக்கு நெல்லுணவும் உணவாக இருந்துள்ளது. நெய்தல், பாலை போன்ற திணைகளில் பழங்கள் பற்றிய குறிப்பு மட்டுமே காணப்படுகின்றன. தவிர, எவ்வகையான தானிங்களை உண்டனா என்பது தொயவில்லை.

**பண்டமாற்று முறை**

மருத்திணையில், நெய்தல் நிலத்தைச் சேர்ந்த தலைவி ஒருத்தி, தன் நிலத்தில் கிடைக்கக்கூடிய மீன்களைக் கொடுத்து, நெல் நிறைய விளையக்கூடிய, மருத நிலத்திலிருந்து நெல்லைப் பெற்றுச்சென்றாள்.

இதனை,

**“சின்மீன் சொரிந்து பன்னெல்**

**பெறூஉம்” (5)**

என்ற வாயின் மூலம் அறியலாம். எந்த நிலமாயினும் அதிகமாக கிடைக்கக்கூடிய பொருட்கள் அந்தந்த இடத்தில் மலிவாக கிடைக்கும். கிடைக்காதப் பொருட்கள், அதிகமான விலையில்தான் கிடைக்கும். நெய்தல் நிலத்தில் கிடைக்கக்கூடிய மீன் அந்த நிலத்திற்கு மலிவாக இருந்தாலும், மருதத்திற்கு வரும்போது அதற்கு மதிப்பு கூடும். அதனை உணர்த்தும் விதமாக, குறைவான மீன்களை கொடுத்து நெல்லைப் பெற்றதிலிருந்து அறியலாம்.

தமிழர்கள் பண்டமாற்று முறையில் தங்களுக்கான உணவுப்பொருட்களை பெற்றிருக்கலாம். முல்லைத்திணையில் வரகு பற்றிய குறிப்பு ஒரு பாடலில் காணப்படுவதால், வரகு இவர்களுடைய உணவாக இருந்திருக்க வேண்டும். ஐங்குறு நூற்றைப் பொருத்தவரை தமிழர்களின் ஒட்டுமொத்த உணவு நெல்தான் என்று சொல்வதிற்கில்லை.

அக்கால மக்கள் பல வகையான நெல் ரகங்களை பயிரிட்டதோடு, அவற்றையே உண்டனா என்பதை,

**“வராஅல் சொரிந்த வட்டியுள் மனையோள்**

**யாண்டுகெழி வெண்ணெல் நிறைக்கும் ஊர்”**

**(ஐங்-48)**

**“செந்நெல் செறுவில் கதிர் கொண்டு கள்வன்**

**தண்ணக மண்ணளைச் செல்லும் ஊரற்கு”**

**(ஐங்-27)**

என்ற பாடல் வரிகள் மூலம் அறியலாம்

தமிழில் மலைநெல் ‘ஐவனம்’ என்றழைக்கப்பட்டது. ஐவனநெல் மலைவாழ் மக்களால் பயிரிடப்பட்ட முக்கியமான நெல் ரகமாகும் இதனை.

**“ஐவனங் கவரும் நாடன்“**

என்ற பாடல் வாயின் மூலம் அறியலாம்.

ஒரு வித்திலைத் தாவரமாக இருந்தாலும் சரி, இரு வித்திலைத் தாவரமாக இருந்தாலும் சரி தங்களுக்கான உணவை ஒளிச்சேர்க்கையின் மூலமே பெற்றாலும், அமைப்பு முறையால் இவ்விரு தாவரங்களும் முற்றிலும் மாறுபடுகின்றன.

தொல்காப்பியர் ஒருவித்திலைக்கான உறுப்புகளை கூறுகையில்,

**“தோடே மடலே ஓலை என்றா**

**ஏடே இதழே பாளை என்றா**

**ஈர்க்கே குலை என நோந்தன பிறவும்**

**புல்லொடு வரும் எனச் சொல்லினார் புலவர்”**

**(தொல் - 1586)**

தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ், பாளை, ஈர்க்கு, குலை என்பவை புல் தாவரத்திற்கான உறுப்புகாளக கூறுகிறார். ஐங்குநூற்றில் புல் வகையைச் சேர்ந்த நெல் உறுப்புகள் காணப்பட்டாலும், அவை அனைத்தும் தொல்காப்பியர் கூற்றோடு பொருத்தவில்லை.

**அறுவடை நிகழ்ச்சிகள்**

நெல் அறுத்து, அடித்து, நெல் மணிகள் உதிர்ந்த பின் எஞ்சிய பகுதியை போர், பைங்கால், அரிகால் என்று குறிப்பிட்டுள்ளனர். இவ்விரண்டுமே தொல்காப்பியர் கூறியுள்ள புல் உறுப்போடு பொருத்தவில்லை இதனை,

**“பைங்கால் இருவி நீள்புனம் கண்டும்”**

**(ஐங்-2957) (8)**

**“கயலார் நாரை போர்வில் சோக்கும்”**

**(ஐங்-9) (9)**

என்ற பாடல்வரிகள் மூலம் அறியலாம்.

இங்கு பயின்று வந்துள்ள போர் என்ற சொல் வைக்கோலைக் குறிக்கும் கயல் மீனை உண்ட நாரை, வைக்கோல் போரில் தங்கும் குளிர்ந்த துறையை உடைய ஊரன் என்று குறிப்பிட்டுள்ளதால், நெல் மட்டுமல்ல நெல்லின் அடிப்பகுதியையும் பயன்படுத்தி உள்ளனர். புறநானூற்றுப் பாடல் ஒன்றில் நெல் அடித்த நெல்லின் கதிர்கள் உள்ள தாளைக் கொண்டு கூரை வேய்வா என்ற குறிப்பிலிருந்து இதனை அறியலாம்.

**“அலங்கு செந்நெற கதிர்வேய்ந்த**

**.................கொடிக்கூரை” (புறநா-22) (10)**

அதேபால் இருவி என்ற சொல் தாள் எனப்பொருள்படும். தாள் என்றால் பொதுவாக வெங்காயத்தின் இலைகைளக் குறிக்கும் சொல், ஆனால் நெல்லின் அடிப்பகுதியைக் குறிக்கும் சொல்லாக பயின்று வந்துள்ளது.

நெல்லை அறுத்து நிலத்தில் எஞ்சிய பகுதியான தாளில் உளுந்து, பயிறு தெளிப்பது வழக்கம் இதற்கு காரணமும் உண்டு. அறிவியல் அடிப்படையில் பார்க்கும் போது, நெல்லின் வேர்பகுதியில் ஒரு விதமான பாக்டீரியா உண்டு. அது ***‘Azotobacter’, ‘Azospirilium’*** என்றழைக்கப்படுகிறது. இது காற்றில் வரக்கூடிய நைட்ரஜனை உள்ளிழுப்பதால், அதனோடு வளரக்கூடிய ஊடுபயிர் வளர்வதற்காகப் பொதும் துணைப்புரிகிறது. நெல்லின் அடிப்பகுதியில் வளரக்கூடிய தாவரம் மிகவேகமாக வளாகிறது. இதனை,

**“..............இருவி வெண்கால்**

**காய்த்த அவரைப் படுகிளி”**

என்ற பாடல் வாயின் மூலம் அறியலாம்.

பொதுவாக தாவரங்களில் புக்கும் தாவரம், பூவாத தாவரம் என்று பிரிக்கலாம். அந்த வகையில் பார்க்கும் போது நெல் பூக்கும் தாவரம் என்பதை ஐங்குறுநூறு வழி அறியலாம்.

காலங்கள் மாறினாலும், நாகரிகம், படிப்படியாகக் குறைந்தாலும் சரி நெல்லரிசி சோற்றின் மீது மக்கள் கொண்ட விருப்பம் என்பது மாறாது.

# திருக்குறளின் சைவநெறி

*செ. பாவைமலர், *முனைவர் பட்ட ஆய்வாளர், தருமபுர ஆதீன கலைக்கல்லூரி, தருமபுரம், மயிலாடுதுறை.*

**முன்னுரை**

திருவள்ளுவர் எந்தவொரு சமயத்தையும் கூறவில்லை. பொதுமை நெயயையே காட்டினார் எனப் பலராலும் கூறப்படுகிறது. றுனால் திருக்குறளை ஆராய்ந்து பார்க்கும்போது திருக்குறள் சைவ சித்தாந்தக் கருத்துக்களை மிகுதியாக கூறுவதைப் பார்க்க முடிகிறது. அறிஞர் பலரும் திருக்குறள் சைவ சித்தாந்தத்தை நிறைய கூறுவதாக ஆராய்ந்துரைத்துள்ளனர். திருவள்ளுவர் பதி, பசு. பாசம் என்னும் சிறந்த முப்பொருள் உண்மையின் அடிப்படையிலேயே நமது சமயக் கோட்பாடுகளை அமைத்துள்ளார். என்னும் அறிஞர் கருத்து சுட்டத்தக்கது. திருக்குறளின் உட்கிடை சைவசித்தாந்தமே திருக்குறள். துலக்கு, ஒழுக்க நெறி என்ற இரு நூல்களில் திருக்குறள் சைவசந்தாந்தத்தையே கூறுவதாகத் திரு. டீ. வச்சி வேல் முதலியார் எடுத்துரைத்துள்ளார். திருக்குறள் கூறும் கருத்துக்கள் அனைத்துச் சமயங்களுக்கும் ஏற்றதாக உள்ளதா? எனில் அது ஐயத்திற்குரியதே ஆகும். கடவுள் மறுப்பிறப்பு, சுவர்க்கம், நரகம் முதலியவற்றைத் திருவள்ளுவர் உடன்படுகிறார். உலகாயதம் முதலிய சமயங்கள் இவற்றை உடன்படவில்லை. திருக்குறள் மறுபிறப்புக் கொள்கையை உடன்படுகின்றது. ஸீலகில் உள்ள பெரும்பாலான மதத்தவர்கள் மறுபிறப்புக் கொள்கையை ஏற்பது இல்லை எனவே திருக்குறளைப் பொதுமறை என்று கூறுவது எப்படிப் பொருந்தும்? என்ற அறிஞர் கருத்துமம் இதற்கு வலுச்சேர்க்கும். திருக்குறள் சைவசித்தாந்தக் கருத்துகளைக் கூறுவதனாலேயே மெய்கண்ட நூல்கள் திருக்குறளை மேற்கொள் காட்டுகின்றன. மெய்கண்டார் தனது நூலில் பெரிதும் இயைபுபடுத்துகின்றார்.

**"அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி**
**பகவன் முதற்றே உலகு".**

என்னும் திருக்குறள்

**"அக்கரங்கள் இன்றாம் அகர உயிர் இன்றேல்**
**இக்கிரமத்து என்னும் இருக்கு."**

எனவரும் சிவஞான போதக் கருத்துப் பெரிதும் பொருந்தி வருகின்றது.

**"கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும் கண்ணே உள"** 59

என்னும் திருக்குறள்

**"கண்டுகேட்டு உண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனைக் கண்டுடனாய் மன்னுதலைக் காண்"**

எனவரும் சிவஞான போதப்பகுதி மேற்காணும் குறளோட இயைந்து நிற்கின்றது இவ்வாறு குறளில் சைவ நெறி கொள்கைகள் பொருந்தி இருப்பதை சிவஞானபோதத்தின் வழி அறிய முடிகிறது.

**திருவள்ளுவரின் பதிக்கொள்கை**

திருவள்ளுவர் திருக்குறளில் தாமைரக் கண்ணன், செய்யவள், இந்திரன், கூற்றம் முதலிய பல தேவர்களின் பெயர்களை வெளிப்படையாகச் சுட்டிக்காட்டியுள்ளார். ஆனால் கடவுள் வாழ்த்தில் எக்கடவுளையும் பெயர் சுட்டிக் காட்டவில்லை. திருக்குறள் கடவுள் வாழ்த்து முன்னுரையில் "இவ்வாழ்த்து அ ம்மூவர்க்கும் பொதுப்படக் கூறினார்

என உணர்க” எனக் கூறப்பெற்ற கருத்துத் திருக்குறள் கடவுள் வாழ்த்தின் போக்கிற்குப் பொருந்துவதாக மையவில்லை.

கடவுள் வாழ்த்தில் எல்லாக் குறளிலும் இறைவனை ஒருமையில் கூறியுள்ளார் என்பது கருதத்தக்கது. இதனால் இறைவன் ஒருவனே ன்பதைத் திருவள்ளுவர் உடன்படுகிறார் என்பது தெளிவு. இறைவன் ஒருவன் என்பதை

**“தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது”**

எனக் கூறப் பெற்றுள்ளமையால் இறைவன் ஒருவாற்றானும் தனுக்கு நிகரற்றவன் என்பது புலப்படுகிறது. ஆதலின் ஒரு தெய்வக் கொள்கையே திருவள்ளுவர் கருத்தாகும்.இதை சிவஞானபோதத்தில்

**“நிர்க்குணனாய் நின்மலனாய் நித்தியா னந்தனாய்த்**
**தற்பரமாய் நின்ற தனிமுதல்ன்”**

எனக் கூறுகிறார்.

இறைவனைத் திருவள்ளுவர் எண்குணத்தான் எனக்கூறுகிறார். எண்குணங்களாவன:

**“தன்வயத்தினாதல், தூய உடம்பினனாதல்,**
**இயற்கை உணர்வினனாதல்,”**

முற்றுஉணர்தல், இயல்பாகவே பாசங்கள் நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பில் இன்பம் உடைமை என சைவஆகமத்துள் கூறப்பட்டது.

எனவே உரையாலும் இக்கடவுள் வாழ்த்துச் சிவபெருமானுக்கு உரியது எனத் தெளியலாம்.

**உயிர்கள் பல**

கடவுள் வாழ்த்தில் இறைவனை ஒருமையால் கூறிய வள்ளுவர் உயிர்களைப் பன்மையால் கூறுகிறார். இதனால் உயிர்கள் பல என்பதை உடன்படுகிறார் என்பது தெளிவு (கு எ-3) உயிர்கள் இறைச்சார்பு உடையதாகவும், சேரோதார்ன் (எ-10) உயிர்கள் மலச்சார்பு உடையதாகவும் இருக்கும், அதாவது உயிர் ஏதேனும் ஒரு பொருளைச் சார்ந்து நிற்கும் என்றும், சார்ந்ததன் வண்ணமாகும் என்பதும் சுட்டிக் கூறப்பட்டமையை மெய்கண்டார்.

**“பன்னிறம் காட்டும் படிகம் போல்”**

எனக் கூறுகிறார்.

**ஆணவம்**

ஆணவத்தை இருள் என்று கூறுவது சைவசித்தாந்த மரபு அவ்வகையில் திருவள்ளுவரும் ஆணவத்தை இருள் என்ற சொல்லாலேயே குறிக்கின்றார்.

**“இருள் நீங்கி இன்பம் பயக்கும்”**

**“இருள்தீர எண்ணிச் செயல்”**

என்னும் ஆணவத்தை இருள் என்ற பெயரில் திருவள்ளுவர் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்து. ஆணவம் அறியாமைச் செய்யும். யான் என என்ற அகங்காரத்திற்குக் காரணமாய் இருக்கும். இதனை “யானென தென்னும் செருக்கு” என்பதால் அறியலாம். யான், எனது என்பது அகங்காரமாகும். செருக்கு என்பது ஆணவமாகும். செருக்கு என்பதற்குப் பரிமேலழகர் மயக்கம் என்றும், மயக்கம் அறியாமை என்றும் உரைக் கூறுகிறார். “தீவனை என்னும் செருக்கு எனக் காரியம் காரணமாக உபசரிக்கப்பட்டது” என்கிறார். இதனால் “யான் எனது என்றும் செருக்கு” என்பதில் செருக்கு-காரியத்தை உண்டாக்கிய காரணமாக ஆணவம் என்பது புலனாகிறது.

**கன்மம்**

கன்மத்தை வள்ளுவர் வினை என்றும் கருமம் என்றும் கூறுகிறார். வினையை உயிருக்கு இளைவனே ஊட்டுகிறான் என்பது சைவசித்தாந்தம் கருத்தாகும்.

**“வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி**
**தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது”**

எனக் கூறப்பெற்றுள்ளமையால் கன்மத்தின் பயனை இறைவனே ஊட்டுகிறான் என்பது தெளிவாகிறது.

**“ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்”**

என்பது சமணர் கொள்கை. நீனைச் செய்தவனைத் தேடித்தானே வரும் என்ற சமணக் கொள்கை இதனை திருவள்ளுவரால் மறுக்கப்பெற்றுள்ளது. இதனை மெய்கண்டார்

**“........அவ்வின்பை**
**பேராமல் ஊட்டும் பிரானின் நுகராரேல்**
**ஆர்தாம் அறிந்தணைப்பார் ஆங்கு”**

எனக் கூறுகிறார்.

ஆன்மா தானே அறியும் தன்மை இல்லை யாதலால் இறைவன் அறிந்துக் கூட்டுவார் என்பதனால் வள்ளுவர் குறள்வழி மெய்கண்டார் கருத்தை அறியலாம்.

**மாயை**

ஆணவம், கன்மம் என்ற இரண்டையும் கூறிய திருவள்ளுவர் மாயை என்ற ஒன்றையும் உடன்படுகிறார்.

மாயையை இவர் ‘மருள்’ என்னும் பெயரால் கூறுகிறார். மெய்யுணர்தல் என்ற திகாரத்தில் இதனை

**“பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும்**

**மருளானா மாணாப் பிறப்பு”**

எனக் கூறியுள்ளார். இதற்கு உரை வகுத்த பரிமேலழகர் ‘மருள்’ விபரீத உணர்வு என்றும், ‘மருள்’ மயக்கம், விபரீத உணர்வு, அவிச்சை என்பன ஒரு பொருட்கிளவி என்றும் கூறுகிளார். ஆகவே மாயையை மருள் என்ற பெயரால் திருவள்ளுவர் கூறியுள்ளமை புலப்படுகிறது. இதனை மெய்கண்டார்

**“…………… வல்லி**

**மலகன்மம் அன்றுளவாம் வள்ளலால்”**

என்று மாயை மயக்கம் செய்யும் என்று கூறுகிறார்.

**வீடுபேறு**

திருக்குறளில் அறம் பொருள் இன்பம் என்பன மட்டுமே கூறப்பெற்றுள்ளன. ஒரு நூலின் பயன் மக்களுக்கு இம்மூன்றே அன்றி வீட்டையும் தருவதாக இருக்க வேண்டும்.

அவ்வகையில் வீடு என்பதற்கு ஒரு தனிப்பால் திருவள்ளுவரால் கூறப்பெறவில்லை. ஆனால் இன்பத்துபால் கூறியுள்ளமையால் சிறின்பமேயன்றிப் பேரின்பமாகிய வீடு பேறும் இந்நூலில் கூறப்பெற்றுள்ளது எனக்கொள்ள இடம் உண்டு. வீடு பேற்றினைக் திருவள்ளுவர் பேரா இயற்கை, வாரா நெறி முதலிய பெயர்களால் கூறியுள்ளார். “வீட்டைப் பற்றிப் பாயிரத்தில் கடவுள் வாழ்த்து என்ற திகாரத்திலும், அறத்துப்பால், துறவறவியலில் நிலையாமை, துறவு, மெய்யுணர்வு, அவாவறுத்தல் என்ற நான்கு திகாரங்களிலும் காரணவகையால் தொகுத்தும் கூறியருளினார்.” மேலும் திருவள்ளுவர் திருவடி சேர்தல் முத்தி கருதியுள்ளமை குறிக்கத்தக்கது. இது சைவசித்தாந்தம் கூறும் முக்தியாகும்.

**“பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்**

**இறைவன் அடிசேரா தார்.”**

**“மலர்மிசை ஏகினார் மாணடி சேர்ந்தார்**

**நிலமிசை நீடுவாழ் வார்.”**

என்ற திருக்குறள்களால் அடிசேர் முத்தியாகிய சித்தாந்த முத்தியை மெய்கண்டார்.

**“செம்மலர் நோன்றால்”**

என கூறுகிறார்.

**முடிவுரை**

திருவள்ளுவ நாயனார் சித்தாந்த சைவர் என்பது இதிலிருந்து தேற்றம் இதனால் திருக்குறளில் வீட்டு நெறியையும் அடக்கியே திருவள்ளுவர் நூல் செய்துள்ளமை தெளிவாகிறது. திருக்குளில் சித்தாந்தக் கருத்துக்களே மிகுதியும் காணப்படுகின்றன. மேலும் திருவள்ளுவர் காலத்தில் இருந்த சமயக் கொள்கைகளைத் திருக்குறளை வைத்து மறுப்புக் கூறமுடியும். ஆனால் சிந்தாந்தக் கொள்கைகளை மறுத்துக்கூற வாய்ப்பில்லை என்பது புலனாகின்றது. ஆதலின் திருவள்ளுவர் கருத்து சைவசித்தாந்தக் கொள்கைகளைக் கூறுதலேயாகும்.

# கொற்றவை வழிப்பாடும் வளர்ச்சியும்

*முனைவர் செ.வசந்தகுமார், *கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை, அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, ஆத்தூர் - 636 121.*

ஆரியர் வருகைக்கு முன் தமிழகத்தில் தாய்வழிச் சமுதாயம் நிலைப்பெற்றிருந்தது. ஆரியர் வருகைக்குப்பின் தந்தை வழிச் சமூகம் உருவாயிற்று. தாய்வழிச் சமூகத்தில் பெண் தெய்வங்களும் தந்தை வழிச் சமூகத்தில் ஆண் தெய்வங்களும் முழுமுதற்கடவுளாக இடம்பெற்றிருந்தன. தொல்காப்பியத்தில் முல்லைக்கு மாயோனும் குறிஞ்சிக்குச் சேயோன் மருதத்திற்கு வேந்தனும் நெய்தலுக்கு வருணனும் என ஆண்தெய்வங்களைக் குறிப்பிட்டுள்ளார். பாலை நிலத்திற்குக் கொற்றவையெனப் பெண் தெய்வத்தைக் கூறுகிறார். இவ்வாறான தொல்காப்பியான் வகைப்பாடு தாய்வழிச் சமூகம் வீழ்ந்து தந்தைவழிச் சமூகமாக மாறியது ஆரியர் வருகைக்குப் பின் என்பதைச் சுட்டிக்காட்டுவதாக உள்ளது.

**தாய் தெய்வ வழிபாடு**

தாய் தெய்வ வழிபாட்டுக் கோயில்களாக விளங்குவது அம்மன் கோயில்கள். இந்த கோயில்கள் 99 விழுக்காடு வடக்கு நோக்கியே அமைந்துள்ளன. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் மூன்று புறம் கடல் சூழ்ந்த நாடாக கேரளம் உட்பட தமிழகம் இருந்தது. பகைவர்களின் படைகள் வடதிசையிலிருந்து மட்டுமே வரமுடியும். தெய்வம் வடக்குதிசை நோக்கித் தன் மக்களைக் காக்க ஆயுதம் ஏந்தி நிற்கின்றது என்பது தொல்வரலாற்று உண்மையாகும். பழந்தமிழர்களின் தாய்த்தெய்வம் அரசுகள் உருவான போர்த் தெய்வமாக மாற்றப்பட்டுக் கொற்றவை என்ற பெயரோடு வழங்கப்பட்டுள்ளது. கொற்றவை என்ற சொல் கொல் என்று பொருள் தருவதாகும்.

தமிழ்நாட்டில் தாய்த் தெய்வம் பற்றிய குறிப்புகள் பெரும்பாலும் இலக்கியங்களில் கிடைக்கின்றன. சங்க இலக்கியங்களும், பிற்கால இலக்கியங்களும் தரும் குறிப்புகளின் படி காடுகெழு செல்வி, கடல்கெழு செல்வி ஆகியத் தொடர்களால் தாய்தெய்வம் சுட்டப்படுகிறது. பிற்காலத்தில் வந்த அம்மன் என்ற சொல்லைப் போல செல்வி என்ற சொல் முற்காலத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. செல்வி என்பதற்குக் குழந்தைப் பெற்ற தாய் என்று பொருள்குறிக்கும். தாய்த்தெய்வத்தின் வாழிடம் காட்டுக்குள் இருந்தது. தாய்த்தெய்வத்தின் வழிபாட்டில் துணங்கைக் கூத்து நடைபெறும் இந்த குறிப்புகளோடு பின்வந்த திருமுருகாற்றுபடை வழையோள், (பழையவள்) என்ற பெயரைக் கொடுத்து முருகனை அவள் மகனாகவும் சிலப்பதிகாரத்தில் சிவனின் மனைவியாகவும் ஆக்கப்படுகின்றாள்.

காளிவழிபாடு கிழக்கிந்தியப் பகுதியிலிருந்து வந்தது. வைதீக சமுதாயத்தின் எழுச்சியினால் காளி வழிபாடும் இதனோடு இணைக்கப்பட்டது. வைதீக சமயத்தின் வெற்றியினால் தாய்தெய்வம் சிவனின் மனைவியாகவும், திருமாலின் தங்கையாகவும் ஆக்கப்பட்டு அவளின் தோற்றம் முழுமையாக மறைக்கப்பட்டு குடும்ப அமைப்பின் அச்சாணியாக மாற்றப்பட்டாள்.

வைதீகத்தின் முயற்சியால் தாய்த்தெய்வத்தின் தனித்தன்மையை முற்றிலுமாக அழிக்கமுடியவில்லை. சிவன், திருமால் கோவில்களில் அம்மன், தாயார் என்ற பெயரிலேயே தாய் தெய்வம் குடியமர்த்தப்பட்டுள்ளது. தாய்த்தெய்வம் தனியாக அமர்ந்துள்ள கோவில்கள் தமிழ்நாட்டில் இன்றும் அதிகம் காணப்படுகின்றன. தாலியின் மாற்றுவடிவமாகப் பொட்டு எனும் அணிகலன் தாய்த்தெய்வத்தின் கழுத்தில் சூட்டப்பட்டுள்ளது. இது ஒன்றைத்தவிர வேறு எந்த மாற்றத்தையும் செய்ய முடியவில்லை.

➢ ஊர்ப்பொது தெய்வம் அதாவது ஊரின் ஒருபகுதியான மந்தைவெளயை இருப்பிடமாகக் கொண்டமையும்.

➢மாரியம்மன் வெப்பு நோயினை பரப்பிவிடும்.

➢ வனப்பேச்சியம்மன் இருட்டில் வழிபடும் மக்களின் கனவில் வாழும்.

➢ தமிழ்நாட்டில் வழிபடும் தாய்தெய்வங்களைக் குறிப்பிடுவர்.

**பழந்தமிழரின் தாய்த் தெய்வம்**

பழந்தமிழரின் வழிபாட்டு வரலாற்றை கூறும் நூல்களான சங்க இலக்கியமும் தொல்காப்பியமும் தக்க சான்றாக அமைகின்றன. பத்துப் பாட்டும், எட்டுத்தொகையும், ஒரே காலத்தில் எழுதப்பட்ட இலக்கியங்களில் தமிழர்களின் சமூக அமைப்பை

1.தொல்குடிச் சமூகம்

2.இனக்குழுச் சமூகம்

3.சீறூர்ச் சமூகம்

4.பேரரசுகளின் சமூகம்

என்ற நிலையில் சமூக வாழ்க்கை இடம்பெற்றுள்ளன.

வேறுவகையில் கூறவேண்டுமானால், பழந்தமிழர்களை வேட்டைச்சமூகம், ஆநிரை வளர்ப்புச் சமூகம், வன்புலச்சமூகம், வணிகச்சமூகம், மென்புலச்சமூகம், உணவு உற்பத்திச்சமூகம் எனப் பல நிலைகளில் சமூகம் சார்ந்த குறிப்புகள் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. தாய்த்தெய்வ வழிபாட்டின் தொடக்கத்தை ஒர் அணங்கு முதலிய இயற்கை இகந்த ஆற்றல்களிலிருந்து நாம் இனம் காணமுடிகிறது.

**ஆரும், அணங்கும் – கொற்றவை.**

தொல்குடிச் சமூகத்தில் தோன்றிய இயற்கை ஆற்றல் குறித்த அச்சமே அடுத்தடுத்த காலக்கட்டங்களில் புதுப்புது தெய்வங்களைப் படைக்க வழிவகைசெய்தது. அணங்குடைச் சிலம்பு, அணங்குடைச் சாரல், அணங்குடை நெடுங்கோடு, அணங்குடை நெடுவரை, சூடுடைச் சிலம்பு, ஆர் உறைவெற்பு என்றெல்லாம் மலை, மலையுச்சி, மலைச்சாரல், வசிக்கப்பட்ட ஆரும், அணங்கும் குறிஞ்சியிலிருந்து இறங்கி முல்லை நிலமான காடுகளில் இடம் பெயர்ந்தபோது கானமர் செல்வி(அகம்.345) என்றும், காடுறைகடவுள் (பெரு.42) பின்ன பெருங்காட்டுக் கொற்றி(கலித்.89-8) ஆகிப் பின்னர் கொற்றவை (பரி.11) ஆகவும் மாற்றம் பெற்றது.

குறிஞ்சி வேட்டைச்சமூகம் ஆர், அணங்கு, பழையோள் என்றும், முல்லை வன்புலச் சமூகம் பயிர்த்தொழில் கானமர்செல்வி, காடுறைகடவுள் காடுகிழாள், பெருங்காட்டுக்கொற்றி, கொற்றவை என்றும் முல்லைநில வாழ்க்கைக்குப் பழந்தமிழ்ச் சமூகம் மாற்றம் பெற்ற தருணத்தில் தான் தாய்வழி சமூகம் உருவாயிற்று. இவ்வாறு தாய்தெய்வம் தோன்றியது என நா.வானமாமலை கூறுகிறார்.

**பழந்தமிழர் கொற்றவை வழிபாடு**

தாய்த்தெய்வ வழிபாட்டில் கொற்றவை வழிபாட்டிற்குத் தனியிடமுண்டு. கொற்றவைத் தெய்வத்தைத் தாயாகவும், கன்னியாகவும் உருவகப்படுத்திக் கூறுவது மிகப்பழங்காலத்தின் மரபாக உள்ளது. அவளை எல்லோரையும் பெற்ற தாயாகக் கருதுவதும் அழியாக் கன்னியாகக் கருதுவதும் சுமேரியா, எகிப்து, இந்திய நாடுகளின் பழைய நாகரகத்தில் காணப்படுகின்றது. (வி.எல்.சாமி,1975) இது போன்றே கடல்கெழு செல்வியும் (அகம்.370) கானமர் செல்வியும் (அகம்.345) தாய்த் தெய்வங்களே என்று சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது.

**ஆயிரை–கொற்றவை**

சங்க இலக்கியத்தில் சேரர் இலக்கியம் என்ற பெருமை பெற்ற பதிற்றுப்பத்தில் மூன்று பாடல்கள் அயிரை என்ற தெய்வத்தைப் பற்றி பேசுகிறது. (பதி–79,88,90)இவற்றில் இரண்டு பாடல்கள் அயிரை மலையைக் குறிப்பிடுகின்றது. (பதி–21,70) சேரர்களின் அயிரை மலையில் உறையும் தெய்வம் அயிரை என அழைக்கப்பட்டது.

**“விதிர்த்த குலவுச் சோற்றுக் குன்றோடு**

**உருகெழு மரபின் அயிரை பரை,” (பதி.88)**

**“உருகெழு மரபின் அயிரை பரவியும்” (பதி.90)**

இப்பாடலில் வரும் அயிரை வழிபாட்டை கொற்றவை வழிபாடு என ஒளவை துரைசாமி பிள்ளை கூறுகிறார்.

தும்பை சூடி அமைந்த மெய்யிடத்தே உண்டாகிய அசைவு பற்றிப் பிறந்த ஓய்ச்சலுடன் மார்பிற்பட்ட புண்ணிடத் தொழுகும் குருதியாற் புறத்தே தெளக்கப்பட்டாலன்றிக் கொடுக்கப்படும் பலியை ஏற்றுக் கொள்ளாத அச்சம் பொருந்திய முறைமை அயிரை மலைபோல நின் புகழ்களும் நிலைபெற்றுக் கெடாது விளங்குவனவாக.

அயிரையைக் கொற்றவை என்று ஒளவை துரைசாமி பிள்ளை எழுதும் உரையின் பொருத்தம் ஆய்வுக்குரியது. அயிரை பெண்தெய்வமாக, தாய்

தெய்வமாகக் கொள்வது பொருந்தக் கூடியது தாய்வழிச் சமூகத்தின் வழிபாடு தெய்வமான கொற்றவை நிலவுடைமை, பேரரசு சமூகமாக மாறிவிட்ட சேரமன்னார்கள் காலத்திலும் அதே நிலையில் வழிபடப்பட்டது என்பது வியப்பிற்குரியது.

**தொல்காப்பியமும் கொற்றவையும்**

தொல்காப்பியர் கொற்றவை நிலையை வெட்சித் திணைக்குப் புறனாக அமைக்கிறார்.

**"மறங்கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த**

**கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே"**

**(தொல்-பொருள் புறத்,4)**

தொல்காப்பியர் வெட்சித்திணையில் கொற்றவை வழிபாட்டை குறிப்பிடுகின்ற காரணத்தால் வெட்சிக்கு புறம் – குறிஞ்சி என்பதனால் குறிஞ்சிக்கும் கொற்றவை நிலை உரியதாகிறது. இளம்பூரணர் உரையில் குறிஞ்சிக்கு முருகவேளேயின்றிக் கொற்றவையும் தெய்வம் என்பது பெறலாம்.

நச்சினார்க்கினியர் உரையில் கூடுதலாக வஞ்சிக்கும் கொற்றவை நிலை காரணமாயிற்று. தோற்றோர்க்குக் கொற்றம் வேண்டியும் வென்றோர்க்கு மேற்சொல்லுங்காற் கொற்றம் வேண்டியும் என விளக்கம் கூறுவர். நச்சினார்க்கினியர் உரைகொற்றவை நிலை வெட்சிக்கும் வஞ்சிக்கும் உரியதாகக் குறிப்பிடுகிறார். வெட்சிக்கும் வஞ்சிக்கும் புறனான திணை குறிஞ்சிக்கும், முல்லைக்கும் கொற்றவை நிலை உரியதாகிறது. தொல்காப்பியார் கருத்துப்படி கொற்றவை வழிபாடு, குறிஞ்சித் திணைக்கும் முல்லைத் திணைக்கும் உரியது என்பதை உறுதிசெய்ய முடிகின்றது. பாலைத் திணைக்கும் கொற்றவை தெய்வமாகும் என்பது வெளப்படையான செய்தி.

**"முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து**

**நல்லியல்பு இடிந்து நடுங்குதுயர் உய்த்துப்**

**பாலை என்பதோர் படிவம் கொள்ளும்"**

**(சிலம்பு-காடுகாண்-64-66)**

இவ்வாறு முல்லையும் குறிஞ்சியும் பாலை நிலமாக மாறியதை அறியமுடிகிறது.

**சிலம்பில் கொற்றவை**

கொற்றவை வழிபாடு பற்றிய விரிவான விளக்கங்கள் சிலப்பதிகார வரியில்தான் முதன் முதலில் காணமுடிகிறது. ஆறலைக் கள்வர்களான எயினர்கள் வணங்கும் தெய்வம் கொற்றவையாகும். ஆறலைக் கள்வர்கள் பாலை நிலத்தில் வாழ்பவர்கள். இவர்கள் வழிப்பறிக் கொள்ளை அடிப்போராகச் சங்கப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. எயினர்கள் மறக்குணம் வாய்ந்தவர்கள். ஆநிரை கவர்ந்து வந்து கொற்றவையை வழிபட்டதாகவும், வேட்டுவரி விவரிக்கிறது. ஆநிரை கவர்தல் போரில் எயினர்க்கு வெற்றிதருபவள் கொற்றவை என்ற குறிப்பு வேட்டுவ வரியின் மையப் பொருளாகும்.

கொற்றவை வழிபாடு சம்மந்தமான முழு தகவல்களை இளங்கோவடிகள் கூறியிருக்கிறார். கொற்றவையைக் குறிக்கும் பல பெயர்களையும் சிலப்பதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளனார். அவற்றில், கலையமர் செல்வி அணங்கு, கொற்றவை, அமரி, குமரி, கவுரி, சூலி, நீலி, ஐயை, கண்ணுதல் பாகம் ஆளுடையாள், திருமாற் திளையாள், வாய்கலைப் பாவை போன்ற பெயர்கள் கொற்றவையைக் குறிக்கும் பெயர்களாகும்.

அயிரை என்ற சொல்லைச் குறிப்பிடவில்லை ஏனென்றால், பதிற்றுப்பத்து குறிப்பிடும் அயிரை வழிபாடு என்பது கொற்றவை வழிபாடாக இருக்குமாயின் சேரநாட்டுக் இலக்கியமான சிலப்பதிகாரம் அதனை கண்டிப்பாக பதிவு செய்திருக்கும். சிலம்பில் வேட்டுவ வரியில் கொற்றவையின் முழு உருவம் பற்றிய வருணனை விரிவாக எடுத்துரைக்கப் படுகின்றது.

**"பவள வாய்ச்சி தவளவாற் நகைச்சி**

**நஞ்சுண்டு கனுத்த கண்டி வெஞ்சினத்து**

**அரவுநாண் பூட்டி நெடுமலை வளைத்தோள்**

**துளையெயிற் நுரகக் கச்சுடை முலைச்சி**

**வளையுடைக் கயிற் சூல மேந்திக்**

**கரியின் உரிவை போர்த் தணங்காகிய**

**அரியின் உரிவை மேகலை யாட்டி**

**சிலம்பும் கழலும் புலம்புஞ் சீறடி**

**வலம்படு கொற்றத்து வாய்வாட் கொற்றவை**

**இரண்டுவே றுருவில் திரண்டதோள் அவுணன்**

**தலைமிசை நின்ற தையல்."**

**(சிலம்பு, வேட்டுவவரி. 56-66)**

வேட்டுவவரியில் காணப்படும் கொற்றவையின் உருவம் புதிய உருவமாகும். குறிஞ்சி, முல்லை நிலத்தின் தாய்த்தெய்வம் கொற்றவையின் பழைய உருவம் மாற்றம் பெற்றுப் புதிய வைதீக தோற்றத்தைக் காணமுடிகிறது. கொற்றவையின் புதிய தோற்றம்

சிவனின் தோற்றத்தை ஒத்ததாக வர்ணிக்கப்பட்டுள்ளது. தாய் தெய்வமான கொற்றவை தந்தை வழி சமூகத்தில் ஆண் தெய்வமான சிவனோடு கலந்து ஒன்றுபட்ட நிலையைக் காணமுடிகிறது.

**அகத்திணையும் கொற்றவை வழிபாடும்**

அகத்திணைப் பாடல்களில் அச்சம் தரும் தெய்வமாக கொற்றவையை வழிபடுகின்றனர். இனக்குழு சமூகக் கூறுகளும் அரசு, அதிகாரம் உருவாவதற்கான நிலவுடைமைச் சமூகக் கூறுகளும் இருந்த காலத்தில் அகத்தில் பெண்ணின் உடம்பை ஒடுக்கி ஓர் ஆணின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதும் புறத்தில் ஆணின் உடம்பை கொண்டாடி அதிகார அரசை உருவாக்கி நிலைநிறுத்துவதும் தான் கருத்தாக்க அரசியலாக இருந்தது. இதற்கு மாறாக தாய்வழி சமூகத்தில் மேலாண்மை கொண்டிருந்த பெண் உடம்பின் குறியீடாகத்தான் கொற்றவை என்கிற பெண் தெய்வம் உருவாக்கம் பெற்றிருக்க வேண்டும். அழிந்த தாய்வழிச் சமூகம் அச்சத்தின் குறியீடு கொற்றவை வழிபாடு பொருளுக்கும், அச்சத்திற்கும் நெருங்கிய உறவுண்டு எனவே, வருத்தும் தெய்வமாக அகத்திணைப் பாடல்களில் பெருவாரியாக அணங்கு என்ற சொல்லால் குறிப்பிட்டனர். (அணங்குடை ஆரிடைகலி-49)

**புறத்திணையில் கொற்றவை வழிபாடு**

புறத்திணைப் பாடல்களில் கொற்றவை வெற்றி தரும் தெய்வமாகக் கொண்டு தோற்றோருக்குக் கொற்றம் வேண்டியும் கொற்றவையை வழிபடுவர் கொற்றம் என்ற சொல்லுக்கு வெற்றி என்று பொருள்.

**“அணங்குசால் அடுக்கம் பொழியும்” புறம் 151**

புறப்பாடலில் அணங்கு என்ற சொல்லை பயன்படுத்தினர். மழை உயிர்ப்பலி, குருதிப்பலி, கொடுப்பதன் மூலமாக வெற்றி தேடித்தரும் தெய்வமாகப் புறத்திணையில் புனையப்பட்டுள்ளது.

**கொற்றவை - சக்தி**

கொற்றவை தெய்வம் இருந்த காலத்தில் ஆரியர்கள் தமிழகத்திற்கு வந்தபோது இங்குள்ள கருநிறப் பெண் வழி சமுதாயத்தோடு மோதல் ஏற்பட்டது. சிவன், சக்தி இவாகளில் யார்? பெரியவர் என்ற போராட்டத்தில் ஆண் வெற்றி பெற்றனர். சக்தியின் திரிசூலம் சிவனுக்கு வருகிறது. ஆரிய திராவிட இனங்களின் இணைவால் மாதொருபாகன் வழிபாடு தோன்றியது. தாயுரிமைச் சமுதாயத்தில் பெண்ணின் மேலாதிக்கத்தை எதிர்த்த ஆண்கள் கொல்லப்பட்டார்கள்.

அம்மன் அசுரன்களைக் கொன்ற புராணக்கதைகள் காளி, பகவதி போன்ற பெண் தெய்வங்களின் கையில் பிடித்திருக்கும் தலைகள் ஆண் தலைகளாக இருப்பதைக் காணலாம். காலில் மிதிக்கப்பட்டிருக்கும் உருவங்களும் ஆண்களே சக்தியின் குறியீடாக திரிசூலம் வணங்கப்படுகிறது. வீடுகளின் கதவோரங்களில் பெண் வழிச் சமூதாயத்தின் வழி வந்த மக்கள் குழுக்களை இனம்காட்டும் குறியீடாக இது திகழ்கிறது. நெற்றியில் தரிக்கப்படும் நாமத்தின் மாற்றுவடிவமாக திலகம், இவை அனைத்தும் பெண்களைத் தலைமையாகக் கொண்ட தாய்வழிச் சமூதாயத்தை நினைவுப்படுத்தும் தடயங்களாகக் கொற்றவை வழிபாட்டின் வளர்ச்சியாகக் காணமுடிகிறது.

**முடிவுரை**

தாய்வழிச் சமூகத்தில் தொடங்கிய கொற்றவை வழிபாடு, தந்தை வழி சமூகத்தின் ஆக்கத்தில் கொற்றவை தெய்வ வழிபாடு பல மாற்றங்களைக் கண்டுள்ளது. சங்க இலக்கியங்களில் உள்ள ஆர், அணங்கு முதலிய எச்சம் தரும் இயற்கை இகந்த ஆற்றல்களைக் குறித்த நம்பிக்கைகளே பலவகை வழிபாட்டுச் சடங்குகளாக பரிணாமம் பெற்றுள்ளன. கொற்றவை வழிபாடு பன்நெடுங்காலங்களாக மாற்றம் பெற்றுச் சக்தி வழிபாடாக உள்ளதையும் இதன் வழி அறியமுடிகிறது.

**பார்வை நூல்கள்**


1. வானமாமலை.நா, தமிழர் வரலாறும், பண்பாடும், சென்னை,1990.

2.ஔ.துரைசாமிபிள்ளை(உரை), பதிற்றுப்பத்து, சென்னை கழகம்,1973.

3. இராமநாதன்.அறு, தமிழர் வழிபாட்டு மரபுகள், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.

4. சாமி.பி.எல், தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு, 1975.

5. செல்வராசு சிலம்பு. நா. சங்கஇலக்கிய மறுவாசிப்பு, சென்னை காவ்யா, 2005.

6.பண்டையத்தமிழர் சமயமரபுகள், பக்தவச்சல பாரதி,சிலம்பு நா.செல்வராசு இரா.சம்பத்.

# வாழ்க்கை வட்டச் சடங்கில் புழங்குப் பொருட்கள் பண்பாடும், பயன்பாடும் (இறப்புச் சடங்கு)

*கு.இளவரசி, *முனைவர் பட்ட ஆய்வாளர், நாட்டுப்புறவியல் துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் 613 010.*

**முன்னுரை**

மானிட வாழ்வானது கால ஒப்பந்தத்தோடு இணைந்த பிறப்பு, இறப்பு சுழற்சித்தன்மை கொண்டது. பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் இளமை– பருவமடைதல் – முதுமை என்னும் வரிசையில் நிலைமாற்றங்கள் ஏற்படுகின்றன. மானிட வாழ்வு பண்பாட்டுக்குரியது. ஆகையால் மேற்கூறிய உயிரியல் நிலையில் அமையும் இந்த நிலை மாற்றங்கள் பண்பாட்டு வயப்படுகின்றன. உயிரியல் தளத்தில் நிகழும் நிலை மாற்றங்களுக்கு இணை நிலையாக சமூக பண்பாட்டு தளத்தில் பிரதிபலிப்பதை குறிக்கின்றன. இன்னும் சொல்லப் போனால் உயிரியல் தளத்தைக் காட்டிலும் பண்பாட்டு தளத்தில் வாழ்வின் நிலைமாற்றங்கள் மேலும் நுண்மையாக்கம் பெற்ற பல்கிப் பெருகிவிடுகின்றன. ஒவ்வொரு நிலைமாற்றமும் ஒரு சடங்கு நிகழ்வோடு பண்பாட்டு வயப்படுகின்றன. அல்லது சடங்கு வயப்படுகின்றன.

இச்சடங்க வயப்படும் நிலை மாற்றங்கள் வாழ்க்கை வட்டச் சடங்குகளாக அமைகின்றன. பிறப்பு, பெயரிடுதல், காது குத்தல், பிறந்த நாள் விழாக்கள், பருவமடைதல், திருமணம், வளைகாப்பு, குழந்தை பிறப்பு, இறப்பு, கருமாதி, திவசம், நினைவு நாள் கடைப் பிடித்தல் என அமைகின்றன. இவை அல்லாது தமிழர் சடங்குகள், சமூக பொருளாதார சமய அரசியல் அற்பணிப்பு கலை, அழகியல் தளங்களாக சார்ந்து காணப்படுகின்றன.

**புழங்கு பொருட்கள்**

நம்மைச் சுற்றியுள்ள புற உலகம் முழுவதும் பொருள் சார்ந்தது தான். நாம் பொருளோடு உறவாடாத நேரம் கிடையாது. பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்பது முன்னிலை பெற்றுவிட்டது. நம்மோடு தொடர்புடைய எண்ணற்ற பொருட்களுள் புழங்குப் பொருட்கள் மிகவும் அன்னியோனியமானவை. நம் உணர்வுகள் வாழும் களமாக இப்புழங்கு பொருட்கள் உள்ளன. இறந்த உறவினர் படத்தைச் சுவரில் மாற்றி மாலையிடுகிறோம். கல்லை நட்டு குங்குமம் இட்டால் சாமி என்கிறோம்.

புழங்குப் பொருட்களன அரிவாள், மண்வெட்டி. அருவாமனை என இதுபோன்ற புழங்கு பொருட்களை வைத்து ஆயுதப் பூஜை செய்கின்றோம். இவ்வாறு நம்மைச் சுற்றி அமையும் ஆயிரமாயிரம் பொருட்களில் நம் கருத்துக்கள், உணர்வுகள், மதிப்பீடுகள் விழுமியங்கள் ஆகியவற்றை ஏற்றி அவற்றோடு வெவ்வேறு நிலையில் உறவாடுகிறோம்.

எனினும் பண்டுதொட்டு காலத்திற்கேற்ப பல மாறுதல்களுடன் புழங்குப் பொருட்களைச் செய்து வருகிறோம். இவ்வாறு காலத்திற்கு ஏற்ப மாறுதல்களுடன் புழங்குப் பொருட்களை உருவாக்குகிறோம். இவ்வாறான புழங்குப் பொருட்கள் சடங்குகளில் பண்பாடு மாறாவண்ணம் பல நூற்றாண்டுகள் கடந்தாலும் பின்னிப் பிணைந்து காணப்படுகிறது.

**இறப்பச் சடங்கு**

மனித வாழ்வில் இறப்பு என்பது எப்பொழுது வேண்டுமானாலும் நிகழலாம். வாழ்க்கையின் படிநிலைகளாகிய பிறப்பு, பூப்பு, திருமணம், குழந்தைபேறு, மூப்பு என்ற பருவங்கள் கடந்தபின் வரும் மரணத்தையே இறப்பு என்ற சொல்லால் குறிப்பிடலாம்.

இயற்கையின் நியதிப்படி மண்ணில் பிறக்கின்ற ஒவ்வொரு உயிரும் என்றாவது ஒருநாள் இவ்வுலக வாழ்வைத் துறந்து இறப்பு என்ற இறுதி நிலையினைப பெற்றே ஆகவேண்டும் என்பது காலத்தேவனின் கட்டளையாகும்.

பிறப்பு முதல் இறப்பு வரை வாழ்க்கையில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளுக்கும் பெரும் மகிழ்ச்சி அடையும் மனிதன் தன்னுடன் வாழ்ந்த ஒருவர் இறக்கின்றப் போது அச்சம் கொள்கிறான். பந்தப் பாசத்தின் காரணமாக பேரிழப்பிற்கும் அவரால் தனது குடும்பத்திற்கும் எவ்வித தீமைகளும் நேராமல் இருப்பதற்காகவும் இறப்பு தொடர்பான பலவித சடங்குகளையும் அதனோடு தொடர்புடைய பழக்க வழக்கங்களும் வழிவழியாக தொன்று தொட்டு மேற்கொள்கிறான்.

**சடங்கு செய்வதன் நோக்கம்**

இச்சடங்குகள் செய்வதன் நோக்கம் என்னவென்றால் சமூக அனுமதி பெறல் என்பதையே குறிக்கோளாக கொண்டதாகும். பிறப்புச் சடங்கு அக்குழந்தை பிறந்ததை ஊருக்கு அறிவிப்பது அதன் முக்கிய நோக்கமாகும்.

அது போலவே பூப்புச் சடங்கு ஒரு பெண் கல்யாண வயதை எட்டிவிட்டால் என்பதை சமூகத்திற்கு அறிவிப்பதற்காகவே செய்யப்படுகிறது. திருமணச் சடங்குகளும், எனது மகள் அல்லது மகன் இவர்களுக்கு திருமணம் ஆகிவிட்டது (ஆகப்போகிறது) என்பதை சமூகத்திறகு தெரியப்படுத்தவே இச்சடங்கு முறை செய்யப்படுகிறது. இறப்புச் சடங்குகளும் இவற்றை நோக்கித் தான் காணப்படுகிறது.

**இலக்கியத்தில் இறப்புச் சடங்கு**

ஒரு மனிதனுக்க செய்யப்படும் முதுல் சடங்கு பிறப்புச் சடங்காகும். அதுபோல அவனுக்கு செய்யப்படும் கடைசி சடங்கு இறப்பு சடங்காகும்.

**“ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டு**
**பேரினை நீக்கி பிணமொன்று பெயரிட்டு**
**சூரையங் காட்டிடை கொண்டுபோய்ச் சுட்டிட்டு**
**நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தனரே”**
**(திருமந்திரம்.பா.எண்.71)**

என்று திருமூலர் நிலையாமை குறித்து பாடியுள்ளார்.

இறப்புச் சடங்கை எளிமையாக விளக்கும் பாடலாக இப்பாடல் அமைகின்றது. இப்பாடலில் ஒப்பாரி வைத்து அழுது, பிணத்தை கொண்டுபோய் அடக்கம் செய்து விட்டு குளித்து விட்டால் இறப்புச் சடங்குகள் நிறைவடைந்துவிடும்.

**இறந்தவுடன் வீட்டில் நடைபெறும் சடங்குகள்**

**சிவசிவம் கூறி வழிக்கூட்டுதல்**

இறந்தவரை குளிப்பாட்டி சம்மந்தி உறவுகள் கூடி ஐந்து அல்லது ஏழு பேர் கைகோர்த்துக் கொண்டு இறந்தவரை சுற்றி சிவசிவம் என்று கூறுகின்றனர்.

**நெத்திக்காசு**

இறந்தவரின் நெற்றியில் வைக்கப்படுகிறது

**சாவுபந்தல்**

இறப்புச் செய்தியை முதலில் வெளிப்படுத்தும் வகையில் மரம், கீற்றினை கொண்டு தற்காலிகமாக பந்தல் அமைத்தல்

**தப்படித்தல்**

முறையினைக் கொண்டு இறப்பு செய்தியை அறிவித்தல்

**கைக்கும்பிடுதல்**

உறவினர்களைப் பார்த்து கும்பிடுவர் வருகின்ற உறவினர்கள் ஆதரவாக அவர்களின் கைகளைப் பற்றுவர்.

**ஒப்பாரிப்பாட்டு**

இறந்தவரின் வாழ்ந்த விதத்தினையும் புகழ், செயல்பாட்டை இட்டுக்கட்டி பாடுவர்

**உறவினர்களை எதிர்க்கொண்டு அழைத்தல்**

இறந்தவருக்கு மிக நெருக்கமான உறவுடையவர்கள் வரும்பொழுது பந்தலில் அழுதுகொண்டிருப்பவர்கள் எதிர்கொண்டு இறந்தவரை நினைத்து கட்டி பிடித்துக் கொண்டு அழுவர்

**நீர் எடுத்து வருதல்**

இறந்தவர்கள் இறுதியாக குளிக்கும் நீராகக் கருதப்படுவதால் இறந்தவருக்குக் கடைசியாக நீர்மாலை எடுத்து வருதல், தலையில் எண்ணெய் வைத்தல் போன்ற சடங்குகள் நிகழ்த்தப்படுகிறது

**கோடி போடுதல்**

இறந்தவரின் உடலை விட்டு நீங்கிய உயிர் புதுவாழ்க்கை தொடங்குகிறது என்பதற்கு புத்தாடையாகிய இக்கோடியே அடையாளமாக கருதப்படுகிறது

**பாடை கட்டுதல்**

இறந்தவரின் உடலை இடுகாட்டிற்கு எடுத்து செல்வதற்கு பச்சை மூங்கிலைக் கொணடு பாடை கட்டப்படுகிறது.

**பாடையைத் தூக்குதல்**

முதலில் பிணம் பாடையில் ஊரினை பார்க்கும் வகையில் பின்னர் நடுமுஞ்சந்திக்கு வந்த பின் சுடுகாட்டினை பார்க்கும் வகையிலும் தூக்கிச் செல்லப்படுகிறது.

**புதைக்குழியில் புதைத்தல் (அ) தீயிட்டு எரித்தல்**

புதைக்குழியை மூன்று முறை சுற்றி பின்பு புதைக்கப்படுகிறது

**கொள்ளி வைக்கும் முறை**

தாய்க்கு தலைப்பிள்ளை தந்தைக்கு கடைப்பிள்ளை என கொள்ளி வைக்கப் படுகிறது.

**வாய்க்கரிசி**

புதைக்கும் (அ) எரிக்கும் முன்பு வாய்க்கரிசி போடப்படுகிறது.

**கொள்ளிக்குடம் உடைத்தல்**

புதைக்குழியை சுற்றி வரும்பொழுது ஒவ்வொரு சுற்றிற்கும் ஒரு துளையிட்டு கொள்ளிக்குடம் உடைக்கின்றார்கள்.

**நாடு கூடுதல் அல்லது கட்டுதலைப்பணம்**

உறவினர்கள் எண்ணெய் வரிபணமாக ஒரு சிறு தொகையினை கொடுத்தல்

**விளக்கு பார்த்தல்**

கொள்ளி வைத்தவர்க்ள வீட்டிற்கு வந்தவுடன் தீபத்தைப் பார்க்க வேண்டும்.

**பால் தெளித்தல் (மூன்றாம் நாள் அல்லது உடன்பால்)**

இறந்தவரின் உடலை புதைத்த இடத்தில் தலைப்பகுதியில் படையலிட்டு பால் தெளிப்பார்கள்.

**எட்டாம் துக்கம் (கருமக் காரியத்தில் நடைபெறும் சடங்கு)**

எட்டாம் துக்கம் அன்று படையல் போட்டு அனைவரும் ஒன்று கூடி அழுவார்கள்

**உத்தரகிரியை பத்திரிக்கை**

16ஆம் நாள் கருமாதி விழாவினை உறவினர்களுக்குத் தெரிவிப்பதற்காக பத்திரிக்கை எழுதப்படுகிறது

**வேட்டி கட்டுதல்**

சம்மந்தி உறவுடையவர்கள் வேட்டி கட்டுவார்கள்

**மொய் பிடித்தல்**

பொருளதார நோக்கில் மொய் பிடிக்கப்படுகிறது.

**அசைவ விருந்து**

உறவினர்களுக்கு கிடா அல்லது கோழி சமைத்து விருந்து உபசரித்தல் நடைபெறும்

**வருட படையல்**

ஒரு வருடம் முடிந்தபின் இறந்த நாளில் படையலிட்டு துக்கம் அனுசரிக்கப்படுகிறது.

இறப்புச் சடங்கில் பண்பாட்டு மற்றும் பயன்பாட்டு ரதியாக காணப்பட்ட புழங்கு பொருட்கள்

1. அரிவாள் (பிணமேடைடைச் சுற்றி வரும்பொழுது)
2. சுத்தி (சவரக்கத்தி)
3. கோடாரி
4. கடப்பாறை
5. மண்வெட்டி
6. கைவிளக்கு
7. தீச்சட்டி
8. கருமாதி கலயம்
9. உரல் (இறந்தவர்களை அல்லது குளிப்பாட்டுவதற்க உரல் பயன்படுகிறது)
10. கொள்ளிக்குடம்
11. செம்பு
12. கைவிளக்கு

இதுபோன்ற பல புழங்குப் பொருட்கள் இறப்புச் சடங்கில் காணப்படுகின்றன.

**தொகுப்புரை**

நாகரிக வளர்ச்சி, அறிவியல் வளர்ச்சி போலச் செய்தல், போட்டி மனப்பான்மை போன்றவற்றினால் நாட்டுப்புறப் புழங்கு பொருட்கள் பேரழிவை அடைந்திருக்கின்றன. இருப்பினும் பண்பாட்டோடு கொண்டத் தொடர்பினால் சிலப் பொருட்கள் பயன்பாட்டு நிகழ்வுகளில், இன்றும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

நாட்டுப்புற புழங்கு பொருட்களினால் கிடைக்கக் கூடிய நன்மையினை உணர்ந்திருந் பொழுதும், காலமின்மையாலும், நாகரிகப் பொருண்மையாலும் நவீனப் புழங்கு பொருட்களைப் பயன்படுத்தி வருகின்றனர். இந்நிலையை மக்களின் மனதிலிருந்து முழுமையாக மாற்றி ஓய்வு நேரங்களிலோ அல்லது விடுமுறை நாட்களிலோ நாட்டுப்புறப் புழங்கு பொருட்களைப் பயன்படுத்தினால் பழமையின் சிறப்பு அழியாமல் இருப்பதோடு பண்பாட்டின் சிறப்பு வளர்ச்சி அடையும்.

நாட்டுப்புறப் புழங்கு பொருட்கள் மீட்டுருவாக்கம் செய்வது எளிதில்லை என்றாலும் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் பண்பாட்டோடுத் தொடர்பு கொண்டப் பொருளையாவது அழிவிலிருந்து காப்பது ஒவ்வொருவரின் தலையாயக் கடமையாகும். கிராமங்கள் உள்ள வரையிலும் புழங்குப் பொருள் மனித வாழ்க்கையோடு என்றும் தொடர்புக் கொண்டதாய் அமையும்.

# அண்ணல் அம்பேத்கரின் பன்முகத்தொண்டு

*முனைவர் சோ.மனோன்மணி, *உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை(சுயநிதிப்பிரிவு), உருமுதனலெட்சுமி கல்லூரி, திருச்சி-19.*

### முன்னுரை

மனிதன் வீட்டிற்கு ஒரு முகம்; நாட்டிற்கு ஒரு முகம்; உள்ளவருக்கு ஒரு முகம்; இல்லாதவருக்கு ஒருமுகம். பொதுவாக இதுதான் மனிதர்களுக்குரிய முகங்களாக இருக்கிறது. ஆனால் அம்பேத்கரின் பன்முகம் என்பது **சட்டம், சமயம், பண்பாடு என்று மட்டுமல்லாமல் சீர்திருத்தவாதி, கல்வியாளர், பெரும் பேச்சாளர், நிர்வாகி, பெரும் குழுவின் தலைவர்** இப்படி பல முகங்கள் உண்டு. அதே சமயத்தில் அம்பேத்கரின் பன்முகம் ஒன்றுக்கொன்று மாறுபட்ட முகங்களாக இல்லாமல் இருப்பது சிறப்பான ஒன்றாகும். இங்ஙனம் அவர்தம் பன்முகத்தோடு அவரது தொண்டு வாழ்வும் விளக்கப்படுகிறது. அவர் விவசாயிகளின் நலன், தொழிலாளர்களின் நலன், இரயில்வே உழியர்களின் நலன் பெண்களின் நலம் கருதி செய்த தொண்டும் இங்ஙனம் பறைசாற்றப்படுகின்றது.

### சட்டமும் அம்பேத்கரும்

அம்பேத்கருடைய எழுத்துகளில் சட்டம் பற்றிய சிந்தனை அதிக அளவில் ஆளுமை செலுத்துகிறது. அம்பேத்கருடைய படைப்புகள் பலவும் தமிழில் வந்துவிட்டன. ஆனால் நாம் சட்டம் பற்றி தெரிந்துகொள்ள எல்லா படைப்புகளையும் நாம் வாசிக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. ஆனால் அவரது 3வது தொகுப்பினை மட்டும் கட்டாயம் படிக்கவேண்டும். ஏனெனில் அதில் மட்டுமே சட்டம் குறித்த முப்பது பொருளில் பேசியிருக்கிறார்.

1. வரவு செலவுத் திட்டம் , 2. நிதி, 3. சட்டத் திருத்தம், 4. கல்வி மானியம், 5. மும்பைப் பல்கலைக்கழகச் சட்டம், 6. மும்பை ஆரம்பக் கல்விச்சட்டம், 7. மரபுப் பணிகள் சட்டம், 8. நிலவரி ஒழிப்புச் சட்டம், 9. கிராமப் பஞ்சாயத்துச் சட்டமுன் வடிவு, 10. உள்ளாட்சி மன்றச் சட்டம், 11. குறுநில விவசாய நிலச்சட்டம், 12. மும்பை நகராட்சித் திருத்த சட்டம் 13.மும்பை நகரக் காவல்துறைச் சட்டம், 14. மதுவிலக்கு, 15. மகப்பேறு நலச்சட்டம், 16. கசையடித் தண்டனை, 17. அமைச்சர்களது ஊதியம், 18. இளம் குற்றவாளி நன்னடத்தைச்சட்டம், 19. புகையிலைத் தீர்வுச் சட்டம், 20. நீதித்துறை சுதந்திரம், 21. தனிக் கர்நாடக மாநிலம், 22. சட்டப் பேரவை நடைமுறை, 23. தொழில் தகராறு சட்டம், 24. கலவரம் குறித்த விசாரணைக் குழு, 25. போரில் பங்கேற்பு என்று ஒரே தொகுதியில் மட்டும் அத்தனைத் தலைப்புகளையும் காணமுடிகிறது. இதிலே அம்பேத்கரின் பேச்சாற்றல், வாக்குவன்மை, சொல்ல வந்த பொருளை விரித்துச் சொல்லும் விதம் எல்லாம் வெளிப்படுகிறது. ஒரே ஒரு சட்டத்தை எடுத்து சட்டமன்றத்தில் ஒரு மணி நேரம் பேசும் வல்லமை பெற்றவர். அங்ஙனம் எடுத்துச் சொல்வதற்கு அவர் எடுத்தாளும் சான்றுகளைப் பார்க்கும் போதே அவரது பன்முகத்தன்மை நமக்கு நன்கு விளங்கும்.

### தொழிலாளர்களின் துணைவன்

விவசாயிகளின் உரிமைகளுக்காகப் போராடியதைப் போலவே ஆலைத் தொழிலாளர்கள், இரயில்வே தொழிலாளர்கள் ஆகியோர் நலனுக்காகவும் அம்பேத்கர் பாடுபட்டார். “1938 ஆம் ஆண்டில் ‘மன்மாட்’ என்னுமிடத்தில் நடந்த இரயில்வே தொழிலாளர் மாநாட்டில் இருபதாயிரம் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். அதில் உரையாற்றிய அம்பேத்கர் இளமைக் காலம் முதல் தொழிலாளர்களுடன் வாழ்ந்த தனது அனுபவத்தை எடுத்துரைத்தார். மேலும் அவர்களின் துயரத்திற்கும் வீழ்ச்சிக்கும் காரணங்கள் என்ன என்பதையும் விளக்கியுரைத்தார்.” என்று டாக்டர் சா.பெருமாள் எடுத்துரைக்கிறார். எனவே தொழிலாளர்கள் தமக்கென ஒன்றுபட்டு ஒரு இயக்கத்தை வளர்த்துக்

கொள்ள வேண்டுமெனக் கூறினார்.

எல்லாத் தொழிலாளர்களும் ஒத்துழைப்புடன் பாடுபடவேண்டும் என்பதற்காகத் தம் கட்சிக்குச் **'சுதந்திரத் தொழிலாளர் கட்சி'** எனப் பெயரிட்டார். தொழிலாளர்களுக்காகவே பல திட்டங்களை வகுத்து நிறைவேற்றும் நோக்கத்துடன் கட்சியின் பெயரில் தொழிலாளர் என்னும் சொல் இருக்க வேண்டும் என்று விரும்பி அமைத்தார்.

அம்பேத்கர் ஆழமாகச் சிந்தித்து முன்னதாகவே தயாரித்த அவரது பேச்சுகள் தொழிலாளர்களின் கண்களைத் திறந்து வைத்தன.

**விவசாயிகளின் தோழன்**

பம்பாய் சட்டப்பேரவையில் உறுப்பினராக இருந்த போதும், பின்னர் வைசிராய் நிர்வாகச் சபையில் தொழிலாளர் நல அமைச்சரான போதும் தொழிலாளர்களின் நலனுக்காக டாக்டர் அம்பேத்கர் அருந்தொண்டாற்றினார். சட்டப்பேரவையில் வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் விவசாயத் தொழிலாளர்களின் நல்வாழ்வுக்காகப் பரிந்து பேசினார்.

நிலமில்லாத விவாசயிகள், குத்தகைக்காரர்கள் பெருநிலக்கிழார்களிடம் அடிமைகளைப் போல வாழ்வதை ஒழிப்பதற்காக ஒரு மசோதவைக் கொண்டு வந்தார். அது தோல்வியிடையே உடனடியாக கட்சி உறுப்பினர்களுடன் வெளி நடப்புச் செய்தார். இந்திய நாட்டுச் சட்டப் பேரவை ஒன்றில் விவசாயிகளின் நலனுக்காக ஒரு மசோதவை முதன் முதலாக கொண்டு வந்தவர் அண்ணல் அம்பேத்கர் அவர்களே ஆவார். பம்பாயில் விவசாயிகளின் பேரணி ஒன்றிற்கு ஏற்பாடு செய்து அவர்களின் கோரிக்கைகளை மாநில முதல்வருக்கு அளித்தார். விவசாயிகளுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்தல், நிலக்குத்தகை நிலுவையைத் தள்ளுபடி செய்தல், நீர்ப்பாசனக் கட்டணத்தைப் பாதியாக குறைத்தல் முதலியன அக்கோரிக்கைளில் அடங்கியிருந்தன.

**அரசியல் வல்லமை**

அம்பேத்கரின் அரசியல் என்று பார்க்கும்போது இவருடைய அரசியல் என்பது வெறும் கட்சி அரசியல் என்றோ அல்லது வெறும் காட்சி அரசியல் என்றோ இருந்ததில்லை. அம்பேத்கர் வெறும் கட்சித்தலைவர் அல்ல. அரசியல் நுட்பங்களைச் சொல்லக்கூடிய விரிவான பார்வை உள்ள மேதை. அம்பேத்கர் இந்திய மண்ணில் இருக்கிற அரசியல் நுட்பங்களை மட்டுமல்லாது உலகம் முழுவதும் பரவியிருந்த அரசியலின் தன்மைகள் என்ன என்பதை விலாவாரியாக அறிந்தவர். அரசியல் அறிவு என்றால் வெறும் கோட்பாடுகளைச் சொல்லும் அறிவாக இல்லாமல் செயல்முறையிலும் அது எப்படி இருக்கவேண்டும் என்று சிந்திக்கும் அறிவு இவருடையது. "சுதந்திரம், குடியாட்சி, தனிமனித உரிமை, சமத்துவம்" சிறுபான்மையினருக்கும் பிறருக்கும் எவ்வாறு சமமான நிலையைக் கொண்டு வரவேண்டும் என்பதை அடிப்படையாக கொண்டது இவருடைய அரசியல்.

**அறிவின் மேன்மை**

அம்பேத்கர் வெறும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குரிய தலைவர் என்றோ, வெறும் அரசியல் தலைவர் என்றோ வெறும் சீர்திருத்தவாதி என்றோ நாம் கணிக்கக்கூடாது. மற்றவர்களைவிட அம்பேத்கர் அறிவில் எங்ஙனம் மேன்மைபட்டு நின்கின்றார் என்பதை நான் பார்க்கவேண்டும். "நானறிந்து புத்தத்தையும் காரல்மார்க்சையும் ஒப்பிட்டு பார்த்த ஒப்பரிய செயலை அம்பேத்கரைத் தவிர வேறு யாரும் செய்ததாகத் தெரியவில்லை." என்று தனது கட்டுரையில் கிறிஸ்துதாஸ் காந்தி குறிப்பிடுகிறார்.

"புத்தரும் கார்ல்மார்க்சும்" என்ற கட்டுரையில் அம்பேத்கரின் அறிவின் மேன்மையை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. அக்கட்டுரையில் சமயத்தையும் அரசியலையும் ஒப்பிட்டு ஒரு பொதுநோக்கை படைக்கிற அம்பேத்கரின் அறிவு படிப்பவர்களை வியக்கவைக்கிறது.

பௌத்தத்தை விளக்கிச் சொல்ல வரும் பலரும் வேதாந்திகளைப் போல நம்மைக் குழப்பிவிடுகிறார்கள். ஆனால் அம்பேத்கர் தனது கட்டுரையில் ஒரு சின்னக் குழந்தைக்கு விளக்குவது போல விளக்கிச் சொல்கிறார். அதுபோல எவ்வளவு பெரிய அறிவாளியாக படிப்பாளியாக இருந்தாலும் மார்க்சின் "மூலதனம்" என்ற நூலைப் புரிந்து கொள்வது கடினம் ஆனால் அம்பேத்கர் பௌத்தமும் மார்க்கிசியமும் ஒரே அடிப்படையில் எழுந்தவை என்று விளக்குகிறார். இரண்டுக்கும் ஒரு பொதுத்தன்மை உண்டு என்கிறார். மேல் – கீழ், மேடு – பள்ளம், ஏழை – பணக்காரன் என்று பேதங்களினால் ஏற்படும் துக்கங்களையும், பிணக்குகளையும் நாம் அணுகிப் பார்க்கவேண்டும்.

இப்படியாக உலகம் இருக்கிறது என்பதைக் கண்டறிந்து அந்த துக்கத்தினால் சோர்ந்து போய் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்காமல் அவற்றை மாற்ற வேண்டும் என்ற நோக்கம் வேண்டும். இவைதான் பௌத்தத்திற்கும் பொதுவுடமைக்கும் அடிப்படையான கோட்பாடு என்று எடுத்துரைக்கிற அறிவின் மேன்மையுடையவா அம்பேத்கர் அவர்கள்.

**அம்பேத்கரின் சமத்துவம்**

அரசுப் பள்ளியில் படித்து வருபவனையும், தனியார் ஆங்கிலப் பள்ளியில் படித்து வருபவனையும் ஒரே

நிலையில் வைத்து பார்க்க முடியாது என்பது அம்பேத்கரின் சமத்துவம். சமத்துவம் என்பது எல்லோருக்கும் சமநிலை என்றால் அது தவறு. ஆரோக்கியமாக இருக்கிறவனுக்கு ஒரு புட்டி சத்துமாவு கொடுப்பேன், நோயாளியாக இருப்பவனுக்கும் ஒரு புட்டிச் சத்துமாவு கொடுப்பேன் என்று சொல்வது சமத்துவமே அல்ல.

**"சமன் இல்லாத சூழ்நிலையில் சமன் இல்லாத அனுகுமுறைகளைக் கொண்டு வருவதுதான் சமத்துவம்"** - என்கிறார்

எல்லாரும் சமம் என்ற சமன் இல்லாத சூழ்நிலையில் உயர்கலைகளில் நுழைய அனுமதியில்லாது நோய்வாய்ப்பட்டு இருப்பவனுக்கு ஒரு புட்டி அல்ல, ஐந்து புட்டி தேவையாக இருக்கலாம் எனவே இப்போது சமன் இல்லாத அணுகுமுறையில்தான் சத்துமாவு புட்டிகளைப் பிரித்துக்கொடுக்க வேண்டும் என்கிறார் அம்பேத்கர்.

**உலகமயமாக்கல்**

ஒரு நாட்டினுடைய செல்வத்தை முதலில் பெருக்க வேண்டும். அதற்கான முதலீடுகளைக் கொண்டு வரவேண்டும். அதன்மூலம் இங்குள்ள உற்பத்தி பெருக வேண்டும். உற்பத்தி பெருகினால் நாட்டினுடைய வருமானம் பெருகும் வருமானம் பெருகினால் நாட்டினுடைய மக்களுக்கு நன்மை போய்ச்சேரும் என்று பொருளாதாரம் படித்தவர்களுக்கு தெரியும் இதைத்தான் அம்பேத்கர் கீழ்கண்டவாறு சொல்கிறார்.

அரசு மூலமாக பள்ளிக்கூடம் கட்டுவதும் அரசு மூலமாக மருத்துவமனைகள் அமைப்பதும் அரசின் கடமை. நாட்டு மக்கள் அனைவருக்கும் பணம் வரி மூலமாகத்தான் வரும். ஆகவே யாருக்கு வரி கொடுக்க முடியுமோ அவருக்கு கட்டாயம் வரி விதிக்கவேண்டும். அதன் மூலம் தேசிய ஆதாயத்தைக் கூட்ட வேண்டும்.

"நாட்டினுடைய வளத்தைப் பெருக்கினால்தான் மக்களுக்குச் செய்ய வேண்டியதைச் செய்ய முடியும் என்ற கோட்பாட்டைத் தான் எப்போது '**உலகமயமாக்கல்**' மூலம் சொல்கிறார்கள். இவையெல்லாம் அம்பேத்கரிடமிருந்து பெற்ற சிந்தனைகளாகும்".

அகில இந்திய அளவில் தொழிலர்ளாகளின் பிரச்சனைகளை அறிந்துகொள்ளவும். அவற்றைத்தீர்ப்பதற்கு வழிவகைகளைக் காணவும் அம்பேத்கர் உரைகள் உதவின.

**கற்பி போராடு ஒன்றுபடுத்து**

தாழ்த்தப்பட்ட மக்களுக்காகத் தாமும் தமது தோழர்களும் நடத்தி வந்த போராட்டங்களின் விளைவாக நல்ல முன்னேற்றமும் விழிப்புணர்ச்சியும் ஏற்பட்டிருந்ததை நாகப்பூர் மாநாடு நிறுபித்தது. அப்போது "உங்களுக்கு இறுதியாக நான் கூறும் அறிவுரை இதுவே" என்று கீழ்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

கற்பி, போராடு, ஒன்றுபடுத்து, தன்னம்பிக்கையோடு வாழுங்கள். நியாயமும், நேர்மையும் நம்பக்கம் இருக்கும்போது நாம் வெற்றியே பெறுவோம் பணம் பதவிகளுக்கு நாம் போராடவில்லை. நமது உரிமைகளின் மீட்சிக்காக, மனிதர்களாக வாழ்வதற்காகவே நாம் போராடுகின்றோம். இந்துக்கள் பலர் என்னை எதிரியாக நினைக்கிறார்கள் ஆனால் பிராமணர்களிலேயும் நல்ல நண்பர்கள் எனக்கிருக்கின்றார்கள். என் மக்களை நாய்களைவிடக் கேவலமாகக் கருதி அவர்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக நிற்கும்போது அதை எதிர்க்க வேண்டிய கட்டாயத்திற்கு நான் ஆளாகி இருக்கிறேன். என் நிலை இதுவே, என்று உரைத்தார். இவ்வாறாக தன் உரையில் அம்பேத்கர் கூறுகின்றார்.

**பெண்களுக்கான அறிவுரை**

பெண்கள் தூய்மையும், ஒழுக்கமும் உள்ளவர்களாக வாழ்ந்து பிள்ளைகளுக்குக் கல்வியறிவைத் தரும்படியும் தாழ்வு மனப்பான்மையை ஒழித்து சிறந்த சாதனைகளைச் செய்வதற்காகவே பிறந்திருப்பதாகவும், இலட்சிய ஆர்வத்தை அவர்களுக்கு ஊட்டுமாறும் அறிவுரை கூறினார். மேலும் திருமணம் செய்து கொள்வதற்கு அவசரப்படாதீர்கள். குடும்பத்தை நடத்துவதற்குரிய வருவாயைத் தேடிக்கொண்டு, பிள்ளைகளுக்கு பாரமில்லாத வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும் என்கிறார்.

கணவனுக்கு மனைவி அடிமை என்ற நிலையை ஒழித்து, வாழ்க்கைத் துணைவியாக, சம உரிமையுள்ளவர்களாக வாழவேண்டும். என்று பெண்ணினத்தை வலிமைப்படுத்துகிறார். அத்துடன் குழந்தைகளை அளவோடு பெற்று அவர்கள் சிறப்பாக வளர்வதற்கு உதவவேண்டும்.

இந்த அறிவுரைகளை நீங்கள் பின்பற்றவீர்களானால் மதிப்பையும், மரியாதையையும் நீங்கள் பெறமுடியும் என்று கூறினார்.

**முடிவுரை**

அம்பேத்கர் வலிகள் நிரம்பிய, அவமானங்களை மென்று விழுங்கிய, கடைசி வரையில் காயப்பட்டுக் கொண்டிருந்த, போராடுவதை என்றுமே கைவிடாத, ஏராளமான தோல்விகளைச் சந்தித்த ஒரு மாமனிதர். அத்தகையப் போராளியின் பன்முகத்தன்மையும், தொண்டுள்ளமும் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளது.

இந்த நாடு மட்டும் அம்பேத்கரைச் சரியாகப் புரிந்து வைத்திருக்குமானால் இப்பொழுது '**வல்லரசு**' என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்களே அதை எப்பொழுதோ இந்தியா அடைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

# யாழ் இசைப்பாணர்களின் வாழ்வியல் முறை

*முனைவர் பூங்கொடி, உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, ஸ்ரீ சாரதா மகளிர் கலை அறிவியல் கல்லூரி, கரூர்.

**முன்னுரை**

நிலவுலகத்திலே மிருகம்போல் வாழ்ந்த ஆதிமனிதன், நாகரிகம் அடைந்து நற்பண்பு பெற்ற காலம் முதல் இசைக்கலையை வளர்த்து வருகிறான். இசையைப் பயின்று, இசையைப்பாடி, இசையைக் கேட்டு, இசையில் திளைத்து, இசையில் மூழ்கி வாழ்கின்றான் மனிதன். தொன்றுதொட்டு இசைக்கலைத் தெய்வீகப் பொருளாகக் கருதி வருகின்றனர் தமிழர். சங்க காலத்தில் இசைப்பாட்டை வெறும் வாய்ப்பாட்டாகப் பாடாமல் பக்கத்துணையாக மத்தளம், யாழ், குழல் போன்ற இசைக்கருவிகளின் மூலம் பாடினர். கலையில் ஆண், பெண் என இருபாலரும் ஈடுபட்டிருந்தனர். பாடலில் வல்லவர்களைப் பாணன், பாடினி, விறலி, பொருநர், கத்தர், வயிரியர், கோடியர் என்று அழைத்தார். பாணர்கள், போயாழ், சீறியாழ், வில்யாழ் என்ற யாழை இசைத்தனர். யாழ் இசைக்கும் பாணர்களின் வாழ்வியல் முறையைக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஆற்றுப்படை இலக்கணம்**

பத்துப்பாட்டில் ஐந்து ஆற்றுப்படைப் பாடல்கள் உள்ளன. அவற்றிற்குத் தொல்காப்பியர் இலக்கணம் கூறும்போது,

“கூத்தரும், பாணரும், பொருநரும், விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்று
பெற்ற பொருவளம் பெறோர்க்கு அறிவறீஇ
சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்”

**(தொல். பொரு. புறத் 30)**

எனத் தொல்காப்பியர் எடுத்துரைக்கிறார்.

பாணர், கூத்தர் முதலானோர் தாம் செல்லும் வழிகளிலே ஒரு குழுவினர் மற்றொரு குழுவினைச் சந்திப்பர். அவ்வாறு சந்திக்கும் காலத்தில் புரவலர்களிடத்தில் பாசில் பெற்றவரும் பாணன், பெயர்தவருக்குச் செல்லும் வழியைக் கூறி, தமக்குக் கொடை நல்கிய பெருமகனின் கீர்த்தி முதலியவற்றை அவருக்கு உரைப்பர். இம்மரபைக் கொண்டு எழுந்த இலக்கியமே ஆற்றுப்படை ஆகும்.

**யாழ்**

யாழ் நான்கு வகைப்படும். அவை:

1. பேரியாழ்
2. மகரயாழ்
3. சகோடயாழ்
4. செங்கோட்டியாழ் என்பதாம்.

பேரியாழ் இருபத்தொரு நரம்புகளையும், மகரயாழ் பத்தொன்பது நரம்புகளையும், சகோடயாழ் பதினான்கு நரம்புகளையும், செங்கோட்டியாழ் ஏழு நரம்புகளையும் கொண்டிருக்கும்.

"யாழ் நூல் எழுதிய விபுலானந்தர் யாழ் பற்றிக் குறிப்பிடும் பொழுது பண்டைத் தமிழ் நூல்களில் யாழுறுப்புகளைப் பற்றிக் கூறும் நூல்கள் பல. அவற்றுள் பத்துப்பாட்டெனப்படும் நூலே மிகப் பழமையானதெனத் தெரிகிறது. அதனுள் 21 நம்புகளைக்கொண்ட சீறியாழிற்கும், உரிய உறுப்புகளைக் கூறுமிடத்துப் பத்தல், போர்வை, திவவு, ஆணி, வறுவாய், மருப்பு அல்லது கோடு, சுவைகடை, யாப்பு, உந்தி, கோல் அல்லது புரிநரம்பு, நரம்புத் தொடையல் அல்லது தந்திரிகரம், வணர் என்ற பல உறுப்புகளைக் காண்கிறோம் என்கிறார். இதன் மூலம் யாழின் உறுப்புகளையும், யாழ் வகைகளையும் அறிய முடிகிறது. (கா.லெட்சுமி, நாடக தமிழ் ப.11)

**யாழை இயக்கும் முறை**

யாழை இயக்கும்போது நரம்புகளைத் தழுவியும், நரம்புகளை உருவியும், தெறித்தும் ஒன்றை ஒன்று வாழ்ந்து தெறித்தும் சீர்களை உடைய பாடல்களுக்குத் தக இசையை நிரப்பியும் இயக்குவர்.

யாழை இயக்குவதற்கு சில முறைகள் உள்ளன. அதில் வார்தல் என்பது சுட்டுவிரலால் செய்கின்ற தொழில், இதை வாரியும் என்று கூறுகிறார். நரம்புகளைத் தழுவியும் என்று சொல்லலாம். வடித்தல் என்பது சுட்டுவிரலும், பெருவிரலும் கூட்டி நரம்பை அகமும், புறமும் ஆராய்தல். இதை வடித்து என்று சொல்கின்றனர். உந்தி என்பது யாழ் நரம்புகளைத் தெறித்து வன்மை மென்மை பொதுமை போன்றவற்றைப் பார்த்தல், உறழ்ந்தும் என்பது ஒன்றிடை இட்டும் இரண்டிடை இட்டும் தெறித்து ஆராய்தல் பின்பு பாட்டில் உள்ள சீர்களுக்குத் தக இசையை நிரப்புதல் இவ்வாறு யாழை இயக்குவர்.

இதனைச் சிலப்பதிகாரக் கானல் வாயில் இன்னும் தெளிவாகத் தருவார் இளங்கோவடிகள்,

**"வார்தல் வடித்தல் உந்தல் வாழ்தல்**
**சீருடன் உருட்டல் தெருட்டல் அள்ளல்**
**ஏருடைப் பட்டையென இசையோர் வருத்த**
**எட்டுவகையின் இசைக்கரணத்துப்**
**பட்டவகை தன் செவியின் ஓர்த்து" (சிலம்பு. கானல்)**

சிறுபாணாற்றுப்படையில் கூறப்படும் யாழ் செங்கோட்டு யாழ் என்று கூறப்படும் சிறிய யாழ் ஆகும். இதனை,

**"இன்குரல் சீறியாழ் இடவயின் தழீஇ"**
**(சி.பா.ஆ.35)**

என்ற சிறுபாணாற்றுப்படை வரி மூலம் அறிந்து கொள்ளலாம். இனிய குரரையுடைய சிறிய யாழை தம் இடப்பக்கம் அனைத்துத் தழுவிக்கொண்டு பாணர் செல்வதனை இவ்வடி குறிப்பிடுகிறது. இவ்யாழினை பின்வருமாறு ஆசிரியர் நத்தத்னார் புகழ்கிறார்.

"பசிய கண்களையுடைய கருங்குரங்கு பாம்புத் தலையைப் பிடிக்கும் போது பாம்பு குரங்கின் கையை ஒரு பக்கம் இறுக்கியம், ஒரு பக்கம் நெகிழ்த்தும் பிடிக்கும். அதுபோல யாழின் தண்டில் அமைந்துள்ள வார்க்கட்டு தேவைப்பட்ட இடத்தில் இறுகப் பிணைத்தும், நெகிழ வேண்டிய இடத்தில் நெகிழ்ந்தும் இருந்தது. இரண்டு விளிம்பும் சேரத் தைத்து அடிக்கப்பெற்ற ஆணிகளின் தலைப்பகுதி மணிகளை வரிசைப்படுத்தி வைத்தது போன்று இருந்தது. வயிறு சேர்ந்து ஒழுங்கு பட்ட தொழில் வகை அமைந்த பத்தரைக் கொண்டிருந்தது. அவ்யாழ். அதில் தேன் ஒழுகுகின்ற தன்மையையும், அமிழ்தைப் பொதிந்து துளிக்கின்ற முறுக்கு அடங்கிய நரம்பினையும் கொண்டிருந்தது. பாடுகின்ற துறைகளிலெல்லாம் முழுவதும் பாடுதற்கமைந்த பயன் விளங்குகின்ற கூடுதல் இசைகளைக் கொண்டிருந்தது. இசை நூல்கள் கூறுகின்ற மரபில் குரல் குரலாகச் செம்பாலைப் பண்ணைப் பாடவல்லது சிறிய யாழ்" என்று சிறுபாணாற்றுப்படை யாழின் தன்மையைப் புகழ்கின்றது.

**யாழின் உறுப்புகள்**

யாழின் உறுப்புக்கள் பலவற்றையும் உவமை நயத்தோடு நூல்கள் விளங்குகின்றன. பச்சை, செந்துளை, போர்வை, வருவாய், கவைக்கடை, நரம்பு, கோடு, திவவு என்னும் மலைபடுகடாம் பாடல் வழி அறிந்து கொள்ள முடிகின்றது.

**இசைப் பாணர்களின் வாழ்க்கை நெறி**

இசையில் வல்ல பாணன், பாடினி, பொருநர், கூத்தர் ஆகியோர் ஊர் ஊராகச் சென்று ஆடல், பாடல் நிகழ்த்தியும், விழாக்காலங்களில் தமது கலைத்திறமையைப் புலப்படுத்தியும், மக்கள் ஆதரவையும் மன்னர்கள் ஆதரவையும் பெற்று வாழ்ந்தார்கள். பாணர்கள் தமக்குப் பரிசாகக் கிடைக்கும் சிறிய உணவைப் பாதுகாத்து வைக்காது, உடனுக்குடன் உண்டு விடுவார்கள். இதனால் பாணர், பொருநர், கூத்தர், விறலியர் என்னும் இவர்கள் ஓரிடத்தில் நிலைத்து வாழாத நாடோடி மக்கள் எனலாம். இதனை,

**“அறாவு யாணர் அகன் தலைப்பேரூர்**
**காறு கழிவழி நான், சோறு நடை உறாது,**
**வேறுபுலம் முன்னிய விரகு அறிபொருந்”**

**(பெருந 1-3)**

**“அழியா விழவின், இழியாத் திவனின்**
**வயாய மக்கள் பண் அமைத்து எழீஇ**
**மன்றம் நண்ணி மறுகு சிறைபாடும்**
**அகன் கண் வைப்பின் நாடு”**

**(பதிற் 29 : 7-10)**

என வரும் பொருநர் ஆற்றுப்படை, பதிற்றுப்பத்து பாடல்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

**யாழ் இசைக்கும் காலங்கள்**

யாழை இசைத்துப் பாடுவது இன்பத்திற்கு அறிகுறி. இறப்பு போன்ற துன்பக் காலத்தில் யாழைத் தொடர்திருக்கின்றனர். மருத நிலத்திற்கு உரிய மருதப்ண இன்பச்சுவை ததும்பக் காலையில் பாடும் பண்ணாகும் விடியும் காலம் மருதப்பண் பாடியதாக.

**மதுரைக்காஞ்சி**

**“சீரினிது கொண்டு நரம்பினிதியக்கி**
**யாழோர் மருதம் பண்ண” (மதுரை.657 - 658)**

என்ற பாடலடியின் மூலம் இனிமையான யாழை இயக்கி மங்களமான காலை நேரத்தில் மருதப் பண்ணை இசைத்து மன மகிழச் செய்கின்றனர்.

நல்லையூர் கிழார் மகன் பெருஞ்சாத்தன் இறந்து விடுகிறான்.

அதன்பின் வருந்தும் புலவர்

**“நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்**
**பாணன் சூடான் பாடினியணியாள்”**

**(புறம் 242 - 2-3)**

என்ற புறநானூற்றுப் பாடலின் மூலம் துன்ப நிகழ்வுகளில் பாணர் யாழிசைக்கா செய்தி தொய வருகின்றது.

**மன்னனின் புகழைப்பாடும் பாணன் :**

சீறியாழ் இசைத்தவர் சிறுபாணர் என்று அழைக்கப்பட்டார். இசை மயக்கத்தில் பாடி மகிழ்ந்த பாணர்களுக்கு மன்னன் கொடுத்துக் கொடுத்துச் சிவந்த கையுடையவனாகின்றான்.

பருவத்தில் பொய்யாது மழை பெய்தலால், செல்வம் மிகுந்த மலைவாழ் மயில் அகவியதைக் கேட்டு அது குளிர் மிகுதியில் வருந்துகின்றதென்று எண்ணி தானும் வருத்தம் கொண்டு தனது போர்வையை அதற்குப் போர்த்தி மகிழ்ந்தவன் பேகன் என்பதை

**“கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய**
**அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்**
**பெருங்கள் நாடன் பேகன்” (சிறு 85 - 87)**

என்பதை பாடல் வரி உணர்த்துகிறது. மேலும் பறம்பு மலையின் தலைவனான பாரி வள்ளல் முல்லைக்கொடி நிலத்தில் படர்ந்திருப்பதைக் கண்டு வேதனை அடைந்ததால் தனக்கு சொந்தமான தோனை முல்லைக் கொடிக்கு கொடுத்தன் என்பதனை,

**“சினீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய**
**பிறங்கு வெளளருவி வீழுஞ்சாரல்**
**பறம்பிற் கோமான் பாரி”**

**(சிறு 89 - 91)**

என்பதை இப்பாடல் வரி உணர்த்துகிறது.

தம்மை நாடி வந்தவர்க்கெல்லாம், அவர்கள் வாழ்வு சிறக்க அள்ளி அள்ளி கொடுத்த கடை ஏழு வள்ளல்களாகிய பேகன், பாரி, காரி, ஆய், அதிகன், நள்ளி, ஓரி ஆகியோரின் கொடைப் பெருமையைச் சிறுபாணாற்றுப்படையில் கூறிப்பாடியவன் பாணன் ஆவான்.

**முடிவுரை**

சங்க காலத்தில் இசைக்கலைஞர்கள் பலர் இருந்தனர். அதில் சிறப்பாக பாராட்டப்படுபவர் பாணர்கள். பாணர்கள் நமக்குக் கிடைத்த பாசுப்பொருள்களையும், உணவுப் பொருள்களையும் தனக்கென கொள்ளாது சுற்றத்தாருடன் கொடுத்து மகிழ்வர், பாணர்கள் ஊர் ஊராக திரிந்து தன் இசையால் மக்களையும், மன்னனையும் மகிழ்வித்தார்கள். யாழை இன்பத்திற்கு மட்டும் பயன்படுத்தினர். இறப்பு நேரங்களில் பாணர்கள் பயன்படுத்தவில்லை.

# காப்பியங்களில் பெண்ணிய ஆளுமை

*வெ.மகாலெட்சுமி, *முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, காவேரி மகளிர் கல்லூரி திருச்சி.*

**வளையாபதி – கதைச் சுருக்கம்**

வளையாபதியின் கதையானது. **'வைசிய புராணம்'** என்ற புராணத்தில் வருகின்ற **'வைர வாணிகன் வளையாபதி பெற்ற சுருக்கம்'** என்ற கதையினை ஒட்டியதாகவே வழக்கில் உள்ளது.

புகார் நகரத்தினில் வணிகர் குலத்தில் நாராயணன் என்னும் வைர வியாபாரி ஒருவன் இருந்தான். ஆவனிடம் ஒன்பது கோடி அளவிலான பொன் இருந்தது. ஆவன் மிகப்பெரிய செல்வந்தனாக இருந்ததனால் அவனை ஊர் மக்கள் அனைவரும், நவகோடி நாராயணன் என்றே அழைத்தனர் அவன் ஒரு சிறந்த சிவபக்தனாகத் திகழ்ந்தான்.

வளையாபதி கதை என்பதாகச் சொல்லப்படும் கதையினை, உண்மையான 'வளையாபதி' காப்பியத்தின் கதை நிகழ்வு என்று ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர் சான்றோர் பெருமக்கள். காரணம் வளையாபதி என்பது ஒரு சமணக் காப்பியமாகச் சுட்டப்படுகின்றது சமண சமயத்தவர்கள் அருகப் பெருமானைத் தவிர வேறு யாரையும் கடவுள் என்று போற்றி வணங்க மாட்டார்கள். ஆனால் வளையாபதிக் காப்பியத்தில் சொல்லப்படும் தலைவனோ சிவபத்தி உடையவனாகவும், பிள்ளையானவன் காளியை வழிபடுவதாகவும் நிகழ்வுகள் அமைந்துள்ளமை வளையாபதி என்பதன் காப்பித் தன்மையிலிருந்து மாறுபடுகின்றன.

மேலும் சமண சமயம் பற்றிய காப்பியத்தின் நோக்கம் துறவினை வலியுறுத்துவதே ஆகும். ஆனால் நம் கதை நிகழ்வில் வரும் நாராயணனோஇதன் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக வாழ்ந்தான் என்பதாக முடிந்து விடுகின்றது. வீடுபேற்றினைப் பற்றிய சிந்தனையும், செயலும் என்று எதுவும் பேசப்படவில்லை. கதையின் போக்கில் என்பதும் குறிப்பிடத் தக்க நிகழ்ச்சியாக அமைகின்றது. மொத்தத்தில் வளையாபதியின் தொடர்பாக வழங்கும் கதைக்கும், வளையாபதியின் பாடல்களாகக் கிடைத்துள்ள பாடல் செய்திகளுக்கும் தொடர்பில்லை என்பதுடன், வளையாபதியின் கதையும் சமணசமயக் கொள்கைகளை ஒட்டியும் அமைந்திட வில்லை என்பதனால் இக்கதை நிகழ்வு நிச்சயமாக வளையாபதி காப்பியத்தின் கதையாக இருக்க முடியாது என்பதே உண்மையாகும்.

**வளையாபதியின் நூற்குறிப்பு ஆசிரியர் மற்றும் காலம் தொடர்பான கருத்துக்கள்**

வளையாபதி என்னும் காப்பியம் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது! இந்நூல் ஒரு சமணசமயக் காப்பியமாகும். ஆனால் இந்நூல் நமக்கு முழுமையாகக் கிடைத்திடவில்லை. ஐம்பெருங்காப்பிய வரிசையினைப் பற்றி வழங்கும் பழம் பாடல் ஒன்று,

**"சிந்தா மணியாம் சிலப்பதிகாரம் படைத்தான்**
**கந்தா மணிமேகலை புனைந்தான் – நந்தா**
**வளையாபதி தருவான் வாசவனுக்கு ஈந்தான்**
**திளையாத குண்டல கேசிக்கும்"** (1)

என்று குறிப்பிகின்றது ! ஆனால் வளையாபதி முழுமையாகக் கிடைக்காமல் போனதனால், அதன் கதைத் தலைப்பின் காரணத் திணையும் நம்மால் அறிந்து கொள்ள இயலவில்லை. ஆனால் வளையாபதியின் கடவுள் வாழ்த்துப் பாடல்.

**“உலகம் மூன்றும் ஒருங்குடன் ஏத்துமான்**

**திலகமாய திறல் அறிவன் அடி**

**வழுவு இல் நெஞ்சொடு வாலிதின் ஆற்றவும்**

**தொழுவல் தொல்வினை நீங்குக என்றுயான்“ (2)**

என்று அமைந்துள்ளது. இதன் காரணமாக இந்நூல் ஒரு சமண சமயக் காப்பியம் என்பதனை உணர முடிகின்றது. ஆனால் இப்பாடல் யாப்பருங்கல விருத்தி உரையிலும், இளம்புரணர் உரையிலும் எடுத்தாளப் பெற்றுள்ளது. அந்நூல் இப்பாடல் எந்த நூலினைச் சேர்ந்தது என்றும் குறிப்பிடப்படவில்லை. இதனைத் தொடர்ந்து தொல்காப்பியத்திற்கு உரை செய்த நச்சினாகினியர் இப்பாடலை, வளையாபதியினைச் சார்ந்தது என்று தம் உரையினில் குறிப்பிடுகின்றார் இந்நூல் 9ஆம் நூற்றாண்டினைச் சார்ந்தது என்றும் சிலர் 7ஆம் நூற்றாண்டு என்றும் கூறுகின்றனர்.

**மருதநில வளம்**

உலகச் செய்திகள் மட்டுமின்றி இயற்கை பற்றிய தான் வளத்தினை உரைப்பதாக மருத வளத்தினை,

**“செந்நெல் கரும்பினொடு இகலும் தீஞ்சுவைக்**

**கன்னல் அம் கரும்புதான் கமுகைக் காய்ந்தெழும்**

**இன்னவை காண்கிலன் என்று புகமும்**

**முன்னிய முகில்களான் முகம்பு தைக்குமே” (70).**

என்று வளையாபதி கூறும் செய்தியினை,

**‘கரும்பல்ல நெல் என்னக்**

**கமுகல்ல கரும்பென்னச்**

**கரும்பல்லி குடைநீலத்**

**துகளல்லி பகலெல்லாம்**

**அரும்பல்ல முலையென்ன**

**வரும்பல்லா யிரக் கடைசி**

**மடந்தையர்கள் வயல்எல்லாம்”**

என்ற திருத்தொண்டர் புராணத்தினிலும் காண முடிகின்றது.

இத்தகையதான பல செய்திகள் வளையாபதியினின்றும் பல இலக்கியங்களுடன் ஒத்து அமைந்துள்ளதனைக் காண முடிகின்றது. வளையாபதி உணர்த்தும் கற்புநெறிக் கோட்பாடுகள்

‘கற்பு’ என்ற செயல் மற்றும் வார்த்தை தொடர்பாகப் பல்வேறு காலங்களில் வாழ்ந்த பலதரப்பட்ட மனிதர்களால் பல தரப்பட்டக் கருத்துக்கள் நிலவுகின்றன. அவ்வகையில் வளையாபதியும் கற்பு நெறியினை ஒட்டி செய்தியினை எடுத்துரைப்பதனைக் காண முடிகின்றது.

**கற்பு நெறியினை உடைய மனைவியின் சிறப்பு**

இருவர் ஒருவராக நின்று நடந்தும் இல்லற வாழ்வினில் அந்த நாடும், ஊரும், புகழ்ந்திடும் படியாகத் தன்னுடைய குடும்பத்தினை நடத்திடக் கூடிய ஆற்றல் படைத்தவள் அந்த இல்லறத்தின் தலைவியே ஆவாள், அவள் தன்னுடைய குடும்பப் புகழினைக் காத்து, தன் கணவனின் வார்த்தைகளுக்குக் கட்டுபட்டு வாழும் இயல்புடையவளானால்,அவள் ‘பொழிக’ என்று சொன்னவுடன் மழை பொழிந்து விடும். அத்தகைய தெய்வ ஆற்றலை அடைந்திட அவளது கற்புநெறியே காரணமாகின்றது.

இத்தகைய தன்மையுடைய பெண்ணுடன் இணைந்து. நல்ல பிள்ளைகளைப் பெற்று, நல்லறங்களைச் செய்து வாழ்வதே உயர்ந்த இல்லற தாமம். இதனை விடுத்துக் கற்பற்ற பெண்களுடன் இணைந்தால் இல்லத்திற்கும் இழிவு ஏற்படும் . இதனைத் தவிர்த்து நல்லறம் இணைந்த இல்லறம் கற்புடைய மகளிராலேயே அமைப்பும் (67) என்பதையும் வளையாபதி எடுத்துரைக்கின்றது.

கற்பு நெறி பிறழ்ந்த பெண்களின் இயல்புகள் ஆழமான நீரிநிலைகளில் வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய மீன்களானது, புது மழையினால் வரக்கூடியதான புதிய வெளளப் பெருக்கு வருகின்றபோது, அதனையே விரும்பிச் செல்லும் அதனைப் போன்று கற்பு நெறியினில் மாறுபட்ட பெண்களும் தமக்கு அழகுடைய மன்மதனே கணவனாய்க் காமத்தின் காரணமாகத்தன் கணவனைப் பிரிந்து அவாகளை நாடிச் செல்வார்கள். (8)

ஆற்று மணல்துளிகளைப் போன்றும், பனித்துளிகளின் அளவினைப் போன்றும் ஆண்கள் கற்புநெறியில் மாறிய பெண்களிடம் அவர்களுடைய, அழகான பேச்சிலும், அழகின் கவர்ச்சியிலும் மயங்கித் தன்னிடத்தினை அடிக்கடி மாற்றும் இயல்புடையதனைப் போன்று, கற்பற்ற பெண்கள் ஒருவனிடமிருந்து மாறி மற்றொருவன் என்று தன் அன்பினை மாற்றிக் கொண்டேயிருப்பார்கள்.

கற்புடைய மனைவியின் சிறப்பும் இல்லறத்தின் மேன்மையும் இருவர் ஒருவராகக் கலந்து வாழும் இல்லறத்தில் ஊரும், நாடும், புகழ்ந்திடும் படியாகத் தன்னுடைய குடும்பத்தின நடத்திடக் கூடியவனாக ஆற்றல் உடையவன் அந்த இல்லறத்தின் தலைவியே ஆவாள். அத்தலைவியானவள் தன்னுடைய குடும்பத்தின் புகழினைக்காத்து, தன் கணவனின் வார்த்தைகளைக் கேட்டு நடந்திடக் கூடியவளாகவும் வாழ்ந்து பெருமையினை அடைந்து விட்டாள். அவள் பொழிக

என்று சொல்லுகின்ற போதே மழையினைப் பொழிந்து விடும் வனம் என்று சிறப்புடைய கற்பின் இலக்கணமாக இல்லறத் தலைவியின் பெருமையினை வளையாபதி

**"நாடும் ஊரும் நனிபுகழ்ந்து ஏத்தலும்**
**பீடுறும் மழை பெய்க எனப் பெய்தலும்**
**கூடல் ஆற்றவா நல்லது கூறுங்கால்**
**பாடு சால்மிகு பத்தினிக்கு ஆவதே" (3)**

என்று குறிப்பிடுகின்றது. இச்செய்தினைத் திருக்குறள்,

**"தெய்வம் தொழா அள் கொழுநன் தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை (55) என்றும் (4)**
**தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற**
**சொற்காத்துச் சோர்விலாள் பெண்" (56) (5)**

என்று பேசுகின்றதனைக் காண முடிகின்றது.

இத்தகைய பெருமையுடை பெண்களின் கற்புநிலையை வேறுயாராலும் காவல் செய்திட இயலாது. அதனை பெண்களே முயன்று தான் காத்திட இயலும் என்பதனை மறைமுகமாக வளையாபதி, இதுவரையில் உணவுப் பொருள் அழிந்து போகாமல் காத்திட வழி உள்ளது. இதனை விட உயர்ந்த கல்விச் செல்வத்தினைக் காத்திடவும் வழி உள்ளது. ஆனால் பெண்களின் கற்புநிலை காப்பதற்கு என்ன வழி உள்ளது? என்று கேட்பதாக.

**'உண்டியுள் காப்புண்டு உறுபொருள் காப்புண்டு;**
**விழுப்பொருள் கல்விக்குக் காப்புண்டு;**
**பெண்டிரைக் காப்பது இலம் என்று ஞாலத்துக்**
**கண்டு மொழிந்தனா கற்றறிந் தோரே" (9) (6)**

என்று பாடியுள்ளனர். வள்ளுவர் இதன் அடுத்த நிலையினையே.

**"சிறைகாக்கும் காப்புவென் செய்யும் மகளிர்**
**நிறைகாக்கும் காப்பே தலை" (57) (7).**

என்று குறிப்பிடப்பட்டுள்ளது கவனிக்கத்தக்க செய்தியாகும்.

அவ்வாறே நல்மனைவியுடன் நல்ல குழந்தைகளையும் உடையவர்களையே நாம் இனிய இல்லறம் பெற்றோர் என்று எண்ணிப் போற்றிட இயலும். எனவே ஒவ்வொரு குடும்பத்திலும் அழகான குழந்தை அவசியமானது. அப்படிப்பட்ட குழந்தைகளில்லாத குடும்பம் பொறுமை என்னும் குணம் இல்லாதவனின் அறிவு, புணர்ச்சியில்லாத இளமை, படிகள் இல்லாத தாமரைக்குளம், ஆடையில்லாத அலங்காரம், மணம் இல்லாத மலர் மாலை, கல்வி அறிவு இல்லாத புலமை, நீர்நிலைகள் இல்லாத நகரம் போன்ற வாழ்வு என்பதனை வளையாபதி

**"பொறையிலா அறிவு; போகப்**
**புணா விலா இளமை; மேவத்**
**துறையிலா வனச வாவி;**
**துகில் இலாக் கோலத் தூய்மை;**
**நறையிலா மாலை; கல்வி**
**நலமிலாப் புலமை; நன்னீர்ச்**
**சிறையிலா நகரம் போலும்**
**சேயிலாச் செல்வம் அன்றே" (8)**

என்று குறிப்பிடுகின்றது. இச்செய்தியினை வள்ளுவரும்,

**"மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்**
**நன்கலம் நன்மக்கட் பேறு" (60)**
**"பெறுமவற்றுள் யாம் அறிவது இல்லை அறிவறிந்த**
**மக்கட்பேறு அல்ல பிற" (61) (9)**

என்று குறிப்பிடுகின்றார்.

### நாவடக்கம் தேவை

ஒருவன் எதனை அடக்க முடியாவிட்டாலும் நாக்கினைக் கட்டுப்பாட்டுடன் பயன்படுத்த வேண்டும் என்ற செய்தியினை வளையாபதி

**"ஆக்கப் படுக்கும் அருந்தளை வாய்ப் பெய்விக்கும்**
**போக்கப் படுக்கும் புலைநரகத்து உய்விக்கும்**
**காக்கப் படுவன இந்திரியும் ஐந்தினும்**
**நாக்கு அல்லது இல்லை நனி பேணுமாறே" (10)**

என்ற செய்தியினை,

**"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" (127) (11)**
**'தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினாற் சுட்ட வடு" (129) (12)**
**'நாநலம் என்னும் நலமுடைமை அந்நலம்**
**யாநலத்து துள்ளதூஉம் அன்று" (641) (13)**

என்றும் குறட்பா வலியுறுத்துகிறது.

### தீச்செயலைத் தவிர்த்தல்

எல்லா ஒழுக்கங்களையும் பின்பற்றிய வேள்வி, தவம் முதலான வாழ்க்கை அற நெறிகளைப் பின்பற்ற இயலாமல் போனாலும் கூட ஒருவன் கொலைத் தொழில், பொய்புரட்டு, ஏமாற்று போன்ற செயல்களைத் தவிர்த்து வாழ்வதே பெரும் நன்மை உடைய செயலாகும்

என்பதனை வளையாபதி

**“கள்ளன் மின்; கள வாயின யாவையும்**

**கோள்ளன் மின்; கொலை கூடி வருமறம்**

**எள்ளன் மின்; இலா என்றெண்ணி யாரையும்**

**நள்ளன் மின்; பிறர் பெண்ணொடு நண்ணன்மின்”**

என்று வலியுறுத்தும் செய்தியினை,

**“ அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்**

**உயிர் செகுத்து உண்ணாமை நன்று” (259) (14)**

**“எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும்**

**கள்ளாமை காக்கதன் நெஞ்சு” (281) (15)**

என்றும் குறட்பா குறிப்பிடுகின்றது. இச்செய்தியினை வலியுறுத்துவாத அமைந்த வளையாபதியின் 19ஆம் பாடலும்,

**“அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை இருள் சேர்ந்த**

**இன்னா உலகம் புகழ்” (243) (16)**

என்றும் அமைந்துள்ள குறட்பாவிலும் காணமுடிகின்றது. இவை மட்டுமின்றி நூலில் கிடைத்துள்ள 72 பாடல்களில் மிகுதியான பாடல்கள் குறட்பா கருத்துகளை ஒட்டியே அமைந்துள்ள தன்மையினைக் காண முடிகின்றது. வளையாபதியில் காணலாகும் (திருக்குறள் தவிர்த்து) பிற இலக்கியச் செய்திகள் ஐம்பெருங்காப்பியங்களில் காரணமாக வளையாபதியில் திருக்குறள் மட்டுமின்றி வேறு பல இலக்கியங்களில் காணப்படும் செய்திகளை ஒட்டிய கருத்துகளைக் காணமுடியும்.

**மனிதப்பிறவியின் சிறப்பு**

வினைப்பயனின் காரணமாகக் கிடைத்திடக்கூடியது இப்பிறவி. இதில் அரியதானது மனிதப் பிறவி என்பதனை வளையாபதி,

**“வினைபல வலியினாலே**

**வேறுவேறு யாக்கையாகி**

**நனிபல பிறவி தன்னுள்**

**துன்புறூஉம் அரியதாகும்**

**தோன்றுதல்” (5) (17)**

அப்படியே மனிதப் பிறவி கிடைத்தாலும் அதில் கூன், குருகு, செவிடு போன்ற குறைபாடுகள் இன்றிப் பிறவி கிடைப்பதும் அரியதாகும். அப்படியே கிடைத்த பிறவியில் நல்ல செல்வம் கிடைத்தும், சிறந்த கல்வி, ஞானம், தானம், தவம் என்பதான மேன்மையான நிலைகள் கிடைப்பது மிகவும் கடிய செயலாகும்.

**“உயர்குடி நனிஉள் தோன்றல்**

**உனனமில் யாக்கை ஆதல்**

**மயாவறு கல்வி கேள்வித்**

**தன்மையால் வல்லவர் ஆதல்**

**பொதுணர் அறிவே யாதல்**

**பேரறம் கோடல் என்றாங்கு**

**அரிதவை பெறத லோடே**

**பெற்றவர் மக்கள் என்பார்.”**

என்று குறிப்பிடுகின்ற செய்தியினை ஔவையார்,

**“அரிது அரிது மானிடராதல் அரிது**

**மக்கள் யாக்கையில் பிறந்த காலையும்,**

**மூக்கையும், செவிடும், கூனும், குருடும்,”**

**பொது மகளிர் இயல்பு**

பலரை விரும்பும் இயல்புடையவர்கள் பொது மகளிரின் மன இயல்பினையும் என்னால் மாற்றிவிட முடியும் என்று ஒருவன் கூறுவது கீழே கொட்டி எல்லா இடங்களிலும் சிதறிய எண்ணெய்த் துளிகளை சேர்க்க முயல்வது போன்றது. எனவே பொது மகளிரின் இயல்பினை மாற்றிவிட இயலாது என்பதனை வளையாபதி,

**“தெண்ணீர் பரந்து திசைதொறும்**

**போய்க் கெட்ட**

**எண்ணெய் கொண்டு ஈட்டற்கு இவறுதல் என் ஒக்கும்**

**பெண் மனம் பேதித்து**

**ஒருப்படுப்பேன் என்னும்**

**எண்ணில் ஒருவன் இயல்பு**

**எண்ணு மாறே” (53) (18)**

என்று குறிப்பிடுகின்றது. இச்செய்தியினை

**“ஏந்தெழில் மிக்கான் இளையான் இசைவல்லான்**

**குாந்தையர் கண்கவர் நோக்கத்தான் - வாய்ந்த**

**நயனுடையின் சொல்லான் கேளெனினும் மாதர்க்க**

**அயலார்மே லாகும் மனம்”**

என்று நீதிநெறி விளக்கம் (82) கூறும் செய்தியுடன் ஒப்பிட்டு உணரலாம்.

**முடிவுரை**

இத்தகைய சிக்கலும் துன்பமும் பொருட்செல்வத்தினாலேயே வந்து சேரும் எனவே வளையாபதி பல பாடல்களில் இம்மையில் பொருட்செல்வம் வாழ்விற்குத் தேவை என்றாலும் அதனை விரும்புதல், சேர்த்தல் என்பதனைச் செய்திடுதல் கூடாது என்றும், உண்மைப் பொருளுடையதான தவவாழ்வில் நம்மை செலுத்திட வேண்டும் என்று உணாத்துகின்றது.

# தொல்காப்பியம் – உரையின் தோற்றமும் வளர்ச்சியும்

*செ.சத்தியநாதன், *முனைவர் பட்டஆய்வாளர், தமிழ்த் துறை, பி.ஜி.பி கலை அறிவியல் கல்லூரி, நாமக்கல்.*

இலக்கியம் மொழியை வளப்படுத்திச் செம்மையுறச் செய்கிறது. இலக்கணம் அவ்விலக்கியத்திற்கு வரையறை செய்கிறது. இலக்கணம் என்பது விதி எனின் இலக்கியம் விதி விலக்கு எனலாம். இலக்கணம் மொழியின் பல்வேறு அமைப்பு நிலைகளை விளக்குகிறது. இலக்கியங்கள் மக்களின் பண்பட்ட வாழ்க்கை முறைகள் பழக்க வழக்கங்கள்,மரபு உள்ளிட்ட பலவற்றையும் வெளிக்காட்டுவதினால் இலக்கியம் மக்களோடு நெருங்கிய தொடர்புடையதாகிறது. இலக்கியங்களைப் பயின்று இன்புறுவதற்கும் படைப்பதற்கும் இலக்கணம் மிகவும் முக்கியமானது. தொடக்ககாலத்தில் இலக்கியங்களும் இலக்கணங்களும் செய்யுள் மற்றும் நூற்பாவடிவில் தான் இயற்றப்பட்டன. செய்யுளைப் பிரித்துப் படித்து விளங்கிக் கொள்வதற்கும், நூற்பாக்களுக்கான புரிதலைப் பெறுவதற்கும் உரை மிகவும் அவசியமாகிறது. இலக்கியங்களை விடவும் இலக்கணத்திற்கான மொழி நடைசெறிவானதாக உள்ளதால், இலக்கணத்திற்கு உரை மிகவும் முக்கியமானதாகக் கொள்ளப்படுகிறது. காலத்திற்கேற்றவாறு உரையில் மாற்றமும் நிகழ்ந்து கொண்டு வருகிறது. அவ்வகையில் உரை எப்பொழுது தோன்றியது, எப்பொழுது வளர்ச்சி பெற்று உச்சநிலை அடைந்தது என்றும், உரையின் தோற்றுவாய், வளர்ச்சி, உரை வகை குறித்தும், இக்கட்டுரை ஆராய்கிறது.

**உரையின் தோற்றுவாய்**

முதலில் உரையின்றிச் சூத்திரத்தின் மூலம் பொருள் விளங்கிக் கொண்ட காலமும், பின்பு உரையின் மூலம் பொருள் விளங்கிக் கொண்டு வரும் நிலையினையும் அறிய முடிகிறது. சூத்திரத்தைப் படித்து முயன்று பொருள் கொள்ள வேண்டிய நிலை தொடக்கத்தில் இருந்தது, ஓரளவு புரிந்துகொள்ளவும் முடிந்தது. காரணம் தொல்காப்பியர் காலத்தில் மொழிநடை அக்காலவழக்கொடு இயைந்து நின்றதே எனலாம். அதனால் தான் உரையின்றிச் சூத்திரத்தின் வழியே பொருளை உள்வாங்கிக் கொண்டுள்ளனர். இதனை,

**“உரையின்றிச் சூத்திரத்தானேபொருள் நிகழ்ந்த**
**காலமும் உண்டென்பதாம்”**

என்னும் தொல்காப்பிய நூற்பாவால் அறியலாம்.

உரை என்ற அமைப்பானது தொல்காப்பியத்திற்கு முன்னரே இருந்திருக்கின்றது. உரையின் இலக்கணம் பற்றித் தொல்காப்பியர் குறிப்பிடுவதிலிருந்து உரை இருந்ததனைஅறியமுடிகிறது.

**“பழிப்பில் சூத்திரம் பட்டபண்பிற்**
**குரப்பின்றி முடிவது காண்டிகையாகும்”**

**“விட்டகல்வின்றிவிரிவொடுபொருந்திச்**
**சுட்டிய சூத்திரமுடித்தற் பொருட்டா**
**வேதுநடையினுமெடுத்துக் காட்டினு**
**மேவாங் கமைந்தமெய்ந்நெறித்ததுவே”**

முதலிய நூற்பாக்கள் மூலம் உரை என்பது தொல்காப்பியத்திற்கு முன்பே இருந்தது என்பதை அறியலாம். தொல்காப்பியர் உரையின் இலக்கணம் பற்றிக் கூறுவதினாலே இதனை விளங்கிக் கெள்ளமுடிகிறது.

வாய்மொழியாகத் தலைமுறை தலைமுறையாக நூல்களுக்கான உரைவிளக்கப்பட்டு வந்திருக்கின்றன என்பதைக் கற்றலின் கேட்டலே நன்று என்னும் வழக்கால் அறிய முடிகிறது. பின்பு அவ்வூரை நூலாகப் பதியப்பட்டன.

இன்று போல் அக்காலத்திலும் நூல் அரங்கேற்றம் செய்யப்பட்டது. நூல் அரங்கேற்றம் என்பது இன்றைய நாள் போல் எளிதானதன்று. கற்றோர் அவையில் நூல் முன்வைக்கப்படும். அந்நூல் குறித்துப் புலவர்கள் நன்கு ஆராய்ந்து மதிப்பிடுவர். நூல் எவ்வகையில் பயனுடையது என்றும், நூலுக்கான தகுதி பெற்றுள்ளதா என்றும் நுணுகி ஆராய்வர். அதன் பிறகு நூலைப் பற்றிய நல்ல மதிப்பீடுகளைப் புலவர்கள் அவையில் எடுத்துரைப்பர். அங்ஙனம் புலவர்களின் நன்மதிப்பையும் ஒருசேர ஏற்றுக் கொண்டமைக்கான போற்றுதலையும் ஒரு நூல் பெற்ற பிறகே அரங்கேற்றம் நிகழும். அவ்வாறு நூல் அரங்கேறியதற்கான குறிப்புகள் உரைக்கான தொடக்கம் என்று கொள்ளலாம்.

தொல்காப்பியம், நன்னூல் முதலான இலக்கண நூல்களும், கம்பராமாயணம் உள்ளிட்ட பல இலக்கிய நூல்களும் கற்றோர் அவையில் அரங்கேற்றம் செய்யப்பட்டன. நூல்களுக்கான உரைகளும் நூல் போலவே அரங்கேற்றமாயிருக்கின்றன என்பதற்கான குறிப்புகள் உள்ளதாகத் தெரிகிறது. தொல்காப்பியம், திருக்குறள், புராணம், காப்பியம் உள்ளிட்ட நூல்களுள் சீவகசிந்தாமணிக்கு நச்சா எழுதிய முதல் உரைசமணப் பெரியோர்களால் ஏற்றுக் கொள்ளாமல் இருந்ததையும், இரண்டாவது முறை எழுதப்பட்ட உரையை ஏற்றுக் கொண்டதையும் பார்க்க முடிகிறது. இதனை

தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், நடதம், காஞ்சிப்புராணம் முதலான நூல்களின் அரங்கேற்றம் பற்றிய சுவையான குறிப்புகள் பல நமக்குக் கிடைத்துள்ளன. சீவகசிந்தாமணிக்கு நச்சினார்க்கினியர் எழுதிய முதல் உரைசமணப் பெரியோர்களால் ஒப்புக் கொள்ளப்படவில்லை என்றும், சமண மரபுகளையும் மெய்ம்மைகளையும் நன்கு கற்றபின் அவர் எழுதிய இரண்டாவது உரையே ஏற்றுக் கொள்ளப்பட்டது 5) (உரையின் தோற்றமும் வளர்ச்சியும் பக் 10-11) என்னும் வரிகள் மூலம் அறியலாம்.

தொல்காப்பியத்தில் சொல்லப்படுகின்ற உத்திகள் சூத்திர நிலையைக் குறிக்கக் கூடியவையாயினும் உரையின் தன்மையைத் தெளிவாகச் சுட்டுகின்றன. உரைநடை பெறும் முறைகளையும் தெரிவிக்கின்றன. மேலும் நூற்பாவில் சொல்லப்பட்டிருக்கின்ற உட்பொருளையும் அதனோடு தொடர்புடைய செய்திகளை இணைத்து உரைப்பது உரை என்று தொல்காப்பியம் கூறுகிறது. இதிலிருந்து உரை என்பது தொல்காப்பியர் காலத்திற்கு முன்பும் தொல்காப்பியர் காலத்திலும் உரை இருந்திருக்கலாம் என நம்ப முடிகிறது. இதனை,

**“சூத்திரத்து உட்பொருள் அன்றியும் யாப்புற**

**இன்றியமையாது இயைபவை எல்லாம்**

**ஒன்ற உரைப்பது உரை எனப்படுமே”**

எனும் நூற்பா மூலம் அறியலாம். எனவே, நூற்பா, சூத்திரம், செய்யுள் முதலானவற்றிற்கு உரை வகுக்கப்பட்டிருந்தது என்பதை உணரலாம்.

உரைப்பின் என்னும் வினையெச்சச் சொல் உரையின்றி நிகழ்ந்த காலமும் உண்டு என்றும் வகை என்றும் சொல் உரை எனப்பொருள் கொள்வதனையும் அறிய முடிகிறது. அதாவது உரையின்றி என்பது சூத்திரத்தினால் பொருள் கொள்ளுதல் என்பதாகும். எனவே, புரிந்து கொள்ளக்கூடிய அளவிலே சூத்திரம் இருக்கிறது என்பதை விட அக்கால மொழி வழக்கும் அதனோடு ஒத்திருந்து எனக்கொள்ளலாம், இதனை

உரைப்பின் என்னும் வினையெச்சம், இளத்தல் என்பதனோடு முடியும். வகை என்றதனால் உரையெனப்பட்டது. தானும் அக்காண்டிகையின் மெய்ப்பட இளந்ததேயாகலின் அவ்விரண்டுஞ் செய்யுளியலுட் கூறி வந்த உரை விகற்பமேயென்பதுணர்த்தியவாறு 7) எனும் வரிகள் மூலம் அறியலாம். (தொல்,பொருள்,பேரா,உரை, ப.691)

செவியில் கேட்டு உணர்ந்து அறிவுத்திறனைப் பெற்றுவந்தனர். ஆசிரியர் வழியாகக் கற்ற மாணவர்கள், தந்தை தம்முடைய குழந்தைகளுக்கும் வாய்மொழியாகப் பழைய நூல்களுக்கு உரையும் அவ்வுரைக்கான விளக்கமும் வழிவழியாகக் கூறிவந்தனர். இப்படி ஒரு நூல் பலதலை முறைகள் தாண்டி வருகின்ற பொழுது, ஒவ்வொரு தலைமுறைக் கருத்துக்கள் உரையில் சேர்ந்து கொண்டே வந்தது. இப்படியே வாய்மொழியாகப் பல ஆண்டுகள் வழங்கி வந்த கருத்துகள் மற்றும் உரை விளக்கங்கள் நூல் வடிவில் வரத்தொடங்கின.

பாடல்களுக்கு அல்லது சமயம் சார்ந்த நாடக பாணிச் சடங்குகளுக்கு விவரம் கூறும் முன்னுரைகள்

உரை சார்ந்தவையாகும். இவை செய்யுளுக்குரியமோனை, எதுகை, ஏற்ற இறக்க ஓசை ஒழுங்கு முதலிய அனைத்து அடையாளங்களையும் கொண்டிருந்தது. எனினும் அடி நீளம் கொஞ்சம் கூடுதலாக இருந்திருக்கலாம். விளக்கக் குறிப்புகள் உரைநடையிலே எழுதப்படுகின்றன. இறையனார் அகப்பொருளுக்குப் பல்லவர் காலத்தைச் சேர்ந்த நக்கீரான் விளக்கக் குறிப்பு இலக்கிய அழகு வாய்ந்த வருணனைப் பகுதிகள் கொண்டதாகவும் எதுகை மோனை உடையதாகவும் காணப்படுகிறது. இவ்வுரை கி.பி.8-ஆம் நூற்றாண்டளவில் பதியப்பட்டன. இதனை,

இறையனார் களவியல் உரை நக்கீரனார் காலம் தொடங்கி நீலகண்டனார் வரையில் காண பரம்பரையாக வழங்கி வந்தது. இவ்வாறு ஒன்பது தலைமுறைகள் வாய்மொழியாக வழங்கி வந்த இவ்வுரையானது கி.பி.8-ஆம் நூற்றாண்டளவில் ஏட்டுவடிவில் அமையலாயிற்று 8(உரை மரபுகள்.ப.1) என்னும் வரிகள் மூலம் அறியலாம்.

உரை தோன்றிய கதைகள் வியலுரையில் கதையாகச் சொல்லப்பட்டுள்ளதும், இதற்குச் சான்றாகக் கொள்ளலாம். பாண்டியன் வேண்டுகோளுக்கு இணங்கி இந்நூலுக்குப் பலர் உரைகண்டனர். அவற்றை உருத்திரசன்மன் என்பவனிடம் ஒவ்வொருவராகச் சொன்னார்கள். முருகக் கடவுள் ஒரு சாபத்தால் உப்பலர்க்கும் கிழாருக்கு ஊமைமகனாகப் பிறந்திருந்தார். உரை கேட்ட போது ஐந்து வயது உடையராக முருகன் விளங்கினார். பலரது உரையைக் கேட்ட போதும் இயல்பாக விளங்கிய முருகப் பெருமானாகிய சிறுவன் மதுரை மருதனிள நாகனார் உரையைக் கேட்கும் போது ஆங்காங்கே வியந்து மெய்சிலிர்த்தாராம். கணக்காயனார் மகனார் நக்கீரனார் செய்த உரையைக் கேட்கும் போது உரை தொடக்கம் முதல் உரை முடிக்கும் வரை வியந்து மெய்சிலிர்த்தார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து நக்கீரனார் உரைஅருளிச் செய்தமை விளங்குகின்றது. இவர் சங்கப் பாடல்களைப் பாடிய நக்கீரனார் அல்லா. ஏனெனில் இவரது உரையில் வடசொற்கள் மலிந்து காணப்படுகின்றன என்பதையும் அறியமுடிகிறது. எனினும் தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்க வரலாற்றைக் கூறும் முதல் நூல் இந்தஉரை நூலே எனத் தெளிவாகிறது. இவ்வுரையில் அரிய பல விளக்கங்கள் காணப்படுகின்றன.

இவ்வாறு தொல்காப்பிய உரை வளர்ச்சி பெற்றது எனக்கூறலாம்.

# பெண்ணிய நோக்கில்
# பெண்களின் உரிமைகளும் கடமைகளும்

*ஈ. செல்வி, *தந்தை ஹேன்ஸ்ரோவர் கல்லூரி, தமிழ்துறை, பெரம்பலூர்.*

*முனைவர் பெ. முத்துராஜ், *உதவிப்பேராசியர், தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி, வேப்பந்தட்டை, பெரம்பலூர்.*

**முன்னுரை**

பெண்ணுமையானது மனித உரிமைகளில் அடங்கிய ஒன்றாகும். ஆனாலும் மனித உமைரிலிருந்து பெண்ணுமைரினைப் பிரித்துப் பார்ப்பதற்கு பல்வேறு அம்சங்கள் காரணமாக அமைகின்றன. மக்கள் எந்த நாட்டைச் சார்ந்தவராக இருந்தாலும் அல்லது எந்த இனம், மதம், பால் ஆகியவற்றைச் சார்ந்தவராக இருந்தாலும் அவர்களுடைய உரிமைகள் உலகம் முழுவதும் பொருந்தக்கூடியது ஆகும். ஆனாலும் உலகெங்கிலுமுள்ள பெண்கள் அவர்கள் பெண்கள் என்பதாலேயே வேற்றுமைப்படுத்தப்படுகின்றார்கள். சர்வதேச மனித உமை பிரகடனம் ஆண்களுக்கும், பெண்களுக்கும் சம உரிமையினை உறுதிப்படுத்தி உள்ளது. இந்திய அரசியலமைப்பில் குறிப்பிட்டுள்ள உரிமைகள் ஆண்களுக்கும், பெண்களுக்கும் சமமாகவே வரையறை செய்யப்பட்டுள்ளது.

**பெண்ணுமை பற்றிய வரலாற்றுப் பார்வை**

பண்டைக் காலத்தில் இலக்கியங்களிலும் புராணங்களிலும் பார்க்கும்போது பெண்களுக்கு உரிமைகள் மறுக்கப்பட்டே வந்துள்ளது. எகிப்திய இலக்கியங்களிலும் ஐரோப்பிய இலக்கியங்களிலும் பெண்கள் அடிமைகளாகவே நடத்தப்பட்டு வந்துள்ளதை அரிய முடிகிறது. ஆனால் கல்வி அறிவுப் பெற்ற பெண்கள் மிக உயர்வாக நடத்தப்பட்டு வந்துள்ளனர்.

அதே இலக்கியங்கள் பெண்கள் தெய்வ நிலைக்கு உயர்த்தி போற்றப்பட்டு வந்ததையும் தெரிவிக்கின்றன. மழை வேண்டியும் வெற்றி, கல்வி, செல்வம் ஆகிய அனைத்திற்கும் பெண்களையே தெய்வமாகப் போற்றி காலம் காலமாக மக்கள் வழிபட்டு வந்துள்ளனர். ஆனால் பெண்மையின் மென்மையும், தன்மையும் போற்றி புகழ்ப்பட்டாலும் அவர்களின் உரிமைகள் நசுக்கப்பட்டே வந்துள்ளன.

ஐரோப்பியர்களின் வருகை, இந்தியாவில் ஆங்கிலேயன் ஆட்சி ஆகியவை இந்திய சமூகத்தில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தியது. அவ்வாறு இந்து சமுதாயத்தை மாற்றியமைக்க முனைந்தவர்களில் முதன்மையாகத் திகழ்ந்தவர் இராஜராம்மோகன்ராய் ஆவார். மனித உரிமைகளை அங்கீகப்பது இந்து தர்மத்திற்கு ஏற்புடையதாகக் கருதினார்.

**இந்திய அரசியலமைப்பில் பெண்ணுமை**

**1. சமத்துவ உமை**

1950ம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையில் இந்திய குடிமக்கள் அனைவருக்கும் சமூக அரசியல் மற்றும் பொருளாதார அமைப்புகளில் சம அந்தஸ்தும் நீதியும் பெற்றவர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 14வது பிவு இந்திய குடிமக்கள் அனைவருக்கும் சட்டப் பாதுகாப்பு உண்டு என்று கூறுகிறது. மதம், இனம், பால், சாதி அல்லது பிறப்பிடம் ஆகியவற்றால் மக்கள் வேற்றுமைப்படுத்தப்படுவதை 15வது விதி தடைசெய்கிறது. இவ்விதியில் மேலும் பெண்களின் நலன் மற்றும் மேம்பாட்டுக்கான பல வழிமுறைகள் கூறப்படுகின்றது.

**2) சுதந்திர உமை**

இந்திய அரசியலமைப்பு ஆண், பெண் பாகுபாடில்லாமல் எல்லோருக்கும் சுதந்திர உமையை வழங்கியுள்ளது. எவ்விதத் தடையுமில்லாமல், பிறர் பாதிப்படையாமல் ஒருவர் தன் உணர்வை வெளிப்படுத்துவதும், அதனைச் செயல்படுத்துவதும் சுதந்திர உரிமையாகும். 19வது பிரிவு பெண்களுக்கு பேச்சுரிமை, கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமை, சங்கங்கள் அமைக்கும் உரிமை, இந்திய எல்லைக்குள் எங்கும் சுதந்திரமாக சென்றுவர உரிமை, அமைதியாக கூடும் உரிமை, ஏதேனும் தொழில் அல்லது வேலை செய்யும் உரிமை ஆகியவைகளை வழங்கியுள்ளது.

**3.அரசியல் உரிமைகள்**

ஆண்களைப் போல பெண்களுக்கும் பொது வாழ்வில் ஈடுபடுதல், அரசியலில் ஈடுபடுதல், தேர்தலில் போட்டியிடுதல், பொது அலுவலகங்களில் பணிபுரிதல், அரசாங்கத்தை விமர்சித்தல், அரசாங்க நிர்வாகத்தில் பங்கு பெறுதல் போன்ற உரிமைகளும் உண்டு.

**4.சமூக உமைகள்**

பெண்களுக்கு பல சமூக உமைகளை இந்திய அரசியலமைப்பு வழங்கியுள்ளது. மணம் புரிந்து கொள்வதற்கும், குடும்பம் அமைத்துக் கொள்வதற்கும் உரிமை உண்டு. திருமணத்தின் போதும் திருமண உறவை ரத்து செய்யும் போதும் ஆணுக்கும், பெண்ணுக்கும் சமமான உரிமை உண்டு. சமுதாயத்திடமிருந்தும், அரசிடமிருந்தும் பாதுகாப்பு பெறும் உமை பெண்ணிற்கும் உண்டு. மேலும் உடல் ரீதியாகவும், ஆரோக்கியமான சுகாதாரச் சூழலைப் பேணும் உரிமை உண்டு. இந்திய அரசியலமைப்பின்படி 18 வயது நிரம்பிய பெண்ணிற்கு திருமணம் செய்துகொள்ள உமை உண்டு.

**5. கல்வி கற்கும் உரிமை**

கல்விக்கான உரிமையும் மனித உரிமையே ஆகும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி 15, 19வது பிரிவின்படி ஆண்களுக்கு அளிக்கப்படும் அனைத்து கல்வி வசதிகளும், பெண்களுக்கும் அளிக்கப்பட வேண்டும்.

**6. சொத்துரிமை**

உரிமை முறையில் பரம்பரைச் சொத்தை அடைவது சம்பந்தமாக உள்ள சட்டங்கள் அனைத்தும் சமயத்தின் அடிப்படையில் மாறுபடுகிறது. ஆனால் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 300வது பிரிவில் பெண்களுக்கு அசையாச் சொத்தில் பங்கு உண்டு என்று கூறப்பட்டுள்ளது. 1956ம் வருடம் இந்து வாரிசுயுரிமைச் சட்டத்தின்படி இந்து பெண்கள் மூதாதையர் சொத்தில் பங்குபெற உரிமை வழங்கப்பட்டது. 1989இல் தமிழக அரசு இந்து வாரிசுயுரிமை சட்டத்தில் கொண்டு வந்த திருத்தத்தின்படி தந்தையின் சொத்தில் ஆணுக்குரிய பங்கு பெண்ணிற்கும் உண்டு.

**7.விவாகரத்து பெறும் உரிமை**

உலகின் எல்லா மதங்களும் திருமணத்தைப் புனிதமாகவும் மாற்ற முடியாததாகவும் கருதுகின்றன. ஆனால் காலப்போக்கில் ஒன்று சேர்ந்து வாழமுடியாத தம்பதியினர் பிரிந்து செல்ல ஏதுவாக விவாகரத்து என்ற சட்டப்பூர்வமான முறை ஏற்படுத்தப்பட்டது. விவாகரத்து குறித்த சட்டம் முதன்முதலில் கோல்காப்பூர் என்ற சுதேச அரசில்தான் இயற்றப்பட்டது. 1944ல் இந்து சட்டத் தொகுப்பை உருவாக்குவதற்கு அமைக்கப்பட்ட ராவ் குழு தனிசட்டம் இயற்றப்பட்ட வேண்டும் என்று கூறியது. 1956ல் ஜவஹர்லால் நேரு இந்து திருமண விவாகரத்து மற்றும் மறுமணச் சட்டம் இயற்றி இதன்படி இந்துப் பெண்களுக்கு விவாகரத்து செய்யவும், மறுமணம் செய்து கொள்ளவும் உரிமை வழங்கப்பட்டது.

**8. மறுமணம் செய்து கொள்ளும் உரிமை**

1829ல் சாதி முறை ஒழிக்கப்பட்ட பின்னர், விதவை திருமணம் என்ற கருத்து வேகமாகப் பரவியது. 1856ல் விதவைகள் ஈஸ்வர சந்திர வித்யாசாகர் போன்றவர்களின் அயராத முயற்சியால் இந்து திருமணச் சட்டம் மறுமணத்திற்கு வகை செய்கிறது. 15வது பிரிவு விவாகரத்து வழங்கப்பட்ட பிறகு அப்பெண்கள் மீண்டும் சட்டப்படி ஒரு ஆண்டு காலம் கழித்து மறுமணம் செய்து கொள்ளலாம். இந்த ஓராண்டு கால இடைவெளிகூட 1976ம் வருட திருத்தச் சட்டப்படி ரத்து செய்யப்பட்டு விட்டது.

**9. பயிற்சி, வேலைவாய்ப்பு மற்றும் பதவி உயர்வு பெறும் உரிமை**

இந்தியாவில் பெண்ணுரிமையைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் 1990ல் தேசிய பெண்கள் ஆணையச் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. சமவேலைக்கு சமமான ஊதியம் பெறும் உரிமை, குறிப்பிட்ட நேரம் வேலை செய்யும் உரிமை, மகப்பேறு உதவி பெறும் உரிமை, தரக்குறைவாக பெண்களை சித்தப்பதற்கான எதிரான உரிமை பொது வேலைகளில் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யும் உரிமை போன்ற உரிமைகளை அனுபவிக்கவும் பெண்களுக்கு உமை உண்டு.

**அறநெறி உரிமைகள்**

குழந்தைகளின் நலன், வயது முதிர்ந்த பெற்றோர்களின் நலன் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே சமுதாயத்தில் தோன்றிய அறிநெறி உரிமைகள் ஆகும்.

**சட்ட உரிமைகள்**

சட்ட உமைகள் மூன்றாக பிக்கப்படுகின்றன.

1. வாழ்வியல் உரிமைகள்.

2. வாழ்வதற்கான உரிமைகள்.

3. சுதந்திரமாக வாழும் உரிமைகள்.

4. வேலை செய்யும் உரிமைகள்.

5. கல்வி உரிமைகள்.

6. சொத்துமை உரிமைகள்.

7. ஒப்பந்த உரிமை.

8. பேச்சுரிமையும், எழுத்துரிமையும்.

9. சங்கம் அமைக்க உரிமை.

10. சமய உரிமை.

11. இல்லற வாழ்வு உரிமை.

12. சமத்துவ உரிமை.

**அரசியல் உரிமைகள்**

1. வாக்களிக்கும் உரிமை.

2. தேர்தலில் போட்டியிடும் உரிமை.

3.அரசுபணி வகிக்கும் உரிமை.

4. முறையீடு செய்யும் உரிமை.

5. அரசாங்கத்தை விமர்சிக்கும் உரிமை.

**பொருளாதார உரிமைகள்**

1. வேலை செய்யும் உரிமை.

2. வேலைக்கேற்ற ஊதியம் பெறும் உரிமை.

3. நியாயமான வேலை நேரத்தைக் கோரும் உரிமை.

4. தொழிற்சாலைகளில் தன்னாட்சி உரிமை

**சமத்துவ உரிமை**

சட்டத்தின்முன் இந்திய மக்கள் எல்லோரும் சமம். மக்களிடையே மதம், இனம், வகுப்பு பிறப்பிடம், இனம், வகுப்பு, பிறப்பிடம், இனம், வேறுபாடின்றி எல்லோரும் இந்நாட்டவர்கள் என்று சமமாக நடத்த வேண்டும்.

**தன்னுரிமை**

அரசியலமைப்பில் 19வது விதியின்கீழ் மிகவும் முக்கியமான 7 தன்னுரிமைகள் உத்திரவாதம் செய்யப்பட்டுள்ளது.

1. கருத்துக்களை வெளியிடவும் பேசவும் உரிமை.

2. கூடுவதற்கு உரிமை.

3.சங்கங்கள் அமைத்துக் கொள்ளும் உரிமை.

4.நடமாட உரிமை.

5. உறைவிடம், குடியேறுதல் பற்றிய உரிமை.

6.சொத்துரிமை.

7. வாழ்க்கைத் தொழில், வாணிகம் பற்றிய உரிமை.

**சுரண்டலுக்கு எதிரான உரிமை**

சுரண்டலுக்கு எதிரான உரிமை 23, 24ம் விதிகளில் விளக்கப்பட்டுள்ளது. இதன்படி தனி நபர்களோ அல்லது அரசாங்கமோ தீய முறைகளில் வலுவற்றவர்களைப் பயன்படுத்தி சுரண்டுவதை அரசியலமைப்பு தடை செய்கிறது. மக்களை இழி தொழில் புரிய செய்தல், கட்டாய இலவசப் பணி, அடிமைத் தொழில், கட்டாய உழைப்பு, 14 வயதுக்கு குறைவான சிறுவர், சிறுமியர்களை பணியில் அமர்த்த தடைச் செய்யப்பட்டுள்ளது.

**வாழ உரிமையும், தன்னுரிமையினை அனுபவிக்க உரிமையும்**

21வது விதியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. குடிமகனுடைய வாழ்வையோ, தன்னுமையோ பறிக்க அதிகாரம் கிடையாது. ஆனால் ஒருவருடைய வாழ்வையும் தன்னுமையும் பறிக்க வேண்டுமென்றால், ஏற்படுத்தப்பட்டுள்ள சட்டத்தில் முறைப்படியே செய்ய வேண்டும்

**மத உரிமை**

இது இந்தியர்களுக்கும், அந்நியர்களுக்கும் பொதுவானதாகும். எல்லோக்கும் எந்த விதமான மதக் கொள்கையும், கடைப்பிடிக்கவும், பின்பற்றவும், பரப்பவும் உமையுண்டு.

**பண்பாடு, கல்வி உரிமை**

பண்பாடு மற்றும் கல்வி உரிமை 29.30ம் விதிகளில் விளக்கப்பட்டுள்ளது. சிறுபான்மையாக இருக்கும் இனத்தின் மீது அதனுடையதல்லாத பண்பாட்டை அரசாங்கம் கட்டாயம் சுமத்தக்கூடாது.

### சொத்துரிமை

31, 31a, 31b, 31c ஆகிய விதிகள் எல்லோருக்கும் சொத்துரிமை உத்திரவாதம் செய்கின்றன. சொத்துக்கள் ஈட்டவும், வைத்து அனுபவிக்கவும், விற்கவும்பின் சந்ததிகளுக்கு விட்டுச்செல்லவும் உமை உண்டு.

### சட்டப்படி பரிகாரம் தேடும் உரிமை

எல்லோருக்கும் தங்களுடைய அடிப்படை உரிமைகளை நீதி மன்றங்களின் முன் எடுத்துச்சென்று நீதி மன்றங்களின் மூலம் நிலைநாட்டிக் கொள்ள உமையுண்டு. இது அடிப்படை உரிமையாக அரசியல் அமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

### பெண்களின் கடமைகள்

உரிமைகளைப் பற்றிக் கூறும்போது கடமைகளையும் காண வேண்டும். ஏனெனில் உரிமைகள் தனித்தியங்க முடியாது. உரிமைகளும், கடமைகளும் இணைந்தே இயங்குகின்றன என்று சால்மாண்ட் என்பவர் கூறுகின்றார். உரிமைகளை அனுபவிக்கும் ஒருவர் மற்றவர்களுக்கும் நாட்டிற்கும் பிரதிபலனாகச் செய்ய வேண்டியவைகளே கடமைகள் எனப்படும்.

கடமைகளில் பல வகைகள் உண்டு. அவை நீதியின்பாற்பட்ட கடமைகள், சட்டத்தின்படியான கடமை, உடன்பாட்டுக் கடமை, எதிர்மறைக்கடமை ஆகியவையாகும்.

தான தர்மங்கள் செய்ய வேண்டும். உண்மை பேச வேண்டும் போன்றவை நீதியின்பாற்பட்ட கடமைகள் ஆகும்.

இவைகளைச் சட்டங்கள் வற்புறுத்துவது இல்லை. ஆனால் சட்டத்தின் படியான கடமைகளைச் சட்டம் வற்புறுத்துகின்றது. எடுத்துக்காட்டாக நீதிமன்றத்தில் சாட்சி கூறும் ஒருவர் உண்மையே பேச வேண்டும் என்று சட்டம் கூறுகிறது. நீதிமன்றத்தில் பொய்சாட்சி கூறினால் அடுத்தவரது நலன் பாதிக்கப்படுகின்றது. எனவே உண்மையே பேசுவது நீதியின்பாற்பட்ட கடமை என்றாலும் நீதிமன்றத்தில் உண்மை பேச வேண்டியது சட்டத்தின் பாற்பட்ட கடமையாகிறது.

உடன்பாட்டுக் கடமை என்பது செய்ய வேண்டியதை வற்புறுத்துவதாகும். சாலையில் செல்பவர்கள் சாலை விதிகளைக் கடைபிடிக்க வேண்டும். இது உடன்பாட்டுக் கடமை ஆகும். இதனை மீறுபவர்களுக்கு தண்டனை கிடைக்கும். எதிர்மறைக் கடமை என்பது செய்யக்கூடாதது ஆகும். இது சட்டத்தால் தவிர்க்கப்படுகிறது. எனவே இதனைச் செய்பவர் தண்டிக்கப்படுகிறார். அரசாங்க முத்திரையை பயன்படுத்தக்கூடாது என்பது எதிர்மறைக் கடமையாகும்.

ஒரு சிறந்த குடிமகன் தனக்குத் தானே செய்ய வேண்டிய கடமையும் உண்டு. தன்னை சிறந்த குடிமகனாக ஆக்கி கொள்ள வேண்டும். தனது குடும்பத்தினருக்கும் தன்னைச் சார்ந்தோருக்கும் உரிய கடமைகளை நிறைவேற்ற வேண்டும். சுகாதாரத்தைப் பேணி தன் சுற்றத்தார்க்கு கடமையாற்ற வேண்டும்.

ஒரு சிறந்த குடிமகன் தன் நாட்டிற்கு ஆற்ற வேண்டிய கடமைகளும் உண்டு. தன் நாட்டின் மீதும் அரசாங்கத்தின் மீதும் பற்றுடையவனாக இருக்க வேண்டும். தேசிய கொடி மற்றும் தேசிய சின்னங்களுக்கு மதிப்பளிக்க வேண்டும். அரசாங்கத்திற்குய வரிகளைச் செலுத்துவதைத் தன் கடமையாகக் கருத வேண்டும். நாட்டின் சட்ட திட்டங்களுக்கு மதிப்பளிக்க வேண்டும். பொதுநல உணர்வோடு செயல்பட்டு தனது வாக்குரிமையை நல்வழியில் பயன்படுத்த வேண்டும். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதில் பொது அலுவலர்களுக்கு உதவுதல் ஒரு குடிமகனின் கடமையாகும். மானிட சமுதாயத்தின் நன்மைக்கும், உலக அமைதிக்கும் ஒரு குடிமகன் கைகொடுப்பதும், குரல் கொடுப்பதும் கடமையாகும்.

உலக அரங்கில் 50க்கும் மேற்பட்ட நாடுகள் தங்களுடைய அரசியலமைப்புகளில் அடிப்படைக் கடமைகளைச் சேர்த்துள்ளன. சில அரசியலமைப்புகளில் அடிப்படை உமைகளும் கடமைகளும் இணைத்துக் கூறப்பட்டுள்ளன. சில அரசியலமைப்புகளில் IV-A பகுதியில் இந்திய மக்களுக்கான அடிப்படைக் கடமைகள் 1976ல் 42-வது அரசியலமைப்புத் திருத்தத்தின்படி சேர்க்கப்பட்டுள்ளன. இந்தக் கடமைகளை அரசியலமைப்புகளில் இடம்பெறச் செய்து வலியுறுத்துவதன் மூலம் மக்களுடைய போக்கையும், சிந்தனையையும் மாற்றி அமைதியான முறையில் சமூகப் புரட்சியைக் கொண்டுவர முயற்சி செய்யப்பட்டுள்ளது.

எனவே உரிமைகளை மட்டும் பேணாமல் நாட்டிற்கும், அரசாங்கத்திற்கும் தன் கடமைகளை ஆற்றுவது நல்ல குடிமகனின் பண்பாகும்.

### அடிப்படைக் கடமைகள்

இந்திய அரசியலமைப்பிற்கு 1976ம் ஆண்டு கொண்டு வரப்பட்டுள்ள 42வது திருத்தத்தின்படி புதிய பகுதி IV-A சேர்க்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் இந்திய மக்களுக்கான அடிப்படையான கடமைகள் விவரிக்கப்பட்டுள்ளன.

உலக அரங்கில் 50க்கும் மேற்பட்ட நாடுகள் தங்களுடைய அரசியலமைப்புகளில் அடிப்படைக் கடமைகளைச் சேர்த்துள்ளன. சில அரசியலமைப்புகளில் அடிப்படை உரிமைகளும் கடமைகளும் இணைத்துக் கூறப்பட்டுள்ளன. சில அரசியலமைப்புகளில் கடமைகள் தனிப்பகுதியாக இடம் பெற்றுள்ளன.

இந்திய அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள 10 அடிப்படைக் கடமைகள் பின்வருமாறு

1.அரசியலமைப்பின் வழி நிற்கவும், அதன் நோக்கங்களையும் நிறுவனங்களையும், தேசிய கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்து நடக்க வேண்டும்.

2.நம்முடைய சுதந்திரத்திற்கான தேசிய போராட்டத்தையும் ஊக்கமளித்த உயர்ந்த நோக்கங்களைப் போற்றி வளர்த்து பின்பற்ற வேண்டும்.

3. இந்தியாவின் இறைமையையும் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் ஆதத்து தாங்கிக் காப்பாற்ற வேண்டும்.

4. நாட்டைப் பாதுகாக்க அழைக்கப்படும்போதெல்லாம் தேசிய சேவை செய்ய வேண்டும்.

5.மதம், மொழி, வட்டார வேற்றுமைகளைக் கடந்து, இந்திய மக்கள் எல்லோரிடத்தும் இணக்கம் மற்றும் பொதுவான சகோதரத்துவத்தை வளர்க்க வேண்டும் பெண்களின் மதிப்பிற்கு இழிவுண்டாக்கும் செய்லகளை அறவே கைவிட வேண்டும்.

6. நம்முடைய பலதிறப்பட்ட நாகரீகத்தின் சிறந்த மரபை மதித்துப் பேண வேண்டும்.

7. விஞ்ஞான நோக்கு, மனிதாபிமானம், ஆராய்ந்து சீர்திருத்தம் செய்யும் மனநிலை முதலியவற்றை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

8. காடுகள், ஏகள், நதிகள், வனவிலங்குகள் உட்பட இயற்கைச் சூழல்களைப் போற்றி சீர்படுத்த வேண்டும். வாழும் உயிர்களிடம் எல்லாம் இரக்கம் வேண்டும்.

9.பொதுச் சொத்துக்களைப் பாதுகாக்க வேண்டும். வன்முறையை கைவிட வேண்டும்.

10.தனித்த மற்றும் கூட்டான செயல்களில் சிறப்பாக செயலாற்றும் தன்மை மூலமாக, உயர்ந்த நிலைகளையும், சாதனைகளையும் நிகழ்த்த நாடானது தொடர்ந்து முன்னேற வேண்டும்.

தேசிய கீதத்தையும், நாட்டுப் பண்ணையும் மதித்து நடக்க வேண்டும் என்பதை கடமையாகச் சேர்ந்திருந்தாலும் இதைப் பற்றிய சட்டம் 1971ல் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வனவிலங்குகளைப் பாதுகாக்க வேண்டுமென்பது நமது கடமையாக 1972ல் நிறைவேற்றப்பட்டது.

**முடிவுரை :**

பெண்ணுமையானது மனித உமைகளில் அடங்கிய ஒன்றாகும். இருந்தாலும் மனித உரிமையிலிருந்து பெண்ணுமையைப் பிரித்துப் பார்ப்பதற்கு பல்வேறு அம்சங்கள் காரணமாக அமைந்துள்ளன.

சர்வதேச மனித உரிமை பிரகடமானது பெண்களைத் தனிப்பிரிவாக அங்கீகரித்துள்ளது. பெண்களுக்கு சம உரிமையினை உறுதிப்படுத்தியுள்ளது.

1975ம் ஆண்டை சர்வதேச பெண்கள் ஆண்டாக ஐ.நா. பொதுச்சபை அறிவித்தது.

இந்தியாவில் பெண்கள் உரிமையைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும், பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை ஒழிக்கவும், 1990ல் தேசிய பெண்கள் ஆணையச் சட்டம் ஒன்று இயற்றப்பட்டு இச்சட்டப்படி தேசிய பெண்கள் ஆணையம் ஒன்று அமைக்கப்பட்டது.

இந்த ஆணையம் 10(1) பிரிவின்படி அரசியலமைப்பில் இடம் பெற்றுள்ளது.

பெண்கள் உரிமைகள் பாதிக்கப்படும்போது பாதுகாப்பு, சமத்துவம், வளர்ச்சிக்கான திட்டங்கள் செயல்படாமல் இருக்கும்போதும் பெண்ணுமைக்கான உரிமைகளை பெற்றுத் தருவது இவ்வாணையம் ஆகும்.

**கருத்துக்களை வெளிப்படுத்துதல் (அல்லது) தெரிவித்தல் உரிமை**

ஒருப்பெண் தன் சொந்தக் கருத்துக்களை சுதந்திரமாக வெளியிடும் உரிமை உண்டு. ஆகவே, இங்கே குறிப்பிட்டுள்ள சட்டங்களையும், உரிமைகளையும் சரியான முறையில் தெரிந்துகொண்டு பெண்களின் நிலையினை தற்காத்து கொண்டு சமூக அமைப்பில் நல்லதொரு முன்னேற்றத்தினைக் காண்போம்.

# அகிலனும் இலக்கியப் படைப்பும்

*மா. புவனேஸ்வரி, *ஆய்வியல் நிறைஞர் ( பகுதிநேரம் ), மகேந்திரா கலை அறிவியல் கல்லூரி ( தன்னாட்சி ), காளிப்பட்டி, நாமக்கல்*

**முன்னுரை**

தமிழ் எழுத்தாளர் அகிலன் யதார்தமான உண்மைகளை அடிப்படையாகக் கொண்ட படைப்புகளுக்குச் சொந்தக்காரர். சமுதாய வாழ்வின் ஒழுக்கக் கேடுகளை துணிவோடு வெளிப்படுத்தும் திறன் மிக்கவர். சமுதாயத்தில் ஏற்படும் சிக்கல்களை வெளிப்படுத்தி, அதற்கு தீர்வு காணும் வழிமுறைகளை தன்னால் இயன்றவரை எடுத்துக் கூறுபவர்.

**இளமைக்காலம்**

அகிலன் 1922ல் ஜுன் 27ல் புதுக்கோட்டை மாவட்டத்தில், பெங்களூரில் பிறந்தார். இவரது பெற்றோர்கள் வைத்தியலிங்கன் பிள்ளை, அமிர்தம் அம்மாள் ஆவர். இவரின் அகிலாண்டம். அகிலன் என்ற புனைப்பெயரில் எழுதி வந்தார்.

இவர் சிறு வயதிலேயே தந்தையை இழந்தவர். இவருடைய வாழ்க்கையை எழுத்தாளராக வடிவமைத்தத்தில் இவருடைய தாயாரின் பங்கு குறிப்பிடத்தக்கது.

இவர் கல்லூரியில் படித்து வந்த போது காந்திக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கல்லூரி படிப்பை பாதியில் துறந்தவர். விடுதலைப் போராட்டங்களில் ஈடுபட்டவர். இந்திய நாட்டின் விடுதலைக்குப்பிறகு இரயில்வே அஞ்சல் துறையிலும் பின்னர் அகில இந்திய வானொலியிலும் பணியாற்றினார். அதன் பின்னர் முழுநேர எழுத்தாளராக வாழ்ந்தார்.

அகிலன் உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு கற்பனையை கலந்து எழுதுபவர். “ஒருபுறம் அழகும், வனப்பும், நிறைந்த இயற்கை உலகம் மற்றொருபுறம் வேற்றுமையும், வெறுப்பும் நிறைந்த மனிதர்கள் இதையே என் கதைக்கருத்து என்று சொல்லலாம்” என்று கூறுகிறார் அகிலன். இவர் சிறுகதை, நாவல், நாடகம், உரையாடல் என்று பலவடிவங்களில் எழுதும் பன்முக எழுத்துத் திறமை கொண்டவர்.

**படைப்புகள்**

இவர் படைத்த படைப்புகள் வேங்கையின் மைந்தன், சித்திரப்பாவை, கயல்விழி, வாழ்வு எங்கே, பெண், பாவை விளக்கு, நெஞ்சின் அலைகள், துணைவி, பால்மரக்காட்டினிலே, பொன்மலர், புதுவெள்ளம், சினேகிதி, வானமா பூமியா முதலியன. இவருடைய சிறுகதைத் தொகுப்புகள் அகிலன் சிறு கதைகள் (இரண்டு தொகுதி) மற்றும் கொம்புத்தேன் கொலைக்காரன் ஆகும்.

**வேங்கையின் மைந்தன்**

இவரது “வேங்கையின் மைந்தன்” என்னும் வரலாற்றுப் புதினம் கற்பனையோடு கலந்து எழுதப்பட்டிருந்தாலும் அது நிகழும் காலக்கட்டத்தில் வாழ்ந்த வரலாற்றுக் கதாபாத்திரங்களை சுற்றிச் சுழல்கிறது. இந்நூல் சோழ அரசர்களின் வாழ்வை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. இராஜேந்திர சோழன் பாண்டிய நாட்டு முடியை ஈழத்திலிருந்து மீட்டு வந்த நிகழ்ச்சியை மையமாகக் கொண்டு அதற்கு முன்னும், பின்னுமாக இப்புதினத்தின் கதை பின்னப்பட்டுள்ளது. பல ஆயிரக்கணக்கான தமிழர்களால் படிக்கப்பட்ட நூல். இதை நடிகவர் சிவாஜிகணேசன் நாடகமாக மேடையில் அரங்கோற்றி வெற்றிப்பெற்றார்.

**பொன்மலர்**

இவரது பொன்மலர் ஒரு சமூக நாவல். அன்றாடம் சமூகத்தில் நிகழும் மாற்றங்களைத் தெள்ளத் தெளிவாக எழுதுவதில் இவருக்கு நிகர் இவரே. நம் சமூகத்தில் காணப்படும் வறுமை என்ற ஒன்றை அற்புதமாக இந்நாவிலில் பதிவு செய்துள்ளார். இச்சமுதாயத்தில் நடக்கும் அவலங்களைச் சுட்டிக்காட்டுவதோடு மட்டுமல்லாமல், அதனைத் தீர்ப்பதற்கான வழியையும், சமுதாய அவலங்கள் என்னும் நோய்க்கு ஊசியையும், பொன்மலர் புதினத்தின் மூலம் அகிலன் போட்டுள்ளார். பொன்மலரான டாக்டர் சங்கரி இன்றைய உலகத்தில் பொன்னுக்குள்ள சக்தியை நன்கு உணர்ந்தவள். பணிக்கு முதலிடமும், பணத்திற்கு இரண்டாவது இடமும் கொடுத்து, பணியை மிகவும் ஆர்வத்துடன் செய்து வருபவள் டாக்டர். சங்கரி, இந்நாவலில் வரும் திருமூர்த்தியும், குருமூர்த்தியும் சகோதரர்கள் மற்றும் செல்வந்தர்கள். சங்கரியை அவளது பள்ளிப் பருவத்திலேயே ஏமாற்றிவிட்டு ரூபாய் ஆயிரம் கொடுக்கிறான் குருமூர்த்தி. அவனது சகோதரனான திருமூர்த்தியோ டாக்டர் சங்கரி ஏமாற்ற முன் பணமாக ஆயிரம் ரூபாய் கொடுக்கிறான். கல்வி என்னும் கேடயம் பெண்களின் கையில் இருந்தால் மன்மதராசாக்களின் மன்மதபானங்கள் மக்கிப் போய்விடுகின்றன என்ற கருத்தினை டாக்டர் சங்கரியின் பாத்திரத்தின் மூலமாக அகிலன் சுட்டிக் காட்டியுள்ளார்.

**விருதுகள்**

இவரது **"சித்திரிப்பாவை"** என்னும் சமூக நாவல் தமிழுக்கு முதன் முதலில் 1975ல் மதிப்புமிக்க ஞானப்பீடப் பரிசை பெற்றுத் தந்தது. இந்நாவல் இந்திய மொழிகள் பலவற்றில் மொழிப் பெயர்க்கப்பட்டது. இவரது சரித்திர நாவல் **"வேங்கையின் மைந்தன்"** 1963-ல் சாகித்ய அகாடமிப் பரிசு பெற்றது. **"எங்கே போகிறோம்"** என்ற இவரது நாவல் அண்ணாமலைச் செட்டியார் அறக்கட்டளைப் பரிசை 1975-ல் பெற்றது. கண்ணான கண்ணன் என்ற குழந்தைகள் நாவல் தமிழ்நாடு கல்வித் துறையின் சிறப்பு விருதினைப் பெற்றது. **"நெஞ்சின் அலைகள்"**, **"கயல் விழி"** **"நிலவினிலே"** மற்றும் **"நல்ல பையன்"** போன்ற நாவல்கள் தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசுப் போட்டியில் பரிசுகள் பெற்றன.

**சிறப்புகள்**

இவரது படைப்புகள் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், லண்டன், கனடா மற்றும் அமெரிக்காவிலும் மேலும் பல நாடுகளிலுள்ள பல பல்கலைக் கழகங்களிலும், சுய நிதிக் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் பாடநூலாக நடத்தப்பட்டு வருகின்றது.

இவர் ரசியாவிற்கு 3 முறையும், மலேசியா, சிங்கப்பூருக்கு 2 முறையும் இலங்கைக்கு 1 முறையும் சென்று தமிழ் இலக்கிய மாநாடுகளிலும், எழுத்தாளர் சங்க மாநாடுகளிலும் பங்கேற்றுள்ளார்.

1974ஆம் ஆண்டு இவரது நூல்களையும் படைப்புகளையும் ஆராய மதுரைப் பல்கலைக்கழகம் 4 நாள் கருத்தரங்கு நடத்தியது.

**அகிலன் வரிகள்**

"அழகாக வாழக் கற்றுக் கொள் முடிந்தால் வாழ்க்கையை அழகுபடுத்து, முடியாவிட்டால் அதை அசிங்கப்படுத்தாமலாவது இரு".

"நம்பிக்கையை மட்டும் இழக்காதீர்கள், உயிருள்ள வரையில் நம்பிக்கையும் அதோடு ஒன்றியிருக்க வேண்டும். நம்பிக்கை மட்டும் இருந்தால் நாம் இழந்த அனைத்தையும் மீட்டு விடலாம்".

"நம்முடைய மக்களுக்கு முன்பாகவே நாம் நமது உரிமையை அழித்துக் கொண்டு மானத்தை அழித்துக் கொண்டு, பெயரை அழித்துக் கொண்டு வாழ்வதை விட அழிந்துவிடுவது மேல்".

இதுபோன்ற அழகான வரிகள் மூலம் நாட்டு மக்களுக்கு புதிய சிந்தனைகளை தோற்றுவித்தார்.

**முடிவுரை**

அகிலனின் புதின இலக்கியமானது கலைத் துறையில் நீண்ட ஒரு வகை சுவை மிகுந்த இனிப்பாக விளங்குகின்றது. இவரத படைப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலும் முனைவர் பட்ட ஆய்வுக்காகப் பல மாணவர்கள் ஆராய்ந்து பெற்று வருகின்றனர் இவர் 1988 ல் இயற்கை எய்தினார்.

# பன்முக நோக்கில் தமிழ்ப் பன்னிருத்திருமுறைகள்

* **ந. நளினி,** *ஆய்வியல் நிறைஞர் (பகுதிநேரம்), தமிழாய்வுத்துறை, மஹேந்ரா கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), காளிப்பட்டி, நாமக்கல்.*

தனிமனித ஒழுக்கம்தான் சமுதாய ஒழுக்கம், தனி மனிதர்களின் கூட்டம் தானே சமுதாயம் என்பது தனிமனிதனின் உள்ளம் உயர்ந்தால்தான் உலகம் நலமடையும். எனவே தனித ஒழுக்கங்களை மிக அருமையாகக் கூறுகின்றன நம்முடைய வேதங்கள்.

'சைவம்' எனும் சொல்லின் பொருள் சிவனுடன் தொடர்பு கொள்ளுதல் என்கிறார் திருமூலநாயனார்.

**"சைவம் சிவனுடன் சம்பந்த மாகுதல்**
**சைவம் தனையறிந் தேசிவம் சாருதல்"**

இதனால் சைவநெறி என்பது சிவநெறியாகும்.

**அறநெறி**

அறத்தையே புரிந்த மனத்தராய் வாழ்தல். புண்ணியச் செயல்கள் மட்டும் செய்யும் மனம் உடையவராய் வாழ்தல் வேண்டும். மறந்தும் பிறருக்குக் கேடு செய்யக் கூடாது. இந்த நிலையை சேக்கிழார் பெரிய புராணத்தில்,

**"தீயவென்பனக் கனவிலும் நினைவிலாச்**
**சிந்தைத் தூய மாந்தர்"**

என்றும்,

**"பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்கள்"**

என்றும் அடியார் பெருமக்களைப் பற்றிக் கூறுகிறார்.

**"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தே அறம்"**

என்கிறது வள்ளுவம்.

**அன்புநெறி**

அன்பு எனும் சொல் (அல் = பு) நான் அல்லாத தன்மை எனும் பொருள் உடையதாகும். சுயநலத்தைத் துறந்து, பொது நலம் போற்றுவதே அன்பு நெறியாகும். '**சிவம்**' என்றால் '**அன்பு**' என்றும் விளக்கமளித்துள்ளார் திருமூலநாயனார்.

**"அன்பும் சிவமும் இரண்டென்பா அறிவிலார்**
**அன்பே சிவம்ஆவது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவம்ஆவது ஆரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமாந்திருந் தாரே"**

என்றுணர்த்துகிறது திருமந்திரம். எனவே சிவநெறி என்பது அன்புநெறியே ஆகும்.

**பக்தி நெறி**

இறைவருடைய பெருமையையும் நம்முடைய சிறுமைகளையும் நினைத்து மனம் உருக வேண்டும். வெண்ணெய் உருகினால் வாசனை வெளிப்படும். உள்ளம் உருகினால் திருவருள் பதியும், இறைவழிபாட்டில் உருக்கம் ஏற்பட வேண்டும் என்கின்றனர் கடவுளைக் கண்ட நாயன்மார்கள்.

**"பண்ணிற் பொலிந்த வீணையா**
**பதினெண்கணமும் உணரா நஞ்சு**
**உண்ணப் பொலிந்த மிடற்றினார் உள்ளம் உருகில் உடனாவார்"**

என்கிறார் தமிழ்ஞானசம்பந்தர். மேலும்,

**"ஏசற்று மனம் உருகும் அடியார் தங்கட்டு அன்பல்காண்"**

என்கிறார் திருநாவுக்கரசர். எனவே மனம் உருகி வழிபடுவது என்பது உயர்ந்தநிலை அவர்கட்கு அன்பராய் இருந்து அருள்புரிகிறார் இறைவன்.

**இல்லற நெறி**

இல்லறத்தில் இருந்து கொண்டே தமது அன்றாட கடமைகளை ஆற்றி இறைவன் திருவடியை அடைந்த நாயன்மார்கள் பலர் பெரியபுராணத்தில் சேக்கிழார் பெருமானால் பாடப்பட்டுள்ளனர். இல்லறத்தல் இருப்போர் ஆற்ற வேண்டிய கடமைகளாக திருந்திரம் கூறும் பாடல்,

**"யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை**
**யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை**
**யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி**
**யாவர்க்குமாம் பிறாக்கு இன்னுரை தானே"**

என்று தமிழ்வேதம் குறிப்பிடுகிறது. இவற்றின் முறையே,

1. தெய்வயக்சம் – நம்மை காக்கும் தெய்வத் தொடர்புடைய முதல் கடமை

2. பூதயக்சம்–நம்முடன் உலகில் வாழ்ந்து உதவி செய்யும் பிராணிகள் தொடர்பான கடமை

3. மனிதயக்சம்–உடன்வாழும் மனிதன் சம்பந்தமான கடமை.

4.பிரம்மயக்சம்–வாயினால் வாழ்த்துவது.

இந்த நான்கு வித கடமைகளை இல்லறத்தார் அன்றாடம் செய்தே ஆக வேண்டும். இவை முடியாதவை இல்லை. மிகமிகச் சாதாரணமான கடமைகளே ஆகும்.

**துறவறநெறி**

நெருப்பை நெய்யினால் அனைத்துவிட முடியாது. இதைப்போல பொருட்பற்று, உலகியல் பற்றுகள் மனதில் தூய்மையை உண்டாக்காது. தூய்மை இல்லா மனங்களில் இறைமை தங்குவதில்லை. எனவே இம்மைச் செல்வங்களுக்காக இல்லாமல், இறைவழிபாடு இறையருளைப் பெறுவதற்காகவே என்று அமையுமானால் மனதில் மாசு ஏற்படுவதில்லை.

**"துறவி நெஞ்சினராகிய தொண்டாகாள்**
**பிறவி நீங்கப் பிதற்றுமின் பித்தராய்"**

என்று உணர்த்துகிறது. அகப்பற்று, புறப்பற்று (நான், எனது) இரண்டையும் அடியோடு நீக்கிய மனதுடன், பிறவி நீங்க வேண்டும் என்று வழிபாடு செய்யுங்கள் என்று அறிவுரை கூறுகிறார் திருநாவுக்கரசு சுவாமிகள்.

சாதாரண மனிதன் நல்லவனாக வாழ்ந்து, அவன் வாழும் சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் நலம் பல செய்து, இறைநிலை அடைவதற்குரிய எளிய நெறிகளையே பன்னிரு திருமுறைகளாகிய தமிழ் வேதங்கள் பகர்கின்றன என்பதில் சிறிதும் ஐயமின்றி உணர்வோம்! உயர்வடைவோம்.

# பண்டைய தமிழர்களின் தோல் தொழில்

*க.பீமாராவ்ராம்ஜீ, *முனைவர் பட்ட ஆய்வாளர், அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-10.*

**முன்னுரை**

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த பண்டைய தமிழர் தோலின் பயனறிந்து வாழ்க்கைக்குத் தேவையான பயன்படுபொருளாகத் தோலைப் பதப்படுத்திப் பயன்படுத்திய முறைகளைஅறியச் சங்கப் பாடல்கள் பெரிதும் துணைசெய்கின்றன. சங்கப் புலவர்கள் பலவிடங்களில் தோலை உவமையாகப் பயன்படுத்தியுள்ள பாடல்களின் வாயிலாகத் தோலின் நிறம், தன்மை, பயன் ஆகியவற்றை அறியமுடிகிறது. அவர்கள் தேவைக்குவழங்கிய வேறு பெயர்களான அதள், பச்சை, உரிவை, உரி, சருமம் போன்ற பெயர்களையும் அறிய முடிகின்றது. விலங்குகளின் தோலைக் கொண்டு அவற்றின் திண்மை, உறுதிக்கேற்ற வகையில் பயன்படு பொருளாக ஆக்கினர் என்பதை சங்க இலக்கிய நூல்களின் பாடலடிகள் மூலம் அறிய முடிகிறது. அதன் வழி நின்று தோலினைப் பற்றியும் அதைப் பயன்படுத்திய முறையினையும், பயன்பட்ட முறையினையும் எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கேடகம்**

சங்க இலக்கியப் பாடல்களினின்றும் காதலும், வீரமும் இரு ஒழுக்கங்களாகப் போற்றப்பட்டன என்பதை அறிவோம். சங்க இலக்கியப் புறப்பாடல்கள் பல அக்காலத்தில் வாழ்ந்த மன்னர்களின் வெற்றிச் சிறப்பைக் கூறுவன. போர் மேற்செல்பவர்கள் பகைவர்களின் தாக்குதலினின்றும் தங்களைக் காத்துக் கொள்வதற்குத் தோலால் ஆகிய கேடகத்தை மிகுதியாகக் கொண்டு செல்வர். இக்கேடகம் என்பது கேடயம் கிடுகு,பலகை,பரிசை தோல் என்று வேறு பெயர்களாலும் குறிக்கப்பட்டுள்ளது. எனினும் தோலால் செய்யப்பட்ட இக்கேடகம் பெருமளவு வழக்கில் இருந்ததால் தொல்காப்பியத்திலும் சங்கப்பாடல்கள் பலவற்றிலும் தோல் என்ற பெயராலேயே குறிக்கப்பட்டது. இதனை,

**"ஈண்டியமழையெனமருளும் பஃறோல்" (புறம் 17:34)**

மேற்கண்டவாறுபுறநானூறு சுட்டுகிறது.

**தண்ணுமை**

தண்ணுமை ஓர் தோற்கருவியாகும். இது இரண்டு தலைகளையும் நீண்ட உடலினையும் உடையது. ஒரு முகத்தைதாழச் செய்தும் மற்றொரு முகத்தினை உயரச் செய்தும் இரண்டு கடிப்புகளால் ஒலிக்கும் போது இவை முழங்கும். இசைக்கருவிகள் பன்னிரண்டில் ஒன்றாகவும் புறமுழவுகள் பன்னிரண்டில் ஒன்றாகவும் தண்ணுமை குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்தளத்திற்கு முந்திய கருவிதண்ணுமை ஆகும். தண்ணுமையின் வாய்த் தோலில் முதலில் சிறிது தண்ணீரைத் தடவி,தோலைப் பக்குவப்படுத்தி, ஒலிதாழ்ந்து ஒலிக்குமாறு இதனை இசைத்தனர். தண்ணுமையானது இனிய, தாழ்ந்த ஓசையினை உடையது. ஆகவே அது முதலில் முழக்குவது. முழவுசற்று பெரிய ஓசையை உடையது. ஆகதேண்ணுமையை ஒட்டி முழவு முழங்கியது.

இக்கருவியானது இசைப்பாட்டிற்குமட்டும் இன்றிக் கூத்து, நடனம் முதலிய ஆடல்களுக்கும இது இன்றியமையாதது. ஆகவே இசைக்கருவிகளில் இது முதன்மையானது. இதன் கீழ்க்கண்டபாடலின் மூலம் அறியலாம்.

**“தூக்கணை கிழித்தமாக்கண் தண்ணுமை”**

**(பதிற்.51:33)**

மாமிசத்தையுடைய அம்பு கிழித்தகரிய கண்ணையுடைய தண்ணுமை என்று கூறுகிறார். மேலும் அகநானூற்றில் குன்றியனார்.

**“வெண்ணெல் அரிநர் பின்றைத் ததும்பும்**

**தண்ணுமைவெரீஇயதடந்தாள் நாரை”**

**(அகம்.40:13-14)**

உழவர்கள் நெற்கதிர்களைஅறுக்கும் முன்னர் அவ்வயலில் கூடு கட்டிவாழும் சிறுபறவைகளும் பிற உயிர்களும் ஓடும் பொருட்டு தண்ணுமையினைக் கொட்டிமுழங்கச் செய்வர் என்று குறிப்பிடுகின்றனர்.

**முழவு**

முழவு என்னும் சொல் பலவகையான தோற்கருவிகளைக் குறிப்பிடும் ஒரு பொதுச்சொல்லாக பழந்தமிர் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளது. முழங்கப்படுவது முழவு. முழங்கப்படும் அனைத்து தோற்கருவிகளுக்கும் முழவு என்னும் சொல் வழங்கப்பட்டது. முழவு ஏழு வகைப்படும் என அடியாரக்கு நல்லார் குறிப்பிட்டுள்ளார். அவை, அக முழவு ,அகப்புறு முழவு, புறமுழவு, புறப்புற முழவு, பண்ணமைமுழவு, நாண் முழவு, காலை முழவு, என்பனவாகும்.

பஞ்ச மரவுவாச்சிய மரபில் கூறப்பட்டுள்ள முப்பது தோற்கருவிகளுள் முழவு பதினாறாவது இசைக்கருவியாக கூறப்பட்டுள்ளது. முழவின் வடிவம் பலாப்பழம் போல் நீண்டு உருண்டு நடுவிலிருந்து இருபுறமும் வளைந்து அமைந்திருந்தது எனச்சங்க இலக்கிய நூலில் கூறப்பட்டுள்ளது. முழவுகள் மண்ணினால் செய்யப்பட்டவை என்றும் பழந்தமிழ் இலக்கிய நூல்கள் கூறுகின்றன. முழவு உட்குடைவாகச் செய்யப்பட்டது எனவும் புறநானூற்றில் சொல்லப்பட்டுள்ளது.

**“பொதுவிற் றூங்கும் விசியுறுதண்ணுமை**

**வளிபொருதெண்கண் கேட்பின்” (புறம்.7-8)**

என்ற புறநானூற்று வரிகளில் பொது இடத்தில் வைக்கப்பட்டுள்ள முழவு என்னும் தோற்கருவியில் காற்றுபட்டு ஒலி எழுந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும் துளையை அகத்தே உடைய சிறு முழவினை,

**“தூம்புஅகச் சிறுமுழாத் தூங்கத் தூக்கி”**

**(புறம்.107:2)**

என்ற வரிகளில் குறிப்பிடுகின்றார். மேலும் குன்றியனார் தம் குறுந்தொகைப் பாடலில்,

**“முழவுமுதலரையதடவுநிலைப் பெண்ணை”**

**(குறுந்.301:1)**

என்ற வரிகளில் பனை மரத்தின் அடியைப் போன்று முழவு என்னும் இசைக்கருவி காணப்படுவதாகக் கூறுகிறார்.

காக்கைப்பாடினியார் நச்சௌளையாரதம் பதிற்றுப்பத்துப் பாடலில் கூத்தர்கள் முழவினை இசைப்பதை,

**“விழவுவீற்றிருந்தவியலுள் ஆங்கண்**

**கோழயர முழவின் முன்னர ஆடல்**

**(பதிற்.56:1-2)**

என்ற வரிகளில் பதிவு செய்துள்ளார்.

**யாழின் போரவை**

சங்ககால இசைவாணர்கள் யாழ் என்னும் இசைகருவிக்குப் பாதுகாப்பாகத் தோலைப் போரவையாகப் போரத்தியமைக்கான சான்றுகள் பல உள்ளன. போர்க்கருவிகளுள் ஒன்றான கேடகம் அதைச் செய்யப் பயன்பட்ட தோல் என்ற பெயராலேயே பெரும்பாலும் குறிப்பிடப்பட்டுள்ளது போலவே யாழ்க்குப் போரவையாகத் தோல் பயன்படுத்தப்பட்டது எனவரும் இடங்களிலெல்லாம் பச்சை என்ற சொல்லாலேயே குறிப்பிடப்பட்டுள்ளது நோக்குதற்குரியது காட்டிடத்துக் குமிழினுடைய பழத்தினது நிறத்தை ஒப்பத் துவரூட்டிக் கைத்தொழிலால் பொலிவுப் பெறச் செய்தனர் இதனை,

**“கானக் குமிழின் கனிநிறங் கடுப்பப்**

**புகழ்வினைப் பொலிந்தபச்சையொடு”**

**(சிறுபாண்.225-226)**

**பைகள்**

அக்காலத்தில் தமிழர் தோலால் பல்வேறு பயன்படுபொருளைச் செய்ய அறிந்திருந்தனர். போர்க் கருவிகள் இசைக்கருவிகள் ஆகியவை செய்யப் பயன்படுத்தியதைப் போலவே பல்வேறு தோல் பைகள் செய்யும் அறிந்திருந்தனர். மீன் பிடிக்கும் பாண்மகன் பொன்னில் கோத்துவைத்தற் பொருட்டு இறைச்சியைத்

தோற்பையிலிட்டுத் தோளிலே தொங்க விட்டிருப்பான். முல்லை நிலக் கோவலர் கழுவோடே சூட்டுக்கோலையும் தோற்பையிலிட்டுச் சுருக்கிக் கட்டிச் செல்வர். கள்ளினைத் தோற்பையில் இட்டு வைத்தற்கான குறிப்பு பெரும்பாணாற்றுப்படை மதுரைக்காஞ்சி ஆகிய நூல்களில் காணப்படுகின்றது.

**"பச்சூன் பெய்தசுவல்பிணிபைந்தோல்"**

**(பெரும்.283)**

**"கழுவொடுசுடு படைசுருக்கிய தோற்கண்"**

**(கலி.106:1)**

**"நீலுப் பைங்குடந் தொலைச்சிநாளும்**

**பெருமகிழ் இருக்கை"**

**(பெரும்.382-383)**

**பதலை**

இது தோற்கருவியாகும். இன்று தபேலா எனத் திரிந்து வழங்கப்படுகிறது. பதலையில் ஒரு பக்கம் மட்டும் தோல் மூட்டிக் கட்டப்பட்டிருக்கும். இதையே பதலை ஒரு கண் பையென இயக்குமின் என்று கூறப்படுகிறது. இதனைச் சங்க காலத்தில் பாணர்கள் இசைப்பாட்டுகளுடன் பக்கவாத்தியமாகப் பயன்படுத்தினர். பிற்காலத்தில் இந்த இசைக்கருவிமறைந்து விட்டது. பழைய தமிழ் நாட்டுப் பதலை இப்போது வடநாட்டுத் தபேலாவாகக் காட்சியளிக்கிறது.

**"ஔவையார் தம் புறநானூற்றுப் பாடலில்**

**ஒருதலைப் பதலை தூங்க"**

**(புறம்.103:1)**

என்ற வரிகளில் பதவை என்பது ஒரு தலைமுகமுடைய ஒரு தோற்கருவியாகும் என்ற செய்தியைப் பதிவு செய்துள்ளார்.

**பறை**

பறை என்னும் கருவி மரத்தினால் செய்யப்பட்டு தோலினால் கட்டப்பட்டது ஆகும். பறை தமிழனின் ஆதி இசைக்கருவியாகும். சங்க காலத்தில் கூறப்பட்டபறை என்னும் தோற்கருவி கூறுதல் என்னும் பொருள் பட அமைந்திருக்கின்றது. பறைதல் என்றால் சொல்லுதல் அறிவித்தல் எனப் பொருள் படும். இக்கருவி ஒரு முகம் உடையதாகவும் இரண்டு முகங்கள் உடையதாகவும் இருந்துள்ளது. ஒரு முகமுடையபறையை ஒரு கண் இரும்பறை என்றும், இரட்டை முகமுடைய பறையை இணைமுகப் பறை என்றும் அழைத்தனர். குறுந்தடியை இட்டுப் பறையடித்து ஒலி எழுப்புவர் அக்குறுந்தடி நாய்வால் போன்று இருந்தது.

குறுந்தொகை பாடலில் பறையும் சங்கும் மங்கலநாளில் முழங்குவன என்பதை

**"பறைபடப் பணிலம் ஆரப்ப"**

**(குறுந்.15:1)**

மேலும் புறநானூறுபாடலில்,

**"பறையிசை யருவிமுள்ளூர்ப் பொருந"**

**(புறம்.126:8)**

மேற்கண்ட பாடலில் அருவியின் ஓசையினைப் போன்று பறையிசை முழங்குவதாகக் கூறுகிறார். அகநானூற்றில் கழைக்கூத்தாடிகள் கூத்தாடும் காலத்தில் பறையை முழக்கியதாகக் கூறுகிறார். இதனை,

**"வாடல் உழுஞ்சில் விளைநெற்று அம்துணர்**

**ஆடுகளப் பறையின் அரிப்பனஒலிப்ப"**

**(அகம்.45:1-2)**

என்ற வரிகள் குறிப்பிடுகின்றன.

பகைவர் பற்றியிருந்த நாட்டைக் கைக்கொண்டு பறையை முழக்குதலும் பழந்தமிழரின் மரபு எனத் தெரிகிறது. ஆறலைக் கள்வர்கள் வழிப்பறி செய்து பறைகொட்டினர். பறைவன்மைக் கருவி என்றும் கடைக்கருவி என்றும் புறப்புற முழவு என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**துடி**

இது ஒரு தோற்கருவியாகும். மரத்தினால் செய்யப்பட்டு தோலால் கட்டப்பட்டதாகும். இதனைப் புறநானூறு

**"துடியபாணபாடுவல் விறலி"**

**(புறம்.280:8)**

என்ற வரிகளில் துடிகொட்டப்படுவதைக் குறிப்பிட்டுள்ளார்.

**முடிவுரை**

மேற்கூறியசங்கப் பாடல்களின் மூலம் பண்டைய தமிழர்கள் தோலின் பயன்பாட்டை அறிந்து அதனை இசைக்கருவிதயாரிப்பதற்கும்,போர்க்கருவி வீட்டில் பயன்படும் உபயோகப் பொருட்கள் உற்பத்திக்கும் தோலினை பயன்படுத்தினர் என்பதனை தெளிவாகக் காண முடிகிறது.

# புறநானூற்றில் ஞாயிறும் திங்களும்

**உ. அலிபாவா,** *பேராசிரியர் மற்றும் தலைவர், தமிழியல்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி - 24.*

ஞாயிறும் திங்களும் புறநானூற்றில் ‘இருசுடர்’ (புறம். 65:7) எனக் குறிப்பிடப்படுகின்றன. ஞாயிறும் திங்களும் அந்நாளில் ஒளியுடைப் பொருள்களில் எல்லாம் பேரொளியாயும் உலகத்தாரால் தெய்வம் எனப் போற்றப்பட்டும் வந்த சிறப்பினைப் பெற்றிருந்தன. இவற்றைத் தெய்வமாகப் போற்றியமை ‘திங்கள் புத்தேள்’ (புறம். 27:14) என வெளிப்படுகிறது.

சூரிய ஒளியை வெயில் என்பர். திங்களின் ஒளியை நிலவொளி என்பர். வெப்பத்தைத் தரும் வெயில் ஒளியையுடைய சூரியன் செந்நிறமுடையவன். நிலவொளி வெண்மை நிறமுடையது. இவ்விரு வண்ணங்களை மனதில் நினைந்த புலவர் இவ்விரண்டையும் ‘செஞ்ஞாயிறு’, ‘வெண்திங்கள்’ என்று ஒரு பாடலில் குறிப்பிடுகிறார். இவ்விரண்டின் வெப்பத்தையும் குளிர்ச்சியையும் கருதி ‘வெங்கதிர்’, ‘ஒண்சுடர்’ என்றும் ‘தண்கதிர்’, ‘தண்சுடர்’ என்றும் குறிப்பிடுவர். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனின் பேராற்றலை இவ்விரு கோள்களின் இயற்கையை மாற்றும் வலிமை யுடையவன் எனும் குறிப்புடன்,

> **செஞ் ஞாயிற்று நிலவு வேண்டினும்**
> **வெண் திங்களுள் வெயில் வேண்டினும்**
> **வேண்டியது விளைக்கும் ஆற்றலை ஆதலின்** (புறம். 38:7-9)

எனும் அடிகளில் ஆவூர் மூலங்கிழார் பதிவு செய்கிறார். விண்ணில் தோன்றி உலகின் இருளைப் போக்கி என்றும் அழியாமல் நிலைத்து உலகத்தைக் காக்கும் ஆற்றலுடைய சந்திரனையும் சூரியனையும், காரிகிழார் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியின் ஆற்றலுடன்,

> **தண் கதிர் மதியம் போலவும் தெறு சுடர்**
> **ஒண் கதிர் ஞாயிறு போலவும்**
> **மன்னிய பெரும நீ நிலமிசையானே** (புறம். 6:27-29)

எனும் பாடலில் ஒப்பிடுகிறார்.

ஞாயிறு பகலிலும் திங்கள் இரவிலும் வந்து ஒளி செய்து ஒரு நாளின் இரு கூற்றிற்கும் அதிபதியாய் இவை இருப்பது போல இம்மன்னர்களும் இவ்விரு

பொழுதுகளுக்கும் அதிபதிகளாக இருந்து உலகிற்கு நிலைத்த இன்பத்தைத் தருகின்றனர் என்று மன்னர்களின் இயல் புகளை இவற்றை ஒப்பிட்டுரைக் கின்றனர்.

**அம் கண் விசும்பின் ஆர் இருள் அகற்றும்**
**வெங் கதிர்ச் செல்வன் போலவும் குடதிசைத்**
**தண் கதிர் மதியம் போலவும்**
**நின்று நிலைஇயர் உலகமோடு உடனே**
**(புறம். 56:22-25)**

என்று பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனை மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடுகிறார்.

கொடுமைக்குச் சூரி யனையும் அளி செய்து காத்தலுக்குச் சந்திரனையும் ஒப்பிடும் மரபு பழந்தமிழ் இலக்கியத்தில் உள்ளது. மன்னனுடைய வீரம், புகழ், பேராற்றல் ஆகியவற்றிற்கு சூரியனை ஒப்பிடும் புலவர் அவனின் தண்ணளி செய்து காக்கும் குடைக்குச் சந்திரனை ஒப்பிடுகின்றார்.

பகைவரை அழக்கச் சினந்து எழுந்தபோது ஞாயிறாகவும், துயருற்றோர்க்கு இரங்கி அருள்கின்ற போது தண்மதியம் போலவும்,

**உருகெழு ஞாயிறு நிலவுத் திகழ்**
**மதிமொடு நிலஞ் சேர்ந்தாங்கு**
**(புறம். 25:3-4)**

விளங்கியவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் என்று கல்லாடனார் குறிப்பிடுகிறார்.

பெரும் புகழும் பெருஞ் சிறப்புகளையுமுடைய அதியமான் நெடுமான் அஞ்சி ஒரு சூழலில் சேர மானோடு போர் செய்து உயிரிழந்தான். அவன் இறந்த காலத்தில் அவனுக்காக மனம் கலங்கிப் பல சான்றோர்கள் புலம்பினர். அதியமான் நெடுமான் அஞ்சியின் உடலை எடுத்துச் சிதை நெருப்பில் கிடத்தி ஈமக் கடன்களைச் செய்து எரியூட்டினர். அப்போது அங்கிருந்த சான்றோர் சிலர் இதுவரை புகழ்பெற்று விளங்கிய அதியமான் நெடுமான் அஞ்சி மறைந்தான் என வருந்தினர். இதனைக் கேட்டுக் கொண்டி ருந்த ஔவை அதியமானின் இறப்பைச் சிறிதும் பொறுத்துக் கொள்ள இயலாமல் கண்ணீர் வடித்துக் கலங் கினார். அந்நிலையில் கலங்கிக் கையற்றுப் புலம்பும் பொதுவியல் திணையிலும் கையறுநிலைத் துறையிலும் அமைந்த பாடலொன்றை ஔவைப் பெருமாட்டி பாடுகிறார். அதில் ‘அதியமான் அழியலாம்! அவன் புகழ் அழியாது’ என்கிறார்.

**எறிபுனக் குறவன் குறையல் அன்ன**
**கரிபுற விறகின் ஈம ஒள் அழல்**
**குறுகினும் குறுகுக குறுகாது சென்று**
**விசும்புஉற நீளினும் நீள்க; பசுங்கதிர்த்**
**திங்கள் அன்ன வெண்குடை**
**ஒண்ஞாயிறு அன்னோன் புகழ்மா யலவே!**
**(புறம். 231)**

எனும் அப்பாடல், ‘குறவர்கள் தினைக் கொல்லையில் வெட்டிக் கொணர்ந்த விறகு அடுக்கப்பட்ட ஈமத்தில் அதியனின் உடல் நெருப்பு நெருங்கிச் சுட்டாலும் சுடட்டும். சுடாமல் தீ ஆகாயத்தைச் சென்று சேர்ந்தாலும் சேரட்டும். தண்ணொளி வீசும் வெண்ணிலவு போன்ற வெண்கொற்றக் குடையும் ஞாயிறு போன்ற பேரொளி வீசும் அவன் புகழும் பெருமையும் வீரமும் வெற்றியும் ஒருநாளும் அழியாது எனக் குறிப்பிடுகிறது.

பாண்டியன் சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறனை மதுரை கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் ஞாயிற்றோடும் திங்களோடும் உவ மிக்கிறார். அவர், 'கடலிலிருந்து எழுகின்ற ஞாயிற்றைப் போன்ற வெம்மையுடன் நின் பகைவர் மீது நீசினந்து எழுபவன்! ஆனால் எம் போன்றோர்க்கோ திங்களைப் போன்று குளிர்ந்த அருளைப் பொழியும் இயல்புமுடையவன்!' ஆதலால் 'நீ வாழ்க பெருமானே' என,

***காய்சினம் தவிராது கடல் ஊர்பு***
***எழுதரும்***
***ஞாயிறு அனையை நின் பகைவர்க்கு***
***திங்கள் அனையை எம்ம***
***னோர்க்கே***
***(புறம். 59:5-7)***

எனும் அடிகளில் வாழ்த்துகிறார்.

'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்' அதனால் செங்கோன்மை வழுவாது பிறர் குணத்தில் குறைவு கொண்டு அவர்களைக் கொல்லாமல் ஆண்மையும் சாயலும் வெண்மையும் உடையையாகி இல்லோர் கையற, நீ எக்கர் மணலினும் பல காலம் வாழ்க' என மதுரை மருதன் இளநாகனார் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன் மாறனை வாழ்த்திப் பாடும் பாடலில் 'ஞாயிறு போன்ற கொடையும் திங்கள் போன்ற அருளும், மழை போன்ற கொடையும் உடையவனாக நீ விளங்குக' எனவும் அவர்,

***ஞாயிற் றன்ன வெந்திறல்***
***ஆண்மையும்***
***திங்கள் அன்ன தண்பெருஞ்***
***சாயலும்***
***வானத்து அன்ன வண்மையும்***
***மூன்றும்***
***உடையை ஆகி இல்லோர் கையற***
***நீ நீடு வாழிய நெடுந்தகை***
***(புறம். 55:15-19)***

எனும் அடிகளில் வாழ்த்துகிறார்.

சூரியனின் சிறப்பு களையும் சந்திரனின் சிறப்புகளையும் மன்னர் முதலியோர்க்கு ஏற்றிப் பாடிப் புகழ்வது அந்நாளில் இவ்விரு கோள் களிடமும் மக்கள் கொண்டிருந்த ஈடு பாட்டையும் போற்றி வாழ்ந்த பண் பையும் குறிப்பிடுவதாக அமைகிறது. மதுரை மருதன் இளநாகனாரின் இப் பாட்டு, ஞாயிறு, திங்கள், மழை எனும் மூன்றையும் அரசனின் வன்மை, மென்மை, கொடை எனும் மூன்றிற்கும் ஒப்பிட்டுரைக்கின்றது.

ஞாயிறைப் போற்றும் மரபு பழந்தமிழகத்தில் இருந்தமையை எடுத் துரைக்கும் புறநானூற்றுப் பாடல்களும் உள்ளன. ஆதனுங்கனைக் கள்ளில் ஆத்திரையனார்,

***மலர் வாய் மண்டிலத்து அன்ன,***
***நாளும் பலர்புரவு எதிர்ந்த***
***அறத்துறை நின்னே***
***(புறம். 175:9-10)***

என வாழ்த்துகிறார். 'வீங்கு செலல் மண்டிலம்' (புறம். *8:6*) என்று கபிலர் ஒரு பாடலில் பாடும் குறிப்பும் காணப் படுகிறது. மேலும் சில பாடல்களில் 'விரிகதிர் ஞாயிறு' (புறம். *228:8*), 'அலங்குகதிர்க் கனலி நால்வயின் தோன்றினும் இலங்கு கதிர் வெள்ளி தென் புலம் படரினும்' (புறம். *35: 6-7*), 'எறி திரைப் பெருங்கடல் இறுதிக் கண் செலினும், தெறு கதிர்க் கனலி தென் திசைத் தோன்றினும்' (புறம். *397:24*), 'உருகெழு ஞாயிற்று ஒண் கதிர்' (புறம். *160:1*) எனும் அடிகளில் 'ஞாயிறு' பற்றிப் பேசப்படுகின்றன.

சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதனைக் கதிரவனோடு உவமித்து 'சேரமான் கதிர் நிகர் ஆகாக் காவலன்' என்று கபிலர் பாடுகிறார்.

உலகத்தைக் காத்துவரும் மன்னர் பலரும் தத்தம் ஆணைக்கு உட்பட்டது தத்தம் நிலப்பகுதி எனக் கூறும் பொதுச்சொல்லைப் பொறாதவன்; எதிர்த்தார் பலரையும் ஊக்கமுடன் வென்று நிலத்தை விரிவுபடுத்தி ஒப்பற்ற தனியாட்சி நடத்தி வரக்கூடிய சேரலாதன் செல்வத்தைத் தான் மட்டும் வைத்துக் கொள்ள வேண்டும் என்று கருதாமல் எல்லோர்க்கும் வழங்கும் வண்மையினை உடையவன்; இவன் எதிர் நின்று வெல்லும் ஆற்றல் மிக்க படையினையு முடையவன். இத்தகைய சேரமானுக்கு நீ எவ்வவாறு ஒப்பாவாய்? என்று கபிலர் கதிரவனைக் கேட்கிறார். 'பகற்பொழுது போதும் என்று வரையறுத்து அமைபவன் நீ! திங்கள் தோன்ற அஞ்சி முதுகிட்டு ஒழிபவன் நீ! தெற்கும் வடக்கும் மாறி மாறி வருபவனாதலால் ஒரு நிலையில் நில்லாத தன்மையினையு முடையவன் நீ! மலைக்குப் பின் மறைகின்றாய்; பகலில் மட்டும் வானத்திலே தோன்றிப் பல கதிர்களையும் பரப்புகின்றாய்; நீ அவனுக்கு ஒருகாலும் ஒப்பாக மாட்டாய்' என்று சுட்டுகிற கபிலர்,

**வையம் காவலர், வழிமொழிந்து ஒழுகப்**
**போகம் வேண்டி பொதுச்சொல் பொறாஅது,**
**இடம் சிறிது என்னும் ஊக்கம் துரப்ப,**
**ஒடுங்கா உள்ளத்து, ஓம்பா ஈகை,**
**கடந்து அடு தானைச் சேரலாதனை**
**யாங்கனம் ஒத்தியோ? வீங்கு செலல் மண்டிலம்!**
**பொழுது என வரைதி; புறக்கொடுத்து இறத்தி;**
**மாறி வருதி; மலை மறைந்து ஒளித்தி;**
**அகல் இரு விசும்பினானும்**
**பகல் விளங்குதியால், பல் கதிர் விரித்தே**
**(புறம். *8*)**

எனும் பாடலில் சேரலாதனைக் கதிரவனினும் சிறந்தவன் என்று ஒப்பிட்டுப் புகழ்ந்துரைக்கிறார்.

**மாக்கடல் சிவந்து எழுதரும் செஞ்ஞாயிற்று**
**கவினை மாஹோ**
**(புறம். *4:15-16*)**

எனக் கடலிலிருந்து எழும் சிவந்த ஞாயிற்றைக் குறிப்பிடும் புறநானூறு, 'நெருஞ்சிப் பூக்கள் எப்பொழுதும் சூரியனை எதிர்நோக்கி மலர்முகம் காட்டும்' எனும் குறிப்பினையும்,

**பாழ்ஊர் செருஞ்சிப் பசலை வான்பூ**
**ஏர்தரு சுடரின் எதிர்கொண் டாஅங்கு**
**(புறம். *155:4-5*)**

எனும் பாடலில் வெளியிடுகிறது.

சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதனை முரஞ்சியூர் முடிநாகராயர் பாடிய புறநானூற்றுப் பாடலில் ஞாயிறு மலையில் சென்று மறைதலைக் குறித்திருப்பது போலவே மேலைக் கடலிலும் மறைகின்றான் எனும் குறிப்பு,

**நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்தும் நின்**
**வெண்தலைப் புணரிக் குடகடற் குளிக்கும்**
**(புறம். *2:9-10*)**

எனும் அடிகளில் வெளிப்படுகிறது.

**எல்லுப் பட இட்ட சுடு தீ விளக்கம்**
**செல் சுடர் ஞாயிற்றுச் செக்கரின் தோன்ற**
**(புறம். *16:7-8*)**

எனும் அடிகள் ஞாயிறு மறைந்தும் அந்தியில் செக்கர் வானம் நெஞ்சைக்

கவரும் இயற்கைப் பொலிவுடன் தோற்றம் அளிப்பதைக் காட்டுகின்றன.

ஞாயிறு போற்றும் மரபுடன் திங்களைப் போற்றும் மரபும் பழந்தமிழகத்தில் இருந்தமையைப் புற நானூற்றுப் பாடல்கள் சில காட்டுகின்றன. 'திங்கள்' (புறம். 13:6), 'திங்கள் நாள் நிறை மதியத்து அனையை' (புறம். 102:6-7), 'எண் நாள் திங்கள் அனைய' (புறம். 118:2), 'பிறை நுதலான்' (புறம். 22:3), 'வான் உறையும் மதி போலும் மாலை வெண் குடை நீழலான்' (புறம். 22:11-12), 'மாக விசும்பின் வெண்திங்கள்' (புறம். 400:1), 'மதிசேர் நாள் மீன் போல' (புறம். 160:8), 'தண்கதிர் மதியம் போல'வும் (புறம். 6:27), 'கோடு கூடு மதியம் முகிழ் நிலா விளங்கும் மையல் மாலை' (புறம். 67:4-5), 'திங்கள் நாள் நிறை மதியத்து அனையை' (புறம். 102:6-7) எனும் புறநானூற்று அடிகள் திங்கள் பற்றிய குறிப்பினைத் தருகின்றன.

**தேய்தல் உண்மையும் பெருகல் உண்மையும்**
**மாய்தல் உண்மையும் பிறத்தல் உண்மையும்**
**அறியாதோரையும் அறியக் காட்டித்**
**திங்கட் புத்தேள் திரிதரும் உலகத்து**
**(புறம். 11-14)**

எனும் அடிகளில் சோழன் நலங் கிள்ளியை உறையூர் முதுகண்ணன் சாத்தனார் பாடுகிறார். இதில் நிலவின் இயல்பினை முதுமொழியாக எடுத்து மொழிகிறார்.

நிலவு முதல் நாள் தொடங்கி இறுதிநாள் வரை தன் உருவில் பல மாற்றங்களைக் கொண்டு விளங் குகிறது. நெடுவெண் நிலவு கொண்ட திங்கள் தேவன் தன் வடிவில் குறைந்து குறைந்து தன் உருவம் சிறதும் வெளிப்படா வண்ணம் உவா நாளில் மறைந்து விடுவதும் உண்டு. ஒவ்வொரு திங்களிலும் மதியம் தன் உரு நிழல் சிறிதும் தோன்றாதவாறு மறைந்து விடுதலும் உண்டு. தேய்தலும் பெருகலும் மாய்தலும் பிறத்தலுமாக ஒன்றற்கொன்று மாறுபட்ட இருவேறு தன்மைகளைத் தாம் அடைந்து, உலகின் வாழ்க்கை இயல்பை மக்களுக்குத் திங்களஞ் செல்வன் மக்களுக்குக் கண் கூடாக உணர்த்தி வருகிறான் என்பதைப் புலவர் நயமாகப் பதிவு செய்கிறார்.

வேள்பாரியின் நன்பரான கபிலர் பாரி இறந்த பின் ஒருநாள் பறம்பு நாட்டுக்கு வருகிறார். அப்போது அவர் பாரி இருந்தபோதிருந்த பறம்பு நாட்டின் வளத்தை பாரி இறந்த பின்னிருக்கின்ற பறம்பு நாட்டின் வளத்தோடு,

**அறையும் பொறையும் மணந்த தலைய**
**எண் நாள் திங்கள் அனைய கொடுங் கரைத்**
**தெள் நீர்ச் சிறுகுளம் கீள்வதுமாதோ -**
**கூர் வேல் குவைஇய மொய்ம்பின்**
**தேர் வண் பாரி தண் பறம்பு நாடே!**
**(புறம். 118)**

எனும் பாடலில் ஒப்பிட்டுப் பார்க் கின்றார். இதில் "அறைகளையும் பொறை களையும் இடையிடையே அமைய இணைத்தமைத்த கரையையுடைய சிறுகுளம் மிக்க நீர் நிரம்பிப் பாதுகாக்க யாருமில்லாமல் கரையுடைந்து கண்ட வாறு ஓடி அழிவது போல் பல்வகைக் குடிகள் நிறைந்து பாரியாற் காக்கப்பட்டு வந்த பறம்பு நாடு, அவன் இறந்தும் அழிந்து போயிற்று" என்று அவர் குறிப்பிடுகிறார்.

இப்பாடலில் குளத்துக் கரையைக் கபிலர் 'எண் நாள் திங்கள் அனைய

கொடுங்கரை’ என எட்டாம் நாள் நிலவுக்கு உவமிக்கிறார். இப் பாடலுக்கு ஔவை துரைசாமிப்பிள்ளை, “அறைகளையும் பொறைகளையும் இடையிடையே கரையாக அமையுமாறு பிறை வடிவில் ஏரிகட்குக் கரை யமைக்கும் முறை பண்டுதொட்டே வருவதென்பது இதனாலும், மலைநாட்டு ஏரிகளைக் கண்டும் அறியலாம்” என்று விளக்கம் எழுதுகிறார்.

பிசிராந்தையார் கோப் பெருஞ்சோழனைப் பாடுகின்ற புற நானூற்றுப் பாடலில் நிலவு பேசப் படுகிறது. மாலைக் கால வருணனை அப்பாடலில், ‘கோடு கூடு மதியம் முகிழ்நிலா விளங்கும் மையல் மாலை’ (புறம். 67:4-5) என அமைந்துள்ளது.

சோழன் நலங்கிள்ளியைக் கோவூர் கிழார் பாடிய பாடலில், ‘மாகமாகிய விசும்பின்கண் நிலவும் வெண்மதியம் பதினைந்து நாள் முறையே முதிர, கடலின் நடுவில் அதனைக் கண்டாற் போன்ற எனது இயமாகிய தடாரிப் பறையை அறைந்து அவனுடைய புகழ் பரவினேனாக’ எனப் பாடுகிறார். இதனை, ‘மாக விசும்பின் வெண் திங்கள் மூ - ஐந்தான் முறை முற்ற, கடல் நடுவண் கண்டன்ன என் இயம் இசையா’ (புறம். 400:1-4) எனும் அடிகள் குறிப்பிடுகின்றன.

அதியமான் நெடு மானஞ்சியின் மகனான பொகுட்டெழினி தன் தந்தைக்குத் துணையாக ஆட்சி புரிந்து வரலானான். அப்போது ஔவைப் பெருமாட்டி அவனைக் காணச் சென்றார். அவன் தன் குடிமக்களுக்கு உற்றுழி உதவும் பேருள்ளமும் கல்வி யறிவுமுடைய வனாய் விளங்குவதைக் கண்டு மகிழ்ந்தும் வியந்தும்,

**… … … … நெடியோய்! திங்கள்**
**நாள் நிறை மதியத்து அனையை; இருள்**
**யாவண தோ,நின் நிழல்வாழ் வோர்க்கே?**
**(புறம். 102:6-8)**

எனும் அடிகளில், ‘நெடியோய், நாணிறை மதிபோல் நீ விளங்குதலால், நின் நிழற்கண் வாழ்வார்க்குத் துன்ப மென்பதில்லையாம்’ எனும் பொருளில் பாராட்டுகிறார்.

சேரமான் பெருஞ் சேரலாதன் சோழநாட்டை ஆண்ட கரிகால் வளவனோடு வெண்ணி என்னும் இடத்தில் பெரும்போர் செய்தான். அப்போரில் பாண்டிய வேந்தன் ஒருவனும் போர் செய்தான். அப்போது கரிகால் வளவன் செலுத்திய நெடுவேல் சேரமான் பெருஞ்சேரலாதனின் மார்பிற் பட்டு முதுகின் புறத்தே உருவிச் சென்று புண் செய்தது. மார்பிலும் முகத்திலும் பட்ட புண்ணை மட்டுமே வீரர் விழுப்புண் என்று விரும்புவர். மார்பிற் பட்ட நெடுவேல் முதுகிலும் ஊடுருவிச் சென்று புண்ணாக்கியமையால் சேரமான் பெருநாணம் கொண்டு வடக்கிருந்து உயிர் துறக்க எத்தணித்தான். இச்செய்தி அந்நாளில் எங்கும் பரவியது. பலரும் இவன்பால் பெருமதிப்புக் கொண்டு பாராட்டுவாராயினர். பௌர்ணமி நாளில் ஒரே நேரத்தில் ஞாயிறு மேற்குத் திசையில் மறையவும் நிறைமதி கிழக்குத் திசையில் தோன்றவும் செய்யும் காட்சி யைப் பார்க்க முடியும். இக்காட்சியை சேரலாதனுக்குத் தொடர்புறுத்திக் காட்டுகிறார் புலவர்.

சேரலாதன் தன் போன்ற வேந்தனொருவன் மார்பு குறித்தெறிந்த படையால் உண்டான புறப்புண்ணிற்கு நாணி மறுத்தகை மன்னனாகிய எங்கள் பெருஞ் சேரலாதன் வடக்கிருக்கத்

துணிந்தான். எங்களுக்கு இனி ஞாயிறு விளங்கும் பகற்பொழுது முன்போலக் கழியாது; உழவர் உழவை மறப்பர்; சீறூர்கள் விழாக்களை மறக்கும்; இவனுடைய வடக்கிருப்பு பௌர்ணமி நாளில் (உவா நாளில்) ஞாயிறு தோன்றத் திங்கள் மலைவாய் மறைவது போல உள்ளது. தமிழ் நாட்டின் மேலைப் பகுதியில் இனி இருள் சூழ்வதன்றி ஒளியில்லை எனும் கருத்தை இவன்மீது பெருமதிப்பும் பேரன்பும் கொண்டிருந்த கழாத்தலையார் எனும் புலவர் வெளியிடுகிறார் (புறம். 65).

நிறைமதியின் தோற்றத்தை சேரமான் யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையின் வெண்கொற்றக் குடைக்கு ஒப்பிட்டுக் குறுங்கோழியூர் கிழார் எனும் புலவர்,

**பாஅல் நின்று கதிர் சோறும்**

**வான் உறையும் மதி போலும்**

**மாலை வெண்குடை நீழலான்**
**(புறம். 22:10-12)**

எனும் அடிகளில் பாடுகிறார். இங்ஙனம் நிறைமதியின் தோற்றத்தை அரசரின் வெண் கொற்றக் குடையுடன் ஒப்பிட்டுப் பாடுவது அக்காலத்திய புலவர் மரபாக இருந்திருக்கிறது.

சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந் திருமாவளவனை உறையூர் மருத்துவன் தாமோதரனார் பாடும்,

**முந்நீர் நாப்பண் திமில் சுடர் போல**

**செம்மீன் இமைக்கும் மாக**
**விசும்பின்**

**உச்சி நின்ற உவவு மதி கண்டு,**

**கட்சி மஞ்ஞையின் சுரமுதல்**
**சேர்ந்த,**

**சில்வளை விறலியும் யானும்**
**வல்விரைந்து,**

**தொழுதனெம் அல்லமோ,**
**பலவே - கானற்**

**கழி உப்பு முகந்து கல்நாடு**
**மடுக்கும்**

**ஆரைச் சாகாட்டு ஆழ்ச்சி**
**போக்கும்**

**உரனுடை நோன் பகட்டு அன்ன**
**எம்கோன,**

**வலன் இரங்கு முரசின் வாய்வாள்**
**வளவன்,**

**வெயில் மறைக் கொண்ட**
**உருகெழு சிறப்பின்**

**மாலை வெண்குடை ஒக்குமால்**
**எனவே?**
**(புறம். 60)**

எனும் பாடல், ‘உவா மதியைக் கண்டு வளவனின் வெண்கொற்றக் குடை புறப்பட்டதெனக் கருதித் தொழுதேம்’ எனும் குறிப்பினைத் தருகிறது.

‘மீன் படகின் விளக்குப் போல, வான் நடுவில் செவ்வாய் மீன் விளங்கும் அப்போது உச்சியில் தோன்றும் முழு நிலவைக் கண்டு காட்டு மயில்கள் மகிழ்ந்து ஆடும். அதைப் போல இடைச் சுரத்தில் வந்து கொண்டிருந்த யானும், சில வளையல்களை அணிந்து வந்த விறலியும், அம்மதியைப் பார்த்து, கடலுப்பு ஏற்றிய பாரம்மிக்க வண்டியை மலை நாட்டை நோக்கி இழுத்துச் செல்லும் பகட்டினைப் போல, ஆட்சிச் சுமையைத் தாங்கிச் செல்லும் எம் கோமானான வெற்றி முரசினையும் தப்பாத வாளினையுமுடைய வள வனுக்கு வெயில் மறைக்க எடுத்து வரப்பட்ட வெண்கொற்றக் குடை போன்று நினைத்து, விரைந்து தொழுத தாகப்’ பாணன் கூறுகிறான். இதனால் உவாமதி தொழத்தக்கது அன்று என்பதும் சிறப்பு நிலையில் அதற்கு அத்தகுதி தரப்பட்டிருக்கலாம் என்பதும் எண்ணத் தோன்றுகிறது.

ஞாயிறும் திங்களும் தமிழ் இலக்கியங்கள் பலவற்றிலும் குறிப்பாகக் காப்பியங்களிலும் ‘இருசுடர்’ என்றும் ‘இருசுடர் தோற்றம்’ என்றும் வருணிக்கப் படுகின்றன. சங்கப் புறப்படல்களில் மன்னர்களின் வலிமைக்கும் ஆற்றலுக்கும் ஞாயிறு உவமையாகக் காட்டப்படுகிறது. திங்கள் மன்னர்களின் கொடைத் தன்மைக்கும் பிறருக்கு இளைப்பாறுதல் தரும் நிலைக்கும் உதாரணமாகக் காட்டப்படுகிறது.